REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 ஒக்டோபர் 13 வெள்ளிக்கிழமை
# தினகரன்
THINAKARAN
වරු. 91 இல. 243 | Friday 13, October, 2023 | 24 பக்கங்கள் | 50/-


## கொழும்பு துறைமுகத்தில் அமெரிக்க USNS கப்பல்



அமெரிக்க கடற்படைக் கப்பலான யு . எ ஸ் . என் . எ ஸ் பிரன்சுவிக் (USNS Brunswick) கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. நேற்று முன்தினம் புதன்கிழமை ( 11 ) கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த இக் கப்பல் எதிர்வரும் 15 ஆம் திகதி இங்கிருந்து புறப்படவுள்ளது.

06

### இந்து சமுத்திரத்தில் உருவாகும் புதிய ஒழுங்கு முறை

## உலக பொருளாதாரத்தினுள் இந்து சமுத்திரத்தின் பங்களிப்பு முக்கியம்



காலி கலந்துரையாடல் 2023 இல் ஜனாதிபதி உரை

ஆரம்ப காலம் முதலே சிறப்புமிக்க கேந்திர நிலையமாக விளங்கும் இந்து சமுத்திரம் வளர்ந்துவரும் உலக பொருளாதாரத்துக்குள் முக்கியமான பங்கு வகிப்பதாகவும், உலக அரசியலுக்குள் எடுக்கப்படும் தீர்மானங்களே அதன் எதிர்காலத்தை

06

### 4.2 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் மறுசீரமைப்பு

# சீன எக்ஸிம் வங்கி இலங்கைக்கு உதவும்

### கொள்கையளவில் இணங்கியுள்ளதாக நிதி அமைச்சு தெரிவிப்பு

**IMF இடமிருந்து இலங்கை பெறவுள்ள இரண்டாம் தவணை நிதி உதவிக்கு உறுதுணையாக இருக்குமென நிதி அமைச்சு நம்பிக்கை**

(லோரன்ஸ் செல்வநாயகம்)

கடனை மறுசீரமைப்பதற்கான முக்கிய கொள்கையில் இலங்கையும் சீனாவின் எக்ஸிம் வங்கியும் இணங்கியுள்ளன.

இதற்கிணங்க 4.2 பில்லியன் அமெரிக்க டொலர் கடனை மறுசீரமைக்கும் முக்கிய கொள்கைகளில் இலங்கையும், சீனாவின் எக்ஸிம் வங்கியும் இணங்கிச் செயற்படுமென நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையுடனான கடன் மறு சீரமைப்பு தொடர்பில் சீனாவின் எக்ஸிம் வங்கி மேற்கொண்டுள்ள




உடன்படிக்கையின் அடிப்படையில், மேற்படி இணக்கப்பாடு காணப்பட்டுள்ளதாகவும் நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

06

## இஸ்ரேலிலுள்ள இலங்கையருக்கு உதவி வழங்க விசேட திட்டம்

### அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ரணில் பணிப்பு

இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அமைப்புக்குமிடையில் நிலவும் கடுமையான மோதல்களை கருத்தில் கொண்டு இஸ்ரேலில் வாழும் இலங்கையரின் பாதுகாப்பு உள்ளிட்ட அவசர தேவைகள் குறித்து, விசேட கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி, இஸ்ரேலில் வாழும் இலங்கை மக்களின் தேவைகள் தொடர்பில் அதிகபட்ச தலையீட்டை வழங்குவதற்காக இஸ்ரேலில் உள்ள இலங்கை

06

### முன்பள்ளி, உயர்கல்வி உட்பட 04 துறையில்

## இலங்கையின் எதிர்கால கல்வித்தரம் சர்வதேச மட்டத்தில் உயர்த்தப்படும்



எதிர்காலத்தில் இலங்கையின் கல்வித் தரத்தை சர்வதேச மட்டத்துக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த குறிப்பிட்டார்.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் நூற்றாண்டு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றியபோதே, அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் கல்வி தரத்தை சர்வதேச மட்டத்துக்கு கொண்டு செல்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும். நாட்டின் முன்பள்ளிக் கல்வி, பாடசாலைக் கல்வி, தொழிற்பயிற்சிக் கல்வி மற்றும் உயர்கல்வி ஆகிய நான்கு துறைகளும்

06

### பராமரிப்பு, விவசாயம், நிர்மாணத்துறையில்

## இலங்கை இளைஞர்களுக்கு ஜப்பானில் வேலைவாய்ப்பு

### SLBFE வுடன் ஒப்பந்தம் கைச்சாத்து




விசேட திறன்களைக் கொண்ட இலங்கை இளைஞர்களுக்கு Specified Skilled Worker பிரிவின் கீழ் ஜப்பானில் தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொள்வதற்காக, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் ஜப்பானின் IM Japan நிறுவனத்திற்கிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டுள்ளது.

06

### கடலை இறக்குமதியென தெரிவித்து

## 3 கோடி ரூபா பெறுமதியான 17 மெ.தொ. உளுந்து தருவிப்பு



படம் : ரஞ்சித் அசங்க

கொள்கலனுடன் மடக்கிப் பிடிப்பு

06



## 03 சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

### பத்து இலட்சத்துக்கும் அதிகமானோர் வருகை

## சிலந்திவலை போன்ற நூல் துகள்கள் வானத்திலிருந்து மர்மமாக விழுதல்

### திம்புலாகலை, வெலிகந்த மக்களிடையே அச்சம்



நாட்டின் சில பகுதிகளில் இரண்டு நாட்களாக காலை வேளை, வானத்திலிருந்து மர்மப் பொருள் விழுவதால் அப்பகுதி மக்கள் குழப்பமடைந்துள்ளனர்.

பொலன்னறுவை, திம்புலாகலை, வெலிகந்த, மஹாவலி உள்ளிட்ட பல பகுதிகளில் இரண்டு நாட்களாக காலை வேளை வானத்திலிருந்து அடையாளம் தெரியாத, சிலந்தி வலை போன்ற வெள்ளை நூல் விழுந்ததால் அப்பகுதி மக்கள் குழப்பமடைந்துள்ளனர்.

பொலன்னறுவை, ஜயந்திபுர பிரதேசத்தில் நேற்றுமுன் தினம் இந்த வெள்ளை சிலந்தி வலை விழுந்ததால், பாடசாலை ஒன்றை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

06

## பயிற்சி தாதியர் 2,118 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும்

### திறைசேரி இணக்கம் தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)



அரச சேவையில் பயிற்சி பெற்றுள்ள 2118 தாதியருக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு திறைசேரி இணக்கம் தெரிவித்துள்ளதாக, அரச தாதி உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவரும் ஜனாதிபதியின் தொழிற்சங்கங்களுக்கான பணிப்பாளர் நாயகமுமான சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சினால் கடந்த 2018 ஆம் ஆண்டு தாதி பயிற்சிக்காக 2,518 தாதி மாணவர்கள் இணைக்கப்பட்டு அவர்களுக்கு பயிற்சிகளும் வழங்கப்பட்டன. எனினும், நாட்டில் நிலவிய நிதி நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு

06

### இந்திய ரூபா 4.48 கோடி பெறுமதியான

## 7.5 கிலோ தங்க பிஸ்கட்டுகள் இலங்கையிலிருந்து கடத்தல்

**திருச்சியில் 45 தங்க கட்டிகள் பறிமுதல், 02 பேர் கைது**

(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)



இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு கடத்திச் செல்லப்பட்ட இந்திய மதிப்பில் 4.48 கோடி மதிப்பிலான 7.5 கிலோ தங்கத்தை இந்திய மத்திய வருவாய் புலனாய்வுப் பிரிவினர்,

06

## போர் குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் வகையில் யுத்தத்தின் உண்மையை விளக்கி விசேட அறிக்கை

### விரைவில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும்



இலங்கையில் எவ்வாறான யுத்தம் இடம்பெற்றது என்பதை விளக்குவதற்காக தயாரிக்கப்பட்ட விசேட அறிக்கை, எதிர்காலத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்படுமென தேசிய பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் சரத் வீரசேக்கர தெரிவித்தார்.

ஜெனீவாவில் நடைபெறும் ஒவ்வொரு

06

## சிறுவர் மத்தியில் பரவும் கண் நோய்

### 05 நாட்கள் தொடரின் மருத்துவரை நாடவும்



சுகாதாரத்துறை பெற்றோருக்கு அறிவுறுத்து

(லோரன்ஸ் செல்வநாயகம்)

கொழும்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் சிறுவர்கள் மத்தியில் ஒருவித கண் நோய் பரவி வரும் நிலையில், ஐந்து நாட்களுக்கு மேல் அதற்கான அறிகுறிகள் நீடிக்குமானால் உடனடியாக மருத்துவரை நாடுமாறு சுகாதாரத்துறை

06

## தினகரன் வாரமஞ்சரியில் புதிய சமாதான நீதவான்கள் 692 பேரின் பெயர் பட்டியல்

நீதி, சிறைச்சாலைகள் விவகார மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேயதாச ராஜபக்சவினால் நியமிக்கப்பட்டுள்ள புதிய சமாதான நீதவான்கள் 692 பேரின் பெயர்ப் பட்டியல் இன்று 13ஆம் திகதி வெளியாகும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இந்த பெயர்ப் பட்டியலுடனான வர்த்தமானி நாளை

06

## போதைப்பொருள் கடத்திய ஈரானியர்களுக்கு ஆயுள் தண்டனை

### கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

மீன்பிடி படகொன்றின் மூலம் 4 வருடங்களுக்கு முன்னர் நாட்டுக்குள் போதைப்பொருளை கொண்டு வந்தமை மற்றும் விற்பனை செய்தமை உள்ளிட்ட குற்றங்களை ஒப்புக் கொண்ட ஈரான் பிரஜைகளுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்துள்ளது.

மேற்படி குற்றவாளிகளால்

06


அரசாங்க வர்த்தமானி
15 ஆம் திகதி முதல்
தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI
பத்திரிகையுடன் வாரம்தோறும்
இலவசமாக வெளிவரும்
பிரதிகளுக்கு உங்கள் அருகாமையிலுள்ள பத்திரிகை முகவர்களை நாடுங்கள்

# நகர்வலம்



## வறிய மாணவர்களுக்கு பாடசாலை புத்தகங்கள்

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

அநுராதபுரம் மத்திய நுவரகம் பளாத்த பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள குறைந்த வருமானம் பெறும் மற்றும் சமுர்த்தி குடும்பங்களைச் சேர்ந்த ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றிய 340 பிள்ளைகளுக்கு சமுர்த்தி சிசுவள சமூக நலன்புரித் திட்டத்தின் கீழ் பாடசாலை புத்தகங்கள் அடங்கிய பார்சல்கள் மத்திய நுவரகம் பளாத்த பிரதேச செயலாளர் ஆர்.எம்.ஜீ. சேனாரத்னவினால் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது.

மத்திய நுவரகம் பளாத்த பிரதேச செயலாளர் பிரிவின் கிராம சேவகர் பிரிவு மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகுட்பட்ட அனைத்து பாடசாலைகளையும் உள்ளடக்கியதாக தெரிவு செய்யப்பட்ட 340 பிள்ளைகளுக்கே மத்திய நுவரகம் பளாத்த பிரதேச செயலாளர் அலுவலக கேட்போர் கூடத்தில் பாடசாலை புத்தகங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் பிள்ளைகளின் பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## மண்சரிவு அபாயம்: 'உலக முடிவு' செல்லும் பாதை தற்காலிகமாக பூட்டு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

தேசிய,சர்வதேச சுற்றுலாப் பயணிகளை கவரும் முக்கிய பிரதேசமான பிரசித்தி பெற்ற சுற்றுலாத் தலமான நுவரெலியா மாவட்டத்தின் உலக முடிவு பகுதியில், ஏற்பட்டுள்ள மண் சரிவு காரணமாக அப்பகுதிக்கு பயணிக்கும் ஒரு பாதை, தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

மேற்படி உலக முடிவு பிரதேசம் ஹோடன் ப்ளேஸ் பகுதியில் அமைந்துள்ளது. அம்பேவெல, ரேந்தபொல பாதையே இவ்வாறு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக அந்நிலையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கெப்பெட்டிப்பொல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவிக்கையில், அப்பாதையின் மூன்றாவது கிலோமீட்டர் பகுதியிலேயே மண்சரிவு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.



உலக முடிவு பிரதேசம் சுமார் 4000 அடி உயரம் கொண்ட பகுதியாகும். பெருமளவு சுற்றுலாப் பயணிகளை ஆச்சரியத்தில் ஆழ்த்தும் இந்த பகுதியில், நான்கு கிலோமீற்றர் உ ள்ளே பயணித்தால் எழில் மிகுந்த பேக்கர்ஸ் நீர்வீழ்ச்சி காணப்படுகிறது.

உலக முடிவு பகுதியிலிருந்து பார்வையிடும் போது அங்கு இடம்பெறும் வானிலை மாற்றங்கள் பல வியப்புமிக்க காட்சிகளை ஏற்படுத்தும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மூடப்பட்டுள்ள பாதையின் புனரமைப்பு பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு, விரைவில் அந்த பாதை திறக்கப்படும் என்றும் அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

## சர்வமத தலைவர்கள் வாழ்த்து



ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியரும், பெபிலியான சுனேத்ரா தேவி ரஜமஹா விஹாரையின் விஹாராதிபதியுமான மெதகொட அபயதிஸ்ஸ நாயக்க தேரரின் பிறந்த தினம் (10) நடைபெற்றது. இந்நிகழ்வில்

சர்வ மதத் தலைவர்களான சிவ ஸ்ரீ கலாநிதி பாபுசர்மா குருக்கள், அல்ஹாஜ் அஷ்ஸெய்யித் கலாநிதி ஹஸன் மௌலானா அல்காதிரி மற்றும் கலாநிதி நிஷான் குரே பாதிரியார் உள்ளிட்ட சர்வ மதத் தலைவர்கள் அன்னாரின் விஹாரைக்கு விஜயம் செய்து நாயக தேரருக்கு வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

இந்த நிகழ்வின் போது சர்வ மதத் தலைவர்களுடன் இன மத ஒற்றுமைக்கான எதிர்கால வேலைத்திட்டங்களை முன்னெடுத்து செல்லும் விஷேட கலந்துரையாடலும் இடம்பெற்றது.

## மலேசிய அமைச்சர் சம்மன்கோட்டு பள்ளிவாசலுக்கு விஜயம்



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள மலேசிய வெளிவிவகார அமைச்சர் Dato Seri (Dr.) Zambry Abdul Kadir நேற்று முன்தினம் (11) புதன்கிழமை கொழும்பு சம்மன்கோட்டு பள்ளிவாசலுக்கு விஜயம் செய்தார். இலங்கைக்கான மலேசிய உயர்ஸ்தானிகர் பட்லி ஹிஷாம் ஆதம், பள்ளிவாசல் தலைவர் அமீர் சுல்தான், செயலாளர் ஹாரிஸ் அன்வர் மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர் ரபீக் புஹாரி ஆகியோர் அமைச்சரை வரவேற்றனர். படம்: ருஸைக் பாரூக்

## கரைத்தீவு முஸ்லிம் வித்தியாலயத்தில் இரு மாடி கட்டடம் திறந்து வைப்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் கரைத்தீவு முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இருமாடி தொழிநுட்பக் கட்டடம் நேற்று முன்தினம் (11) வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் ஏ.கே. நயீமுல்லாஹ் தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வில், வடமேல் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் உட்பட உள்ளூர் அரசியல் பிரமுகர்கள், கல்வி அதிகாரிகள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க



உறுப்பினர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்." அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் குறித்த இருமாடி தொழிநுட்பக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது. இவ்வாறு நிர்மாணிக்கப்பட்ட குறித்த தொழிநுட்பக் கட்டடத்தை வடமேல் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன பிரதம அதிதியாக கலந்துகொண்டு மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்காக உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

இதன்போது புத்தளத்தில் மிகவும் பழமைவாய்ந்த கிராமமான கரைத்தீவு (பொன்பரப்பி) முஸ்லிம் மஹா வித்தியாலய விளையாட்டு மைதானத்தை செப்பனிடுவதற்காக வனாத்தவில்லு பிரதேச சபை, புத்தளம் நகர சபை ஆகியவற்றின் இயந்திரங்களை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்குவதாக இங்கு குறிப்பிட்டார்.

## நீர் தேக்கத்தில் மூழ்கி இளைஞனொருவர் பலி!

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

இங்கினிமிட்டிய நீர்ப்பாசன பொறியியற் காரியாலயத்தில் கடமையாற்றிய திட்ட வடிவமைப்பாளர் ஒருவர் இக்கினிமிட்டிய நீர்த்தேக்கத்தில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக நவகத்தேகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குருநாகல், தெமடகஹ பெலஸ்ஸ பகுதியைச் சேர்ந்த டி.பி. சமீர சதருவன் பிரேமசிறி (வயது 29) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபர் கடந்த செவ்வாய்க்கிழமை (10) மாலை முதல் நீரில் மூழ்கி காணாமல்போனமை தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## தமிழர் கல்வித்துறையை பாதுகாக்கும் நோக்கில் தமிழர் கல்வி மேம்பாட்டு கழகம் செயற்படும்

### மனோ கணேசன் எம்பி

தமிழ் சமுதாயத்தில் எஞ்சியுள்ள மிகப்பெரிய பலம் கல்வி ஆகும் என்பதை எமக்கு என்றுமில்லாதவாறு உணர்த்தும் காலம் இதுவாகும். ஆகவே, தமிழர் கல்வித்துறையை போற்றி பாதுகாத்து, பல வீனமான புள்ளிகளை அடையாளம் கண்டு, கூட்டிணைந்து நாம் செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகுமென பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இவ் அங்குரார்ப்பண நிகழ்வில் தமிழர் கல்வி மேம்பாட்டு கழகத்தின் போசகராக மனோ கணேசனும், தலைவராக ப. பரமேஸ்வரனும், செயலாளராக திருமதி. கே. நிரஞ்சனும், நிதி செயலாளராக எம். ஜெயப்பிரகாஷும் நியமிக்கப்பட்டார்கள். ஏனைய பதவிகளுக்கான நியமனங்கள் விரைவில் அறிவிக்கப்பட உள்ளன. பேராசிரியர் டி. தனராஜ், தொழில்நுட்ப அமைச்சு பணிப்பாளர் எஸ். பரமேஸ்வரன் மற்றும் கல்வியமைச்சின் முன்னாள் செயற்திட்ட அதிகாரி க. பத்மநாதன், தொழில்நுட்ப கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ. குருமூர்த்தி ஆகியோர் உட்பட பெருந்தொகையானோர் இதில் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், தேசிய, மாகாண சபை மற்றும் தனியார் கல்வி கட்டமைப்பில் தமிழர் கல்விக்கான சமத்துவ வாய்ப்புகள் இன்மை, ஆளணி, பௌதிக வளம், அதிபர் தராதரங்கள், விஞ்ஞான, கணித, ஆங்கில, தொழில்நுட்பவியல் ஆகிய (STEM) பாடங்களுக்கான தமிழ் மொழி ஆசிரியர்களின் கடும் பற்றாக்குறை, தமிழ் மாணவர்களின் இடை விலகல், தொழில்நுட்ப மற்றும் தொழில் கல்வி தொடர்புகளில் தமிழ் மாணவர்களின் ஆர்வ



மின்மை, மூன்றாம் நிலை கல்வி, மேற்கல்வி, இடைநிலை கல்வி மற்றும் தொழில் பயிற்சி ஆகியவற்றுக்கான பாடசாலை மட்டத்திலான கல்வி வழிகாட்டல் (Career Guidance), தமிழ் மொழியிலான முன்பள்ளி கல்வி, பொது கல்வித்துறை தரவுகளை சேகரித்தல், முறைப்பாடுகளை ஒருமுகப்படுத்தி தீர்வு தேடல் ஆகிய விடயங்களை, நாம் இன்றைய இந்த முதல் சந்திப்பிலேயே ஆராய ஆரம்பித்துள்ளமை எனக்கு மிகுந்த மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும் ஊட்டுகின்றது எனவும் மனோ கணேசன் எம்.பி இதன்போது தெரிவித்தார்.

## மலையக மகளிர் மன்ற விழாவில் இந்திய பேச்சாளர் பங்கேற்பு



மலை யக மகளிர் மன்றத்தின் 20ஆ வது ஆண்டு விழாவை முன்னிட்டு கொள்ளுப்பிட்டி, இல78 , இலங்கை சுற்றுலா சபை கேட்போர் கூடத்தில் இன்று (13) மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ள விழாவில் சிறப்புப் பேச்சாளராக கலந்து கொண்டு உரையாற்ற கலாநிதி ஜெயந்த ஸ்ரீ பாலகிருஷ்ணன் இந்தியாவில் இருந்து நேற்று இலங்கை வந்தடைந்தார்.

அவரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் மன்றத்தலைவி திருமதி. புஸ்பராணி பாலகிருஷ்ணன் தலைமையில் திருமதி உதயா தங்கராஜ், திருமதி கீதா ராமராஜ், திருமதி பிரியா கார்த்திக் ஆகியோர் வரவேற்றனர்.

**(படப்பிடிப்பு : எஸ். எம். சுரேந்திரன்)**

## நாச்சியாதீவு பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு சிரமதானம்

**திறப்பனை தினகரன் நிருபர்**



டெங்கு நுளம்புகள் பெருகுவதை கட்டுப்படுத்துமுகமாக நாச்சியாதீவு பிரதேச செயலக பிரிவின், நாச்சியாதீவு 535, 536 கிராம உத்தியோகத்தர் பிரிவில் நேற்று (12) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த "டெங்கு ஒழிப்பு சிரமதான நிகழ்வில்" நாச்சியாதீவு முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்கள், பொது மக்கள் பெருமளவில் பங்குகொண்டு, பிரதேசத்தில் காணப்பட்ட குப்பை கூளங்கள், பொலித்தீன், சிரட்டை, வேற்று குரும்பை கோதுகள் போன்ற பல்வேறு கழிவுகளை அகற்றியதோடு, நுளம்புகள் பெருகும் இடங்களையும் அழித்து துப்புரவு செய்தனர்.

திறப்பனை பிரதேச சபை, ஹிதோகம பொலிஸ் நிலையம், பிரதேச சுகாதார பரிசோதகர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் ஆகியோர் இணைந்து இந்த டெங்கு ஒழிப்பு சிரமதானத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

இங்கு சுகாதார பிரிவினருடன் இணைந்து, நாச்சியாதீவு பஸார் வீதியை துப்புரவு செய்யும் நடவடிக்கையில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மாத்தளை பெ. வடிவேலனின் 'வல்லமை தாராயோ' நூல் வெளியீடு

தமிழகத்தில் ஒரு இலட்சம் ரூபா இலக்கிய விருதினைப்பெற்ற மாத்தளை பெ.வடிவேலனின் 'வல்லமை தாராயோ' என்ற சிறு கதைத் தொகுதியின் வெளியீட்டு விழா கொழும்புத் தமிழ்ச்சங்க விநோதன் மண்டபத்தில் பேராசிரியர் தை. தனராஜ் தலைமையில் எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர், வீரகேசரி பிரதம ஆசிரியர் எஸ். ஸ்ரீ கஜன், தமிழன் பிரதம ஆசிரியர் இரா. சிவராஜா ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் பி.பி. தேவராஜ், வடமேல் மாகாண முன்னாள் ஆளுநர் கே.சி. லோகேஸ்வரன், பூபாலசிங்கம் புத்தகசாலை உரிமையாளர் பூபாலசிங்கம் ஸ்ரீதர்சிங் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் உடுவை எஸ். தில்லை நடராஜா, இந்து சமய கலாசார திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் சண்முகலிங்கம், நிதி இராஜாங்க அமைச்சின் முன்னாள் செயலாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக கலந்துகொள்வர்.

பிரமுகர்களின் மங்கல விளக்கேற்றல் மற்றும் செல்வி பிரியங்கா ஆன் பிரான்சிஸ் அவர்களின் தமிழ் வாழ்த்துடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வில் வரவேற்புரையை கே. பொன்னுத்துரை நிகழ்த்த தலைமையுரையைத் தொடந்து வாழ்த்துரைகளை அநிருத்தனன் (பணிப்பாளர், இந்து சமய கலாசார திணைக்களம்), வீ. விக்கிரமராஜா (முன்னாள் நிர்வாக செயலாளர் சுகாதார அமைச்சு), 'சாகித்திய ரத்னா' ஞானசேகரன் பிரதம ஆசிரியர் ஞானம் கலை இலக்கிய சஞ்சிகை ஆகியோர் நிகழ்த்துவர்.




வெளியீட்டுரையை பதிப்பாசிரியரும், ஆய்வாளருமான எச்.எச் விக்கிரமசிங்க நிகழ்த்தி நூலை வெளியிட்டு வைப்பார். முதற் பிரதியை இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக்கொள்வார். நூல் ஆய்வினை கிழக்குப் பல்கலைக்கழக கலாசார பீட தமிழ் கற்கைகள் துறைவிரிவுரையாளர் கலாநிதி த. மேகராசாவும் இலக்கியசெயற்பாட்டாளரும் கவிஞருமான மேமன் கவி ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

ஏற்புரையை நூலாசிரியர் கலாபூஷணம் பெ. வடிவேலன் நிகழ்த்த, நிகழ்வுகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுதாபன பகுதிநேர அறிவிப்பாளர் ஆர்.பி. யசோதரை தொகுத்து வழங்குவார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

தினகரன்
THINAKARAN
2023 ஒக்டோபர் 13 வெள்ளிக்கிழமை

தொழுகை நேரம்
சுபஹ் - 04.42
லுஹர் - 11.59
அஸர் - 03.16
மஃரிப் - 05.58
இஷா - 07.08

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் புரட்டாதி 27
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# வேலைவாய்ப்புக்காக இலங்கையரை இஸ்ரேலுக்கு அனுப்புவது நிறுத்தம்

## அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இஸ்ரேல், பலஸ்தீனத்துக்கிடையிலான மோதல் உக்கிரமடைந்துள்ளதால் வேலை வாய்ப்புக்காக இலங்கையரை இஸ்ரேலுக்கு அனுப்புவதைத் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக தொழில், வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கு வேலை வாய்ப்புக்காக செல்வதற்கு ஒரு தரப்பினர் தயாராக உள்ளனர். தற்போதைய நிலைமையில் அவர்களை அங்கு அனுப்புவது சிறந்ததல்ல. இஸ்ரேலிலுள்ள இலங்கையரை நாட்டுக்கு



அழைத்து வர வேண்டிய தேவை ஏற்பட்டால், நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இஸ்ரேலில் வேலை வாய்ப்புக்காக செல்பவர்களுக்கு புதிய நடைமுறையைப் பின்பற்ற வேலை வாய்ப்பு பணியகம் நடவடிக்கை எடுத்து வருவதாக அந்த பணியகம் ஏற்கனவே தெரிவித்திருந்தது.

அந்த பணியகத்தின் பிரதி பொது முகாமையாளர் காமினி செனரத் அது தொடர்பில் நேற்று தெரிவிக்கையில்,

இனி வரும் காலங்களில் இஸ்ரேலுக்கு இலங்கையரை வேலை வாய்ப்புக்காக அனுப்பும்போது அந்நாட்டின் சனத்தொகை, புலம்பெயர்வு அதிகாரசபை மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள இலங்கைக்கான இஸ்ரேல் தூதுவர் நிமல் பண்டார,

இஸ்ரேல் பாலஸ்தீன மோதல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவதால் அங்கு வாழும் இலங்கையர் நாட்டுக்கு திரும்புவதற்கு விருப்பம் தெரிவித்தால், அவர்களை இலங்கைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# solez Bio Tech Pharma நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள ஓடர்கள் இடைநிறுத்தம்

## அமைச்சர் கெஹெலிய பணிப்புரை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டுக்கு மருந்துகளை விநியோகம் செய்வது சம்பந்தமாக பெரும் சிக்கலான நிலையை உருவாக்கியுள்ள Isolez Bio Tech Pharm நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து ஓடர்களையும் உடனடியாக இடைநிறுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை

மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல அமைச்சின் செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்து நிறுவன தலைவர்களுக்கும் எழுத்து மூலம் அறிவித்துள்ளார். அதேவேளை, இது தொடர்பில் குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து விசாரணை நடவடிக்கைகள் நிறைவுறும் வரை அந்த நிறுவனத்திற்கு செலுத்தவேண்டியுள்ள அனைத்து கொடுப்பனவுகளையும் உடனடியாக

நடைமுறைக்கு வரும்வகையில் இடைநிறுத்தமாறும் அமைச்சர் மேற்படி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள ஒடர்கள் மற்றும் விநியோகத்திற்கு இணங்க அவற்றை ரத்துச்செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார். அந்த மருந்து விநியோக நிறுவனம் தொடர்பில் அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலையால், குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டு தற்போது அதுதொடர்பான விசாரணை மேற்கொள்ள கோரப்பட்டுள்ளது.

அத்துடன் அந்த நிறுவனத்தினால் முறையற்ற விதத்தில் விநியோகங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

சுகாதார அமைச்சின் செயலாளர், மேலதிக செயலாளர், சுகாதாரசேவைகள் பணிப்பாளர் நாயகம், பிரதி பணிப்பாளர் நாயகம், தலைவர் அரச மருந்து கூட்டுத்தாபனம் தேசிய மருந்தாக்கல் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் தலைவர், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் நிறுவனத்தின் தலைவர் உள்ளிட்ட அனைவருக்கும் மேற்படி அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

# அமைச்சர்கள் ஹரீன், மனுஷவின் மனு மீதான விசாரணைகள் ஆரம்பம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அமைச்சர்களான ஹரீன் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனு மீதான விசாரணை நேற்று (12) உச்ச நீதிமன்றத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இரண்டு அமைச்சர்களும் தமது கட்சி அங்கத்துவத்தை இரத்துச் செய்வதற்கு ஐக்கிய மக்கள் சக்தி மேற்கொண்ட தீர்மானத்தை செல்லுபடியற்றதாக்குமாறு உத்தரவு பிறப்பிக்கக்கோரி இம் மனுவை தாக்கல் செய்திருந்தனர்.

நேற்றைய தினம் விஜித் மலல்கொட, அச்சல வெங்கப்புலி மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில், இம்மனு விசாரணைக்கு எடுக்கப்பட்ட து.

மனுதாரரான மனுஷ நாணயக்காரவின் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா நீதிமன்றத்திற்கு விடயங்களை தெரிவித்திருந்தார். அந்த வகையில் தமது மனுதாரரை கட்சி அங்கத்துவத்திலிருந்து விலக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி மேற்கொண்ட தீர்மானம் முற்றாக சட்டத்திற்கு முரணானதென குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் யாப்பிற்கு இணங்க அங்கத்துவத்திலிருந்து விலக்கும் அதிகாரம் செயற்குழுவிற்கு மட்டுமே காணப்படுகிறது என குறிப்பிட்ட ஜனாதிபதி சட்டத்தரணி, அந்த கட்சியின் ஒழுக்காற்றுக் குழு அல்லது கட்சி தலைமைத்துவத்திற்கு உறுப்பினர் பதவியிலிருந்து இரத்துச் செய்வதற்கு எத்தகைய அதிகாரமும் கிடையாதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளராக அமீர் அஜ்வத் நியமனம்

ஓமான் நாட்டுக்கான முன்னாள் இலங்கைத் தூதர் ஓ.எல் அமீர் அஜ்வத் வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.



வெளிவிவகார அமைச்சின் செயல் திறன் மீளாய்வு, திட்ட அமுலாக்கல், கொன்சியுலர் சேவைகள் மற்றும் ஆபிரிக்க விவகாரங்களுக்குப் பொறுப்பான மேலதிக செயலாளராக இவர் நியமிக்கப் பட்டுள்ளார்.

இலங்கையின் சிரேஷ்ட இராஜதந்திரியான இவர் சவூதி அரேபியா, சுவிட்ஸர்லாந்து, இந்தியா, சிங்கப்பூர், புருணை, ஓமான் ஆகிய நாடுகள் மற்றும் யெமன் குடியரசுக்கான இலங்கையின் பிரதிநிதியாக கடமையாற்றியதோடு ஜெனீவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் பிரதிநிதியாகவும் பணியாற்றியுள்ளார்.

நளீமியா மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகங்களின் பட்டதாரியான இவர், கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட முதுமாணியுமாவார். உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக 1997 இல் இவர் சத்தியப்பிரமணம் செய்து கொண்டார்.

“இலங்கை ஓமான் உறவுகள்: நேற்று, இன்று, நாளை” என்ற இருதரப்பு உறவுகள் பற்றிய ஆய்வு நூலை அண்மையில் இவர் எழுதி வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

# சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

## பத்து இலட்சத்துக்கும் அதிகமானோர் வருகை

நாட்டுக்கு வருகைத்தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள அதிகரித்து வருவதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, இவ்வருடத்தின் கடந்த மாதத்தில் மாத்திரம் ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 938 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

இதன்படி நாட்டுக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை 10 இலட்சத்தை தாண்டியுள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

# ஒன்றிணைந்து செயற்பட்டால் மாத்திரமே நாட்டை உலகளவில் உயர்த்த முடியும்

## ஐ.தே.கவின் தவிசாளர் வஜிர அபேவர்தன எம்.பி.

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பிளவுபட்டு செயற்பட்டு எதனையும் சாதிக்க முடியாது. கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்பட்டால், எமது நாட்டை உலகளவில் உயர்த்த முடியுமென ஐ.தே.க.வின் தவிசாளர் வஜிர அபேவர்தன எம்.பி. தெரிவித்துள்ளார்.

வைராக்கியம் மற்றும் குரோத மனப்பான்மையுடன் செயற்பட்டால், நாடு மேலும் பின்னடைவையே சந்திக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர்,

1948 ஆம் ஆண்டு நாம் சுதந்திரம் பெற்றுக் கொண்ட நாள் முதல் 75 வருடங்களாக தவறிழைத்த இனமாகவேயுள்ளோம். அதன் உச்சமாக கடந்த வருடத்தைக் குறிப்பிட முடியும்.

அவ்வாறானால் அந்தத் தவறை திருத்திக் கொள்வது அவசியமென தற்போதைய ஜனாதிபதி

ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் தெரிவித்து வருகிறார்.

அவர் ஜனாதிபதிப் பதவியை பொறுப்பேற்பதற்கு முன்பும்



அதற்குப் பின்னரும் நாம் அனைவரும் ஒன்றிணைவோம் என்ற அழைப்பை விடுத்து வருகின்றார்.

அவ்வாறு ஒன்றிணைந்து செயற்படாவிட்டால் நாம் ஆசியாவிலும் உலக ரீதியிலும் உயர்ந்த மக்களாக ஒருபோதும் முன்னேற்றமடைய முடியாது. எவ்வாறாயினும் இடம்பெற்றுள்ள தவறுகள் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட தவறு அல்ல. அனைவரதும் தவறாகும். அவ்வாறானால் நாம்

06

# இந்திய பிரதமரை சந்திக்க தமிழ் கட்சிகள் தீர்மானம்

## சீ. வீ.விக்னேஸ்வரன் MP தரப்பு தகவல்

இந்திய பிரதமர் நரேந்திரமோடியை சந்தித்து தமது நிலைப்பாடுகள் குறித்து தெளிவுபடுத்தி தீர்க்கமான முடிவொன்றை எட்டுவதற்கு, தமிழ்த் தேசிய கட்சிகளை சேர்ந்த ஏழு கட்சிகள் இணைந்து கடிதம் ஒன்றை அனுப்ப தயாராக உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவரது இல்லத்தில் (11) நடைபெற்ற கட்சித் தலைவர்களுக்கிடையிலான சந்திப்பைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

“உடனடியாக கடிதத்தை அனுப்புவதா? இல்லையா? என்பது குறித்து இன்று வெள்ளிக்கிழமை (13) தீர்மானிக்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்துக்கு சில கட்சித் தலைவர்கள் வராததால் இறுதி முடிவு எட்டப்படவில்லை.13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைபடுத்த வேண்டிய தார்மீக பொறுப்பு இந்தியாவுக்கு உள்ளது.

நாட்டின் தற்போதைய சூழல், தமிழ் மக்களது நிலை குறித்தும் 13 ஆம் திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியம் குறித்தும் இந்திய பிரதமருடன் பேசவுள்ளோம்.

தமிழ் மக்கள் கூட்டணி, இலங்கை தமிழரசு கட்சி, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ், ஜனநாயக போராளிகள் கட்சி,தமிழ் தேசிய கட்சி ஆகியன இணைந்து இச் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளன.

கட்சி தலைவர்கள் இதற்கு சம்மதம் தெரிவித்தால், இது முழுமையான செயல்வடிவம் பெறுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மூன்று மாவட்டங்களிலுள்ள மூவாயிரம் விவசாயிகளுக்கு உரம்

பெரும்போகத்தில், இம்முறை 03 மாவட்டங்களில் மரக்கறி மற்றும் ஏனைய பயிர்களுக்காக 3,000 விவசாயிகளுக்கு உரங்களை வழங்க விவசாய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

விவசாயி ஒருவருக்கு 20,000 ரூபா பெறுமதியான உரம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதற்கான நிதியுதவி தனியார் நிறுவனமொன்றினால் வழங்கப்பட்டுள்ளது. இவ்வேலைத்திட்டம் மாத்தளை, குருநாகல், மொனராகலை மாவட்டங்களில் அமுல்படுத்தப்படவுள்ளன .

ஒரு ஹெக்டெயருக்கு குறைவான நிலத்தில் காய்கறிகள் மற்றும் பிற பயிர்களை செய்கையிடும் விவசாயிகளுக்கே, இவ்வாறு உரம் வழங்கப்படவுள்ளது.

## பகிடிவதைகளை தடுக்கும் நோக்கில்

# பல்கலை விடுதிகளில் இரவு நேரங்களில் திடீர் சோதனை

பல்கலைக்கழக விடுதிகளில் பகிடிவதை சம்பவங்களைத் தடுக்கும் நோக்கில் இரவு நேரங்களில் சோதனையிட, தீர்மானித்துள்ளதாக உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.



விடுதிகளில் பெரும்பாலும் நள்ளிரவு 12 மணி முதல் அதிகாலை 05 மணி வரை புதிதாக உள்வாங்கப்பட்ட மாணவர்களுக்கு தொல்லைகள் கொடுக்கப்படுவதாகவும், பகிடிவதைக்கு அவர்கள் உள்ளாகுவதாகவும் கிடைத்த தகவலையடுத்தே, இம்முடிவு எடுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இச்சோதனை நடவடிக்கைகளுக்கு பல்கலைக்கழக ஒழுங்குபடுத்தல், பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் மாணவர் ஆலோசகர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர். பல்கலைக்கழகங்களில் பகிடிவதைகளைத் தடுக்க தேசிய குழு நியமிக்கப்பட்டுள்ளதாக

06

# சுவிஸ் பாராளுமன்ற தேர்தலில் 03 தமிழ் வேட்பாளர்கள் களத்தில்

சுவிஸ்சர்லாந்தில் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் 03 தமிழ் வேட்பாளர்கள் சோஷலிச ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிடவுள்ளனர். இந்தத் தேர்தல் இம்மாதம் 22 நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. சோலோதர்ன், ஆர்காவ், பேர்ன் ஆகிய மாநிலங்கள் சார்பிலேயே இவர்கள் போட்டியிடவுள்ளனர். சோலோதர்ன் மாநிலம் சார்பாக ஃபரா ரூமி (Farah Rumy SP Kanton Soloturn) என்பவரும், ஆர்காவ் மாநிலம் சார்பாக கேப்ரியல் சந்தியப்பிள்ளை (Gabriel Santhiyapillai SP Kanton Aargau) என்பவரும், பேர்ன் மாநிலம் சார்பாக சந்துரு சோமசுந்தரம் (Chandru SomasundaramSP Kanton Bern) என்பவரும் போட்டியிடவுள்ளனர்.

# கொழும்பில் அபாயகரமான 300 மரங்கள் அடையாளம்

## மரங்களை வெட்டி அகற்ற குழு நியமனம்

கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் 300 அபாயகரமான மரங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இம்மரங்கள் மக்களுக்கும் சொத்துக்களுக்கும் அச்சுறுத்தலாக காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



இது தொடர்பில் ஆராய்ந்து இம்மரங்களை அகற்ற குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் 1,00,000 க்கும் மேற்பட்ட பெரிய மரங்கள் உள்ளன. அவற்றில் 300 அபாயகரமானவை என, இனங்காணப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் புதன்கிழமை (11) நடைபெற்ற அபாயகரமான மரங்கள் முறிந்து விழுவதைத் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் கலந்துரையாடலிலேயே, அவர் இதனை தெரிவித்துள்ளார்.

புறநகர் பகுதிகளில் சூழலுக்குப் பொருத்தமான மரங்கள் நடப்படுவதை உறுதி செய்யும் முறையான திட்டத்தை தயாரிக்குமாறு, இராஜாங்க அமைச்சர் உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. கொழும்பு மாநகர சபை எல்லையில், குறுகிய கால தீர்வாக பொருத்தமான வேலைத்திட்டங்களை முறையான ஆய்வுகளை மேற்கொண்ட பின்னர் ஆரம்பிக்குமாறு இராஜாங்க அமைச்சர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களம் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றிலிருந்து தொழினுட்ப உதவிகளைப் பெறுவதற்கும் மற்றும் புறநகர் பகுதிகளில் அபாயகரமான மரங்களை அடையாளம் காணவும், இதுபோன்ற விபத்துகளைத் தடுப்பதற்கு நீண்டகால தீர்வைத் தயாரிக்கவும் சிங்கப்பூர் போன்ற நாடுகள் பயன்படுத்தும் தொழினுட்ப முறைகள் குறித்த ஆய்வுகளை மேற்கொள்ளவும் தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் அதிகாரிக்கு அவர் உத்தரவிட்டார்.

# இஸ்ரேலிலுள்ள இலங்கையரின் தகவலறிய தொ.பே இலக்கங்கள்

இஸ்ரேலில் நிலவும் மோதல் சூழ்நிலையயடுத்து, அந் நாட்டிலுள்ள இலங்கை பணியாளர்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக இரண்டு விசேட தொலைபேசி இலக்கங்களை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் வழங்கியுள்ளது.

அதன்படி, இஸ்ரேலிலுள்ள இலங்கை பணியாளர்கள் பற்றிய தகவல்களை +94716640560 என்ற WhatsApp இலக்கத்துக்கு அல்லது 1989 வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் உடனடி தொலைபேசி இலக்கத்துக்கு வழங்கமுடியும்.

தற்போதைய சூழ்நிலையில், இஸ்ரேலில் சுமார் எட்டாயிரம் இலங்கையர் பணிபுரிவதுடன், அவர்களில் 90 சதவீதம் பேர் சேவை வழங்குநர்களாக பணிபுரிகின்றனர்.

இஸ்ரேலிலுள்ள இலங்கைத் தூதரகத்துடன் இணைந்து, நாட்டில் உள்ள இலங்கையரின் நிலைமைகள் குறித்து கேட்டறிந்து, தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834

தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279

பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சோபகிருது வருடம் புரட்டாதி மாதம் 27ஆம் நாள் வெள்ளிக்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1445 ரபீஉனில் அவ்வல் பிறை 27


### குறள் தரும் சிந்தனை



சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனையது உடைத்து

சிறந்த உள்ளம் கொண்ட செல்வர்களுக்கேற்படும் சிறிதளவு வறுமையின் நிழல்கூட, மழை பொய்த்து விட்டதற்கு ஒப்பானதாகும்.

# வரலாற்று முக்கியத்துவம் மிக்க மூன்று ஒப்பந்தங்கள் கைச்சாத்து

இந்து சமுத்திர எல்லை நாடுகள் அமைப்பின் மாநாடு கடந்த 9 முதல் 11 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெற்றது. இந்த அமைப்பில் அங்கம் வகிக்கும் 23 நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள், பிரதி வெளிவிவகார அமைச்சர்கள் உட்பட உயர்மட்ட இராஜதந்திரிகளும் கொழும்புக்கு வருகை தந்திருந்தனர். அவர்களில் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கரும் அடங்கி இருந்தார்.

இந்திய வெளிவிவகார அமைச்சரின் இம்முறை இலங்கை விஜயம் இருநாடுகளுக்கும் இடையிலான நட்புறவில் மற்றொரு மைல்கல்லாக அமைந்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அமைச்சர் ஜெய்சங்கர் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இப்பேச்சுவார்த்தையின் போது இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை மேலும் மேம்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது. அத்தோடு இரு நாடுகளுக்கும் இடையில் முக்கியத்துவம் மிக்க மூன்று ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

அந்த ஒப்பந்தங்களில், இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் இந்நாட்டில் முன்னெடுக்கப்படும் 10 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் திட்டத்தின் நான்காவது கட்டத்தின் கீழ் வீடொன்றை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த 1.026 மில்லியன் ரூபாவை 2.8 மில்லியன் ரூபாவாக அதிகரித்துக் கொள்வதற்கான உடன்படிக்கையும் ஒன்றாகும். இந்த உடன்படிக்கையானது இந்திய வீடமைப்பு திட்டத்தின் நான்காம் கட்டத்தை விரைவுபடுத்துவதற்கு வழிவகுக்கும். அதனால் இந்திய வீடமைப்புத் திட்டத்தின் நான்காம் கட்டத்தில் வீட்டை எதிர்பார்த்துள்ளவர்களுக்கு இந்த உடன்படிக்கை புதிய நம்பிக்கைகளை அளிக்கும்.

அதேநேரம் இந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் 9 திட்டங்களை விரைவில் நிறைவு செய்வதற்கு அவசியமான மேலதிக ஒதுக்கீடுகளை இந்தியாவிடம் பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தம் இதுவாகும்.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் வடக்கு மாகாணத்தின் 27 பாடசாலைகளை மேம்படுத்தல், மன்னார் மற்றும் அநுராதபுரம் வீடமைப்புத் திட்டங்கள், ஹட்டன் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் புஸ்ஸலாவை சரஸ்வதி மத்திய கல்லூரியின் அபிவிருத்திப் பணிகள், பொலன்னறுவையில் பல்லின மும்மொழிப் பாடசாலையொன்றை நிர்மாணித்தல், யாழ்ப்பாணத்தில் மழைநீரை சேகரிக்கும் வேலைத்திட்டத்தின் கீழான 2889 நிர்மாணிப்புகள், தம்புள்ளையில் பழங்கள் மற்றும் மரக்கறி வகைகள் பழுதடையாமல் பாதுகாப்பதற்கான 5000 மெற்றிக் தொன் கொள்ளளவுடைய குளிரூட்டி வசதிகள் அமைத்தல், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு புதிய சத்திரசிகிச்சை பிரிவொன்றை நிறுவுதல் உள்ளிட்ட வேலைத்திட்டங்கள் விரைவில் நிறைவு செய்யப்படவுள்ளன.

இதன் ஊடாக நாட்டின் பல பிரதேசங்களதும் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு அடையும்.

மேலும் இந்நாட்டின் தேசிய பாலுற்பத்தியை பலப்படுத்தும் வகையில் இந்தியாவின் குஜராத் கூட்டுறவு பால் விற்பனை சம்மேளனமான அமுல் குழுமம் இலங்கையின் காகில்ஸ் கூட்டு வர்த்தக நிறுவனம், இந்திய தேசிய பாலுற்பத்தி ஊக்குவிப்பு சபை ஆகியன இணைந்து கூட்டு வேலைத் திட்டத்தை முன்னெடுக்க உள்ளது. அது தொடர்பான ஒப்பந்தமும் கைத்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் ஊடாக முதல் ஐந்து வருடங்களில் பால் உற்பத்தியை 53 சதவீதத்தினால் அதிகரித்துக் கொள்ளவும் 15 வருடங்களில் பாலுற்பத்தியில் தன்னிறைவு அடைவதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அதனால் கால்நடை வளர்ப்புத் துறையை மேம்படுத்துவதற்கான நிதி உதவிகளும் அளிக்கப்படவிருக்கின்றன.

இந்த ஒப்பந்தங்கள் இந்நாட்டின் சமூக, பொருளாதார, உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்கு பாரிய பங்களிப்பு நல்கும். இந்நாட்டின் முன்னேற்றத்திற்கு இந்தியா அளித்துவரும் உதவி ஒத்துழைப்புகளில் இவையும் ஒரு பகுதியே ஆகும். 'அயல் நாடு முதலில்' என்ற திட்டத்தின் கீழ் இந்தியா இலங்கைக்கு உதவி ஒத்துழைப்புக்களை நல்கி வருவது தெரிந்ததே.

அந்த வகையில் கடந்த வருடத்தின் ஆரம்பப் பகுதியில் இந்நாடு கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான போது இந்தியா அளித்த உதவி, ஒத்துழைப்புக்கள் இந்நாட்டு வரலாற்றில் அழியாத்தடம் பதித்துள்ளன. அந்த வரலாற்றுத் தடத்தோடு இந்த உதவி ஒத்துழைப்புகளும் நிச்சயம் சேர்ந்து கொள்ளும். அதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

editor.tkn@lakehouse.lk

### இலங்கைக்கு இந்து சமுத்திர எல்லைகள் அமைப்பின் தலைமை;

# ஐ.ஓ.ஆர்.ஏ நாடுகளுடன் ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் சவூதி கூடுதல் கரிசனை



இந்து சமுத்திர எல்லை நாடுகள் அமைப்பின் (IORA) அமைச்சர்கள் மட்ட மாநாடு கடந்த 09 முதல் 11 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெற்றுள்ளது. இதில் 9 ஆம், 10ஆம் திகதிகளில் சிரேஷ்ட அதிகாரிகள் மட்ட அமர்வும், 11 ஆம் திகதி அமைச்சர்கள் மட்ட மாநாடும் இடம்பெற்றுள்ளன. இந்த அமைப்பில் அங்கம் வகிக்கும் 23 நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் மற்றும் பிரதி வெளிவிவகார அமைச்சர்கள், துணை வெளிவிவகார அமைச்சர்கள் மற்றும் உயர்மட்ட இராஜதந்திரிகள் பலரும் இம்மாநாட்டில் கலந்து கொண்டுள்ளனர்.

இம்மாநாட்டைத் தொடர்ந்து இவ்வமைப்பின் தலைமைப் பதவி இலங்கைக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. 2023 முதல் 2025 வரையும் இலங்கை இப்பதவியை வகிக்கும்.

இலங்கை, இந்தியா, பங்களாதேசம், மாலைதீவு, சவூதி அரேபியா உட்பட 23 நாடுகளின் பிரதிநிதிகள் இம்மாநாட்டுக்காக இலங்கைக்கு வருகை தந்திருந்தனர்.

சவூதி அரேபியாவின் வெளியுறவு அமைச்சர் இளவரசர் பைசல் பின் ஃபர்ஹான் பின் அப்துல்லாஹ்வுக்குப் பதிலாக அந்நாட்டின் உதவி வெளிவிவகார அமைச்சர் வலீத் பின் அப்துல் கரீம் எல்கெரிஜி தலைமையிலான குழுவினர் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

இலங்கைக்கு வருகை தந்திருந்த சவூதி அரேபிய உதவி வெளிவிவகார அமைச்சர் வலீத் பின் அப்துல் கரீம் எல்கெரிஜி அமைச்சர் அலி சப்ரியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இச்சந்திப்பின் போது இரு நாடுகளுக்கிடையேயான இருதரப்பு நட்புறவுகளை மேலும் மேம்படுத்துவது குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அத்தோடு பொதுநலன்களை அடைதல் மற்றும் அனைத்துத் துறைகளிலும் அவற்றை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்தும், பிராந்திய மற்றும் சர்வதேச பிரச்சினைகள் தொடர்பிலும் பொதுவான நலன்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அதேநேரம் இந்துசமுத்திர எல்லை நாடுகள் அமைப்பின் (ஐ.ஓ.ஆர்.ஏ) பொதுச்செயலாளர் சல்மான் அல் ஃபரிசியை, சவூதி அரேபிய பிரதிவெளிவிவகார அமைச்சர் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இச்சந்திப்பின் போது இவ்வமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளுக்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையிலான ஒத்துழைப்புக்களை மேலும் மேம்படுத்துவது குறித்தும் கலந்துரையாடியுள்ளனர்.

## சவூதி தூதுக்குழுவினர் அமைச்சர் அலி சப்ரி, ஐ.ஓ.ஆர்.ஏ பொதுச் செயலாளருடன் சந்திப்பு

இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் பின் ஹமூத் அல்அல்கஹ்தானி இச்சந்திப்புக்களில் பங்குபற்றியுள்ளார்.

இவ்வமைப்பின் அமைச்சர்கள் மட்டக் கூட்டத்தில் பங்குபற்றிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களும், பிரதிவெளிவிவகார அமைச்சர்களும் உரையாற்றினர். அந்த வகையில் இம்மாநாட்டில் உரையாற்றிய சவூதி அரேபிய உதவி வெளிவிவகார அமைச்சர், இந்து சமுத்திர எல்லை நாடுகள் அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளுடனான உரையாடல்களுக்கான பங்காளியாகவும் அந்தந்த நாடுகளதும் அந்நாடுகளின் மக்களதும் பொது நலன்களை அடைவதற்கு ஒத்துழைப்புடன் பணியாற்றுவதற்கான சவூதி அரேபியாவின் விருப்பத்தையும் வெளிப்படுத்தினார்.

அதேநேரம் சவூதி அரேபியா, விஷன் 2030 திட்டத்தின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக முனைப்புடன் பணியாற்றி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

'சவூதி அரேபியாவின் வெளியுறவுக் கொள்கையானது, பிராந்திய மற்றும் சர்வதேசத்தின் அபிவிருத்தியை முன்னேற்றுவதற்கு பணியாற்றி வருகின்றது. இந்து சமுத்திர எல்லை நாடுகள் அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகள் இம்மாநாட்டில் பங்கேற்று இருப்பதன் ஊடாக மாநாட்டின் முக்கியத்துவம் உறுதி செய்யப்படுவதோடு, ஸ்திரத்தன்மை, பொருளாதாரப் பன்முகத்தன்மை மற்றும் தங்கள் நாடுகளுக்குள் செழுமையையும் மேம்படுத்துகிறது'.





சவுதி அரேபியாவுக்கும் இந்து சமுத்திர எல்லை நாடுகளுக்கும் இடையிலான கூட்டாண்மை மூலம் வழங்கப்படும் பல்வேறு வாய்ப்புகளை உணர்ந்து, பொதுவான சவால்களை சமாளிக்க பல்வேறு துறைகளில் கூட்டு ஒருங்கிணைப்பை தொடரவும் சவூதி அரேபியா விருப்பம் கொண்டுள்ளது'.

கடல்சார் பாதுகாப்பு மற்றும் உலகளாவிய வர்த்தகத்தின் சவால்களை எதிர்கொள்ளவும் உலகளாவிய வழிசெலுத்தலின் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் இச்சங்கம் முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு சவூதி அரேபியாவின் ஆதரவை அவர் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார்.

பிராந்திய நாடுகளை ஒன்றோடொன்று இணைப்பதன் மூலம் கிடைக்கப்பெறும் பெரும் ஆற்றலைப் பயன்படுத்தி, இளைஞர்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துவதன் மூலமும், பூமியின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதன் மூலமும் இந்த இலக்குகள் அடையப்படும். காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் மாற்றத்தால் ஏற்படும் சவால்களை முழுமையாக அறிந்திருப்பதாகவும் சவுதி அரேபியாவின் உதவி வெளிவிவகார அமைச்சர் கூறினார்.

பவளப்பாறைகள், பல்லுயிர் மற்றும் கடல் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க, எதிர்கால சந்ததியினருக்கு வாய்ப்புகள் மற்றும் நிலையான வளர்ச்சியை வழங்க, தகவல் பரிமாற்றம் நிபுணத்துவத்தை உருவாக்க மற்றும் பயனுள்ள முறைகளை உருவாக்க உறுப்பு நாடுகளுடன் இணைந்து பணியாற்றுவதற்கு இது உறுதிபூண்டுள்ளது என்றும் அவர் இம்மாநாட்டில் குறிப்பிட்டுள்ளார்.



மர்லின் மரிக்கார்...

# சீனன்கோட்டையில் 91 ஆவது வருட ஸஹீஹுல் புஹாரி தமாம் மஜ்லிஸ்

பேருவளை சீனன்கோட்டை பிட்டவளை அல்மிர் அதுஷ்ஷாதுலிய்யா ஸாவியாவில் 91 ஆவது வருட புனித ஸஹீஹுல் புஹாரி தமாம் மஜ்லிஸ் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எம்.எம். ஸைனுலாப்தீன் (பஹ்ஜி) தலைமையில் நடைபெறுவதோடு, ஷாதுலிய்யா தரீக்காவின் கலீபதுல் குலபா மௌலவி எம்.இஸட் முஹம்மத் ஸுஹுர் (பாரி) விஷேட சொற்பொழிவாற்றுவார்.

அல்குர்ஆனை நன்கு விளங்கிக் கொள்ளவும் இஸ்லாமிய திட்டங்களை நன்கு விளங்கிக் கொள்ளவும் ஹதீஸ்கள் தேவைப்பட்டன. இதனால் காலக்கிரமத்தில் நபிகளாரின் பொன்மொழித் தொகுப்புக்கள் வெளிவர ஏதுவாயின. இவற்றுள் தலையாயதும், முக்கியம் வாய்ந்ததாகவும் கருதப்படுவது 'ஸஹீஹுல் புஹாரி' என்னும் ஹதீஸ் பேழையாகும்.

அபூ அப்துல்லாஹ் முஹம்மதிப்னு இஸ்மாயில் புகாரி (ரஹ்) அவர்களால் தொகுக்கப்பட்ட மேற்படி நூல் அல் குர்ஆனுக்கு அடுத்தபடியாக கருதப்பட்டுப் போற்றப்படுகின்றது. நபி (ஸல்) அவர்களின் வாய்வந்த இலட்சக்கணக்கான ஹதீஸ்களைத் தொகுத்து, 7275 ஹதீஸ்களை மட்டுமே இமாம் புஹாரி அவர்கள் தமது ஸஹீஹுல் புஹாரியில் எழுதியுள்ளார்.

இவ்வளவு சிறப்புப் பொருந்திய இந்த அரிய புகாரி ஷரீபை மக்கள் சரிவரக் கேட்டு அதன்படி நடந்து மேம்பாடு அடைய வேண்டுமென்ற நோக்கில் இற்றைக்குச் சுமார் 91 ஆண்டுகளுக்கு முன்னர் பேருவளை சீனன்கோட்டை பிட்டவளையில் அமைந்துள்ள 'அல் மிர்அதுஷ் ஷாதுலிய்யா' ஸாவியாவில் ஓர் அரிய முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதிராம் பட்டிணத்தில் இருந்து இலங்கைக்கு வருகை தந்த ஷாதுலிய்யாத் தரீக்காவின் கலீபதுல் குலபாவும், அத்தரீகத்துல் ரிபாயிய்யா நக்ஷபந்தியா தரீக்காவின் கலீபாவுமான அஹமது லெப்பை ஆலிம் சாகிப் (ரஹ்) (சேகுனா அப்பா) அவர்கள் இந்த ஸாவியாவில் இந்த உயரிய புகாரி மஜ்லிஸை ஆரம்பித்து ஆன்மிக ஒளிதரும் மங்காத தீபத்தை ஏற்றி வைத்தார்.

சேகுனா அப்பா அவர்கள் பேருவளை மாளிகாஹேனை புகாரி தைக்காவிலும் சிலகாலம் தங்கியிருந்து அங்கு நடைபெற்று வரும் மேற்படி மஜ்லிஸையும் முன்னின்று நடத்தியமை இங்கு குறிப்பிடத்தக்கது. அன்னார் ஷாதுலிய்யா தரீக்காவின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து, மக்களையும் தீனின்பால் நெறிப்படுத்தினார்.

சீனன்கோட்டைப் பள்ளிவாசலில் அடங்கப்பட்டுள்ள சாச்சப்பா ஆலிம் (ரஹ்) உதுமான் லெப்பை ஆலிம் (ரஹ்) அபூஸாலி ஆலிம் (ரஹ்) ஹனீபா ஆலிம் (ரஹ்) எம்.ஐ.எம். மன்ஸுர் ஆலிம் (ரஹ்) இம் மஜ்லிசின் வளர்ச்சிக்கு அளப்பரிய பங்காற்றினார்.

30 நாட்கள் தொடர்ச்சியாக நடைபெற்ற மேற்படி மஜ்லிசுக்கு சாவியாவின் பிரதம இமாம் கதீப் கலீபதுஷ் சாதுலி மௌலவி எம்.எம். செய்னுலாப்தீன் (பஹ்ஜி) தலைமை வகித்தார்.





புனித ரபியுல் அவ்வல் மாதம் 30 தினங்களாக சீனன் கோட்டை பகுதியில் நடைபெற்றுவந்த மௌலுத் மஜ்லிஸ் தமாம் வைபமும் 14.10.2023 ஆம் திகதி மாலை அஸர் தொழுகையையடுத்து இதே சாவியாவில் நடைபெறும். மஃரிப் தொழுகையை தொடர்ந்து வலீபா யாக்கூத்தியாவும் இஷாத் தொழுகையை தொடர்ந்து வலீபா ஹாக்கூத்தியாவும் இஷாத் தொழுகையை அடுத்து திக்ர் மஜ்லிசும் முஸாக்கராவும் இடம்பெறும்.

சீனன்கோட்டை ஜாமஜயதுல் பாஸியதுஷ் ஷாதுலிய்யா கலாபீட பணிப்பாளர் மௌலவி எம்.ஜே.எம் பஸ்லான் (அஷ்ரபி – பீ.ஏ) முஸாக்கரா நிகழ்த்துவார்.

# அனைத்துத்துறை மாணவருக்கும் உயர்கல்விக்காக சவூதி அரேபிய பல்கலைக்கழகங்களில் வாய்ப்பு

கல்வித்துறையில் தீவிர ஆர்வம் காட்டி வரும் சவூதி அரேபியா வெளிநாட்டு மாணவர்களுக்கு பல வருடங்களாக உயர்கல்விக்காக புலமைப் பரிசில்களை வழங்கி வருகிறது. கல்வி முறையில் நவீன காலத்திற்கு ஏற்ப பல முன்னேற்றகரமான திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

இந்த வகையில் உலகின் எப்பாகத்தில் இருந்தும் மாணவர்கள் சவுதி அரேபியா சென்று உயர்கல்வியைத் தொடர்வதற்கு சவுதி அரேபியா முழுமையான புலமைப்பரிசில்களை வழங்கி வருகிறது. கடந்த காலங்களில் ஒரு சில பல்கலைக்கழகங்கள் மாத்திரமே வெளிநாட்டவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்கின.

தற்போது மக்கா மதீனா, ரியாத், அப்ஹா, ஜாஸான் போன்ற அனைத்து நகரங்களிலும் உள்ள பல்கலைக்கழகங்களில் உயர் கல்விக்கான புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த காலங்களில் இஸ்லாமிய கற்கைநெறிகளில் மாத்திரம் அதிகளவு புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன. தற்போது தகவல் தொழில்நுட்பம், பொறியியல், மருத்துவம் போன்ற அனைத்துத் துறைகளிலும் உயர்கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

Study in Saudi Arabia என்ற திட்டத்தின் கீழ் கட்டணம் செலுத்தியும் புலமைப்பரிசில்கள் மூலமும் ஒவ்வொரு வருடமும் மாணவர்கள் உள்வாங்கப்படுகின்றனர். பொருளாதாரப் பிரச்சினையை எதிர்நோக்கியிருக்கும் எமது நாட்டில் உள்ள திறமையான மாணவர்களுக்கு இப்பல்கலைக்கழகங்களில் உயர்கல்வியை தொடர்வதற்கு இது ஓர் அரிய சந்தர்ப்பமாகும்.

## பல நூறு இலங்கை மாணவர்கள் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் கல்வி பயில கிடைத்த வாய்ப்பு





தற்போதும் இலங்கையின் பல பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் பூரண புலமைப்பரிசில் பெற்று கற்றுக் கொண்டிருக்கிறார்கள். தான் விரும்பிய மூன்று பல்கலைக்கழகங்களைத் தெரிவு செய்து விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிக்கும் முறை இணைய தளம் மூலம் இலகுபடுத்தப்பட்டுள்ளது. சவுதி அரேபியா உலகளாவிய ரீதியில் கல்விக்கான உதவிகளை வழங்கி வருகிறது. அண்மையில் தாஜிகிஸ்தான் நாட்டின் 19 அரசாங்கப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கான ஒப்பந்தம் நடைபெற்றது. சவுதியின் 2030 நோக்கங்களில் கல்வித்துறையை மேம்படுத்தும் வேலைத்திட்டம் முக்கிய இடத்தை வகிக்கிறது.

கொவிட் 19 இற்குப் பிறகு கல்வித்துறையில் பல சவால்களை எதிர்கொண்ட நாடுகளில் சவுதி அரேபியா விரைவாக மீண்டு வந்துள்ளது. பல நாடுகளிலும் சவுதி அரேபியா தமது மனிதாபிமான உதவிகளை வழங்கிக் கொண்டே இருக்கிறது. கல்வித்துறையை மேம்படுத்துவதற்கு சவுதி அரேபியா போன்ற நாடுகளின் உதவிகளைப் பெற்றுக் கொள்வது சிறந்ததாகும்.



அஷ்ஷெய்க் பௌஸுல் அலவி...
செயலாளர், தாருள் இமான் நிறுவனம்

# சகவாழ்வு, சகோதரத்துவத்துக்கு நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரி

இஸ்லாம் சமூக ஒற்றுமைக்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளது. அல் குர்ஆன் இதனை பல இடங்களில் எடுத்தியம்பியுள்ளதோடு நபி (ஸல்) அவர்களும் சமூக ஒற்றுமையையும் சகோதரத்துவத்தையும் பெரிதும் வலியுறுத்தியுள்ளார்கள். இதன் ஊடாக சகோதரத்துவ வாஞ்சை மிக்க இஸ்லாமிய சமூகம் உருவானது.

சமூக ஒற்றுமைக்கும் சகோதரத்துவத்திற்கும் நபி (ஸல்) அவர்களின் வாழ்வே மாபெரும் முன்மாதிரியாகும். அது அன்னார் முன்னெடுத்த இலட்சிய பயணத்தின் வெற்றிக்கு வழிவகுத்தது.



முஸ்லிம்கள் அல்லாஹ் ஒருவனை வணங்கி வழிபடுகின்றனர். இறுதித்தூதர் நபி (ஸல்) அவர்களை பின்பற்றுகின்றனர். அவர்களுக்கு எல்லா காலத்திற்கும் தேவையான வழிகாட்டல்களை வழங்கக்கூடிய திருமறையும் ஒன்று தான், தொழுகைக்காக எழுந்து நின்று முன்னோக்கும் இடமும் ஒன்று தான், தொழுகைக்காக அழைக்கும் அழைப்பும் ஒன்றுதான். தவாப் செய்யும் கஃபாவும் அவர்களுக்கு ஒன்றாகத்தான் இருக்கின்றது. இஹ்ராம் அணியும் ஆடையும் ஒரே நிறம் தான். இவற்றில் சிறியவர் பெரியவர், பேதைமேதை, ஏழை பணக்காரர், அழகுள்ளவர்-அழகற்றவர் போன்ற எந்த வேறுபாடுகளும் இல்லை. இவை அனைத்தும் முஸ்லிம்கள் அனைவரும் ஒரே சமூகம் என்பதை படம் பிடித்து காட்டுகின்றன.

இதனை அல்குர்ஆன், "இன்னும் நீங்கள் யாவரும் சேர்ந்து அல்லாஹ்வின் கயிற்றை வலுவாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். நீங்கள் பிரிந்து விடாதீர்கள்".(ஆல இம்ரான்:103) என்று எடுத்தியம்பியுள்ளது.

மக்காவிலிருந்து அனைத்தையும் துறந்து அகதிகளாக மதீனா நோக்கி பயணமான மக்காவாசிகளுக்கும் மதீனாவாசிகளுக்கும் இடையில் ஒற்றுமையை கட்டியெழுப்பும் வகையில் நபி (ஸல்) அவர்களால் ஏற்படுத்தப்பட்ட உன்னதமான முதல் பணியே "அல் முஆஹாத்" சகோதர வாஞ்சையைக் கட்டியெழுப்புதல் எனும் பணியாகும். உலகையே வியப்பில் ஆழ்த்தும் வகையில் மதீனா வாசிகளின் அரவணைப்பும் அன்பும் இருந்ததாக வரலாறு பதிவு செய்து வைத்துள்ளது. இந்த சகோதர வாஞ்சையின் அடிநாதத்தில் கட்டியெழுப்பப்பட்ட சமூக ஒற்றுமையை இஸ்லாம் உலகறியச் செய்தது. அந்த ஒற்றுமையாளர்களை அல்லாஹ் நேசிப்பதாகவும் அல்குர்ஆனின் அல் ஸப் என்ற அத்தியாயத்தின் நான்காவது வசனம் எடுத்தியம்பியுள்ளது.

இஸ்லாம் கடமையாக்கியுள்ள ஒவ்வொரு கடமையின் ஊடாகவும் சமூக ஒற்றுமையை கட்டியெழுப்புவற்கான வழிகளை ஏற்படுத்தியுள்ளது. தொழுகையின் போது அணிகளை நெருக்கமாக்காமல் நபி (ஸல்) அவர்கள் தொழுகையை ஆரம்பிக்க மாட்டார்கள்.

நபி (ஸல்) அவர்களின் இறுதித் தருணம், இந்த உலகிற்கு விடை கொடுக்கும் நாள் ஸுபஹ் தொழுகை நேரம் திரையை நீக்கிவிட்டு பார்க்கின்றார்கள், எல்லா சஹாபாக்களும் தோளோடு தோள் நின்று, ஒரே அணியில் தொழும் காட்சியை கண்டு பூரித்துப் போனார்கள்.

நபி (ஸல்) அவர்கள் தன் சமூகத்தார் மத்தியில் விதைக்க விரும்பிய உன்னத இலக்கு ஈமானின் ஒளியில் புடம்போடப்பட்ட ஒற்றுமைச் சமூகமாகும். அதைக் கண்கூடாகக் கண்டபோது ஏற்பட்ட பூரிப்பே அது. முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமை எப்படி இருக்க வேண்டும் என்பதனை நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள், "முஃமின்கள் ஒரு மனித உடலுக்கு ஒப்பானவர்கள். ஒரு மனிதனது கண்ணில் வலி ஏற்பட்டால் அவனது முழு உடம்பும் அவ்வலியை ஏற்றுக்கொள்கின்றன. அவ்வாறே ஒரு மனிதனது தலையில் வலி ஏற்பட்டால் அவனது முழு உடம்பும் அவ்வலியை தாங்கிக் கொள்கின்றன." (ஆதாரம்: அஹ்மத்)

இவ்வொழுங்கின் பிரகாரமே முஸ்லிம்களின் ஒற்றுமை நபி (ஸல்) அவர்களால் கட்டியெழுப்பப்பட்டது. முஸ்லிம்களோடு மட்டுமல்லாமல், முஸ்லிம் சமூகத்தாரோடு சேர்ந்து வாழ்ந்த மாற்று மத சகோதரர்களோடும் ஒற்றுமையைப் பேணி நல்லிணக்கத்தோடு வாழும்படி பணித்தார்கள். இவ்வுலகமே வியந்து பார்க்குமளவுக்கு எல்லா சமூகத்தினரோடும் ஒற்றுமையைப் பேணி வாழ்ந்தார்கள்,

குறிப்பாக 'நபி (ஸல்) அவர்கள் யூதர்களுடன் கொடுக்கல் வாங்கல் செய்துள்ளார்கள். அன்னார் தமது இரும்புக் கவசத்தை ஒரு யூதரிடம் அடமானமாக வைத்து அவனிடம் உணவுப் பொருட்களைக் கடனாக பெற்று இருந்தார்கள்'. (ஆதாரம்: புஹாரி)

'ஒரு தடவை நாயகம் (ஸல்) அவர்களைக் கடந்து பிரேத ஊர்வலமொன்று சென்ற போது நபி (ஸல்) அவர்கள் எழுந்து நின்றார்கள். 'இது யூதருடைய பிரேதம்' என்று கூறப்பட்டது. அதற்கு நபி (ஸல்) அவர்கள் 'அதுவும் ஒரு உயிர் அல்லவா? என்று கூறினார்கள். (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

இவ்வாறு நபி (ஸல்) அவர்கள் ஏனைய சமூகத்தினருடனும் சகவாழ்வுடனும் புரிந்துணர்வுடனும் வாழ்ந்துள்ளார்கள். அதன் ஊடாக இரண்டு தசாப்தங்களுக்குள் ஒரு மாபெரும் ஒற்றுமைப் புரட்சியின் ஊடாக மிகச் சிறந்த ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்பினார்கள். இதற்கு அல் குர்ஆனின் பல வசனங்களும் அடித்தளமாக அமைந்தன.

எனவே சகோதரத்துவ ஒற்றுமையைப் பேணிப் பாதுகாத்திட வேண்டியது ஒவ்வொரு முஸ்லிமுடைய கடமையாகும். அதன் ஊடாக அல்லாஹ்வின் அருளையும் கருணையையும் அடைந்திடுவோம்.

கலாநிதி, அல்ஹாபிழ்
எம்.ஐ.எம். சித்தீக்...
(அல்ஈன்ஆமி)
B.A.Hons,(Al Azhar university, Egypt) M.A.& PhD (International Islamic university, Malaysia)

# ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# நீதியை வலியுறுத்தும் மார்க்கம்

நபி(ஸல்) அவர்கள் தம் தோழர்களிடம், 'தொழுகையைவிட, தானதர்மங்கள் செய்வதைவிட சிறந்த செயலை நான் உங்களுக்கு சொல்லித் தரட்டுமா? எனக்கேட்ட போது, 'சொல்லுங்கள், யாரஸூலுல்லாஹ்! என்று தோழர்கள் கூறினர். அச்சமயம் நபியவர்கள், 'இரண்டு பேருக்கு இடையே சமாதானம் செய்து வையுங்கள்' என்றார்கள். சமாதானத்தை உண்டு பண்ணுவது தொழுகையை விட, நோன்பை விட, தானதர்மங்கள் செய்வதை விடச் சிறந்தது' என்று கூறியுள்ளார்கள்.

அதற்காக தொழாமல் இருப்பதற்கு அனுமதி என்று பொருள் அல்ல. 'ஒரு சண்டை நடந்து கொண்டிருக்கும் போது அதைப்பற்றியெல்லாம் எனக்கு கவலை இல்லை, என் தொழுகைதான் எனக்கு முக்கியம், யாரோ எப்படியோ அடித்துக் கொள்ளட்டும்' என்று இருந்து விடாதீர்கள்' என நபி (ஸல்) அவர்கள் முக்கியத்துவமும் முன்னுரிமையும் அளித்திருப்பதையே இது எடுத்துக்காட்டுகிறது. அல்குர்ஆன், 'இறை நம்பிக்கை கொண்ட இரு குழுவினர் மோதிக் கொண்டால் நீங்கள் அவர்களுக்கு மத்தியில் சமாதானம் செய்து வையுங்கள்' எனக் குறிப்பிட்டுள்ளது.

சமாதானம் செய்து வைப்பது மார்க்கத்தில் முக்கியமானதொரு கடமை' என்று அறிஞரொருவர் கூறியுள்ளார். 'உலகிற்கு அதிக அழிவை தந்தது தீயவர்களின் செயல்கள் அல்ல, நல்லவர்களின் மௌனமே. தீமைகள் நடக்கின்ற போது வினா விடுக்கின்றவர்களின் அமைதிதான் உலகத்தை அழித்திருக்கிறது.

இஸ்லாம் என்றால் அமைதி, சமாதானம். ஒரு முஸ்லிம் என்பவன் அமைதியை நிலைநாட்டுபவனாக இருக்க வேண்டும். அதுவுமொரு வணக்கம். அதுவும் ஓர் அறம். ஸதகா, அல்குர்ஆனில், 'நீங்கள் நீதியை நிலைநிறுத்துவதில் அல்லாஹ்வுக்கு சாட்சியாக இருங்கள். அந்த நீதி உங்களுக்கே பாதகமாக இருந்தாலும் சரி. உங்களுடைய உறவினர்களுக்கோ, உங்களுடைய பெற்றோர்களுக்கோ பாதகமாக இருந்தாலும் நீங்கள் நீதியின் அடிப்படையில் தான் பேசவேண்டும்' (4:135) என்று சுட்டிக்காட்டியுள்ளது.

மற்றொரு வசனத்தில், 'ஒரு சமுதாயத்தை நீங்கள் விரும்பவில்லை என்ற காரணத்திற்காக அவர்களுக்கு எதிராக அநீதிகளை நீங்கள் செய்யாதீர்கள் (5:8) என்றும் தெரிவித்திருக்கிறது.

எனவே இஸ்லாத்தில் பிடித்தவன்-பிடிக்காதவன், சொந்தக்காரன்ஊர்க்காரன், அந்நியன் என்ற அளவுகோல்களுக்கு அப்பால் நீதி அனைவருக்கும் பொதுவானதாகும்.

தொகுப்பு: தல்ஹா முஸாதிக்...

# முஹம்மத் (ஸல்) இறைத்தெரிவு பெற்ற மனிதர்

இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் பிறப்பு மற்றும் இறப்பு, அன்னாரதும் அவர்களது தோழர்களதும் வாழ்வில் இடம்பெற்ற மிகப்பெரும் திருப்புமுனையாக விளங்கும் மதீனாவை நோக்கிய புலம்பெயர்வு போன்ற பல முக்கிய நிகழ்வுகளைத் தன்னகத்தே கொண்டதே ரபிஉல் அவ்வல் எனும் இஸ்லாமிய நாட்காட்டியின் மூன்றாம் மாதம் ஆகும்.

முஹம்மத்(ஸல்) அவர்கள் செய்த சமூகப் புரட்சி வருடம் முழுவதும் நினைவுகூரப் பட்டாலும் அதில் போதாமையே இருக்கும். என்றாலும் அன்னார் என்றென்றும் நினைவுகூரப்படுவது அவசியம். அதனால் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பற்றிய சில புரிதல்களை பகிர்ந்துகொள்வதற்கு மிகவும் பொறுத்தமான மாதமே இது.

இறைவனிடமிருந்து வஹி (இறைசெய்தி) தொடராக வந்துகொண்டிருந்த அதே காலப் பகுதியில் தான் விபசாரம் செய்த சில ஸஹாபாக்களும் சமூகத்தில் காணப்பட்டனர். பின்னர் தமது பாவத்திற்காக அவர்களே முன்வந்து அதற்கான இறைமன்னிப்பைப் பெறுவதில் அதிக கவனம் செலுத்தினர். தொழுகையின் போது தனக்கு பின்னால் நிற்கும் பெண்ணை பார்ப்பதற்காக இறுதி ஸப்பில் நிற்கும் ஓரிரு ஸஹாபாக்களும் இருந்தனர்.

இறைத்தூதர் இருக்கின்ற சமூகத்திலே எப்படி இவ்வாறான பாவங்களும் தவறுகள் நிகழ முடியும்? என் கேள்விக்கான பதில் கிடைத்தது. இறைத்தூதரே அனுப்பப்பட்டிருந்தாலும் அச்சமூகம் ஒரு மனித சமூகம் தானே. அதன் இயல்பு பாவம் செய்வது தான். ஆனால் அப்பாவத்திலிருந்து மீண்டு பின் அதில் மீண்டும் ஈடுபடாமல் இருக்க அவர்கள் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டனர். இவர்களது இந்நிலை ஸஹாபா சமூகத்தை நோக்கி என்னை நகர்த்தி அவர்களை நெருங்கச் செய்தது. எமது பாவங்களை விட்டும் நாம் விலகவும் அவர்களை முன்மாதிரியாகக் கொள்ளவும் இந்நிலை நகர்த்தியது.

ஸஹாபாக்கள் என்றாலே தவறிழைக்க மாட்டார்கள் என்ற பிழையான விம்பம் உடைந்து மனிதப் பலவீனங்களால் பாவத்தில் ஈடுபட்டுவிட்டால் அதிலிருந்து எப்படி முழுமையாக மீட்சியடைந்தார்கள் என்ற சம்பவங்கள் என்னை அவர்களை நோக்கி நெருக்கமாக்கியது. இந்நிலையே இறைவன் அவர்களை பொருந்திக்கொண்டான் என்ற நிலையை நோக்கி அவர்களை நகர்த்தியது என்ற புரிதலை எனக்கு தந்தது.



"மேலும் முஹாஜிர்களிலும், அன்ஸார்களிலும், முதலாவதாக (ஈமான் கொள்வதில்) முந்திக்கொண்டவர்களும், அவர்களை (எல்லா) நற்கருமங்களிலும் பின் தொடர்ந்தவர்களும் இருக்கின்றார்களே அவர்கள் மீது அல்லாஹ் திருப்தியடைகிறான். அவர்களும் அவனிடம் திருப்தியடைகின்றார்கள். இன்னும் அவர்களுக்காக, சுவனபதிகளைச் தயார்படுத்தி இருக்கின்றான், அவற்றின் கீழே ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும், அவர்கள் அங்கே என்றென்றும் தங்கியிருப்பார்கள் இதுவே மகத்தான வெற்றியாகும். (அல் குர்ஆன் 9:100)

இந்நிலையை இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கும் நாம் தொடர்புபடுத்தி பார்க்க முடியும். முஹம்மத் (ஸல்) அவர்கள் இறைவனால் அவனது தூதை சுமப்பதற்காக தூதராக தேர்ந்தெடுக்கப்பட்டாலும், இறைவனின் இறுதித் தூதை எத்திவைக்கும் பேற்றையும் பொறுப்பையும் பெற்றாலும் அவை அவரை எப்போதும் மனித நிலையிலிருந்து நீக்கி விடவில்லை.

அல்குர்ஆன் தொடராக பல இடங்களில் அவரது மனித நிலையை உறுதிப்படுத்தியும் வலுப்படுத்தியுமே வந்துள்ளது. "அவர்களிலிருந்தே நாம் ஒரு மனிதருக்கு வஹீ அருள்கிறோம் என்பதில் மக்களுக்கு ஆச்சரியம் ஏற்பட்டு விட்டதா?" (அல்குர்ஆன் 10:2)

"என் இறைவன் மிகத் தூயவன், நான் (இறைவனுடைய) தூதனாகிய ஒரு மனிதனே தவிர வேறெதுவுமாக இருக்கின்றேனா?" என்று (நபியே! நீங்கள் பதில்) கூறுங்கள். மனிதர்களிடம் நேர்வழி (காட்டி) வந்த போது, "ஒரு மனிதரையா அல்லாஹ் (தன்) தூதராக அனுப்பினான்" என்று கூறுவதைத் தவிர அவர்கள் ஈமான் கொள்வதை வேறெதுவும் தடுக்கவில்லை. (நபியே!) நீங்கள் "பூமியில் மலக்குகளே வசித்து (இருந்து அதில்) அவர்களே நிம்மதியாக நடமாடிக் கொண்டிருந்தால், நிச்சயமாக நாம் அவர்களிடம் ஒரு மலக்கையே வானத்திலிருந்து (நம்) தூதராக இறக்கியிருப்போம்" என்று கூறுங்கள். (அல்குர்ஆன் 17:9395)

இவ்வாறாக எண்ணற்ற வசனங்களில் இறைவன் இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் மனித நிலையிலிருந்து நீங்கிவிடவில்லை என்பதை ஆழமாக பதிப்பதோடு மட்டுமல்லாமல் அதுதான் வழிகாட்ட பொருத்தமானது என்பதையும் உறுதிபடக் கூறுகிறான். இதனால் தான் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மகிழ்வான சந்தர்ப்பத்தில் சிரித்தார்கள். சிலபோது கவலைப்பட்டார்கள். இன்னும் சில சந்தர்ப்பங்களில் கோபமுற்றார்கள்... ஏன்?... மனிதன் என்ற காரணத்தால் தான். இவ்வியல்பு இறைத்தூதரை நோக்கி என்னை நகர்த்தியது. அவரது வழிகாட்டல்களை பின்பற்ற உந்துதலளித்தது.

மாற்றமாக, ஒரு மலக்கை தூதராக அனுப்பியிருந்தால் எமக்கு இஸ்லாம் பின்பற்ற முடியாததொரு அம்சமாக இருந்திருக்கும். அதனால் தான் சர்வம் அறிந்த இறைவனின் தெரிவு மனித சமூகத்திலிருந்தே தொடராக அமைந்தது. முன்னைய சமூகங்கள் மனிதர் என்ற காரணத்திற்காக தூதர்களை மறுத்தாலும் இறைவனின் தெரிவு மாறவில்லை. காரணம், சர்வம் அறிந்த படைப்பாளன் மனித இயல்பையா அறியாமலிருப்பான்...!

'(நபியே!) நீங்கள், "நிச்சயமாக நான் உங்களைப் போன்ற ஒரு மனிதனே! உங்களுடைய இறைவன் ஒரே இறைவன்தான் என்று எனக்கு வஹீ அறிவிக்கப்பட்டிருக்கிறது" என்று கூறுங்கள் '(அல்குர்ஆன் 18:110)

இவ்வாறு அல் குர்ஆன் குறிப்பிட்டிருக்கையில் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மனித நிலை பற்றி கலாநிதி முஹம்மத் ஹமீதுல்லாஹ், "ஒரு தூதர் மனித வரம்பிற்குள் இருந்தால் மட்டுமே ஒரு சிறந்த முன்மாதிரியாகவும் சரியான முன்மாதிரியாகவும் இருக்க முடியும், அதாவது, மற்ற மனிதர்கள் என்ன செய்ய முடியுமோ அதை அவர் செய்கிறார். மாறாக, அவர் ஒரு சூப்பர்மேன் ஆகிவிட்டால், அவர் மனிதர்களுக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாக இருப்பது இயலாது.

ஆகவே, மிகவும் அரிதாக இருந்தாலும் நாம் வரலாற்று ஆவணங்களில் இதை பார்க்க இயலும், அதாவது அவர் காலைத் தொழுகைக்கு போதுமான அளவு சீக்கிரம் எழுந்திருக்காத போது அல்லது வழங்கப்படும் ரக்அத்களின் எண்ணிக்கையில் மறதியின் காரணமாக தவறு ஏற்படும் நிகழ்வுகளை நாம் அறிவது மூலம், அல்லாஹ் தமது நபி ஒரு மனிதர் என்பதை மனிதர்கள் உணர வேண்டும் என விரும்புகிறான்!" என்று கூறுகின்றமை குறிப்படத்தக்கது.

ஷம்லான் ஜாபிர்...
மாணவன், ஜாமிஆ நளீமிய்யா

# அநாதைகளை அரவணைப்போம்!



பெற்றோரில் இருவரையுமோ அல்லது ஒருவரையோ இழந்து விட்ட குழந்தை 'அநாதை குழந்தை' என்ற அடைமொழியுடன் அழைக்கப்படுகிறது. அநாதை என்பதற்கு தமிழ் அகராதியில் வரும் பொருள் 'திக்கற்றவன்', 'ஆதரவற்றவன்' ஆகும். 'ஆதரிப்பார் அற்றவன் அநாதை', 'ஆதரிக்கும் பெற்றோரை இழப்பவன் அநாதை ஆவான் என இஸ்லாம் கூறுகிறது.

ஒரு குழந்தை தன் பெற்றோரின் அரவணைப்பிலும் ஆதரவிலும், அன்பிலும், அக்கறையிலும், பாதுகாப்பிலும், கண்காணிப்பிலும் வளர்கிறது.

அல்லாஹுதஆலா அல் குர்ஆனில், அநாதைகளின் பாதுகாப்பு, அவர்களது மறுவாழ்வு, பராமரிப்பு, உரிமைகள், அவர்களின் பொருளாதாரம், வாழ்வாதாரம், இல்லறம் போன்ற அடிப்படையான உரிமைகள் பாதுகாப்பு சம்பந்தமாக 22 இடங்களில் எடுத்தியம்பியுள்ளான். அந்தளவுக்கு அநாதைகளின் உரிமைகள், பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்களுக்கு இஸ்லாம் முக்கியத்துவம் அளித்திருக்கிறது.

'(நபியே...) அவன் உம்மை அநாதையாகக் கண்டு அவன் உமக்குத் தங்குமிடம் அளி(த்து ஆதரி)க்கவில்லையா?, திகைத்துத் தயங்கியவராக உம்மைக் கண்ட அவன் நேரான வழியில் (உம்மைச்) செலுத்தினான். உம்மை வழி அறியாதவராகக் கண்டு வழி காட்டினான்'. உம்மை வறுமையில் கண்ட அவன் (உம்மைத்) தன்னிறைவு பெற்றவராக்கினான். (அல் குர்ஆன் 936,7,8)

அநாதைகளின் முக்கியமான மூன்று அம்சங்கள் குறித்து மேற்படி வசனங்கள் எடுத்தியம்புகின்றன. அநாதைகளின் அரவணைப்பு, அவர்களது அறியாமையை போக்கி அவர்களை அறிவுசார்ந்த சமூகமாக மேம்படுத்துதல், பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்றவர்களாக அவர்களை மேம்படுத்துதல் என்பன அடிப்படை அம்சங்களாகும்.

அதேநேரம் பெற்றோரை இழந்த குழந்தை, பருவ வயதை அடையும் வரைதான் அநாதை. பருவ வயதை அடைந்த பின்னர் எவரும் அநாதை இல்லை என்பது தான் இஸ்லாத்தின் நிலைப்பாடு. அதனால் அநாதை பருவ வயதை அடையும் வரை நன்மை தரும் செயலாக உள்ளது.

இதற்கு நபி(ஸல்) அவர்களின், 'நானும், அனாதையின் காப்பாளரும் சொர்க்கத்தில் இப்படி இருப்போம் என்று கூறி, தங்களது சுட்டு விரலாலும், மற்றொரு விரலாலும் (இடைசற்றே இடைவெளிவிட்ட விரல்) சைகை செய்தார்கள்' என்பது நல்ல எடுத்துக்காட்டாகும். (நபிமொழி)

அதேநேரம் பருவ வயதை அடைந்த எவரும் அநாதையாக இருக்க முடியாது. மேலும் மாதவிடாய் ஏற்பட்ட ஒருத்தியும் அநாதையாக இருக்க முடியாது' எனவும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

இதேவேளை அலி (ரழி) அவர்கள், 'பெற்றோரை இழந்தவன் உண்மையான அநாதை இல்லை. கல்வியையும், ஒழுக்கத்தையும் இழந்தவன் தான் உண்மையான அநாதையாவான்' என்றுள்ளார்கள். அதனால் கல்வி, ஒழுக்கம் ஆகிய இரண்டையும் இழந்தவன் நிரந்தரமான அநாதை ஆவான்.

நபித்தோழர்களில் அபூ ஹுரைரா (ரழி), ஜுபைர் பின் அவ்வாம் (ரழி) ஆகியோர் அனாதைகளாவர். அவர்கள் இழந்தது பெற்றோரைத்தான். கல்வியையும் ஒழுக்கத்தையும் அல்ல. அபூஹுரைரா (ரழி) அவர்கள் 5374 நபிமொழிகளை அறிவித்துள்ளார்கள். அன்னார் அநாதையாகப் பிறந்த போதிலும் கல்வியில் முன்னணியில் திகழ்ந்துள்ளார் என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது.

இவ்வாறு பல அறிஞர்கள் இஸ்லாமிய வரலாற்றில் இடம்பிடித்துள்ளார்கள். அவர்களில் இமாம் புஹாரி, இமாம் ஷாபிஈ, இமாம் அஹ்மது பின் ஹன்பல், இமாம் சுயூதி, இப்னுஹஜர் உள்ளிட்ட பலர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

ஆகவே அநாதைகளைப் பராமரிப்பதில் அக்கறை கொள்வோம். அல்லாஹ்வின் அருளைப் பெற்றுக் கொள்வோம்.

அபூமதீஹா...

## இலங்கையின்...

ஏனைய முன்னேறிய கல்வி முறைகளுக்கு அமைவாக பாடநெறிகள் மற்றும் வளங்களுக்கு இணையாக அபிவிருத்தி செய்யப்படும். இதனடிப்படையில் இந்நான்கு கல்வித் துறைகளும் சர்வதேச மட்டத்தில் அபிவிருத்தி செய்யப்படும்.

எதிர்காலத்தில் ஒன்றிணைக்கப்பட்ட ஆசிரியர் கல்விக்காக அர்ப்பணிக்கப்பட்ட கல்விப் பல்கலைக்கழகம் ஒன்று ஸ்தாபிக்கப்படும்.

இதன்மூலம் யாழ். குடாநாட்டின் கேந்திர நிலையமாக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அமையும்.

வடமாகாணத்தில் உள்ள ஆசிரியர் பயிலுநர்களுக்கு இது சிறந்த வாய்ப்பாக அமையும். இதன்மூலம், 2027ஆம் ஆண்டுக்குள் அனைத்து ஆசிரியர்களையும் பட்டதாரி ஆசிரியர்களாகப் பயிற்சியுடன் பாடசாலை வகுப்பறைகளுக்கு அனுப்புவதே எமது எதிர்பார்ப்பு.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் இருந்து முறையான தொழில்சார் பயிற்சி வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதன் மூலம், வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதற்கான பரந்த வாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## 7.5 கிலோ தங்க...

திருச்சியில் பறிமுதல் செய்துள்ளனர். இது தொடர்பாக இராமநாதபுரம் பகுதியைச் சேர்ந்த இரண்டு பேர் கைதாகியுள்ளனர். இராமநாதபுரம் பகுதியிலிருந்து திருச்சி வழியாக சென்னைக்கு மர்ம நபர்கள் சிலர், காரில் தங்கம் கடத்துவதாக மத்திய வருவாய் புலனாய்வுப் பிரிவு (டிஆர்ஐ) அதிகாரிகளுக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. அதன் பேரில் திருச்சி சென்னை தேசிய நெடுஞ்சாலையில் சமயபுரம் அருகே முகாமிட்டிருந்த டிஆர்ஐ குழுவினர், அவ்வழியே செல்லும் கார்களை கண்காணித்து, குறிப்பிட்ட கார் வந்ததும் அதை சோதனை செய்தனர்.

அப்போது காருக்குள் மூன்று பெட்டிகளில் 7,5 கிலோ எடையுள்ள 45 தங்கக் கட்டிகள் இருந்தன. அவற்றின் மதிப்பு ரூ. 4.48 கோடியாகும். இதையடுத்து அற்றை மீட்டு, காரில் வந்த இருவரையும் திருச்சி சுங்கத் துறை அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றனர். இதையடுத்து இருவரையும் கைது செய்து, காரையும் பறிமுதல் செய்த அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## போர் குற்றச்சாட்டுக்கு....

மனித உரிமை மாநாட்டிலும் இலங்கை இராணுவம் போர்க்குற்றம் இழைத்ததாகக் குற்றம் சாட்டப்படுவதனால், அதற்குப் பதில் அளிக்கவும், யுத்தத்தின் உண்மை நிலையை எடுத்துக் காட்டும் நோக்கத்திலுமே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேக்கர மேலும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இன்று (12) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே பாராளுமன்ற உறுப்பினர்சரத் வீரசேகர இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேக்கர,

"ஒரு நாட்டின் தேசிய பாதுகாப்பு மிகவும் முக்கியமானது. நாட்டு மக்கள் அச்சமோ சந்தேகமோ இன்றி வாழக்கூடிய சூழல் இருக்க வேண்டும். மேலும், முதலீட்டு வாய்ப்புகளைப் பெறுவதில் ஒரு நாட்டின் தேசியப் பாதுகாப்பை உறுதி செய்வது மிகவும் முக்கியமாகின்றது. பௌதீகப் பாதுகாப்பு மாத்திரமன்றி பொருளாதாரப் பாதுகாப்பு, உணவுப் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தனிநபர் பாதுகாப்பு ஆகியவையும் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன. கடந்த 10 ஆண்டுகளில் மாத்திரம் சுமார் 27,000 பேர் வீதி விபத்துகளில் உயிரிழந்துள்ளனர். முப்பது ஆண்டு காலப் போரில் சுமார் 29,000 பேரே இறந்தனர். தற்போது, நாட்டில் வீதி விபத்துகள் அதிகமாக இடம்பெறுகின்றன.

அதேபோன்று, போதைப்பொருளும் தேசிய பாதுகாப்பைப் பாதிக்கிறது. வலுசக்தி, சுகாதாரப் பாதுகாப்பு ஆகியவையும் தேசிய பாதுகாப்பின் கீழ் அடங்குகின்றன. எந்தவொரு நாட்டிலும் பயங்கரவாதம், அடிப்படைவாதம், போதைப்பொருள் அச்சுறுத்தல் மற்றும் பாதாள உலக செயற்பாடுகள் உள்ளன. ஆனால், இவற்றையெல்லாம் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு இடையூறு ஏற்படாத வகையில் தடுப்பது ஒரு அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

நாம் துறைசார் மேற்பார்வைக் குழுவாக, நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு உயரிய பங்களிப்பை வழங்குவதற்காக செயற்பட்டு வருகிறோம். பிரிவினைவாத அடிப்படையிலான பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதத்தை அடிப்படையாகக் கொண்ட அடிப்படைவாதம் என்பவற்றை பௌதீக ரீதியான அச்சுறுத்தல்கள் என்று அழைக்கலாம்.

அதேபோன்று, ஜெனீவாவில் நடைபெறும் ஒவ்வொரு மனித உரிமை அமர்வுகளிலும் இலங்கையில் போர்க்குற்றங்கள் இடம்பெற்றதாக பல்வேறு வகையில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. இது தொடர்பிலும் நாம் கவனம் செலுத்தியுள்ளோம்.

சர்வதேசமல்லாத ஒரு ஆயுதப் போராட்டமே இலங்கையில் இடம்பெற்றது. எனவே, நாட்டில் எவ்வாறானதொரு யுத்தம் இடம்பெற்றது என்பதை விளக்கும் வகையில், எமது மேற்பார்வைக் குழுவின் பங்களிப்புடன் ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

## சீன எக்ஸிம்....

இது தொடர்பில் நிதி அமைச்சு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இந்த இணக்கப் பாடானது சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஒத்துழைப்பு திட்டத்தின் மூலம் இலங்கை பெற்றுக்கொள்ளவுள்ள இரண்டாம் தவணை நிதிக்கு உறுதுணையாக அமையும் என்றும் நிதி அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

அதற்கிணங்க கடன் மறு சீரமைப்பு தொடர்பில் சீனாவின் எக்ஸிம் வங்கியுடன் தொடர்ந்தும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளதாகவும் நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த செயற்பாடுகள் நாட்டின் நீண்ட கால கடன் ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதற்கும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியை விரைவு படுத்துவதற்கும் வழி வகுக்கும் என்றும் நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையானது 46 பில்லியன் அமெரிக்கன் டொலர்களை வெளிநாட்டுக் கடனாக பெற்றுக் கொண்டுள்ளது. அதில் 52 வீதத்தை சீனாவே இலங்கைக்கு வழங்கியுள்ளது.

அதே வேளை, 4.2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் தொடர்பில் சீனாவுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள கொள்கையளவிலான இணக்கப்பாடு, இலங்கையின் பொருளாதாரத்தை பலப்படுத்துவதற்கு சிறந்த வாய்ப்பாக அமையும் என்றும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

## ஒன்றிணைந்து... (03ஆம் பக்கத் தொடர்)

அதனை நிவர்த்தி செய்ய வேண்டும்.எமது நாட்டில் வேறெந்த நாட்டிலும் இல்லாத அளவு அரசியல் கட்சிகள் காணப்படுகின்றன. அந்த வகையில் சுமார் 75 கட்சிகள் உள்ளன.

இது தொடர்பில் நாம் வெட்கமடைய வேண்டும். 2 கோடியே 20 இலட்சம் மக்கள் வாழும் இந்நாட்டில், பெரும்பாலானவர்கள் குரோதம் வைராக்கியம் பொறாமை ஆகியவற்றை அடிப்படையாக வைத்துக் கொண்டே செயற்பட்டு வருகின்றனர்.நாடு, மக்கள் என சிந்திப்பது மிகவும் குறைவு. எமக்கு ஆட்சியதிகாரம் கிடைத்தால்தான் எதனையும் செய்ய முடியும் என்றே சிந்திக்கின்றனர்.

## பல்கலை விடுதிகளில்... (03ஆம் பக்கத் தொடர்)

வும் அமைச்சர் கூறியுள்ளார். இதற்கமைய துன்புறுத்தல்கள் மற்றும் பகிடிவதைகள் தொடர்பான முறைப்பாடுகளை தெரிவிக்க வட்ஸ்அப் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த எண்ணுக்கும் முறைப்பாடுகள் கிடைத்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த எண்ணுக்கு கிடைக்கும் ஒவ்வொரு முறைப்பாடுகளும் உடனடியாக விசாரிக்கப்படுமென அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## கொழும்பு துறைமுகத்தில்....

103 மீற்றர் நீளமுள்ள கப்பலில் 24 பேர் கொண்ட பணியாளர்கள் உள்ளனர், மேலும் இந்தக் கப்பலுக்கு கப்டன் ஆண்ட்ரூ எச் பெரெட்டி தலைமை தாங்குகிறார். கொழும்பில் தங்கியிருக்கும் காலத்தில், கப்பலின் பணியாளர்கள் நாட்டிலுள்ள சில சுற்றுலாத் தளங்களுக்குச் செல்லவுள்ளனர்.

## இஸ்ரேலிலுள்ள...

தூதரகம் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த திணைக்களங்கள் இணைந்து விசேட வேலைத்திட்டத்தை நடைமுறைப் படுத்தியுள்ளன. இஸ்ரேலில் பணிபுரியும் அல்லது வேறு காரணங்களுக்காக தங்கியிருக்கும் இலங்கையர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பின் அல்லது அது தொடர்பான வேறு ஏதேனும் சிரமங்கள் இருப்பின், இலங்கை அதிகாரிகளுக்கு நேரடியாக அறிவிப்பதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அதன்படி, தொலைபேசி எண் (+94) 117966396, வாட்ஸ்அப் எண் (+94) 767463391 அல்லது opscenga@gmail.com என்ற மின்னஞ்சல் மூலம் தேவையான தகவல்களை அறிய முடியும்.

## போதைப்பொருள்...

80 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கொண்டுவரப் பட்டது. தமது குற்றத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டதையடுத்து கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி அமல் ரனராஜா அவர்களுக்கு ஆயுட் கால சிறைத் தண்டனை விதித்துள்ளார். இப்பிரதிவாதிகள் இலங்கையில் செய்துள்ள சர்வதேச

உடன்படிக்கைக்கிணங்க, சிறைத் தண்டனையை பெற்றுக் கொடுப்பதற்காக அவர்களை ஈரானுக்கு நாடு கடத்த நடவடிக்கை எடுக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## சிறுவர் மத்தியில்...

அறிவுறுத்தியுள்ளது.இது தொடர்பில் சுகாதாரத்துறை தொடர்ந்தும் கவனம் செலுத்தி வருவதாக கொழும்பு மாநகர சிரேஷ்ட சுகாதார மருத்துவ அதிகாரி ருவான் விஜேமுனி தெரிவித்துள்ளார். கொழும்பு மேற்கு, வடக்கு, மத்திய பகுதிகள் மற்றும் பொரளை உள்ளிட்ட பகுதிகளிலும் பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் இந்நோய் அதிகமாக பரவி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். ஐந்து நாட்களுக்கு மேல் சிறுவர்களிடத்தில் இந்நோய்க்கான அறிகுறி காணப்படுமாயின் உடனடியாக அவர்களை மருத்துவரிடம் அழைத்துச் செல்லுமாறு அவர், பெற்றோர்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார். அடிக்கடி கைகளை சுத்தம் செய்தல், கண்களைத் தொடுவதை தவிர்த்தல் போன்ற சுகாதார ஆலோசனைகளை முறையாகப் பின்பற்றி, இந்த கண் நோயை தவிர்த்துக் கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## தினகரன் வாரமஞ்சரியில்...

மறுதினம் 15ஆம் திகதி வெளிவரவுள்ள தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையுடன் இலவச இணைப்பாக விநியோகிக்கப்படவுள்ளது. அதனைத் தவிர இலங்கை கடற்படையில் புதிய படை வீரர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பமும் இம்முறை வர்த்தமானியில் வெளிவருகின்றது.

## இலங்கை இளைஞர்களுக்கு...

இது தொடர்பான ஒப்பந்தம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் சார்பில் அதன் தலைவர், ஏ.ஏ.எம். ஹில்மி மற்றும் ஜப்பானின் IM Japan சார்பில் அதன் முகாமைத்துவ பணிப்பாளர் Masnobu Komiya ஆகியோரால் (11) தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சில் கைச்சாத்திடப்பட்டது.

இதன் மூலம்,பராமரிப்பு சேவைகள் துறை,உணவு பதப்படுத்துதல் மற்றும் விவசாயம் ஆகிய துறைகளில் சிறப்புத் திறன்களைக் கொண்ட (Specified Skilled Worker) இலங்கை இளைஞர்களுக்கு ஜப்பானில் தொழில் வாய்ப்புகள் கிடைக்கும், மேலும் தெரிவு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு 05 வருட காலம் பணியாற்ற முடியும். இதற்காக சேவை கால ஒப்பந்தற்கும் ஒழுங்குகள் செய்யப்படும். இதன்போது, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார ஜப்பானின் IM Japan பிரதிநிதிகளுடன் விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டதுடன், Specified Skilled Worker இன் கீழ் ஆட்சேர்ப்புக்கான பரீட்சை முறையை இலகுபடுத்துமாறு அமைச்சர் கேட்டுக் கொண்டார்.இதற்குசாதகமாகபதிலளித்த ஜப்பானிய பிரதிநிதிகள் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் இணக்கம் தெரிவித்தனர்.அத்துடன் ஜப்பானிய தொழில்களை இலக்காகக் கொண்டு இலங்கையில் அதற்கான விசேட பயிற்சி நிலையமொன்றை ஸ்தாபிக்குமாறு அமைச்சர் கோரிக்கை விடுத்ததுடன், தூதுக்குழுவினரும் இதற்கு திருப்திகரமான பதிலை தெரிவித்தனர். பணியகம் மற்றும் ஜப்பானின் IM Japan ஆகியவை இதற்குமுன்னர் தொழினுட்ப சேவை பயிற்சியாளர் (TITP) தொழில் பயிற்சிக்காக இலங்கையரை ஜப்பானுக்கு அனுப்புவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

மேலும் இத்திட்டத்தின் கீழ் 415 இலங்கையர் பராமரிப்பு சேவை தொழில் துறைகள் மற்றும் கட்டுமானத் துறைகளில் வேலைக்காக ஜப்பானுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ஜப்பானில் தொழினுட்ப சேவைப் பயிற்சியை வெற்றிகரமாக முடித்து நாடு திரும்பியுள்ள நான்கு இலங்கையரை ஊக்குவிக்கும்வகையில் தொழில்களை ஆரம்பிப்பதற்கான காசோலைகளும் வழங்கப்பட்டன. ஜப்பானில் 05 வருட பராமரிப்பு தொழில் துறையில் பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்து நாடு திரும்பிய மூன்று இளம் பெண்களுக்கு தலா 10 இலட்சம் யென் (சுமார் 21 இலட்ச ரூபாய்) , கட்டுமானத் துறையில் 03 ஆண்டு பயிற்சியை நிறைவு செய்து நாடுதிரும்பிய இளைஞருக்கு 06 இலட்சம் யென் (சுமார் 13 இலட்சம் ரூபாய்) காசோலைகளும் வழங்கப்பட்டன.

## சிலந்திவலை...

இவ்வெள்ளைத் துண்டுகள் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப் படுகின்றது.

நேற்று முன்தினம் காலை திம்புலாகல, நுவரகல, யக்வெவ, யக்குரே, மன்னம்பிட்டிய, சிறிபுர போன்ற சுற்றுப்புற பகுதிகளிலும், வெலிகந்த நெலும்வெவ, மதுரங்கல உள்ளிட்ட அண்டைய கிராமங்களிலும் இந்த வெள்ளைப் பொருட்கள் விழுவதை மக்கள் அவதானித்துள்ளனர்.

காலை வேளை பொலன்னறுவை பிரதேசத்தில் இவை பெருமளவில் விழுகின்றன.இவற்றை,அப்பகுதியிலுள்ள மின் கம்பிகள் மற்றும் செடிகளில் பிரதேசவாசிகள் அவதானித்துள்ளனர்.

வானிலிருந்து விழும் அடையாளம் தெரியாத இந்த வெள்ளைப் பொருட்கள் சில நொடிகளில் கரைந்துவிடுவதாக பொலன்னறுவை உள்ளிட்ட அண்டை கிராம விவசாயிகள் குறிப்பிட்டுள்ளனர்.

## 03 கோடி ரூபா...

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ள மூன்று கோடி ரூபா பெறுமதியான உழுந்து சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மூன்று கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுள்ள 17 மெற்றிக் தொன் உழுந்தை சுங்க வருமான கண்காணிப்பு பிரிவு அதிகாரிகள் கைப்பற்றியுள்ளதாக சுங்கத் திணைக்களத்தின் பேச்சாளரும் சுங்கப் பணிப்பாளருமான சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.

. கடலை இறக்குமதி செய்யப்பட்டுள்ள கொள்கலன்களில் சூசகமாக மறைத்து வைக்கப்பட்டு இந்த உளுந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும், இதன் பெறுமதி 31 மில்லியன் ரூபா என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த உளுந்து சுங்கத்தினால் விடுவிக்கப்பட்டு சந்தைக்கு சென்றிருந்தால் அதன் மூலம் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வரி வருமானம் 5 . 1 மில்லியன் ரூபா இழக்கப்பட்டிருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உளுந்து இறக்குமதிக்கு நாட்டில் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த உளுந்து இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது. உளுந்து அடங்கிய இக்கொள்கலன் தற்போது ஊறுகொடவத்தை ஆர். சி. டி பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பயிற்சி தாதியர்...

காரணங்களைக் கருத்திற் கொண்டு அவர்களில் 1,000 பேருக்கு மட்டுமே நிரந்தர நியமனம் வழங்கப்பட்டது.

தாதி மாணவர்களின் பெற்றோர்கள் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, அரச தாதி உத்தியோகத்தர்கள் சங்கம் இந்த விடயத்தில் தலையிட்டது. நிதியமைச்சு, ஜனாதிபதி மற்றும் சுகாதார அமைச்சர் ஆகியோருடனும் இது தொடர்பில் சங்கம் கலந்துரையாடியது. இதையடுத்தே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதற்கிணங்க அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு திறைசேரி இணக்கம் தெரிவித்துள்ளதாவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதே வேளை, நாடளாவிய ரீதியில் ஆஸ்பத்திரிகளில் தாதியர்களுக்கான பெருமளவு வெற்றிடங்கள் நிலவுகின்றன. தாதியர்கள் பெருமளவில் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதால் புதிதாக 1,500 வெற்றிடங்கள் உருவாக்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## உலக பொருளாதாரத்தினுள்...

தீர்மானிக்கும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

எமக்குரிய கலசாரம், வர்த்தகம் மற்றும் ஒன்றோடு ஒன்று பிணைந்து காணப்படும் நாகரிக பாரம்பரியத்தை கொண்ட இந்து சமுத்திரத்தின் ஒற்றுமையை, எவராலும் சிதைக்கவோ துடைத்தெறியவோ முடியாதெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

காலி ஜெட்வின் ஹோட்டலில் நேற்று (12) நடைபெற்ற "காலி கலந்துரையாடல் 2023" சர்வதேச மாநாட்டிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இம்முறை "இந்து சமுத்திரத்தில் உருவாகும் புதிய ஒழுங்கு முறை" தொனிப்பொருளின் கீழ் 11 சர்வதேச அமைப்புகள் மற்றும் 44 நாடுகளின் சமுத்திரவியல் பிரதிநிதிகள் மற்றும் கடற்படை பிரதானிகளின் பங்கேற்புடன் நேற்று ஆரம்பமான நிகழ்வு இன்றும் (13) நடைபெறுகிறது.

மூன்று தசாப்தங்களாக நாட்டில் இடம்பெற்ற பயங்கரவாத யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் அதன் அனுபவங்களை உலகத்துடன் பகிர்ந்து கொள்வதற்காக, 2010 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட காலி கலந்துரையாடல் சமுத்திரவியல் மாநாடு இம்முறை 11 ஆவது தடவையாக இடம்பெறுகின்றது.

இதனூடாக வலயத்தினதும் உலகத்தினதும் தலைவர்களை ஒரே மேடைக்கு வரவழைத்து கடற்படை, சுற்றாடல்,சமுத்திர மற்றும் அரசியல் கலந்துரையாடல்களை ஏற்படுத்தல், உலக பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடல், அதற்கான தீர்வுகள் குறித்து ஆராய எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மாநாட்டை இரு வருடங்களுக்கு ஒரு முறை நடத்த திட்டமிட்டிருந்த போதிலும், அண்மை காலங்களில் ஏற்பட்ட கொரோனா தொற்றுநோய் பரவல் மற்றும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக அதனை நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தது.

இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் (IORA) தலைமைப் பதவி இலங்கைக்கு கிடைத்தன் பின்னர் நடத்தப்படும் முதலாவது மாநாடாக இது அமைந்திருக்கிறது.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க;

இந்த காலி கலந்துரையாடலில் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய துறைகள் தொடர்பில் பங்குபற்றியுள்ள உங்கள் அனைவரினதும் கருத்துக்களை தெரிந்துகொள்ள விரும்புகிறோம்.

இந்து சமுத்திர மாநாட்டின் முன்னோடியான கலாநிதி ராம் மஹாதேவும் இங்கு இருக்கிறார். அதனால் போட்டித் தன்மையின் ஒரு பகுதியாக அல்லாது, ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக இந்தியாவின் பின்புலத்துடன் கலந்துரையாடலை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

தற்போது நாம் இந்து சமுத்திரத்தில் வளர்ந்து வரும் புதிய ஒழுங்குமுறை தொடர்பில் கலந்துரையாடுகிறோம். குறிப்பாக கலாநிதி மஹாதேவ் அவர்களின் உரையின் பின்னர் இந்திய சமுத்திரம் என்பது யாது? ஆசிய பசுபிக், இந்து பசுபிக் மற்றும் ஒரே தடம் ஒரே பாதையுடன் உள்ள தொடர்பு குறித்து கேள்விகளை கேட்க நினைத்தேன்.

ஆசியா பசுபிக் என்பது ஒருவகை சித்தரிப்பாகும். இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் பசுபிக் வலயத்திற்குள் அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக ஐக்கிய அமெரிக்காவின் கேந்திர நிலையம் மற்றும் கலந்துரையாடல் கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் சீனா உட்பட ஏனைய நாடுகள் ஒன்றிணைந்து ஆசிய பசுபிக் பொருளாதாரத்தை கட்டமைத்தலே இதன் ஆரம்பமாகும். அது பொருளாதார எழுச்சி என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒரே தடம் ஒரே பாதை என்றால் என்ன? அதனை பாதுகாப்பு எழுச்சியென சிலர் கூறினாலும், ஐரோப்பா மற்றும் ஆபிரிக்காவிற்கு இடையில் காணப்படும் வரலாற்று வர்த்தக தொடர்பின் ஊடாக எழுச்சி பெரும் சீனாவை மையப்படுத்திய வர்த்தக வேலைத்திட்டம் என்பதே எமது நிலைப்பாடாகும். அதேபோல் இந்து, பசுபிக் என்பது பிற்காலத்தில் ஏற்பட்ட பாதுகாப்பு எழுச்சியாகும்.

இருப்பினும் இந்து சமுத்திரம் என்பது ஒரு எழுச்சி அல்ல. அது நாகரிகமாகும். எழுச்சிகள் ஏற்படலாம், மறைந்தும் போகலாம். ஒரு காலத்தில் சோவியத் ஒன்றியம் இருந்ததை போல ஐரோப்பாவின் எழுச்சிக்கான மேற்கத்திய குழுக்களும் இருந்தன. தற்போது அவை அனைத்தும் மாயமாகிவிட்டன. தற்போது ஐரோப்பிய சங்கம் இருந்தாலும் உக்ரைன் யுத்தம் நிலவுகிறது. இவ்வாறான எழுச்சிகள் குறிப்பிட்ட ஒரு காலத்தில் மறைந்து போகும். அவர்களின் எழுச்சிகள் பாதுகாப்பு மற்றும் பொருளாதார அறிவியலின் மீது தங்கியுள்ளது.

ஆனால் இந்து சமுத்திரம் ஒரு நாகரிகமாகும். உலக நாகரிகம் இங்கிருந்தே தோற்றம் பெற்றது. மொகான்தாஸ்கே முதல் பாராவோவினர் வரையிலான அனைத்தும் எமது வசமாகவிருக்கும் நாகரிகத்தின் ஒரு பகுதியாகும். இந்த நாகரிகம்தான் உலகின் சிறந்த ஆகமங்களையும் தோற்றுவித்துள்ளது.

இந்து சமயம், புத்த சமயம், சீக் சமயம், சமண சமயம் ஆகியன இந்த நாகரிகத்திலேயே தோற்றம் பெற்றன. இஸ்லாம் ம் அரேபிய தீபகற்பங்களிலிருந்து வந்தவையாகும் என்ற வகையில் இவை அனைத்தும் எமது சிந்தனைகளின் தாக்கத்தை கொண்டுள்ளன என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## இன்றைய பலன்கள்

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலயம் கொழும்பு)



### மேஷம்:



ராகு 12ம் ,கேது 6ம் இடத்திலும் உள்ளது.சில நேரங்களில் பணத்தட்டுப்பாடு இருக்கவே செய்யும். ஆடம்பரச் செலவுகளில் வீணாக இறங்க வேண்டாம். சஸ்திரஹதமஹாளயம், அகால மரண மோட்ஷ அர்ச்சனை நாள்.

### ரிஷபம்:



ராகு 11ம் ,கேது 5ம் இடத்திலும் உள்ளது.சில எதிர் பாராத நற்செய்திகளைத் தரும். எதையும் விட்டுக் கொடுத்தால் மட்டுமே உங்களால் சாதிக்க முடியும். சஸ்திரஹதமஹாளயம், அகால மரண மோட்ஷ அர்ச்சனை நாள்.

### மிதுனம்:



ராகு 10ம் ,கேது 4ம் இடத்திலும் உள்ளது.பத்திரிகை, தொழில் நுட்பத் தொழில் உள்ளவர்களுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. பிறர் விவகாரத்தில் தலையீடு வேண்டாம். எதையும் நேரப்படி செயலாற்றுங்கள். சஸ்திரஹதமஹாளயம், அகால மரண மோட்ஷ அர்ச்சனை நாள்.

### கடகம்:



ராகு 9ம் ,கேது 3ம் இடத்திலும் உள்ளது.புத்தி பூர்வமாக சிந்தித்துச் செயலாற்றுவதால் வெற்றி கிடைக்கும். நண்பர்களால் பிரச்சினை உண்டாகலாம். தாமதமும் விரயமும் அதிகரிக்கும். சஸ்திரஹதமஹாளயம், அகால மரண மோட்ஷ அர்ச்சனை நாள்.

### சிம்மம்:



ராகு 8ம் ,கேது 2ம் இடத்திலும் உள்ளது.கேது 3 இல் இருப்பதால், ஆன்மிகம்ஆர்வம் அதிகரிக்கும். மேலதிகாரிகளிடம் எச்சரிக்கையுடன் இருக்கவும். சஸ்திரஹதமஹாளயம், அகால மரண மோட்ஷ அர்ச்சனை நாள்.

### கன்னி:



ராகு 7ம் ,கேது 1ம் இடத்திலும் உள்ளது.கவனம் தேவை. உஷ்ண வியாதிகள் குறிப்பாக வயிற்றுவலி, கண் நோய்கள் பாதிக்கும். சஸ்திரஹதமஹாளயம், அகால மரண மோட்ஷ அர்ச்சனை நாள்.

### துலாம்:



ராகு 6ம் ,கேது 12ம் இடத்திலும் உள்ளது.சுப விரயங்கள் உண்டு. கேட்ட இடத்தில் உதவி கிடைக்கும். 12ல் சூரியன் என்பதால் தேவையற்ற வாக்கு வாதங்கள் செய்ய வேண்டாம். சஸ்திரஹதமஹாளயம், அகால மரண மோட்ஷ அர்ச்சனை நாள்.

### விருச்சிகம்:



ராகு 5ம் ,கேது 11ம் இடத்திலும் உள்ளது.குடும்பத்தில் மதிப்பு மரியாதை கூடும். அரசியல் துறை நன்றாக இருக்கும். வீண் செலவுகளால் மனம் கவலைப்படும். சஸ்திரஹதமஹாளயம், அகால மரண மோட்ஷ அர்ச்சனை நாள்.

### தனுசு:



ராகு 4ம் ,கேது 10ம் இடத்திலும் உள்ளது.செவ்வாய் 10 இல் இருப்பதால் தொழில் உத்தியோகம் முதலியவற்றில் முன்னேற்றம் உண்டு. நட்பு விஷயங்களில் ஏமாற்றம் ஏற்படலாம். சஸ்திரஹதமஹாளயம், அகால மரண மோட்ஷ அர்ச்சனை நாள்.

### மகரம்:



ராகு 3ம் ,கேது 9ம் இடத்திலும் உள்ளது.தகவல் தொழில்நுட்பம், கணக்கு,ஆசிரியர் துறைகளில் இருப்பவர்களுக்கும் நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். சஸ்திரஹதமஹாளயம், அகால மரண மோட்ஷ அர்ச்சனை நாள்.

### கும்பம்:



ராகு 2ம் ,கேது 8ம் இடத்திலும் உள்ளது.வெளிநாடு செல்லும் யோகமும் உண்டு. புதிய வேலை கிடைக்கும். கணவன் மனைவி கருத்து வேறு பாட்டுக்கு இடம் தராதீர்கள். சஸ்திரஹதமஹாளயம், அகால மரண மோட்ஷ அர்ச்சனை நாள்.

### மீனம்:



ராகு 1ம் ,கேது 7ம் இடத்திலும் உள்ளது.தொழில், குறிப்பாக கலை வர்த்தகம், பண முதலீடுகள் மற்றும் ஆசிரியர் பணி, கல்விப் பணி இவற்றில் உள்ளவர்களுக்கு சிறப்பான வாய்ப்புகள் உண்டு. சஸ்திரஹதமஹாளயம், அகால மரண மோட்ஷ அர்ச்சனை நாள்.

# கிழக்கின் குரல்



## யுனிசெப் அவுஸ்திரேலியா பிரதிநிதிகள் ஹோலிகுறோஸ் பாடசாலைக்கு விஜயம்



(காரைதீவு குறூப் நிருபர்)

யுனிசெப் அவுஸ்திரேலிய பிரதிநிதிகள் குழுவொன்று அண்மையில் சம்மாந்துறை வலயத்தின் சொறிக்கல் முனை ஹோலி குறோஸ் மகா வித்தியாலயத்திற்கு விஜயம் செய்திருந்தனர். அபிவிருத்திக்கான விளையாட்டு (எஸ் 4 டி) என்ற நிகழ்ச்சித் திட்டத்தை மதிப்பீடு செய்வதற்காக விவியன் ஹாவேவொங்க் தலைமையிலான குழுவினரே வருகை தந்திருந்தனர். இக்குழுவில் கிழக்கு மாகாண யுனிசெப் பொறுப்பாளர் நிபால் அலாவுதீன், கிழக்கு மாகாண கல்வி திணைக்கள பிரதிநிதி எஸ்.சஹீத், இவ்வேலைத்திட்டத்திற்குப் பொறுப்பான சம்மாந்துறை வலய உடற்கல்விப்பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் ஏ.நசீர் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர். இதன்போது அபிவிருத்திக்கான விளையாட்டு என்ற நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் அதிபர், ஆசிரியர்களுடன் கலந்துரையாடலிலும் இக்குழுவினர் ஈடுபட்டனர்.மாணவர்களின் செயன்முறை விளக்க பயிற்சியையும் பார்வையிட்டனர்.

## மின்னல் தாக்கி மயிரிழையில் உயிர் தப்பிய தாயும் மகனும்

(கந்தளாய் தினகரன் நிருபர்)

கந்தளாய் அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டுக்கச்சி பகுதியில் நேற்று மாலை மின்னல் தாக்கியதில் தாயும் மகனும் சிறுகாயங்களுடன் உயிர் தப்பியதுடன் ஆறு தென்னை மரங்கள் பற்றி எரிந்துள்ளன. வட்டுக்கச்சி பகுதியில் நேற்று இடியுடன் கூடிய மழை பெய்ந்தமையால் மின்னல் தாக்கி அப்பகுதி வீடுகளிலிருந்த மின் உபகரணங்கள் சேதமாகியுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். கடந்த நான்கு மாதத்திற்கு முன்னரும் இப்படியான மின்னல் தாக்கத்தினால் இளைஞர் ஒருவர் மின்னல் தாக்கி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.சம்பவ இடத்திற்கு கிராம உத்தியோகத்தர் மற்றும் அனர்த்த சேவை பிரிவினர் சென்று பார்வையிட்டதாகவும் சேத விபரம் தொடர்பில் விசாரணை நடைபெறுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் அடையாள வேலைநிறுத்த போராட்டம்

(சாய்ந்தமருது விசேட நிருபர்)

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் கல்விசாரா ஊழியர்கள் நேற்று ஆறு அம்ச கோரிக்கைகளை முன்வைத்து ஒருமணித்தியாலய பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழக தொழிற்சங்கங்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், கல்விசார் ஆதரவு சங்கங்கள் மற்றும் அரசியல் சங்கங்களின் கூட்டுக்குழுவின் தீர்மானத்துக்கமைவாக ஆறு அம்ச கோரிக்கைகளை முன்வைத்து நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் கல்விசாரா ஊழியர் சங்கத்தின் தலைவர் எம்.ரி.எம். தாஜுடீன் தலைமையில் ஒரு மணித்தியாலய அடையாள பணிப்புறக்கணிப்பு பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்திலும் சம்மாந்துறையில் அமைந்துள்ள பிரயோக விஞ்ஞான பீடத்திலும் நடைபெற்றது. தேசிய பல்கலைக்கழக ஒழுங்கமைப்பை பாதுகாக்க பல்கலைக்கழக ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க வரவு செலவு திட்டத்தில் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் 40% சம்பள உயர்வை கிடைக்கச்செய்தல், ஓய்வூதியம் மற்றும் வருங்கால வைப்பு நிதிக்கு விதிக்கப்பட்ட வரிகளை திரும்பப்பெறுதல், பல்கலைக்கழக பணியிடங்களில் காணப்படும் வெற்றிடங்களை உடனடியாக நிரப்புதல்,அனைத்துப் பதவிகளுக்கும் ஒரே நேரத்தில் ஆட்சேர்ப்பு நடைமுறைகளை தயாரித்தல் போன்ற பல்வேறு கோரிக்கைகள் இதன்போது முன்வைக்கப்பட்டன.

## பெரும்போக விவசாயச் செய்கைக்கு தடையின்றி உரம் வழங்க நடவடிக்கை

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்போக விவசாய செய்கைக்கு தேவையான யூரியா, ரி.எஸ்.பி, எம்.ஓ.பி போன்ற உள்ளீடுகளை விவசாயிகளுக்கு தடையின்றி பெற்றுக் கொள்வதற்கு உரக்கம்பனிகளுக்கிடையிலான கலந்துரையாடலொன்று நடைபெற்றது. மாவட்டத்தின் 2023/2024 ஆண்டின் பெரும் போகத்திற்கான உரம் வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போது மாவட்டத்தில் தனியார் கம்பனிகளின் கையிருப்பில் உள்ள உரங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதுடன் உரத்தின் தரம் மற்றும் விற்பனை விலை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இந்நிகழ்வில் கமநல சேவைகள் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் கே. ஜெகன்நாத், உதவி பணிப்பாளர் கே.எல்.எம். சிறாஜின், உரக் கம்பனிகளின் பிரதிநிதிகள், முகவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## 2024 குடிசன வீட்டுவசதிகள் தொகை மதிப்பு

# கட்டடங்களை பட்டியல்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பம்



(ஏறாவூர் சுழற்சி நிருபர்)

சனத்தொகை மற்றும் வீட்டு வசதிகள் தொகை மதிப்பு நடவடிக்கைகளை முன்னிட்டு நாடு பூராகவும் உள்ள சகல கட்டடங்களையும் இலக்கமிட்டு பட்டியல்படுத்தும் நடவடிக்கை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் கடந்த திங்கட்கிழமை (9)ஆரம்பிக்கப்பட்டது.

2024 இல் நடைபெறவுள்ள சனத்தொகை மற்றும் வீட்டு வசதிகள் தொகைமதிப்பு நடவடிக்கைகளை முன்னிட்டே கட்டடங்களை பட்டியல்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ்வேலைத்திட்டம் தொடர்ந்து டிசம்பர் மாதம் வரை முன்னெடுக்கப்படவுள்ளதாக புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பீ.எம்.பீ.அநுரகுமார அறிவித்துள்ளார். இதன்பிரகாரம் நாட்டிலுள்ள சகல கட்டடங்களுக்கும் கிராம சேவகபிரிவுரீதியாக சிவப்பு நிறத்திலான இலக்கமிடப்பட்ட ஸ்டிகர் ஒட்டப்பட்டு பட்டியல்படுத்தப்படுவதோடு அந்தக்கட்டடங்கள் பயன்படுத்தப்படும் நோக்கத்துக்கு ஏற்ப அவை வகைப்படுத்தப்படும்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலக பிரிவுகளிலும் கள நடவடிக்கைகள் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டுள்ளன. கிராமசேவகர் பிரிவு மட்டத்தில் ஏற்கெனவே தொகைமதிப்பு நடவடிக்கையின் ஒரு கட்டமாக வரையப்பட்ட கிராம சேவகர் பிரிவு வரைபடத்தின் உதவியோடு இது மேற்கொள்ளப்பட்டு வருவதாக தொகைமதிப்பு உதவி அத்தியட்சகரும் மட்டு.மாவட்ட செயலக புள்ளிவிபரவியலாளருமான ரீ.ஜெய்தனன் தெரிவித்தார்.

இப்பணியில் கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக பிரதேச செயலக மட்டத்தில் உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் ஈடுபடுத்தப்பட்டு வருவதோடு புள்ளிவிபரத்திணைக்களத்தின் புள்ளிவிபர உத்தியோகத்தர்கள் அவர்களது கடமைகளுக்கு மேலதிகமாக பிரதேசத்தின் தொகைமதிப்பு உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டு கள நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இம்முறை நடைபெற்றுவருகின்ற இந்த கணக்கெடுப்பு நடவடிக்கையானது காகித வேலையின்றி முதன் முறையாக நவீன தொழில்நுட்பத்தின் கீழ் ரெட்லட் கணினிகளை பயன்படுத்தி வருகின்றனர்.

## அட்டாளைச்சேனை கல்வியியற் கல்லூரிக்கு புதிய மாணவர்களை உள்ளீர்க்கும் நிகழ்வு





(அட்டாளைச்சேனை தினகரன், திராய்க்கேணி தினகரன், ஒலுவில் விசேட நிருபர்கள்)

அட்டாளைச்சேனை தேசிய கல்வியற் கல்லூரிக்கு 2023/2024 ஆம் கல்வியாண்டுக்கு புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள ஆசிரிய பயிலுனர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் நாளை சனிக்கிழமை (14) ஆரம்பிக்கப்படவுள்ளதாக, தேசிய கல்வியற் கல்லூரியின் பீடாதிபதி கே. புண்ணியமூர்த்தி தெரிவித்தார். 2019/2020 ஆம் ஆண்டுகளுக்கான க.பொ.த உயர்தர பரீட்சை புதிய மற்றும் பழைய பாடத்திட்டத்தின் பெறுபேறுகளுக்கமைய கல்வியற் கல்லூரிகளுக்கு ஆசிரிய பயிலுனர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

புதிய பயிலுனர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தைத் தொடர்ந்து கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரிக்கு புதிய மாணவர்களை உள்ளீர்க்கும் நிகழ்வு நேற்று ஆரம்பமானது. இன்றும் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. இதில் மொத்தமாக 384 பேர் உள்வாங்கப்படுவதுடன், 192 மாணவர்கள் நேற்று தெரிவுசெய்யப்பட்டதுடன், இன்றும் 192 மாணவர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

## மட்டக்களப்பு அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் ஜப்பான் பயணம்

(பாலமுனை தினகரன் நிருபர்)



மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளராக கடமையாற்றும் அட்டாளைச்சேனையைச் சேர்ந்த அப்துல் சமது முகம்மது சியாத் தனது மேற்படிப்புக்காக புலமைப் பரிசில் பெற்று ஜப்பான் பயணமானார். வெள்ள அனர்த்த பாதுகாப்பு குறைப்பு விசேட முதுமானிக் கற்கையை தொடருவதற்காகவே இவர் ஜப்பான் பயணமானார். டோக்கியோவில் அமைந்துள்ள தேசிய பட்ட நிறுவன கொள்கைகள் கற்கைக்கான பல்கலைக்கழகத்தில் மேற்படி கற்கை நெறியை தொடரவுள்ளார்.பாதுகாப்பு அமைச்சின் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் சிபாரிசின்பேரில் இவர் புலமைப் பரிசில் பெற்று சென்றுள்ளார். அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ள இவர் இதற்கு முன்னர் இந்தியா, ஜப்பான், சிங்கப்பூர், தாய்லாந்து, சவூதி அரேபியா, மங்கோலியா, ஆகிய நாடுகளுக்கும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நெறிகளிலும் ,செயலமர்வுகளிலும்,மாநாடுகளிலும் கலந்து கொள்வதற்காக சென்றுள்ளார்.

## மாகாண மட்டத்தில் முதலிடம் ..!



(தம்பலகாமம் குறூப் நிருபர் )

அகில இலங்கை அழகியல் நடனப் போட்டியில் மாகாண மட்டத்தில் திருகோணமலை கப்பல்துறை சரஸ்வதி வித்தியாலய மாணவர்கள் முதலிடம் பெற்று தேசிய மட்ட போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர். மட்டக்களப்பு மகஜனாக் கல்லூரியில் நடைபெற்ற மாகாண மட்ட அழகியல் நடனத்தில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளனர். இவர்களை நெறிப்படுத்திய நடன ஆசிரியை திருமதி.யசோதினி குகாந்தன், நடனத்தின் பாடல் ஆக்கம், இசையமைப்பு ஆசிரியர் இதயநேசன் மற்றும் வித்தியாலய அதிபர் திருமதி. தவவாசுகி ரமணன் ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர்.


### மீட்கப்படாத தங்க ஆபரணங்கள் மீதான ஏல விற்பனை

| கிளை | அடகு வைக்கப்பட்ட கால வரையறை | ஏலம் விடப்படும் இடம் மற்றும்திகதி |
|---|---|---|
| கராப்பிட்டிய, அக்குரஸ்ஸ, அம்பலாந்தோட்டை, அம்பலாங்கொடை, மாத்தறை, காலி, தல்கஸ்வல, தெனியாய, அங்குணுகொலபெலஸ்ஸ, எல்பிட்டிய, யக்கலமுல்ல, கட்டுவான, திஸ்ஸமகாராம | 31.08.2022 | 06.11.2023 (திங்கட்கிழமை) SDB வங்கி இல. 6A புது றோட், அம்பலாங்கொடை |
| சிலாபம், குருநாகல், குளியாப்பிட்டி, கிரிஉல்ல, மாகோ, வென்னப்புவ, ஆனமடுவ, வாரியப்பொல, நாரம்மலை | 31.08.2022 | 07.11.2023 (செவ்வாய்க்கிழமை) வடமேற்கு பிராந்திய அலுவலகம், இல.105, கொழும்பு வீதி, குருநாகல் |
| அனுராதபுரம், பொலன்னறுவை, தம்புத்தேகம, மதவாச்சி, அரலகங்வில, கலன்பிந்துனுவெவ, நொச்சியாகம, பதவி பராக்கிரமபுர, கெக்கிராவ, தலாவ, வவுனியா, யாழ்ப்பாணம், நானாட்டான், கிளிநொச்சி, மன்னார், சுன்னாகம் | 31.08.2022 | 08.11.2023 (புதன்கிழமை) SDB வங்கி, இல. 234, கண்டி வீதி, வவுனியா |
| திருகோணமலை, கல்முனை, மட்டக்களப்பு, அம்பாறை, மூதூர், பொத்துவில், தெஹியத்தகண்டிய, களுவாஞ்சிக்குடி, சம்மாந்துறை, வாழைச்சேனை, உகணை, கந்தளாய், அக்கரைப்பற்று, ஹிங்குரான | 31.08.2022 | 09.11.2023 (வியாழக்கிழமை) SDB வங்கி, கிழக்குப் பிராந்திய அலுவலகம், இல.47, புகையிரதநிலைய குறுக்கு வீதி, மட்டக்களப்பு. |
| மொனராகலை, பதுளை, சியம்பலாண்டுவ, புத்தல, பண்டாரவளை, கேகாலை, ருவான்வெல்ல, வறக்காப்பொலை, றம்புக்கணை, தெரணியகலை, இரத்தினபுரி, எம்பிலிப்பிட்டிய, மாவனல்லை | 31.08.2022 | 13.11.2023 (திங்கட்கிழமை) SDB வங்கி, இல.93 உள்ளக சுற்றுவட்ட வீதி, இரத்தினபுரி |
| மாத்தளை, கண்டி, ரிக்கிலகஸ்கட, தம்புள்ளை, கம்பளை, பிலிமத்தலாவை, ஹத்தரலியத்த, நுவர எலிய, கலேவலை | 31.08.2022 | 14.11.2023 (செவ்வாய்க்கிழமை) SDB வங்கி, மத்திய பிராந்திய அலுவலகம், இல.171, டீ. எஸ். சேனாநாயக்க வீதி, கண்டி. |
| நகர கிளை, பத்தரமுல்லை, ஹொரணை, எக்கலை, தெமட்டகொடை, களுத்துறை, மத்துகமை, மொரட்டுவை, கடுவலை, மகரகமை, மாலபே, தெஹிவளை, பிலியந்தலை, பாணந்துறை, கிரிபத்கொடை, நீர்கொழும்பு, கம்பஹா, மாபாகே, | 31.08.2022 | 15.11.2023 (புதன்கிழமை) SDB வங்கி, மேற்குப் பிராந்திய அலுவலகம் 1, இல.210/1 யுஇ கடுவலை வீதி, பத்தரமுல்லை. |

ஏலத்தில் விடும் நிகழ்வு மு.ப 10.30 மணிக்கு ஆரம்பமாகும்

(இந்நிகழ்வை இரத்து செய்வதற்கு, ஒத்தி வைப்பதற்கு அல்லது ஏலத்தில் விடும் நிகழ்வில் ஏதேனும் மாற்றங்கள் செய்வதற்கு மற்றும் ஏலம் இடம்பெறும் இடத்தில ஏதேனும் மாற்றங்களை முன்னறிவித்தல் இன்றி மேற்கொள்வதற்குரிய சகல உரிமையும் வங்கியையே சாரும்.)

முகாமையாளர் அடகு
இல 12 எட்மன்டன் வீதி
கிருலப்பனை, கொழும்பு 06 ,இலங்கை.
தொலைபேசி 011 5411 411 / 011 283 2500

SDB வங்கி

சனச அபிவிருத்தி வங்கி பி எல் சி.இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
(Fitch Rating BB+, Reg. No: PB62PQ)



ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன் 2023.10.11
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5264
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 32,445,008.00
ஆங்கில எழுத்து R வெற்றி இலக்கங்கள் 4 9 3 1 4 6

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3506 சீட்டிழுப்பு திகதி 2023.10.11
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 63,489,588.40
ஆங்கில எழுத்து P வெற்றி இலக்கங்கள் 01 16 61 71 விசேட எழுத்து P
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 02143

Mega Power
சீட்டிழுப்பு இலக்கம் 1612 2023.10.11
69280
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 410,197,676.00
ஆங்கில எழுத்து P சுப்பர் இலக்கம் 24 வெற்றி இலக்கங்கள் 26 42 55 70
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

Lucky 7
திகதி 2023.10.11 சீட்டிழுப்பு இலக்கம் 0090
வெற்றி இலக்கினம் தனுசு வெற்றி இலக்கங்கள் 7 8 9 7 6 9
L7 இலக்கம் 3 7
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 11,562,665.92

ராசி சுப பலன்
திகதி 2023.10.11 சீட்டிழுப்பு இலக்கம் 573
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,224,154.00
வெற்றி இலக்கினம் மீனம் வெற்றி இலக்கங்கள் 08 10 39 40 விசேட இலக்கினம் மீனம்

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1294 2023.10.11
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 114,856,379.20
ஆங்கில எழுத்து Z வெற்றி இலக்கங்கள் 11 24 46 48 விசேட எழுத்து Z
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 34545

**(கிளிநொச்சி திருவையாறு மூன்றாம் தொகுதி சுடர் உற்பத்தி நிலையத்தின் உரிமையாளர் தங்கராசா துசிதரன், தற்கால சூழலில் சுய கைத்தொழிலில் ஈடுபடுகின்றோர் தனது உற்பத்தி பொருட்களை சந்தைப் படுத்துவதில் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பில் தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய கருத்துப் பகிர்வு.)**

2018 இல் சிறு கைத்தொழில் முயற்சியினை மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கில், ஆரம்பத்தில் நாங்கள் மரவள்ளி பொறித்து பக்கட் பண்ணி விற்பனை செய்து வந்தோம். அந்த நேரத்தில் நன்றாகச் செய்யக் கூடியதாக இருந்தன. காரணம்; கிழங்கு தேவையானளவு நல்ல விலைக்குக் கிடைக்கக் கூடியதாக இருந்தன. அப்பொழுது மரவள்ளிக் கிழங்கு ஒரு கிலோவின் விலை ரூபாய் 6 20 வரையிலும் தேங்காய் எண்ணெய் ஒரு லீட்டர் ரூபா 180 வரையிலும் காணப்பட்டது. மிக இலகுவான முறையில் வியாபாரத்தை எந்தவொரு சவால்களுமின்றி செய்து கொண்டு சென்றோம். ஒரு நாளைக்கு 80 240 கிலோ கிராம் வரைக்கும் மரவள்ளி சீவல் செய்து பொறித்து விற்பனை செய்தோம்.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியினால் உரம் இல்லாத பிரச்சினையின் காரணமாக திடீரென்று மரவெள்ளி உற்பத்தி விழுந்து விட்டது. கிழங்குகளுக்குத் தட்டுபாடுகளும் ஏற்பட்டன. ஒரு கிலோ கிராம் 180 480 ரூபா வரை விலை உயர்ந்தன. 200250 ரூபா விலை அதிகரித்தால் நாங்கள் வாங்க மாட்டோம்.





# உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவோர்

# சவால்களை வெற்றி கொள்வதில் உறுதியுடன் செயற்பட்டால் வாழ்வில் முன்னேறலாம்

இந்த மரவள்ளி தட்டுப்பாட்டுக்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. ஒன்று 2009 ஆம் ஆண்டுகளுக்கு முன் சாதாரணமாக எல்லா விவசாயப் பயிர்ச் செய்கைகளுக்கும் பழக்கப்பட்ட நிலமாக இருந்தது. செழிப்பான விவசாயம்




செய்யக் கூடியதாக இருந்தது. சரியான பொருளாதாரக் கட்டமைப்பும் இருந்தன. இதற்குப் பின்னர் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உரமானியம் என்ற அடிப்படையில் இரசாயன பசளை வகைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

மக்களும் சரி விவசாய நிலங்களும் சரி இரசாயன உரங்களுக்கு முற்று முழுதாகப் பழக்கப்பட்டு விட்டன. திடீரென இந்த உரத்திற்கு தடை ஏற்பட்ட போது விவசாயம் செய்ய முடியாத பெரிய சிக்கல்களை எதிநோக்கினர். மரவள்ளி செய்ய முடியாமை போனதற்குக் காரணம் பொட்டாசியம் தேவை.

அடுத்து எல்லோர் மத்தியிலும் மிகவும் கவனயீனமாகக் காணப்படும் விடயம் என்னவென்றால் எல்லோரும் மரவள்ளி பயிர்ச்செய்கை செய்கிறார்கள். அது சராசரியாக அறுவடை செய்யப்படுகின்றதுபோல அவை நன்றாக விற்பனையும் செய்யப்படுகின்றன.

ஆனால், இதில் என்ன விசேடம் என்றால் எல்லாத் தோட்டக்காரர்களும் மரவள்ளியினை நடுகின்றனர். ஒருவர் கச்சானை விதைத்தால் அவற்றை எல்லோரும் சமனாக நடுவார்கள். இவையும் இந்த மரவள்ளிப் பயிர்ச் செய்கையின் வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்துள்ளன. விலை குறைவாக இருந்தன. இதனால் எல்லோரும் சேர்ந்து நஷ்டம் அடைகின்றனர்.

மலிவு விலையில் கிழங்கு கிடைத்தாலும் வியாபாரம் வீண் போகாது. நன்றாக நடக்கும். ஆனால் பிழையான உற்பத்தியின் காரணமாக கிழங்கு உற்பத்தியாளர்களே நஷ்டம் அடைகின்றார்கள்.

கிழங்கின் விலையேற்றம் ஒருபுறம் இருக்க மறுபுறம் தேங்காய் எண்ணெய்யின் விலை ஒரு லீட்டர் 1200 ரூபா வரை உயர்ந்தது. ஆனால் கிழங்குப் பொரியலின் விலை 50 ரூபாதான். நிர்ணய விலை போல் இருந்தது. நாங்கள் ஆரம்பத்தில் 80 கிராம் பக்கட் 50 ரூபாவுக்கு விற்றோம். அப்படியே ஒரு நாளைக்கு இரண்டு மூன்று கிராம் குறைத்து 70 கிராம் வரைக்கும் வந்தது. 60 கிராம் செய்தோம். அதற்குப் பின் கடைசியாக 40 கிராம் செய்தோம். எப்படி கிராம் கணக்கு மாற்றினாலும் விலை ரூபா 50 தான் இருந்தது. 80 கிராம் அளவுக்கு இலாபம் சராசரி அதிகம் கிடைக்கும். ஆனால் 40 கிராம் அளவுக்கு இலாபம் பெரியளவில் கிடைக்காது. இரண்டு மூன்று ரூபாய் அளவிலான சிறிய தொகையே கிடைக்கும். அவ்வளவுதான் வரும்.

மரவள்ளி விலையேற்றத்தால் சில காலம் கைவிடவேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆக முக்கியமான கேள்விகளுக்கு மட்டுமே குறைந்தளவில் செய்து வந்தோம். எந்த நிலையில் இத்தொழிலை கைவிடக் கூடாது என்ற காரணத்தினால் மசாலா வகைகளையும் மிக்ஸர் வகைகளையும் மெல்ல மெல்ல உற்பத்தி செய்யத் தொடங்கினோம்.



இப்படி பல்வேறு விதமான சவால்களை வியாபாரத்தில் எதிர்நோக்கினாலும் அதற்கு மாற்றீடான முயற்சிகளை மேற்கொண்டு சந்தையில் முக்கியமான இடத்தைப் பிடித்துக் கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டன. மிளகாய், மஞ்சள் தூள் போன்றவற்றை அரைத்துக் பக்கட் செய்து விற்னை செய்கின்றோம்.

இதில் முக்கியமான விடயம் மரவள்ளி பொரியல் தொழில் பேட்டை வைத்திருந்தவர்கள் அநேகமானவர்கள் அப்படியே செய்யாமல் விட்டனர். நான் அந்த நேரத்திலும் மட்டுப்படுத்திக் கொண்டு வியாபாரத்தை ஓட்டிக் கொண்டிருந்தேன். 40 பக்கட் கொடுத்த இடத்தில் 10 பக்கட் கொடுக்காமல் விட மாட்டேன். எவ்வாறாயினும் ஆரம்பத்திலேயே பொருளின் தரத்திற்கு ஏற்ப சந்தையில் கேள்விக்குரிய பொருளாக மக்கள் மத்தியில் பழக்கப்படுத்தி விட்டேன். வெளியே குறைந்த விலைக்கு இருந்தாலும் எமது உற்பத்திப் பொருளை சற்று விலைக் கொடுத்துச் சரி நுகர்வோர்கள் வாங்குவார்கள். இதுதான் பெரிய வியாபாரத்திற்குரிய வெற்றி.




தற்போது ஆறு, ஏழு மாதங்களாக அரிசி மா செய்கின்றோம். பச்சைத் தண்ணீரில் குழைக்கக் கூடிய மா இது. இவற்றையும் நாங்கள் தயாரிக்கின்றோம். இது ஆரம்ப கட்டத்தில் தான் செய்கிறோம். வெற்றி என்று சொல்வதற்கு இல்லை. மா விற்பனை ஆகிறது. ஆனால் பெரிய இலாபம் ஒன்றும் இல்லை. அரசி மா வியாபாரத்தை தொடங்கும் போது ஒரு கிலோ பச்சை அரசி ரூபா 120, 130 வரை விற்பனை செய்யப்பட்டது. திரும்ப அரசி ரூபா 180 விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் அரசி ரூபா 120 வுக்கு மற்றும் ரூபா 180 வுக்கும் விற்கும் போது மாவின் விலை ரூபா 290 ஆகத்தான் இருக்கிறது. இதிலுள்ள பிரச்சினை என்னவென்றால் வெளியே கொழும்பில் இருந்து வருபவர் 270 ரூபாவுக்கு கொடுத்து விட்டுச் செல்கிறான். நாங்கள் நாளாந்தம் சந்தையில் கொள்வனவு செய்து தயாரித்து விற்பனை செய்கின்றோம். நாங்கள் அவர்களுடன் போட்டி போட முடியாது. ஏதோ செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் இதனை தயாரித்து சந்தைப்படுத்தி வருகின்றோம். எங்களுடைய உற்பத்தியில் எந்தவொரு இரசாயனக் கலவையுமில்லை. இப்படியான தரம் வாய்ந்த ஒரு தனித்துவமான தன்னிறைவைக் கொண்டு வருவதற்குரிய உணவுப் பண்டங்களை உற்பத்தி செய்து வருகின்றோம். ஆதலால் தான் நாங்கள் இன்று வரையிலும் ஒரு முன்னேற்றகரமான பாதையில் சென்று கொண்டிருக்கின்றோம்.

சுமார் 18 வகையிலான உற்பத்தி வகைகளை நாம் செய்து வருகின்றோம். மிளகாய்த் தூள், சரக்குத் தூள், ரசப்பொடி, சீரகத்தூள், கோப்பித் தூள், மிக்ஸர் உள்ளிட்ட உணவு வகைகளைச் செய்து வருகின்றோம். கடந்த வருடக் கடைசியில் பெரியதொரு சூறாவளி எங்கள் பிரதேசத்தில் வீசியது. இந்நாளில் அநேகமான மரவள்ளி மரங்கள் பாதிக்கப்பட்டன. இதனால் பெரிய அழிவு ஏற்பட்டது. கொஞ்சக் காலம் மரவள்ளிக்குத் தட்டுப்பாடுகள் நிலவின.

இன்றைய காலநிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற போது எங்களுக்கு ஏற்படக் கூடிய பிரச்சினை வடக்கில் தானியங்கள் இல்லை. முன்னைய காலங்களில் மூன்று போகம் விவசாய உற்பத்திகள் நடைபெறும். சிறு போகம், பெரும் போகம், மானாமாரி என்று மூன்று போகம் செய்வோம்.

கௌபி, சோளம். குரக்கன் போன்றவைகள் தேவையானளவு இருக்கும். இப்போது அவைகள் இல்லை.

பெரும்பாலும் இறக்குமதி தானிய வகைகள்தான் இங்கு வருகின்றன. இவை பெரிய சவாலாகும். ஏனையவர்களுக்கு போட்டி போட முடியாது. அப்படித் தேவை என்றால் அநுராதபுரம் செல்ல வேண்டும். அல்லது நேரடியாக கொழும்பில் இருந்து சமான்கள் எடுக்க வேண்டும். நாங்கள் கொழும்பில் இருந்து எடுத்து உற்பத்திகளை தயாரிக்க வேண்டும் என்ற சூழ்நிலை இருந்தால் கொழும்பில் இருந்து வரும் கைத் தொழில் உற்பத்தியாளர்கள் இலகுவாக தங்களை வியாபாரத்தைச் செய்து விட்டுச் சென்று விடுவார்கள். அப்படியே தானிய உற்பத்திகள் மருகிப் போய் விட்டதால் உள்ளூர் கைத் தொழிலாளர்கள் நிறையப்பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இன்று சனங்களும் வாங்கிச் சாப்பிட வேண்டும் என்ற நிலைக்கு மாறி விட்டார்கள். பொதுவாக மக்கள் உற்பத்தி செய்து சாப்பிட வேண்டும் என்ற மனோ நிலை மக்களிடம் இன்று இல்லை.

பெரியளவில் மக்கள் உள்ளூர் உற்பத்திகளை பெருக்கிக் கொள்ள யாரும் ஆர்வம் காட்டுவதாகத் தெரியவில்லை. இதுதான் உண்மை.

அடுத்த நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அலுவலக உத்தியோகத்தர்களுடைய கெடுபிடியாகும். இது மிகவும் முக்கியமான பிரச்சினையாகும். விளம்பர லேபல்கள் அடிக்கும் போது 10,000 அல்லது 15,000 என்று அச்சிடுதல் வேண்டும். பெருந் தொகையாக அடித்தால்தான் தொழிலுக்கு கட்டுப்படியாகும். அப்படி அடிக்கும் லேபல்களில் கிராம் கணக்கு போட்டு அடிப்போம். சில வேளை கிராம் போடாமலும் அடிப்போம்.

இன்றைய நாட்டின் பொருளாதார நெருக்கடியினால் நாளுக்கு நாள் மூலப் பொருட்கள் விலை மாறிக் கொண்டிருக்கும். இந்த நிலைமையில் பக்கட்டில் எப்படி விலை அடிப்பது என்ற தீர்மானத்தை யாருக்கும் எடுக்க முடியாது. அதற்குள் பெரும் சிக்கல் வரும். ஆதலால் அதில் வெட்டி எழுதுவோம் அல்லது அதை ஸ்டிக்கரினால் மறைத்து போட்டு எழுதுவோம். முதல் வெட்டி எழுதும் போது அதற்கு பிரச்சினைகளை எழுப்பினார்கள். இதற்காக ரூபா 15,000 தண்டம் கட்ட வேண்டி இருந்தது . அப்பொழுது அச்சிடப்பட்டு இருத்தல் வேண்டும் என்று கூறினார்கள். இஸ்டிக்கர் மேலால் ஒட்டினோம். லேபலுக்கு மேலால் ஸ்டிக்கர் ஒட்டியிருக்கிறது என்று இப்படி பாரதூரமான பிரச்சினைகள் வந்து கொண்டே இருக்கும். அச்சிட்ட லேபல் அப்படியே இருக்கும். அவ்வளவு நட்டம்தான். விலை மாற வில்லை.







இந்த நடவடிக்கை அரசாங்கத்திற்கு பெரியளவில் வரியை தேடிக் கொடுப்பதற்காகவோ அல்லது வெளி நாட்டு வியாபார மாபியாக்களுக்கு உதவி செய்வதற்காகவோ இருக்காது. கடைசி நேரம் பிடிபட்டது லேபல். அழகான முறையில் இஸ்டிக்கர் அடித்ததைப் பிடித்தார்கள். பழைய விலை வெட்டிப் போட்டு புதிய விலை அடித்திருந்தோம். இதனை நுகர்வோர் அதிகார சபையினர் பிடித்தனர். இதற்காக ஒரு சட்டத்தரணி ஒருவரைப் பிடித்து வாதாடியும் பார்த்தோம். அவையும் பயனளிக்கவில்லை. ஒரு பக்கட் என்றால் இரண்டு ரூபாய் மூன்று ரூபாய் வைத்து விற்பனை செய்வோம். எங்களைப் போன்று எத்தனையோ வயதுபோன ஏழைத் தொழிலாளர்கள் கடினப்படுகின்றார்கள். அவர்களுடன் இப்படி நடப்பது அநியாயம். திரும்பத் திரும்ப பிடிக்கின்றார்கள். நியாயமில்லாமல் பிடிக்கின்றனர். இது விடயத்தில் நுகவோர் அதிகார சபை உத்தியோகஸ்தர்கள் நியாயத் தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

காலாவாதியான உணவுப் பொருட்கள் விற்பனை செய்தால் பிடியுங்கள், கட்டுப்பாட்டு விலைகளை மீறி விற்பனை செய்தால் பிடியுங்கள்,உண்மையான குற்றம் என்றால் அதற்குரிய தண்டனை பெற்றுக் கொள்ளலாம். இப்படி தொடர்ந்து இந்த மாதிரி நடந்தால் சிறு கைத்தொழிலில் ஈடுபடுகின்ற நிறையப் பேர் தொழிலை கைவிட்டு விடுவார்கள். சிரமப்பட்டு விடுவார்கள். இது சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் எங்கள் மீது கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எங்களது உற்பத்திப் பொருட்களை மட்டும் வாங்கி விற்பனை செய்யக் கூடிய கடைகளும் உள்ளன. வேறு யாருடைய பொருட்கள் வாங்க மாட்டார்கள். சரியான வாடிக்கையாளர்கள் தேவை. எங்களுடைய வாடிக்கையாளர்களை நாங்கள் சீரான முறையில் வைத்துக் கொண்டிருக்கின்றோம். எங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளார்கள். அவர்களிடம் பொருட்கள் முடியும் தருணத்தில் எங்களிடம் உடன் பொருட்கள் தேவையென தொடர்பினைக் கொள்வார்கள். நுகர்வோர்கள் விரும்பி உண்ணக் கூடிய வகையில் உணவு உற்பத்திகளைச் செய்து வருகின்றோம். கடுமையான சவால்கள் வரும் போது ஏதாவது ஒரு புதிய பொருளை அறிமுகப்படுத்துவதுதான் எங்களுடைய உபாயம்.

சந்தைக்கு என்ன தேவையாக இருக்கின்றதோ அவற்றை உற்பத்தி செய்து சந்தைக்கு விடுவோம். கால நிலை மாற்றத்திற்கு ஏற்ப வருமானத்தைப் பெற்றுக் கொண்டு வருகின்றோம். வரவு செலவுத் திட்டத்தை சரியான முறையில் வகுத்து செயற்படுகின்றோம். ஓடிக் கொண்டு இருக்கின்றோம்.

காவேரிக் கலா மன்றம் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்காக அதிகளவு சந்தை வாய்ப்பினைப் பெற்றுத் தந்துள்ளது என்றார்.

**இக்பால் அலி**

# கடற்றொழிலாளர்களுக்கு மின்கலத்தில் இயங்கும் மீன்பிடி இயந்திரம் வழங்க ஏற்பாடு

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

சாவகச்சேரி விசேட நிருபர்

இந்த வருட இறுதியில் கடற்றொழிலாளர்களுக்கு மின்கலத்தில் இயங்கக்கூடிய மீன்பிடி இயந்திரங்களை வழங்கி, எரிபொருள் செலவை கட்டுப்படுத்தவுள்ளதாக, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

சீன அரசாங்கத்தின் உதவியில் கடற்றொழிலாளர்களுக்கு இலவசமாக மண்ணெண்ணெய் விநியோகிக்கும் நடவடிக்கை யாழ். சாவகச்சேரியில் கடந்த செவ்வாய் (10) அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



கடற்றொழிலாளர்களுடன் கலந்துரையாடிய போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"தற்போது கடற்றொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச எரிபொருள் செலவாக நாளொன்றுக்கு 5,000 ரூபா தேவைப்படுகின்றது. ஆனால், மின்கலத்துக்கு சார்ஜ் செலவு மாத்திரமே உள்ளதுடன், அதற்கு நாளொன்றுக்கு 800 ரூபா செலவாகும். இந்நிலையில், மீன்பிடி இயந்திரத்தை சார்ஜ் செய்து நீண்டநேரம் பயன்படுத்த முடியுமென்பதுடன், அதிக வலுக் கொண்டதாகவும் இருக்கும்.

ஆகையினால், மின்கலத்தில் இயங்கக்கூடிய மீன்பிடி இயந்திரங்களை கடற்றொழிலாளர்கள் பயன்படுத்தும் பட்சத்தில் எரிபொருள் செலவை முற்றாக தவிர்க்க முடியுமென்பதுடன், இது கடற்றொழிலாளர்களுக்கு மிகப்பெரிய வரப்பிரசாதகமாக அமையும்" எனத் தெரிவித்தார்.

# கசிப்புடன் கைதாகிய நால்வருக்கு விளக்கமறியல்

சாவகச்சேரி விசேட நிருபர்

கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 4 பேரை எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் புதன்கிழமை (11) உத்தரவிட்டுள்ளது.

கசிப்புடன் தென்மராட்சியின் கெற்பேலி பிரதேசத்தில் 3 பேரையும் மட்டுவில் பிரதேசத்தில் ஒருவரையும் நேற்று முன்தினம் பொலிஸார் கைது செய்ததுடன், இவர்களிடமிருந்து 12,800 லீற்றர் கசிப்பையும் கைப்பற்றினர்.

கசிப்பு விற்பனை இடம்பெறுவதாக யாழ். மதுவரித் திணைக்களத்துக்கு கிடைத்த தகவலை அடுத்து யாழ்ப்பாணம், மல்லாகம் மற்றும் சாவகச்சேரி மதுவரித் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே, இச்சந்தேக நபர்களைக் கைது செய்ததாக, பொலிஸார் தெரிவித்தனர்.

# வடக்கின் உதயம்

### சிறுமியின் இடதுகை அகற்றப்பட்ட விவகாரம்

# சிலரை சந்தேகநபர்களாக பெயரிட சட்டத்தரணிகள் கோரிக்கை

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிறுமியின் இடதுகை மணிக்கட்டுடன் அகற்றப்பட்ட விடயம் தொடர்பாக சிலரை சந்தேக நபர்களாக பெயரிடுமாறு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்திடம் சிறுமி சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பான வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை (11) நடைபெற்ற போதே, சட்டத்தரணிகள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இந்த விவகாரம் தொடர்பாக மருத்துவப் பரிசோதனை அறிக்கை மற்றும் நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட வைத்தியர் நிபுணர் குழு அறிக்கைகளை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்காத நிலையிலேயே, சிறுமி சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் இவ்வாறு கோரியுள்ளனர்.

அத்துடன், வழக்கை முன்னோக்கிக் கொண்டு செல்ல நீதிமன்றம் அனுமதிக்க வேண்டுமெனவும், சட்டத்தரணிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இந்த விவகாரம் தொடர்பாக ஆராய்வதாக தெரிவித்த நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா, எதிர்வரும் நவம்பர் மாதம் 7ஆம் திகதிக்கு வழக்கை எடுத்துக்கொள்ளவும் உத்தரவிட்டுள்ளார்.

### மன்னார் மாவட்ட செயலகம் முன்பாக

# பள்ளிமுனை கடற்றொழிலாளர் பாரிய ஆர்ப்பாட்டம்

மன்னார் குறுப் நிருபர்

கடற்றொழிலில் ஈடுபடும் தமக்கு தொழில் ரீதியாக முன்னெடுக்கப்படும் பாஸ் நடைமுறை உள்ளிட்ட விடயங்களைக் கண்டித்து மன்னார் பள்ளிமுனை கிராம மீனவர்கள் நேற்று வியாழக்கிழமை (12) மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக ஒன்றுகூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பள்ளிமுனை கடற்கரையிலிருந்து அட்டை பிடிக்க கடலுக்குச் செல்லும் தாம் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.



பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கடற்றொழிலாளர்கள் மன்னார் மாவட்டச் செயலகம்வரை சென்று, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். எனவே, தமக்கு தொழில் ரீதியாக வழங்கப்படும் தனித்தனி பாஸ் நடைமுறையை நிறுத்தி, பொதுவான பாஸ் வழங்கப்பட வேண்டுமெனவும், கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

### கிளிநொச்சியில்

# 'கிராம சக்தி' திட்டத்தின் மீளாய்வுக் கூட்டம்

பரந்தன் குறுப் நிருபர்

கிளிநொச்சி மாவட்டத்தில் கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினூடாக அமுல்படுத்தப்பட்ட 'கிராம சக்தி' மற்றும் 'புதிய கிராமம், புதிய நாடு' ஆகியவற்றின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை (11) நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இரு கட்டங்களாக இந்தக் கூட்டம் நடைபெற்றது.

முதற்கட்டமாக கிராம சக்திச் சங்கங்களின் நுண்நிதிச் செயற்பாடுகளின் மீளாய்வு தொடர்பாக ஆராயப்பட்டது.

இதன்போது, கிராம சக்தி நிகழ்ச்சித் திட்டத்துக்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் இரண்டு கட்டங்களாக வாழ்வாதாரத்துக்கான சுயதொழில் செய்வதற்கான கடன் வழங்கல் தொடர்பாக ஆராயப்பட்டது. இதன் பின்னர், 'புதிய கிராமம், புதிய நாடு' நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பாக ஆராயப்பட்டதுடன், இதில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் மற்றும் அடையப்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பாக விரியாக ஆராயப்பட்டன.

அத்துடன், கிளிநொச்சி மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் கடந்த கால செயற்பாடுகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

இந்த அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் போது, எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டு, அதற்கான தீர்வுகளும் முன்வைக்கப்பட்டன.

# மன்னார் மாவட்டத்தில் மரதனோட்டப் போட்டி

மன்னார் குறுப் நிருபர்

மன்னார் மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஆண், பெண் இருபாலாருக்குமான மாபெரும் மரதன் ஓட்ட போட்டி இந்த மாதம் 14ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

மன்னார் மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்கள், விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் உள்ளிட்டோர் இந்தப் போட்டியில் பங்குபற்ற முடியும்.

இந்த மரதன் ஓட்டத்தில் வெற்றி பெறுபவர்களுக்கு 20,000 ரூபா பணம், பரிசு, சான்றிதழ் மற்றும் வெற்றிக்கிண்ணம் வழங்கப்படவுள்ளது.

மரதன் ஓட்டப் போட்டியில் கலந்துகொள்ள விரும்புகின்ற 16 வயதுக்கு மேற்பட்டவர்கள் தமது ஆவணங்களுடன் மன்னார் மாவட்டச் செயலகத்தில் பதிவை மேற்கொள்ளுமாறு, மன்னார் மாவட்ட மெய்வல்லுநர் சங்கம் தெரிவித்தது.

# மத்திய மலைநாட்டில் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை

## விமலசுரேந்திர நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் திறப்பு

இரத்தினபுரி சுழற்சி, அக்குறணை குறுப், ஹட்டன் சுழற்சி, மஸ்கெலியா தினகரன் நிருபர்கள்

தற்போது மலையகப் பிரதேசங்களில் அடை மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை நிலவி வருவதுடன், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

மலையகப் பிரதேசங்களில் அடை மழை, பலத்த காற்று, மண்சரிவு அபாயம், பனிமூட்டமான காலநிலை, மரங்கள் முறிந்து விழும் அபாயம் நிலவி வருகின்றது.

பொகவந்தலாவையில் பெய்து வரும் அடை மழையினால் கெசல்கமுவ ஓயாவின் கிளை ஆறுகள் பெருக்கெடுத்ததை தொடர்ந்து, தாழ்வான பகுதிகள், தேயிலை தோட்ட வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

அத்துடன் ஹட்டன் நுவரெலியா, ஹட்டன் கொழும்பு பிரதான வீதிகளில் மண்சரிவு ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருப்பதுடன், அந்த வீதிகளினூடாக வாகனங்களில் பயணிப்பவர்களை மிகுந்த அவதானத்துடன் வாகனங்களைச் செலுத்துமாறும் சாரதிகளிடம் நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் நிமல் பண்டார கேட்டுக்கொண்டுள்ளார். பலாங்கொடைஹட்டன்பொகவந்தலாவை வீதி, பலாங்கொடை ஹப்புத்தளை வீதி, பலாங்கொடை வேவல்வத்த வீதி ஆகிய வீதிகளினூடாக வாகனங்களில் பயணிக்கும் சாரதிகளிடம் பலாங்கொடை போக்குவரத்து பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.





இந்த வீதிகளில் அதிகளவான பனிமூட்டம் காணப்படுவதுடன், வீதிகளில் மண்மேடு சரிந்து விழும் அபாயமும் தென்படுகின்றது.

பலத்த காற்றுக் காரணமாக வீதியோரங்களிலுள்ள மரங்கள் முறிந்து விழும் அபாயம் தென்படுவதாகவும் பொதுமக்களுக்கு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

இதற்கிடையில், நோர்டன்பிரிட்ஜ் ஜனில் பெய்த அடை மழையினால், விமலசுரேந்திர நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை 5.00 மணியளவில் திறந்து விடப்பட்டுள்ளன.

தற்போது பெய்துவரும் கடும் மழை காரணமாக மத்திய மலைநாட்டு நீர்த்தேக்கங்க பலவும் நிரம்பி வழிய ஆரம்பித்துள்ளதாக, அந்தந்த நீர்த்தேக்கங்களுக்கு பொறுப்பான பொறியியலாளர்கள் தெரிவித்தனர்.

# மலைச்சாரல்

### லிட்டில்வெளி தோட்டத்தில்

# வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட தரம் – 05 மாணவனின் சடலம் மீட்பு

கம்பளை நிருபர்

கண்டி, கலஹா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெல்தோட்டை லிட்டில்வெளி தோட்டத்தில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட மாணவனின் சடலத்தை நேற்று வியாழக்கிழமை (12) காலை பொலிஸார் மீட்டுள்ளனர்.

எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறவுள்ள தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள காண்டீபன் திவான் எனும் மாணவனே உயிரிழந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலைக்கு சென்று, பிரத்தியேக வகுப்பையும் முடித்துக்கொண்டு நேற்று முன்தினம் புதன்கிழமை (11) மாலை வீடு திரும்பிய போதே, இந்த அசம்பாவிதம் இடம்பெற்றது. இம்மாணவன் சிறியதொரு பாலத்தை கடக்க முற்பட்ட போது, வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதாகவும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட இம்மாணவனை தேடியதாகவும் இந்நிலையில் மாணவனின் சடலத்தை மீட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

லிட்டில்வெளியிலிருந்து சுமார் 5 கிலோமீற்றர் தொலைவிலுள்ள கலஹா தெல்தோட்ட ஓடையிலிருந்து சடலத்தை மீட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை கலஹா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இரத்தினபுரி ஜோக்கிம் தமிழ் மகா வித்தியாலயத்தில் செயற்கை நுண்ணறிவு வகுப்பறை



மாவத்தகம தினகரன் நிருபர்

காவேரிக் கலாமன்றத்தினால் இரத்தினபுரி ஜோக்கிம் தமிழ் மகா வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவு கற்கைநெறி வகுப்பறைக் கூடம் திறந்து வைக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் காவேரிக் கலாமன்றத்தின் இயக்குநர் வண. பிதா யோசுவா அடிகளார், இங்கிலாந்து நாட்டின் ஓய்வுபெற்ற நீதிபதி ஜெனிபர் சுமிட் மற்றும் கிளிநொச்சி றோட்டரிக் கழகத்தின் தலைவி வனிதா உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

# அலதெனியவில் பொறிவெடியில் அகப்பட்டு சிறுவன் காயம்

அக்குறணை குறுப் நிருபர்

கண்டி, அலதெனிய பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் புதன்கிழமை (11) பொறிவெடியில் அகப்பட்டு 15 வயதுடைய சிறுவன் ஒருவன் காயமடைந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பொறிவெடி புதைக்கப்பட்டிருந்த நிலையிலேயே வெடித்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தை தொடர்ந்து 27 வயதுடைய சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளதுடன், அவரது வீட்டிலிருந்து ஒன்பது பொறிவெடிகளைக் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன், இச்சந்தேகநபரிடமிருந்து கட்டுத்துவக்கொன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

விலங்குகளை வேட்டையாடுவதற்கு பயன்படுத்துவதற்காக இந்தப் பொறிவெடி தயாரிக்கப்பட்டமை விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

# அம்பேவெல – உலக முடிவு வீதியில் மண்சரிவு; போக்குவரத்து பாதிப்பு

ஊவா சுழற்சி நிருபர்



ஊவா மாகணத்தில் பெய்து வரும் அடை மழை காரணமாக வெலிமடை, ரேந்துபோல, அம்பேவெல உலக முடிவு வீதியில் நேற்று வியாழக்கிழமை (12) பாரிய மண்சரிவு ஏற்பட்டு, அவ்வீதியினூடான போக்குவரத்து முற்றாக தடைப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து, இந்த வீதியை முற்றாக மூடுவதற்கு தீர்மானித்துள்ளதாக, கெப்பெட்டிப்பொல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சானக ராஜபக்ஷ தெரிவித்தார்.

மேலும், பனிமூட்டம் அதிகரித்துக் காணப்பட்டதினால் இவ்வீதி வழியாக பயணித்த முச்சக்கரவண்டியொன்று குடைசாய்ந்து வீதியை விட்டு விலகியதாகவும் ஆயினும், முச்சக்கரவண்டியில் பயணித்தவர் வெளியே பாய்ந்து தன்னை பாதுகாத்ததாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

ஆகையினால், இந்த வீதியினால் பயணிக்கும் வாகனங்களை மாற்று வீதிகளை பயன்படுத்துமாறும் வாகனங்களில் மஞ்சள் நிற மின்விளக்குகளை ஒளிரவிடுமாறும் சாரதிகளிடம் பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# மறைந்த நடிகர் ஜெக்சன் அந்தனியின் இறுதிச்சடங்கின்போது....








படங்கள் :சுதத் மலவீர விமல் கருணாதிலக

# வடமாகாணத்தின் தற்போதைய நிலைமை மகிழ்ச்சியளிக்கிறது

## பிரித்தானிய அமைச்சர்

**யாழ்ப்பாணம் குறூப், கோப்பாய் குறூப், பருத்தித்துறை விசேட நிருபர்**



வடமாகாணத்தின் தற்போதைய நிலைமை தொடர்பாக மிகவும் மகிழ்ச்சியடைவதாக, பிரித்தானிய அமைச்சர் ஆன்மேரி பெலிண்டா ரவேலியன் தெரிவித்தார்.

வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸுடன் யாழ். நகரில் நேற்று வியாழக்கிழமை (12) நடைபெற்ற கலந்துரையாடலின் போதே, பிரித்தானிய அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். வடமாகாண மக்களின் வாழ்க்கை முறையில் முன்னேற்றம் ஏற்பட்டு வருவதாகவும் சிறந்த எதிர்காலம் தெரிவதாகவும், பிரித்தானிய அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, வடமாகாணத்தில் மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பாக அமைச்சர் ஆன் மேரி பெலிண்டா ரவேலியனுக்கு வடமாகாண ஆளுநர் விளக்கமளித்தார். இந்தக் கலந்துரையாடலின் போது இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ரூ பெற்றிக்கும் (Andrew Patrick) கலந்துகொண்டார்.

## தம்புள்ளையில்

# மனித பாவனைக்கு உதவாத 18,500 டின் மீன்கள் அழிப்பு

**மாத்தளை சுழற்சி நிருபர்**



தம்புள்ளை மாநகர சபைக்குட்பட்ட இனாமலுவ குப்பை கொட்டும் இடத்தில் மனித பாவனைக்கு உதவாத 18,500 டின் மீன்கள் தம்புள்ளை நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய நேற்று முன்தினம் அழிக்கப்பட்டன.

மாத்தளை மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு சபை அதிகாரிகளினால் கடந்த ஜனவரியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது, கலேவல பிரதேசத்திலுள்ள தலகிரியாகம பிரதேசத்தில் அமைந்துள்ள களஞ்சியசாலையொன்றில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்ட பாவனைக்கு உதவாத ஒரு கோடியே 37 இலட்சம் ரூபா பெறுமதியான டின் மீன்களை கண்டுபிடித்தனர்.

இந்நிலையில், களஞ்சியசாலை உரிமையாளரை சந்தேகத்தின் பேரில் கைது செய்,து தம்புள்ளை நீதிமன்றத்தில் இவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து, விசாரணை முன்னெடுக்கப்பட்ட போது, சந்தேக நபரை ஒரு இலட்சம் ரூபா பிணையில் செல்ல நீதிமன்றம் உத்தரவிட்டது.

# கெம்பியன், ராணிக்காடு வீதியில் கற்பாறை சரிந்துவிழும் அபாயம்



**பொகவந்தலாவ நிருபர்**

அடை மழை காரணமாக பொகவந்தலாவையில் கெம்பியன், ராணிக்காடு பிரதான வீதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை (11) இரவு கற்பாறைகள் சரிந்து விழுந்துள்ளது. இதனால், நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று வியாழக்கிழமை (12) காலைவரை அவ்வீதியினூடான போக்குவரத்து தடைப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், சரிந்து விழுந்த கற்பாறைகளை அகற்றும் நடவடிக்கையில் பொதுமக்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, மேற்படி வீதியில் அடை மழை காரணமாக பாரிய கற்பாறையொன்று எவ்வேளையிலும் சரிந்து விழும் அபாயம் காணப்படுவதாகவும், இதன் காரணமாக இவ்வீதியினூடாக பயணிப்பவர்களை மிகுந்த அவதானத்துடன் பயணிக்குமாறும் பொதுமக்களிடம் பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

சரிந்து விழும் அபாயத்திலுள்ள கற்பாறையை அகற்றுவதற்கான நடவடிக்கையை உரிய அதிகாரிகள் எடுக்க வேண்டுமென்று பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# கென்யோன் நீர்த்தேக்கத்தின் 2 வான்கதவுகள் திறப்பு

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

ஹப்புகஸ்தனை பிரதேசத்திலுள்ள கென்யோன் நீர்த்தேக்கத்தின் இரண்டு வான்கதவுகள் மூன்று அங்குலத்துக்கு நேற்று வியாழக்கிழமை (12) மாலை திறந்து விடப்பட்டுள்ளதாக, கென்யோன் நீர்மின் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த சில நாட்களாக இப்பிரதேசத்தில் பெய்து வரும் அடை மழையைத் தொடர்ந்து கென்யோன் நீர்த்தேக்கம் நிரம்பி வழிந்ததை தொடர்ந்து, அந்நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன. நேற்றையதினம் மாலை அதிக மழை வீழ்ச்சி பதிவாகியதாகவும் கென்யோன் நீர்த்தேக்கத்தின் மேலதிக நீரையே வெளியேற்றி வருவதாகவும், அவர் தெரிவித்தார். இந்நிலையில், அனைத்து மக்களும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டுமெனவும், அவர் தெரிவித்தார்.

# சாமிமலை விநாயகர் கோயில் வெள்ளத்தில் மூழ்கியது



**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாமிமலை ஓல்டன் தோட்ட பத்தாம் இலக்கப் பிரிவிலுள்ள விநாயகர் ஆலயம் வெள்ளத்தில் மூழ்கியதுடன், ஆலயத்திலிருந்த பொருட்கள் அனைத்தும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

நேற்று மாலை சாமிமலை பிரதேசத்தில் பெய்த அடை மழையினால் மீட்டியா கோட்டை வனப் பிரதேசத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதன் காரணமாக 24 குடும்பங்களைச் சேர்ந்த 150 பேர் வீடுகளை விட்டு வெளியேறி உறவினர் வீடுகளில் தற்காலிகமாக தங்கியதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

### புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறும்

# வவுனியா பாடசாலைகளில் சோதனை

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியாவில் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை நிலையங்களாக இயங்கவுள்ள பாடசாலைகளில் சுகாதார நிலைமை தொடர்பாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்று (12) திடீர் சோதனையை முன்னெடுத்தனர்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (15) 2023ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சை நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில், நுளம்புகளின் பெருக்கம் உள்ளதாவென அறியும் வகையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நடத்தியுள்ளனர்.

நுளம்புகள் பெருகும் இடங்களை துப்புரவு செய்யுமாறும் பாடசாலைகளுக்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

# மாத்தளை ஆமினா மகளிர் தேசிய பாடசாலையில் இஸ்லாமிய தினம்





**மாத்தளை சுழற்சி நிருபர்**

மாத்தளை ஆமினா மகளிர் தேசிய பாடசாலையின் இஸ்லாமிய மஜ்லிஸினால் ஏற்பாடு செய்யப்பட்ட இஸ்லாமிய தினம் அப்பாடசாலையில் நேற்று முன்தினம் வெகு விமர்சையாக நடைபெற்றது.

பாடசாலை அதிபர் ஜே.எஸ்.எம். பவாஹிதா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் லண்டனிலுள்ள தொழிலதிபர் இர்பான் அஸீஸ் பிரதம அதிதியாகவும் மாத்தளை வலய முஸ்லிம் பாடசாலைக்கான இணைப்பதிகாரி எம். ஆர்.யு.ரில்வான் விசேட அதிதியாகவும் கலந்துகொண்டனர்.

இதன்போது, இப்பாடசாலையில் புனரமைக்கப்பட்ட தொழில்நுட்ப ஆய்வுகூடம் திறந்து வைக்கப்பட்டதுடன், இஸ்லாமிய தினத்தையிட்டு பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசில்களையும் அதிதிகள் வழங்கி வைத்துள்ளனர்.

# சினிசிட்டா மண்டபத்தில் சிறுவர் தின நிகழ்வு




**தலவாக்கலை குறூப் நிருபர்**

பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு நிதியத்தின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர் தின நிகழ்வு நுவரெலியா சினிசிட்டா மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை (12) நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஸ்வரன் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இதேவேளை, பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு நிதியத்தின் தலைவர், தோட்ட அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

சிறு விளம்பரம்

காணி/தோட்டம்

617

வீடு சொத்து

**கம்பஹா மாவட்டம்**

விற்பனைக்கு

நிட்டம்புவ சங்கபோதி கல்லூரிக்கு முன்னால் பாதைக்கு 100m நடை தூரத்தில் 15 பேர்ச் விற்பAனைக்கு. 0772677605. 065834

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

Wherever you are..,
The best way to Fulfil your Future Dreams...
Gather with,




Green Light for Online Transfer
Lake House Branch Acc. No. 000000377

E-mail - classified@lakehouse.lk
077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347
011 2 429 383 I 011 2 429 342/ 343


# இலங்கை வங்கி

பின்வரும் அமைவிடத்தில் சுய சேவை முகப்பறை (Self Service Lobby) நிறுவுவதற்கு அலுவலக இடவசதி தேவையாகவுள்ளது.

## மரதன்கடவல

**உத்தேசக் கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

- தரைப் பரப்பு ஆகக்குறைந்தது 260 சதுர அடி அளவைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.
- கட்டடத்தின் முகப்பு ஆகக் குறைந்தது 13 அடி அகலத்தைக் கொண்டதாக பிரதான வீதிக்கு முகப்பாக நகர மத்தியில் அமைந்திருத்தல் வேண்டும்.
- வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதுமான இடவசதி இருத்தல் வேண்டும். (ஏறக்குறைய 03 வாகனங்கள்)
- டெலிகொம் தொலைபேசி இணைப்பு வசதி மற்றும் ஒற்றை நிலை 30 அம்பியர் மின்சார வசதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- கட்டடத்தின் தரைக்கு தரையோடு பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- வலதுகுறைந்தோர் பிரவேசிப்பதற்கு சர்வதேச தரத்தினாலான சக்கரநாட்காலி நுழைவாயில் இருத்தல் வேண்டும்.
- கட்டடத்திற்கான தீப்பாதுகாப்புச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.
- கட்டடத்தின் மின்சார சுற்றுகள் சேர்க்கியூட்கள் முறையாக நிறுவப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தி மின்சார பொறியியலாளர் ஒருவர் வழங்கிய சான்றிதழ்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கட்டட உரிமையாளர்கள், கட்டட வரைபடம், காணித்துண்டின் வரைபடம், உரிமைத்துவ உறுதி போன்ற ஆவணங்களின் பிரதிகள் மற்றும் எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையைக் குறிப்பிட்டு 14 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மரதன்கடவலயில் சுய சேவை முகப்பறைக்குப் பொருத்தமான கட்டடம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**உதவிப் பொது முகாமையாளர்**
**(வடமத்திய மாகாணம்)**
**இலங்கை வங்கி,**
**வடமத்திய மாகாண அலுலகம்**
**அனுராதபுரம்.**
**தொலைபேசி : 025-2235679/025-2235680**
**தொலைநகல் : 025-2235685**
**மின்னஞ்சல் : bocncp@boc.lk**

1975 BOC CALL CENTRE www.boc.lk

A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# அரச ஈட்டு முதலீட்டு வங்கி

## காலக்கெடுவை நீடித்தல்

பின்வரும் பெறுகைக்கான விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் 2023-10-18 ஆம் திகதியிலிருந்து 2023-10-31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

| பெறுகையின் பெயர் மற்றும் குறிப்பீட்டிலக்கம் | விலைக்கோரல் பிணை முறித்தொகை (இல. ரூபா) | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை (இல. ரூபா) | திருத்தப்பட்ட முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| பண மோசடி மென்பொருள் தீர்வை அமுல்படுத்துதல் SMIB/ TD/2023/09/02 | 200,000.00 | 5,000.00 | 2023.10.31 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு |

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023-10-31 ஆம் திகதி வரையில் வங்கியின் தலைமை அலுவலகத்தில் விலைக்கோரல் ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

**மேலதிக தகவல்களுக்கு : 011-7722879 / 011-7722876**
**பெறுகைக் குழு,**
**அரச ஈட்டு முதலீட்டு வங்கி,**
**இல. 269, காலி வீதி,**
**கொழும்பு-03**

# காணி சுவீகரித்தல் சட்டம்
## (460ஆம் அத்தியாயம்)
## 39அ(1) பிரிவின் கீழான கட்டளை

1999 நவம்பர் 15ம் திகதி இல.1106/11 இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் (460ஆம் அதிகாரமான) காணி சுவீகரிப்புச் சட்டத்தின் 38ஆம் பிரிவு (அ) இடைக்கால விதிமுறையின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 1999 இல. 235 சட்டவாக்கத்தின் உள்ளக்கப்பட்ட காணித்துண்டுகள் முழுமையாக அரசுடமையாகியுள்ளதுடன், அரசு சார்பாக மேற்படி சட்டத்தின் 40ஆம் பிரிவின் (அ) பிரிவின் கீழ் அக்காணிகளின் பகுதிகளின் உரித்துரிமையை பெற்றுக்கொண்டுள்ளது. எனினும் அச்சட்டத்தின் (1979 இல. 8 சட்டத்தில் உட்படுத்தப்பட்ட) 39அ(1) பிரிவின் எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜுட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான் 1ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிப் பங்கை இக்கட்டளையின் மூலம் நீக்குகிறேன்.

**ஹரின் பெர்னாண்டோ**
**சுற்றுலா மறறும் காணி அமைச்சு**

**எனது இலக்கம்: 1396NH741**
**பிரதேச செயலாளரின் இலக்கம்: DST/LND/1/ACQ/16**
**2023 ஜுன் 21ம் திகதி**
**சுற்றுலா மற்றும் காணி அமைச்சு**
**மெஹிகத மெதுர**
**ரஜமல்வத்த வீதி,**
**பத்தரமுல்ல.**

**1ஆம் அட்டவணை**

தென் மாகாணத்தின் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் தங்கல்ல பிரதேச செயலகப் பிரிவில் மேற்கு கிருவாபத்துவ சிறிய பிரிவில் வகேகொட கிராம அதிகாரி பிரிவில் நலகம கிராமத்தில் அமைந்துள்ள சேர்வையர் ஜெனரலினால் தயாரிக்கப்பட்ட அ.க.பி. 290, மேலதிக இல.29 பத்திர இல. 22 மற்றும் 2013.05.08ம் திகதிய இறுதி கிராமத்தின் வரைபடத்தில் விவரமாகக் காட்டப்பட்டுள்ள கீழ்க்காணும் பெயரில் மற்றும் அளவுகளுடனான காணிப்பிரிவிற்கு எல்லையாக

துண்டு இல. 817, ரத்கொத்மலு விஹாரை எனப்படும் கிரிமது பங்கு, மினீப்பிட்டினியெமுலன, சியம்பலாகஹமுலன, ஏரபந்துகஹவத்த மல்வத்த - அளவு ஹெக். 1.1471

வடக்காக - துண்டு இல. 250 மற்றும் 268B, கிழக்காக துண்டு இல. 250 268B தெற்காக: துண்டு இல. 818, மேற்காக: துண்டு இல. 818, 250 மற்றும்268B

# கடற்றொழில் அமைச்சு
## வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்

## கொள்முதல் அறிவித்தல்

**ஒப்பந்த இலக்கம் : CFHC/PD/T/REN/DIK /2023/52**

வரையறுக்கப்பட்ட திக்கோவிட்ட மீன்பிடித் துறைமுகத்தின் (தெற்கு முனையம்) தலைமை அலுவலகக் கட்டிடத்தின் கழிப்பறை வளாகத்தை புதுப்பித்தல் மற்றும் பிரதான அலுவலகக் கட்டிடத்தின் மேல் மாடி கூரை மற்றும் கூரைப் பலகைக்கான கரையான்களை கட்டுப்பாடு செய்தல்.

**ஒப்பந்த இலக்கம் : CFHC/PD/T/SECBLDG-WTRTNK/HAM /2023/49**

வரையறுக்கப்பட்ட அம்பாந்தோட்டை மீன்பிடி துறைமுகத்தின் பாதுகாப்பு கட்டிடம் மற்றும் முன்மொழியப்பட்ட நீர்த்தொட்டி கட்டமைப்பு புனரமைத்தல்.

வரையறுக்கப்பட்ட திக்கோவிட்ட மீன்பிடித் துறைமுகத்தின் (தெற்கு முனையம்) தலைமை அலுவலகக் கட்டிடத்தின் கழிப்பறை வளாகத்தை புதுப்பித்தல் மற்றும் பிரதான அலுவலகக் கட்டிடத்தின் மேல் மாடி கூரை மற்றும் கூரைப் பலகைக்கான கரையான்களை கட்டுப்பாடு செய்தல். மற்றும் வரையறுக்கப்பட்ட அம்பாந்தோட்டை மீன்பிடி துறைமுகத்தின் பாதுகாப்பு கட்டிடம் மற்றும் முன்மொழியப்பட்ட நீர்த்தொட்டி கட்டமைப்பு புனரமைப்பதற்காக தகமையுடைய மற்றும் பொருத்தமான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

**விபரங்கள் பின்வருமாறு :**

| இல. | ஒப்பந்த இலக்கம் | மதிப்பீட்டு செலவு மற்றும் ஒப்பந்த காலம் | தேவையான தகுதிகள் | மனுப் பிணைத் தொகை | மனுக்கள் செல்லபடியாகும் காலம் | ஒப்பந்த தகுதியாளர்களுக்கு தேவையான அளவுகோல்கள் |
|---|---|---|---|---|---|---|
| 01. | CFHC/PD/T/ REN/DIK/ 2023/52 | ரூ.5.1 மில்லியன் (வட்வரி மற்றும் தற்செயலான செலவுகள் உட்பட)<br><br>ஒப்பந்த காலம் 60 காலண்டர் நாட்களாகும் | (i) CIDA பதிவு (C8, C7 மற்றும் C6) கட்டிட கட்டுமானத்திற்காக<br><br>(ii) 1987 இலக்கம் 03 ஒப்பந்த சட்டத்தின் கீழ் பொது ஒப்பந்தங்கள் பிரிவு 8 உடன் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தினால் வழங்கிய சான்றிதழ் பெற்றிருத்தல் (ஏலத்தின் மதிப்பு ரூ.மில்லியன் 05 க்கு அதிகமாயின்) | ரூ.52,000.00 மதிப்புடைய தொகையினை இலங்கையில் இயங்குகின்ற இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக் கப்பட்ட வங்கியிலிருந்து பெறவேண்டும் மேலும் தலைவர், வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம், இல-15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை, கொழும்பு 15 எனும் பெயருக்கு வழங்கப்பட வேண்டும்<br><br>வழங்கப்பட்ட படிவத்தின் படி செல்லுபடியாகும் காலம் **2024.02.15** வரையாகும் அல்லது பண வைப்பு ஏற்றுக்கொள்ளப்படும். | மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசி திகதியிலிருந்து **2024.01.18** ஆம் திகதி வரை செல்லு படியாகும். | 1. கடந்த 05 ஆண்டுகளில் (2017-2021) முடிக்கப்பட்ட கட்டுமானப் பணிகளின் (வருடாந்த வருமானம்) குறைந்தபட்சம் ரூ.4 மில்லியனாக இருத்தல்<br><br>2. திரவ சொத்துக்களின் மற்றும்/அல்லது கடன் வசதிகள் குறைந்தபட்ச ஏனைய ஒப்பந்தக் இணக்கங்கள் மற்றும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் செலுத்தக்கூடிய. ரூ. மில்லியன் 5.1 க்கும் குறையாதவாறு இருத்தல் வேண்டும்.<br><br>3. கடந்த 5 ஆண்டுகளில் (2017-2021). இதே போன்ற மற்றும் இதற்கு சமமான ரூ.4 மில்லியன் மதிப்பிலான செயற்திட்டமொன்றில் புதுப்பித்தல் நடவடிக்கை அல்லது செயல்படுத்திய அனுபவம் இருத்தல் வேண்டும். |
| 02. | CFHC/PD/T/ SECBLD- WTRTNK/ HAM 2023/49 | ரூ.1.8 மில்லியன் (வட்வரி மற்றும் தற்செயலான செலவுகள் உட்பட)<br><br>ஒப்பந்த காலம் 60 காலண்டர் நாட்களாகும் | (i) CIDA பதிவு (C9 மற்றும் C8) கட்டிட கட்டுமானத்திற்காக | ரூ.22,000.00 மதிப்புடைய தொகையினை இலங்கையில் இயங்குகின்ற இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக் கப்பட்ட வங்கியிலிருந்து பெறவேண்டும் மேலும் தலைவர், வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம், இல- 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை, கொழும்பு 15 எனும் பெயருக்கு வழங்கப்பட வேண்டும்<br><br>வழங்கப்பட்ட படிவத்தின் படி செல்லுபடியாகும் காலம் **2024.01.18** வரையாகும் அல்லது பண வைப்பு ஏற்றுக்கொள்ளப்படும். | மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசி திகதியிலிருந்து **2023.12.21** ஆம் திகதி வரை செல்லு படியாகும். | |

இதற்காக ஆர்வமுள்ள மற்றும் தகுதியான வழங்குனர்கள் /பிரதிநிதிகள் அல்லது நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்காக **2023.10.13** ஆம் திகதி முதல் **2023.11.02** ஆம் திகதி வரை வாரத்தில் வேலை நாட்களில் **மு.ப.9.00** மணி முதல் **பி.ப.3.00** மணி வரை தலைமை அலுவலகத்தில் மற்றும் திக்கோவிட்ட (தெற்கு) துறைமுகம் முகாமையாளர், ஹம்பாந்தோட்டை துறைமுகம் முகாமையாளரிடம் எழுத்து மூல விண்ணப்பத்தை கையளிப்பதன் மூலமாக அல்லது மீளச்செலுத்தப்படாத ரூ.3,500.00 கட்டணத்தை பணமாக செலுத்திய பின்னர் விண்ணப்பப்படிவத்தினை பெற்றுக்கொள்ள முடியும்.

தலைமை அலுவலகம் அல்லது திக்கோவிட்ட (தெற்கு) துறைமுகம் முகாமையாளர், ஹம்பாந்தோட்டை துறைமுகம் முகாமையாளரிடம் குறித்த ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடலாம்.

இரண்டு பிரதிகளுடன் முத்திரையிடப்பட்ட மனுக்களை **2023.11.03** ஆம் திகதி **பி.ப.2.00** மணிக்கு முன்னர் தலைமை அலுவலகத்தின் கொள்முதல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இடுதல் வேண்டும். தாமதமான மனுக்கள் நிராகரிக்கப்படும்.

**2023.11.03 அம் திகதி பி.ப.2.00** மணிக்கு கொள்முதல் பிரிவில் மனுதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் மனுக்கள் திறக்கப்படும்.

எந்தவொரு விண்ணப்பத்தையும் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்கும் அல்லது நிராகரிப்பதற்கான உரிமையை கொள்முதல் குழு கொண்டுள்ளது.

இதற்கான முன்மனுக்கூட்டம் **2023.10.24 ஆம் திகதி மு.ப.10.00** மணிக்கு தலைமை அலுவலகத்தில் இடம்பெறும். மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள 011-2529391/011-2525063 இலக்கங்களினூடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்,**
**இல- 15, ரொக் ஹவுஸ் ஒழுங்கை,**
**கொழும்பு 15.**

# சீதாவகபுர நகர சபை

## விலைமனு கோரல்

சீதாவகபுர நகர சபையின் நிர்வாகத்தின் கீழ் செயற்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ள கீழுள்ள அட்டவணையில் குறிப்பிட்டப்பட்டிருக்கும் திட்டத்தை மேற்கொள்வதற்கு நிர்மாண அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவை பெற்றிருக்கும் தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. 2023.10.13 ஆம் திகதி தொடக்கம் 2023.10.26 ஆம் திகதி வரை மு.ப. 3.00 தொடக்கம் விலைமனு படிவம் வழங்கப்படும். திட்டத்திற்காக அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விலைமனு பிணைத் தொகையில் வைப்புச் செய்துள்ள அல்லது 2023.12.15 ஆம் திகதி வரை செல்லுபடியான செயலாளர், சீதாவகபுர நகர சபை என்ற பெயருக்கு இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து வழங்கப்பட்ட செல்லுபடியான விலைமனு பிணையை சமர்ப்பித்து மற்றும் மீளளிக்கப்படாத 3000 ரூபா விலைமனு படிவ கட்டணத்தை ரொக்கப்பணமாக மாத்திரம் செலுத்தி விலைமனு படிவத்தை பெற வேண்டும்.
02. விலைமனு படிவத்தை வாங்கி விலைமனுவை சமர்ப்பிக்காத ஒப்பந்தத்தாரர்களின் விலைமனு பிணை வைப்பு மீளளிக்கப்படுவதில்லை என்பதோடு, அந்தப் பணம் சபைக்கு உரித்தாக்கப்படும்.
03. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2 பிரதிகளைக் கொண்டதாக சமர்ப்பித்தல் வேண்டும். மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என குறிப்பிட்டு வெவ்வேறாக இரு உறைகளில் இட்டு அந்த இரு உறைகளையும் ஒரு கடித உறையிலும் கடித உறைகள் மூன்றிலும் இடது பக்க மேல் மூலையில் சீதாவக நகர சபைக்கு சொந்தமான 432D துண்டு தவிர்த்து வசமுள்ள பிரியங்கர அவர்களின் வீட்டுக்குச் செல்லும் வீதியில் சரிந்துள்ள பகுதியில் உள்ள பக்கச் சுவருடன் வீதியை மேம்படுத்தல் என்று குறிப்பிட்டு முத்திரை இட்டு 2023.10.27 ஆம் திகதி மு.ப. 10.00க்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு செயலாளர், சீதாவகபுர நகர சபை, அவிசாவளை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது சீதாவகபுர நகர சபையில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதை மேற்கொள்ளல் வேண்டும்.
04. விலைமனுக்களை திறப்பது 2023.10.27 ஆம் திகதி மு.ப. 10.30க்கு சீதாவகபுர நகர சபை கேட்போர் கூடத்தில் மேற்கொள்ளப்படவிருப்பதோடு அந்த சந்தர்ப்பத்திற்கு விலைமனுக்களை சமர்ப்பித்திருக்கும் விலைமனுதாரருக்கு அல்லது அவர்தம் எழுத்துமூலம் அதிகாரத்தை பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு குறித்த கேள்விமனு குழு முன் முன்தோன்ற முடியும். கூறுவிலை முழுமை பெறாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதோடு, கேள்விமனு பிணை அரசுடைமையாக்கப்படும்.
05. பெறுகை ஏற்கப்பட்டதாக தமக்கு அறிவித்து நிர்ணயிக்கப்படும் திகதிக்கு பெறுகைப் பெறுமதியில் 5% க்கு குறையாத தொகை ஒன்றை ஒப்பந்த பிணையாக வைப்புச் செய்து அல்லது 2023.12.31 ஆம் திகதி வரை செல்லுபடியான "செயலாளர், சீதாவகபுர நகர சபை" என்ற பெயருக்கு இலங்கைக்குள் செயற்படும் வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து வழங்கப்பட்ட செயல்திறன் பிணை ஒன்றை முன்வைத்து, திட்ட வேலைகளை 2023.12.15 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்வதற்கு கீழ்பட்டு ஒப்பந்தம் ஒன்றுக்கு வருதல் வேண்டும். அவ்வாறு செய்வதற்கு தவறினால் அவர்களின் விலைமனு வைப்புப் பணம்/ விலைமனு பிணை சபை உரித்தாக்கப்படும்.
06. தகுதி பெற்ற விலைமனுதாரருக்கு ஒப்பந்தம் வழங்கப்படுவதோடு, பெறுகைக் குழுவின் முடிவு இறுதி முடிவாகும். (மேலதிக விபரங்களை 0362222285/ 0362222275 இல் கைத்தொழில் பிரிவு, பணி அதிகாரியிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்)

அட்டவணை

| வரிசை இலக்கம் | திட்டம் | நிர்மாணக் காலம் | ஒப்பந்தப் பெறுமதி (ரூபா) | விலைமனு பிணைத் தொகை/ விலைமனு உறுதி பெறுமதி (ரூபா) | CIDA பதிவு பிரிவு |
|---|---|---|---|---|---|
| 01 | சீதாவக நகர சபைக்கு சொந்தமாக 432D துண்டு தவிர்த்து வசமுள்ள பிரியங்கர அவர்களின் வீட்டுக்குச் செல்லும் வீதியில் சரிந்துள்ள பகுதியில் உள்ள பக்கச் சுவருடன் வீதியை மேம்படுத்தல் (S238152331014) | 06 வாரங்கள் | 3343574.48 VAT தவிர்த்து | ரூபா 35000.00 | C9 C8 C7 |

**கே.ஏ. சந்தன பத்மசிறி**
**செயலாளர் மற்றும் சீதாவகபுர நகர சபையின் அதிகாரம், பணி, செயற்பாட்டை செயற்படுத்தும் அதிகாரி, சீதாவகபுர நகர சபை, அவிசாவளை.**
**2023.10.10**

## அரச மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் பதவிகளுக்கு பெயர் குறிப்பிடப்பட்ட/ நியமிக்கப்பட்ட ஆட்களின் தகுதி பற்றி ஆராய்வதற்கான இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு

இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவி பற்றிய குழு பின்வரும் பதவிகள் தொடர்பாக பெயர் குறிப்பிடப்பட்டவரின் தகுதிகளை ஆராயும்: -

| இல | பெயர் மற்றும் விலாசம் | பதவி |
|---|---|---|
| 1 | திரு. வக்வெல்லே கங்கானம்கே சந்தன வீரசேன இல. 47/2, பலனகல விஹார மாவத்தை, நவயாலதென்ன, கடுகஸ்தோட்ட | பெல்ஜியம் மற்றும் ஐரோப்பிய சங்கத்திற்கான இலங்கையின் தூதுவராக பெயர் குறிப்பிடப்பட்டவர் |

மேலே பெயர் குறிப்பிடப்பட்டவர் தொடர்பில் எவரேனும் அல்லது எந்தவோர் அமைப்பும் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பினால் முறையாகக் கையொப்பமிட்டு, **“செயலாளர், உயர் பதவிகள் பற்றிய குழு, குழுப் பணியகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே”** என்ற விலாசத்திற்கு **2023 ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் இன்றேல் தொலைநகல் இல. 011-2777389 ஊடாக அல்லது **highposts_c@parliament.lk** எனும் மின்அஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்

அவ்வெழுத்துமூல கருத்துக்களுக்கு மேலதிகமாக வாய்மூல கருத்துக்களையும் முன்வைக்குமாறு குழுவினால் பணிக்கப்படலாம். இந்த விளம்பரம் பாராளுமன்ற இணையத்தளத்திலும் இடம்பெற்றுள்ளது. **(www.parliament.lk)**

**குழுச் செயலாளர்**
**பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.**

**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே.**
**2023 ஒக்டோபர் 13ஆம் திகதி**

## 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்.460) 39 அ (1) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி எடுத்துக் கொள்ளல் சட்டத்தின் 38 (ஆ) துணை விதியின் கீழ் விளம்பரப்படுத்தப்பட்டதும் 1787/17 மற்றும் 2012 டிசம்பர் 04 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியின் விளம்பரப்படுத்தப்பட்டதும், 2012 இலக்கம் 294 ஆம் கட்டளையில் விபரிக்கப்பட்டுள்ள குறித்த காணி முற்று முழுதாக சோஷலிசக் அரசுடையதாக்கப்பட்டிருந்ததோடு. குறித்த கட்டளைச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) அத்தியாயத்தின் கீழ் காணித்துண்டுகளின் உரிமை எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தன. எனினும் அச்சரத்தின் (1979 இலக்கம் 8 ஆம் சரத்தில் உட்பட்ட) 39 (அ) 1 ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்தவங்களின் கீழ் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூடி ஹரீன் பிரநான்து ஆகிய நான் குறித்த காணித் துண்டுகளில் கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணித் துண்டை மாத்திரம் இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் இரத்துச் செய்கின்றேன்.

ஹரீன் பிரநான்து
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்,

எனது குறிப்பு இலக்கம்:- 4-3/15/2012/VE/175
பிரதேச செயலகத்தின் குறிப்பு இலக்கம் : PAS/LND/ACQVI/07/F1/249C/58

2023 ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
1200/6 ”மிஹிகத மெதுர“ ரஜமல்வத்த வீதி
பத்தரமுல்ல,

**அட்டவணை 1**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் பஸ்கொட பிரதேச செயலகப் பிரிவின் மொரவக்கோறளை கிழக்கு சிறு பிரிவு, ஊருபொக்க (ஆ.கி.பட.23) கிராமத்தில் அமைந்துள்ளதும் 2018.02.20 ஆம் திகதி நிளலஅளவை அதிபர் அவர்களினால் தயாரிக்கப்பட்ட இலக்கம் MR/PSG/2017/321 படத்தில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டுகளுக்கான பெயர்கள் எல்லைகள் மற்றும் விஸ்தீரணங்கள் பின்வருமாறாகும். (மேலதிக விபரங்களுக்கு இலக்கம் 2331/14 மற்றும் 2023.05.09 ஆம் திகதிய வர்த்தமானியைப் பாரக்கவும்)

01. துண்டுக் குறியீடு B - ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய - விஸ்தீரணம் 0.0082 ஹெக்டயார
02. துண்டுக் குறியீடு E -ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய - விஸ்தீரணம் 0.0051 ஹெக்டயார்
03. துண்டுக் குறியீடு F -ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய -விஸ்தீரணம் 0.0041 ஹெக்டயார்.
04. துண்டுக் குறியீடு H ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய விஸ்தீரணம் 0.0112 ஹெக்டயார்.
05. துண்டுக் குறியீடு J - ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய - விஸ்தீரணம் 0.0082 ஹெக்டயார்.
06. துண்டுக் குறியீடு L -ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய - விஸ்தீரணம் 0.0441 ஹெக்டயார்.
07. துண்டுக் குறியீடு M - ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய - விஸ்தீரணம் 0.0089 ஹெக்டயார்.
08. துண்டுக் குறியீடு N -ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய - விஸ்தீரணம் 0.0078 ஹெக்டயார்.
09. துண்டுக் குறியீடு Q - ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய - விஸ்தீரணம் 0.0016 ஹெக்டயார்.
10. துண்டுக் குறியீடு R -ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய - விஸ்தீரணம் 0.0044 ஹெக்டயார்.
11. துண்டுக் குறியீடு V -ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய - விஸ்தீரணம் 0.0022 ஹெக்டயார்.
12. துண்டுக் குறியீடு W - ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய விஸ்தீரணம் 0.0011 ஹெக்டயார்.
13. துண்டுக் குறியீடு Z - ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய - விஸ்தீரணம் 0.0028 ஹெக்டயார்.
14. துண்டுக் குறியீடு AA -ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய - விஸ்தீரணம் 0.0070 ஹெக்டயார்
15. துண்டுக் குறியீடு AC -ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய - விஸ்தீரணம் 0.0054 ஹெக்டயார்.
16. துண்டுக் குறியீடு AD -ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய - விஸ்தீரணம் 0.0032 ஹெக்டயார்.
17. துண்டுக் குறியீடு AG -ஏதன்டவலஹேன அல்லது ஹொரகஸ்மன்டிய - விஸ்தீரணம் 0.0026 ஹெக்டயார்.

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை பால் மா வழங்கலுக்கான கேள்வி

**கேள்வி இல. Q 512/23**

பால் மா வழங்கலுக்காக 2023.11.02 அன்று மு.ப. 10 வரை பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரைபொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.

பால் மா வழங்கலுக்கு முன் அனுபவம் பெற்ற உற்பத்தியாளர்கள்/ முகவர்கள்/ இறக்குமதியாளர்கள்/ விநியோகஸ்தர்களாக விலைமனுதாரர்கள் இருத்தல் வேண்டும்.

விலைமனு ஆவணங்களை வழங்கல் அலுவலகத்தில் இருந்து சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 3.00க்கு இடையே 2023.11.01 ஆம் திகதி வரை பெற முடியும். விலைமனுதாரர்கள் ரூபா 3500.00 மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி கணக்குப் பிரிவு மூலம் வழங்கப்படும் பற்றுச்சீட்டு ஒன்றையும் எழுத்துமூல கோரிக்கை ஒன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

பொது ஒப்பந்த சட்டத்தின் பந்தி 08இன் கீழ் நிறுவனங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட பதிவின் சான்றிதழ் ஒன்றை (பிரதி ஒன்றுடன் அசல் சான்றிதழ்) கூறுவிலையுடன் சேர்த்து சமர்ப்பித்தல் வேண்டும்.

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணத்தை இரு பிரதிகளில் தொடர்புடைய “அசல்” மற்றும் “நகல்” என்று குறிப்பிட்டு இரு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறைகளில் இட்டு, அந்த இரண்டையும் ஒரு முத்திரை இடப்பட்ட கடித உறையில் இட்டு கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் “2023.11.02இல் மூடப்படும் - பால் மா வழங்கல் - Q 512/23” என்று குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுக்களை 2023.11.02 ஆம் திகதி மு.ப. 10.00 அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது பணிப்பாளரின் அலுவலகத்திற்கு அருகில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு முடியும். தாமதித்து சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது.

விலைமனுதாரர்கள் விலைமனுவுடன் சேர்த்து ரூபா 100,000.00 தொகைக்கு விலைமனு பிணை ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் கிடைக்கப்பெற்ற விலைமனுக்கள் மருத்துவமனையின் மாநாட்டு மண்டபத்தில் உடன் திறக்கப்படுவதோடு அந்த சந்தர்ப்பத்தில் பங்கேற்க விலைமனுதாரர் அல்லது அவர்தம் பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை**
**தலபத்பிட்டிய**
**நுகேகொடை.**
**தொ.: 0112778624**



## நிவித்திகல பிரதேச சபை

### 2024 ஆம் ஆண்டிற்கான சொத்துகளின் குத்தகை மற்றும் வர்த்தக உரிமைகள் (01.01.2024 முதல் 31.12.2024 வரை)

01.01.2024 முதல் 31.12.2024 வரையான ஒரு வருட காலத்திற்கு நிவித்திகல பிரதேச சபைக்கு உட்பட்ட, கீழ் காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை குத்தகைக்கு பெற 30.10.2023 திகதி காலை 10.00 மணி வரை முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

| இல. | சொத்தின் விபரம் | வருடத்திற்கான குறைந்தபட்ச ஏலம் (1 கடை) | விலைமனு வைப்புத் தொகை (ரூ.) | விலைமனுப் பத்திர கட்டணம் (ரூ.) |
|---|---|---|---|---|
| 01 | நிவித்திகல வாராந்த சந்தை மாட்டிறைச்சி கடை | 1,896,100.00 | 100,000.00 | 500.00 |
| 02 | நிவித்திகல வாராந்த சந்தை மீன் தட்டு | 441,850.00 | 100,000.00 | 500.00 |
| 03 | நிவித்திகல வாராந்த சந்தை இல. 01 கோழியிறைச்சி கடை | 300,000.00 | 50,000.00 | 500.00 |
| 04 | நிவித்திகல வாராந்த சந்தை இல. 02 கோழியிறைச்சி கடை | 62,500.00 | 50,000.00 | 500.00 |
| 05 | நிவித்திகல வாராந்த சந்தை இல. 03 கோழியிறைச்சி கடை | 71,500.00 | 50,000.00 | 500.00 |
| 06 | நிவித்திகல வாராந்த சந்தை இல. 04 கோழியிறைச்சி கடை | 63,100.00 | 50,000.00 | 500.00 |

02. மாதிரி விலைமனுபடிவங்கள் 13.10.2023 முதல் 27.10.2023 திகதி பகல் 01.00 மணிவரை வழங்கப்படும், பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுப்படிவங்கள் 30.10.2023 அன்று மு.ப. 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விலைமனுக்கள் 30.10.2023 அன்று மு.ப. 10.30 மணிக்கு திறக்கப்படும். விலைமனுதிறப்பின் போது மனுதாரர் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளில் ஒருவர் கலந்து கொள்ளலாம்.

03. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுப்படிவக் கட்டணத்தை பணமாக செலுத்தி இந்த அலுவலகத்தில் இருந்து மாதிரி விலைமனுப்படிவங்களைப் பெறலாம். முறையாக பூர்த்தி செய்யப்பட்ட மனுக்களை பதிவு தபால் மூலம் அனுப்பலாம் அல்லது குறிப்பிட்ட திகதி மற்றும் நேரம் அல்லது அதற்கு முன்னதாக இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுபெட்டியில் இடலாம்.

04. விலைமனுப்படிவங்களைப் பெறுவது பற்றிய கூடுதல் விவரங்களை இந்த அலுவலகத்தில் அல்லது 045-2279275 என்ற தொலைபேசி இலக்கம் மூலமாக வாரத்தின் வேலை நாட்களில் பெறலாம்.

05. இந்த விலைமனுத் தொடர்பான இறுதி முடிவு நிவித்திகல பிரதேச சபையையே சாரும்.

13.10.2023 அன்று
மணிக்கு
நிவித்திகல பிரதேச சபை

ஜி.ஏ. புத்திக கயான் பிரேமரத்ன
தலைவர்
விலைமனு சபை
நிவித்திகல பிரதேச சபை
நிவித்திகல

## பலாங்கொடை பிரதேச சபை

### 2024 ஆம் ஆண்டிற்கான பொருட்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களின் விளம்பரபதிவு

2024 ஆம் ஆண்டிற்கான பின்வரும் பொருட்கள் மற்றும் சேவை வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்ய 2023.12.31 ஆம் திகதி வரை பாலாங்கொடை பிரதேச சபையின் செயலாளராகிய என்னால் அழைக்கப்படுகிறது. சேவை வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் பதிவு செய்து கொள்வதற்கு பின்வரும் கட்டணங்கள் வசூலிக்கப்படும், தொடர்புடைய கட்டணத்தை செலுத்தி ஒருவருக்கு பொருட்கள் சிலவற்றின் கீழ் பதிவு செய்து கொள்ளலாம்.

| இல | வகை | பதிவு கட்டணம் |
|---|---|---|
| 01 | அலுவலக கோப்புகள், நுகர்வோர் பொருட்கள் சுகாதார பொருட்கள் | 2250.00 |
| 02 | அலுவலக இயந்திரங்கள், பிரதியிடும் இயந்திரம், நேரபதிவு இயந்திரம் அச்சிடும் இயந்திரங்கள் | 1500.00 |
| 03 | அலுவலக தளபாடங்கள் மற்றும் உலோக பொருட்கள் | 2250.00 |
| 04 | கணினி இயந்திரம், கணினி மென் பொருள் மற்றும் அச்சிடும் மை, டோனர், கார்ட்ரிட்ஜ், ரிப்பன். | 2250.00 |
| 05 | தொழில்துறை பொருட்கள் (சீமந்து, இரும்பு, பெயிண்ட், ஓடுகள், போன்றவை. | 2250.00 |
| 06 | கட்டுமான பொருட்கள் (கல், கருங்கல், மணல், செடலின் போன்றவை. | 2250.00 |
| 07 | ரப்பர் சீல், திகதி சீல், கோப்பை, பிளாஸ்டிக் /கண்ணாடி பெயர்ப் பலகைகள் | 1125.00 |
| 08. | ஆவணங்கள் மற்றும் பில்கள், அச்சிடும் பொருள், பெற்று கொள்ளல் மற்றும் அச்சிடுதல் | 2250.00 |
| 09. | டிஜிடல் பெனர், அச்சிடுதல மற்றும் ஸ்டிக்கர் அச்சிடுதல் | 2250.00 |
| 10. | துணி அல்லது தட்டுகளில் எழுத்துக்கள் அல்லது ஓவியங்களை உருவாக்குதல் (மின் சாதனங்களும்) | 1125.00 |
| 11. | மின் மற்றும் மின் உபகரணங்கள் மின்குமிழ்கள் உட்பட அனைத்து (மின் சாதனங்களும்) | 2250.00 |
| 12. | நூலகப் புத்தகங்கள் | 1125.00 |
| 13. | தகன நிலையத்தை பழுதுபார்த்தல் மற்றும் சேவை செய்தல் | 1125.00 |
| 14. | டயர், டியுப், பேட்டரி, தொடர்புடைய சேவைகள் | 2250.00 |
| 15. | மொழிபெயர்ப்புச் சேவைகள் | 1125.00 |
| 16. | மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் (டிராக்டர், ஜே.சி.பி., கப், பவுசர்) | 2250.00 |
| 17. | மோட்டார் வாகனம் பழுதுபார்த்தல் மற்றும் நிறப் பூச்சு | 1125.00 |
| 18. | வாகன சேவைகள் | 1125.00 |
| 19. | அலுவலக இயந்திரங்கள் பழுதுபார்த்தல் மற்றும் சேவைகள் (தொலைநகல், கணினிகள், பிரதியிடும் இயந்திரம்) | 2250.00 |
| 20. | ஆபத்தான மரங்கள், அலுவலக நோக்கங்களுக்காக வெட்டுதல், துண்டாக்குதல் | 1125.00 |
| 21. | மேலே குறிப்பிடப்படாத பிறபொருட்களைக் குறிப்பிடுங்கள் | 1500.00 |
| | கட்டுமான ஒப்பந்தங்கள் | |
| 22. | ரூபா 500,000.00 க்கு குறைவான ஒப்பந்தங்கள் | 1500.00 |
| 23. | ரூபா 500,001.00 இருந்து ரூபா 1,000,000.00 வரையான ஒப்பந்தங்கள் | 2250.00 |
| 24. | ரூபா 1,000,001.00 இருந்து ரூபா 2,000,000.00 வரையான ஒப்பந்தங்கள் | 3000.00 |
| 25. | ரூபா 2,000,001.00 க்கு மேலான ஒப்பந்தங்கள் | 3750.00 |
| 26. | அதிகாரத்திற்குட்பட்ட சங்கங்கள் மாத்திரம் பதிவுக்கு | 1500.00 |

**நிபந்தனைகள்**

1. சேவை வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களாக பதிவுசெய்ய விரும்பும் விண்ணப்பதாரர்கள் அலுவலகத்தின் வலைத்தளத்தில் உள்ள மாதிரி விண்ணப்பபடிவம் அல்லது இதேபோல் தயாரிக்கப்பட்ட விண்ணப்பபடிவத்தை 2023.12.31 அதற்கு முன் செயலாளர் பலாங்கொடை பிரதேச சபை எனும் விலாசத்திற்கு பதிவு அஞ்சல் / அஞ்சல் மூலமாகவோ அல்லது கையிலோ, சமர்ப்பிக்க வேண்டும்.
2. பதிவுக் கட்டணமாக ஒவ்வொரு பொருளுக்கும் குறிப்பிட்டுள்ள தொகை செலுத்தப்பட வேண்டும்.
3. இந்த கொடுப்பனவுகளை தலைவர் பலாங்கொடை பிரதேச சபை பெயரில் காசோலை அல்லது பண ஆணை மூலம் 2023.12.31ம் திகதிக்கு முன் பலாங்கொடை பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும்.
4. விண்ணப்பப் படிவத்தின் உறையில் வலது பக்கத்தில் மேலே 2024 ஆம் ஆண்டிற்கான சேவை வழங்குநர் மற்றும் ஒப்பந்தக்காரர் பதிவு செய்தல் என குறிப்பிடப்பட வேண்டும்.
5. ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல் கட்டிட பயிற்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தில் ICTAD பதிவு செய்த சான்றிதழ் அல்லது அரசாங்க சட்டரீதியான வாரியங்களில் பதிவு செய்யப்பட்ட வெற்றிகரமான ஒப்பந்தக்காரர்கள் மாத்திரம். பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வெளிப்புற வேலைகளுக்கு டெண்டர்களை அழைக்கும் உரிமை சபைக்கு உண்டு.
6. பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் சபையின் தேவைக்கேற்ப விலைப்பட்டியல் அழைக்கப்படும் மற்றும் தேவைக்கேற்ப, பொருட்கள் மற்றும் சேவைகள் வெளிப்புறமாக பெற்றுக்கொள்ளும் உரிமை சபைக்கு உண்டு.
7. மேலதிக விபரங்கள் அலுவலக நேரங்களில் 045 2287276 88 ஐ அழைப்பதன் மூலமும் விண்ணப்பப்படிவத்தை www.balangoda.ps.gov.lk அலுவலகத்தின் வலைத்தளத்தைப் பார்வையிடுவதன் மூலமும் அல்லது அலுவலகத்திற்கு வந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

**2023.10.13ஆம் திகதி**
**பலாங்கொடை பிரதேச சபையில்**
**டி.எஸ். வதுகாரவத்த**
**செயலாளரும் அதிகாரங்களை செயற்படுத்தும் அதிகாரியும்**
**பலாங்கொடை பிரதேச சபை**

## ஏறாவூர் அலுவலகங்களில் காகித பயன்பாட்டை குறைக்க விசேட திட்டம்



*ஏறாவூர் சுழற்சி நிருபர்*

நாளாந்த அலுவலக நடவடிக்கைகளின் போது காகிதப் பயன்பாட்டை குறைத்து நவீன தொழில் நுட்பரீதியிலான மாற்று வழிகளை கையாளுதல் தொடர்பிலான செயலமர்வு ஏறாவூர் நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை (10) நகரசபையின் சபா மண்டபத்தில் ஏறாவூர் நகரசபை செயலாளரும் விஷேட ஆணையாளருமான எம்.எச்.எம். ஹமீம் தலைமையில் நடைபெற்றது.

இச்செயலமர்வில் ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் திருமதி நிஹாறா மௌஜுத், கணக்காளர் திருமதி புஷ்ரா நுஸைர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஹாறுன் ஆகியோர் கலந்து கொண்டதுடன் பிரதேச செயலக மற்றும் நகர சபை உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

ஆசிய மன்றத்தின் செயற்றிட்ட அதிகாரி ஏ. ஜெயரூபன் பிரதம வளவாளராக கலந்து கொண்டு நவீன யுகத்தில் வளர்ந்து வருகின்ற தொழில்நுட்ப வளர்ச்சிக்கு மத்தியில் நாம் அன்றாட அலுவலக நடவடிக்கைகளின் போது காகிதப் பயன்பாட்டை குறைப்பது பற்றியும் எதிர்காலத்தில் தொழில்நுட்ப அறிவினை பயன்படுத்தி அலுவலக நடவடிக்கைகளை விரைவாகவும் மற்றும் செம்மையாகவும் மேற்கொள்வது பற்றியும் விளக்கமளிக்கப்பட்டது.

## விசேட தேவையுடைய பாடசாலையின் நாற்பெரும் விழா

*புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்*

கிழக்கிலங்கை இஸ்லாமிய வலது குறைந்தோர் நலன்புரி அமைப்பின் கீழ் இயங்கி வரும் காத்தான்குடி ஸாஹிறா விசேட தேவையுடைய பாடசாலையின் நாற்பெரும் விழா நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காத்தான்குடி மத்திய கல்லூரி பரீட் மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் திருமதி. றிஸ்வானா ஜவாஹிர் ஹுசைன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மீலாதுந்நபி விழா, சர்வதேச சிறுவர் தினம், ஆசிரியர் தினம் மற்றும் உளநல தினம் ஆகிய நிகழ்வுகள் ஒன்றிணைந்து கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக காத்தான்குடி பிரதேச செயலாளர் யூ. உதயஸ்ரீதர், மட்டக்களப்பு மத்தி வலய கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.எஸ். அமீர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். இதன்போது ஸாஹிறா விசேட பாடசாலையில் கல்வி பயிலும் விசேட தேவையுடைய மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டதுடன், கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு கௌரவம் வழங்கப்பட்டு மாணவர்களுக்கு சிறுவர் தினப் பரிசில்களும் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் காத்தான்குடி கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜீ.எம். ஹக்கீம், கிழக்கிலங்கை இஸ்லாமிய வலது குறைந்தோர் நலன்புரி அமைப்பின் தலைவர். மௌலவி எஸ்.எம்.எம். முஸ்தபா, நலன்புரி அமைப்பின் இயக்குனர் சபை உறுப்பினர்கள், கல்வி அதிகாரிகள், உலமாக்கள், ஊர் பிரமுகர்கள், பெற்றோர்கள், மாணவர்களென பலரும் கலந்து கொண்டனர்.

## முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி பிரிவின் பணிப்பாளராக நௌபீஸ் நியமனம்

*தம்பலகாமம் குறூப் நிருபர்*

கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி பிரிவின் புதிய பணிப்பாளராக என். எம்.நௌபீஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.குறித்த நியமனக் கடிதத்தை மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க நேற்று (12) திருகோணமலையிலுள்ள மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில் வைத்து வழங்கி வைத்தார். இலங்கை நிருவாக சேவை அதிகாரியான இவர் முன்னாள் மாகாண விளையாட்டு பணிப்பாளர்,கிண்ணியா ஏறாவூர் நகர சபைகளின் செயலாளராகவும்,சிறுகைத்தொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர்,மாகாண விவசாய அமைச்சின் உதவிச் செயலாளர் ஆகிய பதவிகளில் முன்னர் திறம்பட கடமையாற்றியுள்ளதுடன் பொதுத் துறை நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டம் பெற்றுள்ளதுடன் சட்ட இளமாணி கற்கையினையும் தற்போது பயின்று வருகிறார். மட்டக்களப்பு ஏறாவூரைச் சேர்ந்த இவர் அரச திணைக்களங்களின் உயர் பதவிகளில் தனது நிர்வாக சேவைகளை திறம்பட செய்துள்ளார்.

## ஹெரோயினுடன் ஒருவர் கைது

*பாலமுனை தினகரன் நிருபர்*

ஹெரோயினுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபரொருவரை எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா உத்தரவிட்டுள்ளார். அக்கரைப்பற்று பிரதேசத்தில் 18 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் ஹெரோயின் வைத்திருந்தமை தொடர்பாக அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து அப்பிரதேசத்திற்கு சென்ற பொலிஸார் சந்தேகநபரை கைது செய்து நேற்று வியாழக்கிழமை (12) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே சந்தேகநபருக்கு விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
## இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்
# பதவி வெற்றிடங்கள்

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திலுள்ள பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமை வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி** - **உதவி அத்தியட்சகர்கள் (Assistant Superintendents)**

**தகைமைகள்** -

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விவசாயம் / பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் ஒரு இளமாணிப் பட்டம் அல்லது பதவியுடன் தொடர்புடைய பாடப்பரப்பில் வேறு ஏதாவது ஒரு பட்டம்
   **அல்லது**
2. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் / தொழில்நுட்பம் / தொழிற்கல்வி பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேயிலைப் பெருந்தோட்டத் துறையில் தேசிய தொழிற்றிறனில் 6ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.
   **அத்துடன்**
   கூட்டுத்தாபனம், சபை, பிராந்திய பெருந்தோட்ட நிறுவனம், அல்லது கீர்த்தி வாய்ந்த தனியார் நிறுவனத்தில் இயைபுடைய துறையில் குறைந்தபட்சம் ஐந்து (5) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.
   **அல்லது**
3. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம் / தொழில்நுட்பம் / தொழிற்கல்வி பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படும் தேயிலைப் பெருந்தோட்டத் துறையில் தேசிய தொழிற்றிறனில் 5ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.
   **அத்துடன்**
   கூட்டுத்தாபனம், சபை, பிராந்திய பெருந்தோட்ட நிறுவனம், அல்லது கீர்த்தி வாய்ந்த தனியார் நிறுவனத்தில் இயைபுடைய துறையில் குறைந்தபட்சம் பத்து (10) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**மேலதிக நன்மைகள்** - உள்ளக மற்றும் வெளியக மருத்துவக் காப்புறுதித் திட்டத்தின் கீழான வசதிகள், ஊழியர் சேமலாப நிதியம் அல்லது இலங்கை தோட்டத்துறையாளர்களின் சேமலாபச் சங்கத்திற்கு உங்கள் சம்பளத்தின் 10% தொகையை பங்களிப்புச் செய்தல் வேண்டும் என்பதுடன் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் உங்கள் சம்பளத்தின் 12% ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் மற்றும் 3% ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புச் செய்யும்.

மேற்பார்வை செய்வதற்கு ஒரு மோட்டார் சைக்கிள் அல்லது ஒரு கொடுப்பனவு மற்றும் எரிபொருள் ஒதுக்கீடு வழங்கப்படும்.

உள்வாரி மற்றும் வெளிவாரி தொழிலாளர் கொடுப்பனவு உள்ள தளபாடமிடப்பட்ட ஒரு பங்களா வழங்கப்படும்.

**சம்பள அளவு** - முகாமைத்துவச் சேவையின் 02/2016ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரமான சம்பள அளவு JM 1-1 - 2016 [42.600- l0 x 755- 18 x 1,135- 70,580] ரூபா மேற்படி பதவிக்கு உரித்தாகும்.

**வயது** - 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு நடைமுறை** - நியமன அதிகாரியினால் நியமிக்கப்பட்ட நியமனக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வின் பெறுபேறுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

**கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வு**

| | |
|---|---|
| இயைபுடைய மேலதிக அனுபவம் | - 30 புள்ளிகள் |
| இயைபுடைய மேலதிக கல்வி / தொழில்சார் தகைமைகள் | - 30 புள்ளிகள் |
| ஏனைய சாதனைகள் | - 15 புள்ளிகள் |
| நேர்முகத் தேர்வில் காட்டும் செயற்றிறன் | - 25 புள்ளிகள் |
| | - **100 புள்ளிகள்** |

**ஏனையவை** - இந்த வகையிலான அனைத்து ஆட்சேர்ப்புகளுக்கும் இந்த ஆட்சேர்ப்புத் திட்டத்தின் இணக்கம் கண்டிப்பாக இருக்கும்.

சகல விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.

நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் பதவிக்கான கடமைகளை மேற்கொள்வதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பங்கள்** - விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களுடன் பிறப்பாத்தாட்சிப்பத்திரம், கல்விச் சான்றிதழ்கள் மற்றும் அனுபவச் சான்றிதழ்களின் பிரதிகள் உள்ள சகல விபரங்களுடன் விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். முடிவுறுத்தல் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அரசாங்கம் / கூட்டுத்தாபனம் / நியதிகள் சபை என்பவற்றில் சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை அவர்களின் திணைக்களத் தலைமையின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

**விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள்** - 2023 ஒக்டோபர் 27ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**இல. 157, ஸ்ரீ தம்ம மாவத்தை, கொழும்பு-10.**

2023.10.10

# பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
## இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்
# வெற்றிடங்கள்

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திலுள்ள பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமை வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி** - **முகாமையாளர் (நிர்வாகம் / மனிதவளம்) 01 பதவி**
**Manager (Administration/HR)**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனித வளம்/ வியாபார நிர்வாகம்/ பொது நிர்வாகம்/ வியாபாரக் கல்வி/ முகாமைத்துவம்/ வர்த்தகம்/ பொது முகாமைத்துவம் என்பவற்றில் ஒரு இளமாணிப் பட்டம்

**மற்றும்**

ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் பதவி தொடர்பான துறையில் ஆகக்குறைந்தது ஒரு வருட கால தகைமைக்குப் பின்னரான அனுபவம்

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைத் தேவைப்பாடுகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.
2. இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தில் தொடர்புடைய பதவி விடயப்பரப்பில் கனிஷ்ட முகாமையாளர் பதவியில் (JM வகுதி) குறைந்தபட்சம் 05 வருட காலம் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு** - முகாமைத்துவச் சேவையின் 02/2016ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரமான சம்பள அளவு MM 1-1 - 2016 ரூபா [53,175 - 10x1,375 - 15x1,910 - 95,575] மேற்படி பதவிக்கு உரித்தாகும்.

**வயது** - 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**மேலதிக நன்மைகள்** - உள்ளக மற்றும் வெளியக மருத்துவக் காப்புறுதித் திட்டத்தின் கீழான வசதிகள், ஊழியர் சேமலாப நிதியம் அல்லது இலங்கை தோட்டத்துறையாளர்களின் சேமலாபச் சங்கத்திற்கு உங்கள் சம்பளத்தின் 10மூ தொகையை பங்களிப்புச் செய்தல் வேண்டும் என்பதுடன் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் உங்கள் சம்பளத்தின் 12மூ ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் மற்றும் 3மூ ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புச் செய்யும்.

**ஆட்சேர்ப்பு நடைமுறை** - நியமன அதிகாரியினால் நியமிக்கப்பட்ட நியமனக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வின் பெறுபேறுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

**கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு -**

| | |
|---|---|
| இயைபுடைய மேலதிக அனுபவம் | - 30 புள்ளிகள் |
| இயைபுடைய மேலதிக தகைமைகள் | - 30 புள்ளிகள் |
| ஏனைய சாதனைகள் | - 15 புள்ளிகள் |
| நேர்முகத் தேர்வில் காட்டும் செயற்றிறன் | - 25 புள்ளிகள் |
| | - **100 புள்ளிகள்** |

**ஏனையவை** - இந்த வகையிலான அனைத்து ஆட்சேர்ப்புகளுக்கும் இந்த ஆட்சேர்ப்புத் திட்டத்தின் இணக்கம் கண்டிப்பாக இருக்கும்.

சகல விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.

நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் பதவிக்கான கடமைகளை மேற்கொள்வதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பங்கள்** - விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களுடன் பிறப்பாத்தாட்சிப் பத்திரம், கல்விச் சான்றிதழ்கள் மற்றும் அனுபவச் சான்றிதழ்களின் பிரதிகள் சகிதம் சகல விபரங்களுடன் விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். முடிவுறுத்தல் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அரசாங்கம் / கூட்டுத்தாபனம் / நியதிகள் சபை என்பவற்றில் சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை அவர்களின் திணைக்களத் தலைமையின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

**விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள்** - 2023 ஒக்டோபர் 27ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**இல. 257, ஸ்ரீ தம்ம மாவத்தை,**
**கொழும்பு-10.**

2023.10.09

**Salesman /Cashier**
**விற்பனையாளர் - காசாளர்**
**உடனடி வேலைவாய்ப்பு**

Bairaha உற்பத்திகளை விற்பனை செய்யும் Kwality Meat Mart நிறுவனத்தின் கொழும்பில் அமைந்துள்ள எங்கள் விற்பனை நிலையத்திற்கு Salesman/ Cashier தேவைப்படுகின்றனர். சம்பளம் - 35000/-க்கு மேல் (OT மற்றும் Sales Incentive) கொழும்பு மாவட்டத்துக்குள் உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது, வயது 18 - 60 வரை அனுபவமுள்ளவர்கள் / அனுபவமற்றவர்களும் உங்கள் விபரங்களை Email செய்யவும்

E-mail :-
**kwalitymeatmart@gmail.com**
அல்லது தொடர்பு கொள்ளவும்.
**077 23 66 188**

## 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)
### 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது குறிப்பு இல.:DSO/HOM/LAC/23(II)

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**
மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில், ஹோமாகம கிராமத்தில், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட, 2022.11.06 ஆம் திகதிய மற்றும் 520037- 07-13 ஆம் இலக்க கடத்திரள் வரைபடத்தில் துண்டு இல 513 என காட்டப்பட்டுள்ள 0.0182 ஹெக்டயார் விஸ்தீரணத்தை உடைய பின்வரும் காணி:

01. துண்டு இல 513
    காணியின் பெயர் : ரதாவலதெனிய
    விபரம் : திறந்த தரிசு நிலம்
    உரிமை கோருவோர் : அரசு
    ஆரம்ப உரிமை கோருவோர் : வரையறுக்கப்பட்ட மொஸ்கவ் லங்கா ஸ்டீல் (தனியார்)கம்பனி
    விஸ்தீரணம் : 0.018 ஹெக்டயார்

மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் வருட ஆகஸ்ட் மாதம்........... ஆம் திகதி மு.ப 09.30 மணிக்கு ஹோமாகம பிரதேச செயலகத்தில் என் முன் தோன்றும் படியும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் ஆகஸ்ட் மாதம் .................ஆம் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**பி.ஏ.டி.சிந்தக்க,**
**பிரதேச செயலாளர்,**
**ஹோமாகம்.**

**2023.12.12 ஆம் திகதிய,**
**ஹோமாகம பிரதேச செயலகம்.**

# போதனா வைத்தியசாலை – இரத்தினபுரி
## விலைமனுக்களுக்கான அழைப்பு

பின்வரும் பெறுகைக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து இரத்தினபுரி - போதனா வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| விலைமனு இல. | உருப்படி/ விபரம் | அளவு | ஆவணம் ஒன்றுக்கு மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | விலைமனு பிணையின் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|
| THR / E15 / 12 / 2023 | Purchasing 01 No. of UVA + UVB Adult Phototherapy Machine | 01 | 2,500.00 | 100,000.00 |
| THR / E15 / 13 / 2023 | Purchasing 01 No. of Pure Tone Audiometer | 01 | 2,500.00 | 50,000.00 |
| THR / E15 / 14 / 2023 | Purchasing 01 No. of Tympanometer | 01 | 2,500.00 | 50,000.00 |

கேள்விமனு ஆவணங்கள் 2023 நவம்பர் 13 ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.00 வரை வேலை நாட்களில் (பொது விடுமுறைகள் தவிர்த்து திங்கள் தொடக்கம் வெள்ளி வரை) வழங்கப்படும் என்பதோடு கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் முகவரியில் அதனை பெற முடியும்.

உங்களால் எந்த எண்ணிக்கையான விலைமனுக்களை சமர்ப்பிக்கலாம் என்றபோதும், ஒவ்வொரு கூறுவிலையும் வெவ்வேறு கேள்விமனு விண்ணப்பமாக இருத்தல் வேண்டும்.

முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விமனுக்களை கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இட வேண்டும்.

விலைமனுக்களை சமர்ப்பிக்கும் ஆவணங்களை இரத்தினபுரி, போதனா வைத்தியசாலையில் இருந்து பெறப்பாடாதிருத்தல் மற்றும் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தியதற்காக பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டு இன்றி சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

கேள்விமனுக்களை ஏற்பது 2023 நவம்பர் 15 ஆம் திகதி மு.ப. 10.30க்கு நிறைவடைவதோடு அதன் பின் கிடைக்கப்பெறும் எந்த ஒரு கேள்விமனுவும் இரத்துச் செய்யப்படும். கேள்விமனுக்களை சமர்ப்பிக்கும் நேரத்தில் விலைமனுதாரர் அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் பங்கேற்க அனுமதிக்கப்படுவர். (கேள்விமனு திறக்கப்படும்போது கைபேசிகள் கண்டிப்பாக தடை செய்யப்படும்)

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பின்வருமாறு குறிப்பிட நீங்கள் அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

"(கேள்விமனு பெயர்) இற்கான கேள்விமனு - (விலைமனு இல.)"

உதா: "01 Tympanometer இற்கான கேள்விமனு - THR / E15 / 14 / 2023 "

எந்த ஒரு காரணமும் கூறாது கேள்விமனுக்களின் எந்த ஒரு பகுதியையும் நிராகரிப்பது அல்லது ஏற்கும் உரிமை பிராந்திய பெறுகைக் குழு வசமானது.

தேவையற்ற தாமதங்களை தடுப்பதற்கு விலைமனு ஆவணங்களை பெறுவதற்கு முன் 045 2222261 நீடிப்பு 263 இற்கு தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**இரத்தினபுரி.**

# கேள்விக்கான அழைப்பு (IFB)
## கட்டிடப்பொருட்கள் மற்றும் உபகரணங்களை வழங்குதல் – 2023
## மத்திய மாகாண கல்வித் திணைக்களம்

மாத்தளை மாவட்டத்தின் தம்புள்ள ஆரம்பக் கல்லூரி பழுதுபார்த்தலுக்காக கட்டிடப்பொருட்கள் மற்றும் உபகரணங்களை வழங்குதல் சார்பாக மத்திய மாகாண கல்வித் திணைக்கள பெறுகைக்குழுவினால் கீழ்க்காணும் கேள்வி இல CP/EDU/DUP/2023/01 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பெக்கேஜ்களில் பல்வேறு உருப்படிகளுக்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| கேள்வி இலக்கம் | பெக்கேஜ் இல | விபரம் | கேள்விப் பிணையின் பெறுமதி (ரூ.) |
|---|---|---|---|
| CP/EDU/DUP/2023/01 தம்புள்ள வி.ச | 1. மேசன் உருப்படிகள் | சீமெந்து, ஆற்றுமணல், உலோகம், பிளெய்வூட் சீட், கம்பி ஆணி போன்றன. | 250,000.00 |
| | 2. பெயின்ட் உருப்படிகள் | வோல்பிலர், தீந்தை, எனமல் தீந்தை, தீந்தை பிரஷ், மணல் கடதாசி போன்றன | 475,000.00 |
| | 3. பலகை உருப்படிகள் | கெம்பஸ்பலகை, கினிசப்பு மற்றும் மஹோகனி பலகை போன்றன | 200,000.00 |
| | 4. ஹாட்வெயார் உருப்படிகள் | எஸ்பெஸ்டஸ் சீட், கென்வஸ் மணல் கடதாசி, ஆணி போன்றன | 185,000.00 |
| | 5. வெல்டிங் உருப்படிகள் | வெட்டு சக்கரம், கிரைண்டிங் வீல், பைண்டிங் வயர், GI, பைப் போன்றன | 70,000.00 |
| | 6. மின்சார உருப்படிகள் | வயர், மின்விசிறி, LED மின்விளக்கு ஹோல்டர், சுவிச், பெனல்பொட் போன்றன | 650,000.00 |
| | 7. நீர்க்குழாய் உருப்படிகள் | PVC பைப், எல்போ, சொக்கட், போல் சொக்ம, நீப்கராம், வோல்பிளக் போன்றன | 130,000.00 |

02. தேசிய போட்டி கேள்வி கோரல் முறையில் நடைபெறும்.
03. மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் கேள்வி ஆவணங்களை பரீட்சித்தல் - 2023.10.16 முதல் 2023.10.26 வரை அலுவலக நேரங்களில் இடம்பெறும்.
04. மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் கேள்வி ஆவணங்கள் மூலம் கேள்விகளை சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் ஒவ்வொரு கேள்விக்கும் மீளளிக்கப்படாத ரூ.2000.00 வீதமான கேள்வி ஆவணக் கட்டணத்தை காசாளரிடம் காசு செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்ததன்பின் கேள்வி ஆவணங்களை திணைக்கள கணக்காளரிடம் 2023.10.16 முதல் 2023.10.26ம் திகதி வரை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். (முழுமையான உருப்படி பட்டியல் கேள்வி ஆவணங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது)
05. முறையாக பூர்த்தி செய்து பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் நகல்பிரதியுடன் 2023.10.27 பி.ப.2.00 இற்கு முன் கிடைக்குமாறு "தலைவர், பெறுகைக்குழு, மத்திய மாகாண கல்வித் திணைக்களம், கண்டி" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து திணைக்களத்தின் கணக்குப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கட்டிடப்பொருட்கள் மற்றும் உபகரணங்களை வழங்குவதற்கான விலைமனுக்கள் என்று மற்றும் கேள்வி இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
06. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரத்துடன் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படுமாறு 2023.12.31 வரை செல்லுபடியாகும் கேள்விப்பிணையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும் அத்துடன் அதனை இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட கேள்விப் பிணையாக இருத்தல் வேண்டும்.
07. இது பற்றிய பெறுகைக்குழு முன்னரான கூட்டம் 2023.10.19 மு.ப.10.00 இற்கு மத்திய மாகாண கல்வித்திணைக்களத்தில் நடைபெறுவதுடன் அதற்காக கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
08. கேள்விகள் திறத்தல் 2023.10.27 பி.ப.2.00 இற்கு மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தில் நடைபெறுவதுடன் அதற்காக கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமூகமளிக்கலாம்.
09. சமர்ப்பிக்கப்படுகின்ற கேள்விகளை முழுமையாக ஏற்றுக்கொள்ளல் அல்லது ஒருபகுதியை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை திணைக்கள பெறுகைக்குழுவிற்கு உரியது. மேற்படி விடயங்களுக்கு அப்பால் சமர்ப்பிக்கப்படுகின்ற **கேள்விகள் நிபந்தனையின்றி நிராகரிக்கப்படும்.**

**எம்.ஜீ.அமரசிரி பியதாச**
**தலைவர், பெறுகைக்குழு,**
**மத்திய மாகாண கல்வித் திணைக்களம்,**
**கண்டி**

**தொலைபேசி இலக்கம் : 081-2224041**
**திகதி : 2023.10.13**

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want
Classified
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch Acc. No. 000000377
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk

Daily News Classifieds, the Housewives' companion

# மாகோ பிரதேச சபை

## வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் 2024

01. மாகோ பிரதேச சபைக்கு 2024ஆம் வருடத்தில் கீழ்க்காணும் பொருட்கள் மற்றும் சேவைகள் பெற்றுக் கொள்வதற்காக பதிவு செய்து கொள்ள விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள், உற்பத்தியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
02. விண்ணப்பப் படிவங்களை 2023.10.20ஆம் திகதி வரை கோரப்படுகின்றன என்பதுடன் உங்களால் தயாரித்துக்கொண்ட விண்ணப்பங்கள் சகிதம் உங்களின் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றையும் வெட் வரிக்காக பதிவு செய்துகொண்டிருந்தால் அதன் பிரதியொன்றையும் இணைத்து அனுப்புதல் வேண்டும். மேலும் ஒப்பந்தக்காரர்கள் சீடா நிறுவனப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றையும் இணைத்து அனுப்புதல் வேண்டும். மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் இந்த அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இலக்கம் 0372275275)
03. அனைத்து விண்ணப்பப்படிவங்களுக்கும் பதிவுக் கட்டணமாக 1000.00 ரூபா அறவிடப்படும். தபாலில் அல்லது கூரியர் சேவை மூலம் அனுப்பப்படும் விண்ணப்பப் படிவங்களுக்கு காசோலை மற்றும் காசுக்கட்டளை மூலம் கொடுப்பனவுகளைச் செய்யலாம்.

**வழங்கல்கள், சேவைகள்:**

1. மின்சார உபகரணங்கள் மற்றும் வீதி விளக்குகள் வழங்குதல்
2. அலுவலக காகிதாதிகள் வழங்குதல்
3. வாகன உதிரிப்பாகங்கள் வழங்குதல்
4. டயர் / டியூப் / பெட்டறிகள் வழங்குதல்
5. கணனி மற்றும் புகைப்படப் பிரதி இயந்திரங்களுக்கான டோனர்/ கார்ட்ரிச்/ ரிபன் வழங்குதல்
6. கட்டிடப் பொருட்கள் / நிர்மாண மூலப் பொருட்கள் / கனரகப் பொருட்கள் / தரைக்குப் பதிக்கும் கற்கள் வழங்குதல்
7. சீருடைகள் / திரைச்சீலைகள் / டென்ட் / கம்பூட்ஸ் / கையுறைகள் / கைத்தொழில் பாதுகாப்பு துணைப்பாகங்கள் வழங்குதல்
8. டிஜிட்டல் அச்சு வேலைகள் / ஸ்டிக்கர் / பெயர்ப் பலகைகள் மற்றும் அச்சு வேலைகளை மேற்கொள்ளல்
9. கொங்கிறீட் உற்பத்திகளை வழங்குதல்
10. அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் வழங்குதல்
11. தார் மற்றும் தார் சார்ந்த உற்பத்திகளை வழங்குதல்
12. அலுமினியம் / கண்ணாடி வேலைகளை மேற்கொள்ளல்
13. சிறுவர் பூங்கா / விளையாட்டு பொருட்கள் மற்றும் உடற்பயிற்சி உபகரணங்கள்
14. உணவு, பானம், உற்சவ மண்டப வசதிகள் மற்றும் அறை வசதிகள்
15. தகனச்சாலைக்கு எரிவாயு வழங்குதல்
16. நீர் வடிகட்டிக்குத் தேவையான உபகரணங்களை வழங்குதல் மற்றும் திருத்தவேலைகள்
17. அலுவலக சுகாதார மற்றும் துப்புரவேற்பாட்டு உபகரணங்களை வழங்குதல்

**சேவைகள்**

1. கணனி/ தொலைநகல்/ அச்சுப்பொறி வழங்குதல், உதிரிப்பாகங்கள் வழங்குதல், திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ்களை மேற்கொள்ளல்
2. வாகன தவணை சேர்விஸ்களை மேற்கொள்ளல்
3. வாகன / இயந்திராதிகளின் திருத்தவேலைகள்
4. CCTV கமரா முறைமை, உள்ளக தொலைபேசி முறைமைகள் மற்றும் கணனி வலையமைப்பு முறைமை திருத்தவேலைகள்

**ஒப்பந்தக்காரர்கள்**

1. சகல நிர்மாணங்களுக்கான ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

**செயலாளர்,**
**மாகோ பிரதேச சபை.**

# வன சீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு

## வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**யால தேசிய வனம் - படனன்கல வருகையாளர் நிலையத்தில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு வருகையாளர்களுக்கான உயர் தரத்திலான சிற்றுண்டிச்சாலை சேவைகளை வழங்குவதற்கான பெறுகை**

**கீழ் விபரிக்கப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கான பொருத்தமான மற்றும் தகுதியுடைய சிற்றுண்டிச்சாலை/ சிற்றுண்டிச்சாலை சேவை நிறுவனங்களிடம் இருந்து வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் திணைக்கள பெறுகைக் குழு (DPC), தலைவரினால் தொழில்நுட்ப மற்றும் நிதி முன்மொழிவுகள் தற்போது கோரப்படுகின்றன.**

| ஒப்பந்த இல. | ஆலோசனை ஒப்பந்தப் பெயர் மற்றும் இடம் | மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் | விலைமனு பிணை |
|---|---|---|---|
| WI/2/18/80 | யால தேசிய வனம் - படனன்கல வருகையாளர் நிலையத்தில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு வருகையாளர்களுக்கான உயர் தரத்திலான சிற்றுண்டிச்சாலை சேவைகளை (ஐந்து நட்சத்திரம் அல்லது அதற்கு இணையானது) வழங்குவதற்கான பெறுகை | 2,000.00 இ.ரூபா | 100,000.00 இ.ரூபா (நூறாயிரம்) |

02. வேலை நோக்கம்
தேர்வு செய்யப்படும் சிற்றுண்டிச்சாலை சேவையானது யால தேசிய வனத்திற்கு வருகை தரும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டினருக்கு உணவு வழங்கல், வனம் மற்றும் வன சீவராசிகள் பாதுகாப்பு சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு கீழ்ப்பட்டு (1932 இன் 2ஆம் இலக்க விலங்கு மற்றும் தாவர பாதுகாப்பு சட்டம்) உயர்தரமான சிற்றுண்டிச்சாலை சேவை ஒன்றை வழங்குவதற்கு பொறுப்பாகும்.
03. தொழில்நுட்ப முன்மொழிவு மற்றும் நிதி முன்மொழிவு ஆகிய இரு கடித உறையிலான திறந்த போட்டிரீதியான நடைமுறை மூலம் இந்த விலைக்கேட்பு நடத்தப்படும்.
04. தகைமை அளவுகோல்
இலங்கையில் சிற்றுண்டிச் சேவைகளை வழங்குவதற்காக தகைமை மற்றும் நன்கு அனுபவம் பெற்ற ஹோட்டல்/ விருந்தோம்பல் சேவைகள் மூலம் முன்மொழிவுகள் அனுப்ப முடியும். அந்த நிறுவனம் இதனையொத்த பண்புடைய வர்த்தகத்தை மேற்கொண்டதில் குறைந்தது 15 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
05. ஆர்வமுடைய சிற்றுண்டிச்சாலை சேவை வழங்கும் நிறுவனம் 2023 ஒக்டோபர் 16ஆம் திகதி தொடக்கம் 2023 நவம்பர் 02 ஆம் திகதி வரை வேலை நாட்களில் (பொது மற்றும் வங்கி விடுமுறை தவிர்த்து) 0900 மணி தொடக்கம் 1600 மணி வரை 0112888584 என்ற தொலைபேசி இலக்கம் மூலம் பத்தரமுல்லை, ஜயன்திபுர, 811/A, வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள, உதவிப் பணிப்பாளர் (நிதி) இடமிருந்து மேலதிக விபரங்களை பெறலாம்.
06. பத்தரமுல்லை, ஜயன்திபுர, 811/A, வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள, நிதிப் பிரிவில் இருந்து அலுவலக நாட்களில் 2023 ஒக்டோபர் 16ஆம் திகதி முதல் 2023 நவம்பர் 02 ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை 2000.00 இலங்கை ரூபா கட்டணத்தை செலுத்தி ஆர்வமுடைய சிற்றுண்டிச்சாலை/ சிற்றுண்டிச்சாலை சேவைகள் நிறுவனத்தினால் ஆங்கில மொழியிலான முன்மொழிவுகளுக்கான கோரிக்கைகளின் (RFP) முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம்.
07. வெவ்வேறு கடித உறைகளிலான தொழில்நுட்ப முன்மொழிவு மற்றும் நிதி முன்மொழிவை விலைமனு மூடப்படும் நேரமான 2023 நவம்பர் 03 ஆம் திகதி 1430 மணி அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் முன்மொழிவுகள் நிராகரிக்கப்படும். பத்தரமுல்லை, ஜயன்திபுர, 811/A, வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள, மாநாட்டு மண்டபத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற பின் தொழில்நுட்ப முன்மொழிவுகள் உடன் திறக்கப்படும்.
08. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு யால தேசிய வனம், படனன்கல வருகையாளர் நிலையத்தில் 2023 ஒக்டோபர் 26 ஆம் திகதி பி.ப. 02.00க்கு இடம்பெறும்.
09. வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பெறுகைக் குழு மூலம் எடுக்கப்படும் முடிவு இறுதி முடிவு என்பதோடு நிதி ஒழுங்முறை மற்றும் அவ்வப்போது வெளியிடப்படும் திறைசேரி சுற்றறிக்கையில் எந்த ஒரு திருத்தத்தையும் மேற்கொள்ள கொள்வனவாளர் உரிமை பெற்றுள்ளார்.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு**
**வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்**

# 1964 இலக்கம் 28 இனையுடைய காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தில் திருத்தியமைக்கப்பட்டவாறு காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460)

## 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**பிரதேச செயலாளரின் கோப்பிலக்கம் - BOP/4/4/1 - 91**
**காணி அமைச்சின் கோப்பிலக்கம் - 4-3/3/2021/PI/155**

இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்படும் காணியை அரசினால் கையகப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. மேலதிக விபரங்களுக்காக 2348114 உடைய இலக்கம் 2023-09-04.ஆந் திகதிய இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையைப் பார்க்கவும்.

| | |
|---|---|
| மாவட்டம் | - காலி |
| பிரதேச செயலகப் பிரிவு | - போபே போத்தல |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | - இலக்கம் 117A, மீபாவல |
| கிராமத்தின் பெயர் | - மீபாவல |
| காணியின் பெயர் | - உஸ்கொடவில. |
| வரைபட இலக்கம் (நில அளவீடு சார்ந்த வரைபட இலக்கம்) | - 810169, வலய இலக்கம் 01இன் பத்திர இலக்கம் 02 |
| துண்டு இலக்கம் | - 01 தொடக்கம் 06 வரையான காணிப் பகுதிகள். |

**திகதி - 2023-09-10 ஆந் திகதி.**
**முகவரி - பிரதேச செயலகம், போபே போத்தல,**
**பிரதேச செயலாளர்,**
**காலி மாவட்டம்.**

**எடுத்துக் கொள்ளல் உத்தியோகத்தர்/**
**பிரதேச செயலகம்,**
**போப்பே போத்தல.**

# காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460)

## 33 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

**குறிப்பு இல.: பிசெ/அக்/அதி/அத்1/39-ii**
**காணி அமைச்சின் குறிப்பு இல.: எல்டி/05/2008/ ஏச்டபிள்யூ/ எஸ்ரீடிபீ/ஏடிபி/208**

காலி மாவட்டம், அக்மீமன பிரதேச செயலாளர், கே.ஜீ.பீ. பூர்ணிமா அபேசிறிகுணவர்த்தன ஆகிய நான், காணி சுவீகரித்தல் சட்டத்தின் (அத்தியாயம் 460) 33 ஆம் பிரிவின் கீழ் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிக்குரிய நிலையான நஷ்ட ஈடாக பதினோராயிரத்து ஐந்நூறு (ரூ.11,500.00) ரூபாவை காலி மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இலக்கம் LA/694 இன் கீழ் **வைப்பிலிடப்பட்டுள்ளதாக இத்தால் அறியத்தருகின்றேன். மேலதிக விபரங்களுக்கு இலக்கம் 2338/59 மற்றும் 2023.06.30 ஆம் திகதிய அரசாங்க அதி விசேட வர்த்தமானிப் பத்திரிகையைப் பார்க்கவும்.**

**அட்டவணை**

| | |
|---|---|
| மாவட்டம் | : காலி |
| பிரதேச செயலாளர் பிரிவு | : அக்மீமன |
| கிராமம் | : நியகம |
| காணியின் பெயர் | : கக்கிறிஹேன |
| ஆரம்ப வரைபட இல. | : கா.3946 |
| துண்டு இல. | : 02 |
| விஸ்தீரணம் | : 0.0009 ஹெக்டயார் |

**பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலகம்,**
**அக்மீமன.**

**பிரதேச செயலகம்,**
**அக்மீமன.**
15.08.2023.




# 1964 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்.460) 39 அ (1) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி எடுத்துக் கொள்ளல் சட்டத்தின் 38 (ஆ) துணை விதியின் கீழ் விளம்பரப்படுத்தப்பட்டதும் இலக்கம் 1823/8 மற்றும் 2013 ஆகஸ்ட் 13 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியின் விளம்பரப்படுத்தப்பட்டதும், 2013 இலக்கம் 251 ஆம் கட்டளையில் விபரிக்கப்பட்டுள்ள குறித்த காணி முற்று முழுதாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசுடையதாக்கப்பட்டிருந்ததோடு, குறித்த கட்டளைச் சட்டத்தின் 40 பிரிவின் ஆம் அத்தியாயத்தின் கீழ் காணித்துண்டுகளின் உரிமை எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தன. எனினும் அச் சரத்தின் (1979 இலக்கம் 8 ஆம் சரத்தில் உட்பட்ட) 39 (அ) 1 ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூடி ஹரீன் பிரநான்து ஆகிய நான் குறித்த காணித் துண்டுகளில் கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணித் துண்டை மாத்திரம் இக்கட்டளைச் சட்டத்தின் கீழ் இரத்துச் செய்கின்றேன்.

**ஹரீன் பிரநான்து**
**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்,**

**எனது குறிப்பு இலக்கம்:- 4-3/15/2013/VE/48**
**பிரதேச செயலகத்தின் குறிப்பு இலக்கம் PAS/LND/ACQVI/07/F1/249B/61**

**2023 ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி,**
**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,**
**1200 /6 ”மிஹிகத மெதுர“**
**ரஜமல்வத்த வீதி**
**பத்தரமுல்ல,**

**அட்டவணை 1**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் பஸ்கொட பிரதேச செயலகப் பிரிவின் அதிபர் அளவை மொரவக்கோறளை கிழக்கு சிறு பிரிவு, ஊருபொக்க (ஆ.கி.பட.23) கிராமத்தில் அமைந்துள்ளதும் 2013.07.02 ஆம் திகதி நிள அளவை அதிபர் அவர்களினால் தயாரிக்கப்பட்ட இலக்கம் MR/PSG/2013/299 படத்தில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டுகளுக்கான பெயர்கள் எல்லைகள் மற்றும் விஸ்தீரணங்கள் பின்வருமாறாகும். (மேலதிக விபரங்களுக்கு இலக்கம் 2331/14 மற்றும் 2023.05.09 ஆம் திகதிய வர்த்தமானியைப் பார்க்கவும்)

01. துண்டுக் குறியீடு A - பல்லேவெலிகும்புர அல்லது பின் கும்புர - விஸ்தீரணம் 0.0868 ஹெக்டயார்.
02. துண்டுக் குறியீடு B - உடவெலிகும்புர அல்லது பின்கும்புர - விஸ்தீரணம் 0.6765 ஹெக்டயார்.
03. துண்டுக் குறியீடு C - உடவெலிகும்புர அல்லது பின்கும்புர - விஸ்தீரணம் 0.0640 ஹெக்டயார்.

# பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

## இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

## பதவி வெற்றிடங்கள்

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திலுள்ள பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமை வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி** - **பதில் உதவி அத்தியட்சகர்கள் (Acting Assistant Superintendents)**

பின்வரும் தகைமைகள் உள்ள பயிற்சி நடுகையாளராக 9 மாத பயிற்சிக் காலத்தைப் பின்பற்றிய அபேட்சகர்கள்

- க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் உயிரியல் முறைமை தொழில்நுட்பம் அல்லது உயிரியல் விஞ்ஞானத்தில் மூன்று பாடங்களில் (பொது ஆங்கிலம் தவிர்ந்த) குறைந்தபட்சம் “S” சித்தியைப் பெற்றிருத்தல்

**அல்லது**

- க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் ஏதாவது பாடப்பரப்பில் மூன்று பாடங்களில் (பொது ஆங்கிலம் தவிர்ந்த) குறைந்தபட்சம் “S” சித்தியைப் பெற்றிருத்தல் அத்துடன் பெருந்தோட்டம் சார்ந்த துறையில் நிறைவேற்றுத் தரத்தில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடகால அனுபவம்

**அல்லது**

- தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தினால் நடாத்தப்படும் பெருந்தோட்ட முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்பத்தில் டிப்ளோமா அல்லது பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் தேசிய டிப்ளோமா

**அல்லது**

- இலங்கை மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் (TVEC) சான்றுபடுத்திய பெருந்தோட்ட விரிவாக்கல் முகாமைத்துவம் அல்லது பெருந்தோட்ட பயிர் தொழில்நுட்பத்தில் தேசிய தகைமைத்திறனில் (NVQ) 5 அல்லது 6 நிலைத் தகைமை

**அல்லது**

- வாழ்தொழில் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் கல்விச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்படும் மேற்கூறப்பட்ட 4இல் குறிப்பிடப்பட்டுள்ள இயைபுடைய ஒழுங்குவிதியில் உயர்கல்வி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட வேறு ஏதாவது டிப்ளோமா

**அல்லது**

- இலங்கை வயம்ப பல்கலைக்கழகம், விவசாயம் மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடத்தினால் வழங்கப்படும் விவசாயம் மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் டிப்ளோமா

**அல்லது**

- இயைபுடைய துறையில் ஒரு (01) வருடகால வேலை அனுபவம் உள்ள விவசாயத்தோடு தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட மற்றும் குறைந்தபட்சம் பன்னிரண்டு மாத காலத்தைக் கொண்ட (TVEC அங்கீகாரம் பெற்ற) வேறு ஏதாவது டிப்ளோமா.

**அல்லது**

- இயைபுடைய துறையில் மூன்று (03) வருட கால வேலை அனுபவம் உள்ள ஒன்றில் உயிரியல் விஞ்ஞானம் அல்லது உயிரியல் முறைமை தொழில்நுட்பவியல் அல்லது விவசாயம் அல்லது கணிதம் அல்லது வர்த்தகப் பாடப்பரப்பில் க.பொ.த (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி அல்லது Edexcel உயர்தரப் பரீட்சை அல்லது கேம்பிரிட்ஜ் உயர்தரப் பரீட்சையில் சித்தி.

**அல்லது**

- க.பொ.த. (சா/த) பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் உட்பட மூன்று (03) பாடங்களில் திறமைச் சித்திகள் உள்ள மற்றும் க.பொ.த (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி (ஏதாவது பாடப்பரப்பில்)

**அல்லது**

- க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டு (02) அமர்வுகளுக்கு மேற்படாமல் கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தி அத்துடன் பெருந்தோட்டம் / விவசாயம் தொடர்பான துறையில் இரண்டு (02) வருடகால அனுபவம்

**அல்லது**

- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெற்றுள்ள விவசாயத்தில் டிப்ளோமா (TVEC அங்கீகாரம் பெற்ற)

**மேலதிக நன்மைகள்** - ஊழியர் சேமலாப நிதியம் அல்லது இலங்கை தோட்டத்துறையாளர்களின் சேமலாபச் சங்கத்திற்கு உங்கள் சம்பளத்தின் 10% தொகையை பங்களிப்புச் செய்தல் வேண்டும் என்பதுடன் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் உங்கள் சம்பளத்தின் 12% ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் மற்றும் 3% ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புச் செய்யும்.
மேற்பார்வை செய்வதற்கு ஒரு மோட்டார் சைக்கிள் அல்லது ஒரு கொடுப்பனவு மற்றும் எரிபொருள் ஒதுக்கீடு வழங்கப்படும்.
உள்வாரி மற்றும் வெளிவாரி தொழிலாளர் கொடுப்பனவு உள்ள தளபாடமிடப்பட்ட ஒரு ஒரு பங்களா வழங்கப்படும்.

**சம்பள அளவு** - மாதாந்தம் 45,000.00 ரூபா வழங்கப்படும்.

**வயது** - 22 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**ஏனையவை** - சகல விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் பதவிக்கான கடமைகளை மேற்கொள்வதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
தேவைப்படுத்தப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ள சித்திகரமான அபேட்சகர்கள் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தில் உள்ள உதவி அத்தியட்சகர் பதவிக்கு பட்டியல்படுத்தப்படுவார்கள்.

**விண்ணப்பங்கள்** - விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களுடன் பிறப்பாத்தாட்சிப் பத்திரம், கல்விச் சான்றிதழ்கள் மற்றும் அனுபவச் சான்றிதழ்களின் பிரதிகள் உள்ள சகல விபரங்களுடன் விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். முடிவுறுத்தல் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள்** - 2023 ஒக்டோபர் 27ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**இல. 257, ஸ்ரீ தம்ம மாவத்தை, கொழும்பு-10.**

2023.10.10

## பிழை திருத்தம்
## கேள்வி அறிவித்தல்

கண்டி மாநகர சபைக்குத் தேவையான கம்பிகளை பெற்றுக் கொள்வதற்கான கேள்விகோரல்

2023 செப்டெம்பர் 29ம் திகதி தினகரன் பத்திரிகையின் 11 ஆம் பக்கத்தில் மேற்படி தலைப்பில் பிரசுரமான அறிவித்தலில் "கேள்விப் பிணைமுறி செல்லுபடியாகும் திகதி 2024.01.03" என்று குறிப்பிடப்படல் வேண்டும் என்பதை தயவுடன் கவனியுங்கள் முன்பு பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்படும் ஏனைய சகல விபரங்களிலும் மாற்றங்கள் எதுவும் கிடையாது.

மேலதிக விபரங்களுக்கு 081- 2232071 கணக்காளர் வழங்குதல்

**மாநகர ஆணையாளர்**
**கண்டி மாநகர சபை**
**கண்டி**

---

பெறுகை அறிவித்தல்

## தெஹிவளை – கல்கிசை மாநகர சபை
## சீருடை வழங்குவதற்கான விலைமனுக் கோரல்

தெஹிவளை - கல்கிசை மாநகர சபையின் ஊழியர் குழாமிற்கான சீருடை துணி மற்றும் தைத்து முடிக்கப்பட்ட பொட்டம் மற்றும் டீசேர்ட் கொள்வனவு செய்வதற்காக திறந்த போட்டி விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இதற்காக தகைமையுள்ள இறக்குமதியாளர்கள் உற்பத்தியாளர்கள் மற்றும் ஏனைய உள்ளூர் வழங்குநர்களுக்கு விலைமனுக்களை சமர்ப்பிக்க முடிவதுடன் நிறுவனத்தின் கடிதத் தலைப்பின் கீழ் கேள்வி ஆவணங்களை வேண்டி மேற்கொள்ளப்படும் கடிதத்துடன் 2023.10.13 முதல் 2023.11.02 வரையான நாட்களில் மு.ப 9.00 முதல் பி.ப 3.00 வரையான காலத்திற்குள் தெஹிவளை - கல்கிசை மாநகர சபையின் முதலாம் மாடியில் அமைந்துள்ள வழங்கல்கள் பிரிவிற்கு வருகைதந்து ரூ.2000/= கட்டணத்தை செலுத்தி (வரி உள்ளடக்கப்படல் வேண்டும்) கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்வி திறத்தல் 2023.11.03 பி.ப. 3.00 இற்கு இடம்பெறும்.

**விசாரணைகள் : தொ.பே: 0112721379 (வழங்கல்கள் பிரிவு)**

**எம்.எம்.சீ.கே.கே. மான்னப்பெரும**
**மாநகர ஆணையாளர்**
**தெஹிவளை - கல்கிசை மாநகர சபை**

---

## கேள்விகோரல் அழைப்பு

குண்டசாலை பிரதேச சபையின் பெறுகைக்குழுவின் தலைவரால் கீழ்க்காணும் உபகரணங்கள் சார்பாக தகைமையுடைய கேள்விதாரர்களிடம் இருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

1. லெப்டொப் கணனி இயந்திரம் - 03
2. டெஸ்டொப் கணனி இயந்திரம் - 06
3. டொட் பெட்ரிக்ஸ் அச்சு இயந்திரம் - 05
4. அச்சு இயந்திரம் - 05
5. வர்ண அச்சு இயந்திரம் - 02

மேற்படி இயந்திராதிகள், உபகரணங்களுக்கு மாதிரியுடன் விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படும்.

02. கேள்விகளை சமர்ப்பிப்பதற்கு எதிர்ப்பார்க்கும் தகைமையுடனான கேள்விதாரர்களுக்கு 2023.10.13 முதல் 2023.10.27 வரையான காலத்திற்குள் வாரத்தின் அலுவலக நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப 3.00 வரை குண்டசாலை பிரதேச சபை தொலைபேசி இல - 081-2375624 மூலம் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

03. கேள்விதாரரால் எழுத்து மூல விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் பேரில், மற்றும் மீளளிக்கப்படாத வைப்பாக ஒரு உருப்படிக்கு ரூ.1000.00 வீதமான தொகையை குண்டசாலை பிரதேச சபையின் காசாளரிடம் காசாக மட்டும் செலுத்தி குறித்த கேள்வி கோரல் ஆவணத்தொகுதியை 2023.10.13 முதல் 2023.10.27 வரையான காலத்திற்குள் வார நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை பெற்றுக்கொள்ளலாம்.

04. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியுடன் வேறுவேறாக கடித உறைகளில் இட்டு கடித உறையின் மேல் மூலையில் கேள்வி சமர்ப்பிக்கப்படும் உருப்படியை குறிப்பிட்டு 2023.10.27 மு.ப.10.00 இற்கு முன்பு செயலாளர், குண்டசாலை பிரதேச சபை, மெனிக்ஹின்ன என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைக்கலாம். சகல கேள்விகளும் குறித்தவாறு கேள்விப் பிணையுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் திறத்தல் 2023.10.30 மு.ப.10.00 இற்கு இடம்பெறுவதுடன், அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**எஸ்.ஆர்.அதாவுத,**
**செயலாளர்**
**குண்டசாலை பிரதேசபை**
**மெனிக்ஹின்ன**
**2023.10.13**

---

## விலைமனுக்களுக்கான அழைப்பு
### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் – கம்பஹா
### சமைத்த உணவு வழங்கல் – 2024

2024 ஆம் ஆண்டுக்காக மேல் மாகாணத்தின் கம்பஹா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் கீழ் குறிப்பிடப்பட்ட வைத்தியசாலைகளில் சமைத்த உணவை வழங்குவதற்காக மேல் மாகாணத்திற்குள் வசிக்கும் நபர்கள் மற்றும் பதிவு செய்யப்பட்டிருக்கும் வர்த்தக நிறுவனங்களிடம் இருந்து தேசிய போட்டிரீதியான விலைமனு முறையில் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக் கோரல் விடுக்கப்படுகிறது.

| வைத்தியசாலை பெயர் | விலைமனு பிணை | ஆதன உறுதியின் பெறுமதி |
|---|---|---|
| மினுவன்கொட ஆரம்ப வைத்தியசாலை | 110,000.00 | 100,000.00 |
| தொம்பே பிரதேச வைத்தியசாலை | 70,000.00 | 75,000.00 |
| ரதாவான பிரதேச வைத்தியசாலை | 85,000.00 | 25,000.00 |
| ஜா எல பிரதேச வைத்தியசாலை | 60,000.00 | 25,000.00 |
| பமுனுகம பிரதேச வைத்தியசாலை | 35,000.00 | 25,000.00 |
| அகரகம பிரதேச வைத்தியசாலை | 75,000.00 | 25,000.00 |
| பியகம பிரதேச வைத்தியசாலை | 60,000.00 | 25,000.00 |
| உடுபில பிரதேச வைத்தியசாலை | 30,000.00 | 25,000.00 |
| மல்வத்துஹிரிபிட்டிய பிரதேச வைத்தியசாலை | 55,000.00 | 25,000.00 |

**பொது நிபந்தனைகள்**

- 2023.10.13 ஆம் திகதி தொடக்கம் 2023.11.01 ஆம் திகதி வரை வார நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.00க்கு இடையே, கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்று, தேசிய அடையாள அட்டை, வசிப்பிடம் தொடர்பான கிராம சேவகர் சான்றிதழ் மற்றும் ஆதன உறுதியை சமர்ப்பித்து, குறித்த விலைமனு பிணைத் தொகை மற்றும் மீளளிக்கப்படாத விலைமனு கட்டணமான 2000.00 ரூபாவை கம்பஹா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு செலுத்தி, பற்றுச்சீட்டை பெற்றுத் தந்த பின் சமைத்த உணவு வழங்கல் - 2024 என்ற சிங்கல மொழியிலான விலைமனு ஆவணம் மற்றும் குறித்த விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும்.
- ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களுக்கு கீழ் குறிப்பிடப்பட்ட முகவரியில் இருந்து அலுவலக நேரங்களில் விலைமனு கோரல் ஆவணத்தை இலவசமாக பரீட்சிக்க முடியும்.
- பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் "மூலப் பிரதி" மற்றும் "நகல் பிரதி" என வெவ்வேறாக உறைகளில் இட்டு இடது பக்க மேல் மூலையில் "சமைத்த உணவு வழங்கல் 2024 ............ வைத்தியசாலை" என்று குறிப்பிட்டு 2023.11.02 ஆம் திகதி மு.ப. 10.00க்கு முன்னர் இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவது அல்லது "தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், கச்சேரி வளாகம், கொழும்பு வீதி, கம்பஹா" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப முடியும்.
- தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதோடு, விலைமனுக்களை ஏற்பது முடிவுற்ற உடன் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கேட்போர்கூடத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
- விலைமனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்திற்கு விலைமனுதாரருக்கு அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும்.
- விலைமனு வழங்குவதற்கு தகுதி பெறுவதற்கு விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராக இருத்தல் வேண்டும்.
- இந்த விலைமனுக் கோரல் தொடர்பிலான அனைத்து முடிவுகள் எடுக்கும் உரிமை கம்பஹா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக பெறுகைக் குழு வசமானது.
- இந்த விலைமனுக் கோரல் தொடர்பில் மேலதிக விபரங்களை வார நாட்களில் அலுவலக நேரங்களில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்தை அழைப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**விசேட மருத்துவர் இந்திக வன்னிநாயக்க**
**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**கச்சேரி வளாகம்,**
**கொழும்பு வீதி, கம்பஹா.**

**தொ.இல.- 033 22 22 873, 033 22 22 874**
**தொலைநகல்- 033 22 30 992**

---

## விலைமனுக்களுக்கான அழைப்பு
### வன சீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு
### தேசிய மிருகக் காட்சிசாலைத் திணைக்களம்
### தேசிய மிருகக் காட்சிசாலையில் உள்ள பிரதான உணவகத்தை குத்தகைக்கு விடுதல்
### தெஹிவளை – 2023/2025

**IFB No: DNZG/A/07/22/23**

1. ஓர் ஆண்டு காலத்திற்காக தெஹிவளை, தேசிய மிருகக் காட்சிசாலையில் உள்ள பிரதான உணவகத்தை குத்தகைக்கு விடுவதற்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து தேசிய மிருகக் காட்சிசாலைத் திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

2. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.

3. ஆர்வம் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர்கள் zoosl@slt.lk என்ற மின்னஞ்சல் முகவரி, 2712751, 2710196 என்ற தொலைபேசி இலக்கத்தில் தெஹிவளை, அனகாரிக்க தர்மபால மாவத்தை, தேசிய மிருகக் காட்சிசாலைத் திணைக்களம், தலைமை கணக்காளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு 2023ஒக்டோபர்16 ஆம் திகதி தொடக்கம் 2023 நவம்பர் 02 ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை வேலை நாட்களில் கீழ் தரப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.

4. தேவையான தகைமைகள் பின்வருமாறு
   - ஹோட்டல் மற்றும் உணவக துறையில் வர்த்தகப் பதிவின் சான்றிதழ்
   - உணவகங்கள்/ ஹோட்டல்களை நடத்திச் சென்றதில் குறைந்தது மூன்று ஆண்டுகள் அனுபவத்தை நிரூபிக்கும் ஆவணங்கள்
   - கடந்த ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட இறுதி கணக்குகள்
   - கடந்த 6 மாதங்களின் வங்கி அறிக்கைகள்
   - இலங்கை கட்டளைகள் பணியக நிறுவனம் மூலம் வழங்கப்பட்ட GMP சான்றிதழ் அல்லது HACCAP சான்றிதழ்

5. மீளளிக்கப்படாத மூவாயிரம் ரூபாவை (ரூபா 3,000) ரொக்கப்பணத்தில் செலுத்தி கீழுள்ள முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பிப்பதால் விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்று வழங்கப்படும்.

6. விலைமனுக்கள் முத்திரை பொறிக்கப்பட்டு இருத்தல் வேண்டும் என்பதோடு 2023 நவம்பர் 03 மு.ப. 10.30 அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது அதே அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விமனு பெட்டிக்கு இட முடியும். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. விலைமனுக்கள் ஏற்பது நிறைவடைந்த உடன் 2023 நவம்பர் 03 ஆம் திகதி மு.ப. 10.30 க்கு கீழுள்ள முகவரியில் நேரடியாக பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் விலைமனு பிணையொன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
   - விலைமனு பிணை பெறுமதி: ரூபா 125,000/=

7. திணைக்கள பெறுகைக் குழுவின் முடிவு இறுதி முடிவாகும்.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு**
**தேசிய மிருகக் காட்சிசாலைத் திணைக்களம்**
**அனகாரிக்க தர்மபால மாவத்தை**
**தெஹிவளை**

---

## விலைமனு கோரல்
### பதிவாளர் நாயகம் திணைக்களம் பாதுகாப்புச் சேவை வழங்கல்

1. இந்தத் திணைக்களத்தின் பிரதான அலுவலகம் மற்றும் 49 கிளை அலுவலகங்களுக்கு 2024.01.01 ஆம் திகதி முதல் 2024.12.31 ஆம் திகதி வரை பாதுகாப்புச் சேவை வழங்குவதற்காக பதிவாளர் நாயகம் திணைக்களம் சார்பில் திணைக்களத்தின் கொள்முதல் குழுத் தலைவரினால் 2023.11.03 ஆம் திகதி பி.ப.2.00 மணி வரை விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
2. இதில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களுக்கு விலைமனு ஆவணங்களை 2023.11.03 ஆம் திகதி மு.ப. 11 மணிவரை மீளளிக்கப்படாத ரூ.8,000.00 தொகையை சிறாப்பரிடம் செலுத்தி பெற்றுக்கொண்ட ரசீதை பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வழங்கல் பிரிவின் கணக்காளரிடம் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ள முடியும். தொலைபேசி இலக்கம் 011- 3070870 ஆகும். தேவை எனின் கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை இந்த அலுவலகத்தில் பரீட்சிக்க முடியும்.
3. விலைமனு முன் சந்திப்பொன்று 2023.10.23 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் நடைபெறும்.
4. பூரணப்படுத்தப்பட்ட விலைமனு ஆவணங்களை, விலைமனு ஆவணங்களின் நிபந்தனைகளுக்கு அமைய ரூபா. 462,000.00 பெறுமதியான விலைமனுக் காப்பீட்டுடன் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இணைப்பிரதிகளில் தலைவர், திணைக்களக் கொள்முதல் குழு, பதிவாளர் நாயகம் திணைக்களம், இல 234/ A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பவோ அல்லது நேரில் வந்து பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் இடவோ முடியும். விலைமனுக்கள் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பாதுகாப்புச் சேவை வழங்குவதற்கு விலைமனு கோரல் 2023/14" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
5. 2023.11.03 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும். அந்த நேரத்திற்குப் பின்னர் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

பதிவாளர் நாயகம்

திணைக்கள கொள்முதல் குழுத் தலைவர்

**இலங்கை பதிவாளர் நாயகம் திணைக்களம்**
**இல 234/A3,**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்லை.**

---

## மக்கள் வங்கி மொரவக (060)

1986 ஆம் இலக்க 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 இலக்கம் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 டீ (29D) எனும் பிரிவின் கீழான தீர்மானம்.

1986 ஆம் ஆண்டிள் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 டீ (29D) எனும் பிரிவின் கீழ் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 2023 08 29 திகதி பின்வரும் தீர்மானம்

ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றன.

மக்கள் வங்கிக்காக மாத்தறை பிரசித்த நொத்தாரிசு வை. எஸ். எச் ஸீ. என். இந்திரஸிங்ஹ என்பவரால் அத்தாட்சிப்படுத்திய 2021.02.22 ஆந் திகதிய இலக்கம் 530 என்ற ஈட்டு முறியின் பிரகாரம் கொடுப்பனவில் அலபாதெனிய, தங்கல, பலேகந்த, இல் 188 இல் குடியிருக்கும் அபேவிக்ரமஸிங்ஹ குணவர்தன ஸுஜீவ லக்மால் என்பவர் தவணை தவறியுள்ளார் ஆதலால் மேற்படி முறியின் பிரகாரம்

1. ஒரு கோடியே ஐம்பத்தெட்டு லட்சத்து தொன்னூறாயிரத்து எண்நூற்றி எழுபத்திரண்டு ரூபா இருபத்தாறு சதம் (ரூ.15,890,872.26) பணம் மக்கள் வங்கிக்கு செலுத்தப்பட வேண்டியுள்ள படியால்,

அதன் படி 2023.07.05 திகதிக்கு ஒரு கோடியே ஐம்பத்தெட்டு லட்சத்து தொன்னூறாயிரத்து எண்நூற்றி எழுபத்திரண்டு ரூபா இருபத்தாறு சதம் (ரூ. 15,890,872.26) முழுப்பணத்தையும் முழுமையாக கொடுத்து முடிக்கும் வரை 2023.07.05 ஆம் திகதியில் இருந்து ஒரு கோடியே நாற்பத்தேழு லட்சத்து இருபத்தேழாயிரத்து இருநூற்றி எழுபத்திரண்டு ரூபா எழுபத்து மூன்று சதம் (ரூ.14,727,272.73) முதல் பணம் மீது ஏல விற்பனைத் திகதி வரை கிழமைக்கு சாதாரண முதன்மை கடன் கொடுப்பனவின் படி 3.5 (AWPLR+3.5) பணத்துக்காக ஏல விற்பனைத் திகதிவரை மேலும் வட்டியையும் அறவிடப்பட வேண்டிய பணத்தையும் அதன் பின்னர் கொடுப்பனவு எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து, அறவிடுவதற்காக மாத்தறை அதிகாரம் பெற்ற ஏலதாரர் ஈ. எஸ். ராமநாயக்க என்பவரால் இலக்கம் 530 என்ற ஈட்டு முறியின் பிரகாரம் ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென 1986 ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குறித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் பணிப்பாளர் சபையால் தீர்மானிக்கப்படுகின்றது.

### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விபரம்

தென் மாகாணம், காலி மாவட்டம், ஹினிதும் பத்துவே நெழுவை பிரதேச செயலாளர் பிரிவு றெழுவை பிரதேச சபை, தேவாலேகம மேற்கு இலக்கம் 235-C கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட பனாகொடயில் அமைந்துள்ள பனாகொட வத்தை அளந்து வேறாக்கிய இலக்கம் 01 துண்டுக்கான அதிகாரம் பெற்ற நில அளவையாளர் டீ. பீ, விமலஸேன் அவர்களால் அளந்து தயாரித்த 2000-03-30 என்று குறிப்பிடும் வேறு மேலும் சரியாக 2000.05.03 ஆந் திகதிய இலக்கம் 564 என்ற வரைபடத்தின் பிரகாரம் மீண்டும் அளந்து வேறாக்கிய இலக்கம் 01 துண்டுக்கான எல்லைகள்:-

வடக்கிற்கு - இக்காணியின் லொட் 2 மற்றும் ஓக்கந்த தொலயும்

கிழக்கிற்கு - இலக்கம் 419 என்ற வரைபடத்தில் குறியிடும் இலக்கம் 02 என்ற துண்டும

தெற்கிற்கு - மினகொலகெடிய தொல மற்றும் இலக்கம் 419 வரைபடத்தில் குறிப்பிடும் இலக்கம் 02 என்ற துண்டும்

மேற்கிற்கு - கிராமவாசிகள் உரிமைகூறும் அரசாங்க காணி

இந்த எல்லையினுள் அமைந்துள்ள ஏக்கர் பத்து பர்ச்சஸ் முப்பது (ஏக். 10 றூட்.00 பர் 30) விசாலம் கொண்ட இக்காணியினுள் அமைந்துள்ள மரம் மட்டைகள் கட்டடங்கள் உட்பட மற்றும் அனைத்தும் ஆகும்.

இக்காணி காலி மாவட்ட காணிப்பதிவகத்தில் இலக்கம் V 26/40 கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இக்காணி கீழே வரைபடத்தின் பிரகாரம் மீண்டும் அளந்ததாகும். அது கீழே குறிப்பிடும் விபரங்களுக்கு அமைவாகும்.

தென் மாகாணம், காலி மாவட்டம், ஹினிதும் பத்துவே நெழுவை பிரதேச செயலாளர் பிரிவு றெழுவை பிரதேச சபை, தேவாலேகம மேற்கு இலக்கம் 235-C கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட பனாகொட கிராமத்தில் அமைந்துள்ள பனாகொட வத்தை அளந்து வேறாக்கிய இலக்கம் 01 என்ற துண்டுக்கான இலக்கம் 01 காணிக்கு மீண்டும் அதிகாரம் பெற்ற நில அளவையாளர் டீ. பீ. விமலஸேன என்பவரால் 2000.05.03 ஆந் திகதிய வரைபடத்தின் பிரகாரம் அளந்து வேறாக்கிய துண்டிலக்கம் 01 என்ற காணிக்கு மீண்டும் அதிகாரம் பெற் நில அளவையாளர் எல். டப்ளியு. குணசேகர அவர்களால் அளந்து தயாரித்த இலக்கம் 1644 மற்றும் 2020 -10 - 18 ஆந் திகதிய வரைபடத்தின் பிரகாரம் எல்லைகள்.

வடக்கிற்கு - ஓகந்த தொல, அதிகாரம் பெற்ற நில அளவையாளர் டீ. பீ. விமலஸேன என்பவரின் 2000 05 03 ஆந் திகதிய இலக்கம் 564 என்ற வரைபடத்தின் துண்டிலக்கம் 2 உம், டீ.கே. டேவிட்க்கு சொந்தமான காணி ஓகந்த தொல மற்றும் இக்காணியின் பகுதியும் ஏ.ஆர்.டீ. அபேகுணவர்தன அதிகாரம்பெற்ற நில அளவையாளரின் இலக்கம் 419 வரைபட துண்டு இலக்கம் 02 உம்.

கிழக்கிற்கு - அதிகாரம் பெற்ற நில அளவையாளர் டீ. பீ. விமலஸேன என்பவரின் 2000.05.03 ஆந் திகதி இலக்கம் 564 என்ற வரைபட இலக்கம் 2 என்ற துண்டும் டீ. கே. டேவிட்க்கு சொந்தமான காணி மற்றும் இக்காணியின் பகுதியும் ஏ. ஆர். டீ. குணவர்தன அதிகாரம் பெற்ற நில அளவையாளரின் இலக்கம் 419 வரைபட துண்டு இலக்கம் 02 உம்.

தெற்கிற்கு - இக்காணியின் பகுதியும் மற்றும் ஏ. ஆர். டீ. அபேகுணவர்தன அதிகாரம் பெற்ற நில அளவையாளரின் 1956-11-30 ஆந் திகதிய இலக்கம் 419 வரைபட இலக்கம் 02 என்ற இக்காணியின் துண்டு மற்றும் மீனகொலகெடிய தொல மற்றும் ஊர் மக்கள் உரிமை கோறுரும் அரசாங்க காணியும்.

மேற்கிற்கு - :- ஊர் மக்கள் உரிமை கோரும் அரசாங்க காணியும், ஓக்கந்த தொல மற்றும் அதிகாரம் பெற்ற நில அளவையாளர் டீ. பீ. விமலஸேன என்பவரின் 2000-05-03 ஆந் திகதிய இலக்கம் 564 என்ற வரைபடத்தின் இலக்கம் 02 என்ற துண்டும். டீ. கே. டேவிட்க்கு சொந்தமான காணி.

இந்த எல்லைகளுக்குள் அமைந்துள்ள ஏக்கர் பத்து பர்சஸ் முப்பது (ஏ.10 றூ.00 பர் 30) விசாலம் கொண்ட இக்காணியில் அமைந்துள்ள கட்டடங்கள் மரம் மட்டைகள் உட்பட மற்றும் அனைத்தும் ஆகும்.

பணிப்பாளர் சபை கட்டளைப்படி

**மக்கள் வங்கி**
**பிரதேச பிரதான காரியாலயம்,**
**அனகாரிக்க தர்மபால மாவத்தை**
**மாத்தறை.**

**பிரதேச முகாமையாளர்**
**மாத்தறை.**

PEOPLE'S BANK
Pride of the Nation

SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk

# ஆஸி. போட்டியில் ஆடுவதற்கு குசல் மெண்டிஸ் உடல் தகுதி

இலங்கை அணியின் விக்கெட் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான குசல் மெண்டிஸின் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகவும் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான எதிர்வரும் உலகக் கிண்ணப் போட்டியில் அவர் பங்கேற்பார் என்றும் இலங்கை கிரிக்கெட் அணியின் மூத்த அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.



பாகிஸ்தானுக்கு எதிராக கடந்த செவ்வாய்க்கிழமை ஹைதராபத்தில் நடைபெற்ற போட்டியில் அதிரடி சதம் பெற்ற குசல் மெண்டிஸ் துடுப்பெடுத்தாடிவிட்டு அரங்கு திரும்பும்போது தசைப்பிடிப்பு உபாதைக்கு முகம்கொடுத்ததோடு மூச்சு விடுவதற்கும் சிரமத்தை சந்தித்துள்ளார். இதனை அடுத்து அவர் உடன் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இந்நிலையில் இலங்கை உப தலைவரான குசல் மெண்டிஸ் உபாதையில் இருந்து மீண்டிருப்பதாகவும் அடுத்த போட்டிக்கு முழு உடல் தகுதி பெற்றிருப்பதாகவும் இலங்கை அணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இம்முறை உலகக் கிண்ணத்தில் துடுப்பாட்டத்தில் சோபித்து வரும் குசல் மெண்டிஸ் தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டியில் 42 பந்துகளில் 76 ஓட்டங்களை விளாசியதோடு பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் 77 பந்துகளில் 122 ஓட்டங்களை பெற்றார். இதன்போது அவர் உலகக் கிண்ணத்தில் இலங்கை சார்பில் அதிவேக சதம் பெற்றவராக குமார் சங்கக்காரவின் சாதனையையும் முறியடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் அடுத்த இரண்டு போட்டிகளில் ஆடுவதற்காக இலங்கை அணி லக்னோவை சென்றடைந்துள்ளது. அடுத்த போட்டிக்கு இடையே இலங்கை அணிக்கு ஐந்து நாள் இடைவெளி உள்ளது.

இலங்கை அணி அடுத்து வரும் ஒக்டோபர் 16 ஆம் திகதி அவுஸ்திரேலிய அணியை எதிர்கொள்ளவிருப்பதோடு தொடர்ந்து ஒக்டோபர் 21ஆம் திகதி நெதர்லாந்து அணியை எதிர்கொள்ளவுள்ளது.

எதிர்வரும் போட்டிகளுக்காக இலங்கை அணி நாளை (14) தனது பயிற்சிகளை ஆரம்பிக்கவுள்ளது.

உலகக் கிண்ணத்தில் இலங்கை அணி இதுவரை ஆடிய இரண்டு போட்டிகளிலும் தென்னாபிரிக்கா மற்றும் பாகிஸ்தான் அணிகளிடம் தோல்வியை சந்தித்துள்ள நிலையில் இலங்கை அணி உலகக் கிண்ண புள்ளிப் பட்டியலில் எந்தப் புள்ளிகளும் இன்றி எட்டாவது இடத்தில் உள்ளது.

# பாகிஸ்தான் செல்லும் இலங்கை இளையோர்கள் குழாம் அறிவிப்பு



பாகிஸ்தானுக்கு எதிரான இளையோர் கிரிக்கெட்டில் ஆடும் இலங்கை 19 வயதுக்கு உட்பட்ட அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

16 பேர் கொண்ட குழாத்தில் றோயல் கல்லூரியின் துடுப்பாட்ட வீரர் சினத் ஜயவர்தன தொடர்ந்து தலைவராக செயற்படவிருப்பதோடு ரிச்மண்ட் கல்லூரி சுழற்பந்து சகலதுறை வீரர் மல்ஷ தருப்பதி உப தலைவராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக அண்மையில் நடைபெற்ற போட்டியில் பங்கேற்ற பெரும்பாலான வீரர்கள் பாகிஸ்தான் சுற்றுப் பயணத்தில் தமது இடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளனர். இதில் கொட்டாஞ்சேனை புனித பெனடிக்ட் கல்லூரியைச் சேர்ந்த விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரர் ஷருஜன் ஷண்முகநாதனும் அணியில் இடம் பிடித்துள்ளார்.

கராச்சியில் உள்ள தேசிய வங்கி அரங்கில் எதிர்வரும் ஒக்டோபர் 15 தொடக்கம் 18 ஆம் திகதி வரை நடைபெறும் இளையோர் டெஸ்ட் போட்டியுடன் இந்தத் தொடர் ஆரம்பமாகவுள்ளது. இதனைத் தொடர்ந்து ஐந்து போட்டிகளைக் கொண்ட இளையோர் ஒருநாள் போட்டித் தொடர் ஒக்டோபர் 22 தொடக்கம் 31 ஆம் திகதி வரை அதே மைதானத்தில் நடைபெறும்.

இலங்கை இளையோர் குழாம்: சினெத் ஜயவர்தன (தலைவர்), மல்ஷ தருப்பதி (உப தலைவர்), புலிந்து பெரேரா, விஷான் ஹெலம்பகே, ரவிஷன் நெத்சர, ஷருஜன் ஷண்முகநாதன், தினுர கலுபஹன, விஹாஸ் தெளமிக்க, விஷ்வ லஹிரு, கருக சன்கேத், ரவிஷன் பெரேரா, கவீஷ பியுமால், ஹிரான் ஜயசுந்தர, கீதிக டி சில்வா, ருசந்த கமகே, மனுல குளரத்ன.

## சர்வதேச செய்திகள்

# பணயக்கைதிகளை விடுவிக்கும் வரை காசாவில் 'முழு முற்றுகை' தொடரும்

## தொடரும் வான் தாக்குதல்களுக்கு மத்தியில் இஸ்ரேல் உறுதி

ஹமாஸ் அமைப்பினால் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் அனைத்து பணயக்கைதிகளும் விடுவிக்கப்படும் வரை காசாவில் செயற்படுத்தப்படும் முழு முற்றுகை கைவிடப்படாது என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது.

காசாவில் உள்ள மருத்துவமனைகள் பிணவறைகளாக மாறுவதை தவிர்க்க எரிபொருளைத் தரும்படி செஞ்சிலுவை சங்கம் கோரிக்கை விடுத்த நிலையிலேயே இஸ்ரேல் நேற்று (12) இந்த நிபந்தனையை விடுத்தது.

ஏற்கனவே இஸ்ரேலின் முற்றுகையில் இருக்கும் காசாவில் நீர, மின்சாரம், எரிபொருள் மற்றும் உணவு விநியோகத்தை இஸ்ரேல் கடந்த திங்கட்கிழமை (09) தொடக்கம் துண்டித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை இஸ்ரேலுக்கு ஊடுருவிய பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலில் ஆயிரத்துக்கும் அதிகமான யூதர்கள் கொல்லப்பட்ட நிலையில், காசாவில் ஆட்சி புரியும் ஹமாஸ் அமைப்பை அழித்தொழிப்பதாக இஸ்ரேல் உறுதி பூண்டுள்ளது.

சனிக்கிழமை இடம்பெற்ற தாக்குதல்களில் உயிரிழந்த இஸ்ரேலியர்கள் எண்ணிக்கை 1,300ஆக அதிகரித்துள்ளது. பொதுப்பாலானவர்கள் தமது வீடுகள், வீதிகள் மற்றும் நடன நிகழ்ச்சி ஒன்றில் கொல்லப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. இதன்போது பலஸ்தீன போராளிகளால் கடத்திச் செல்லப்பட்ட 97 பணயக்கைதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.



காசா எல்லையில் இருக்கும் இஸ்ரேலிய நகரங்களை பலஸ்தீன போராளிகளிடம் இருந்து விடுவித்து அங்கு மேற்கொண்ட தேடுதல்களின்போது மேலும் சடலங்கள் மீட்கப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கு பதிலடியாக 2.3 மில்லியன் மக்கள் வசிக்கும் முழு முற்றுகையில் உள்ள காசா மீது இஸ்ரேல் இதுவரை இல்லாத அளவு சரமாரி வான் தாக்குதல்களை நடத்தி வருகிறது. இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன மோதலின் 75 வருட வரலாற்றில் இல்லாத அளவுக்கு இந்தத் தாக்குதல் தீவிரம் அடைந்திருப்பதோடு பல குடியிருப்புப் பகுதிகளும் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

இந்தக் குண்டு தாக்குதல்களில் 1,200க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டு 5,000க்கும் அதிகமானவர்கள் காயமடைந்திருப்பதாக காசா நிர்வாகம் நேற்று தெரிவித்தது. எனினும் தாக்குதல்கள் தொடர்ந்து அதிகரித்து வரும் சூழலில் உயிரிழப்பு எண்ணிக்கையும் வேகமாக அதிகரித்து வருகிறது.

அங்குள்ள சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையம் நிறுத்தப்பட்டதோடு மருத்துமனைகளின் அவசர மின்பிறப்பாக்கிகளுக்கான எரிபொருளும் தீர்ந்து வருகிறது.

இந்த அவசர மின்பிறப்பாக்கிகளுக்கான எரிபொருள் விரைவில் தீர்ந்து வருவதாக சர்வதேச செஞ்சிலுவை சங்கம் எச்சரித்துள்ளது.

"இந்த மோதலில் மனிதத் துயரங்கள் வெறுக்கத்தக்க வகையில் இருப்பதோடு பொதுக்களின் துன்பத்தை குறைக்க (மோதலில் ஈடுபடும்) தரப்புகளை கேட்டுக்கொள்கிறோம்" என்று சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் பிராந்திய பணிப்பாளர் பப்ரிசியோ கர்போனி நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

"காசாவில் மின்சாரம் இல்லை என்பது, மருத்துவமனைகளிலும் மின்சாரம் இல்லாமல்போகும், பிறந்த குழந்தைகளை இன்குபேட்டரில் வைப்பது மற்றும் வயதான நோயாளர்களுக்கு ஒட்சிசன் வழங்குவதில் அச்சுறுத்தல் ஏற்படுவதோடு, சீறுநீரக இரத்தமாற்று சிகிச்சை நிறுத்தப்பட்டு, எக்ஸ்ரே எடுக்க முடியாத நிலை ஏற்படும். மின்சாரம் இல்லை என்பது மருத்துவமனைகள் பிணவறைகளாக மாறும் அச்சுறுத்தல் உள்ளது" என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

எனினும் இஸ்ரேலிய பணயக்கைதிகளை விடுக்காவிட்டால் முற்றுகைக்கு விலக்கு அளிக்க முடியாது என்று இஸ்ரேலிய வலுசக்தி அமைச்சர் இஸ்ராயேல் காட்ஸ் தெரிவித்துள்ளார்.

"காசாவுக்கான மனிதாபிமான உதவிகளா? இஸ்ரேலிய பணயக்கைதிகள் வீடு திரும்பும் வரை மின்சார பொத்தான்கள் திறக்கப்படாது, நீர் விநியோகம் திறக்கப்படாது மற்றும் எரிபொருள் டிரக்குகள் அனுமதிக்கப்படமாட்டாது. மனிதாபிமானத்திற்காக மனிதாபிமானம். யாரும் ஒழுக்கத்தை மீற முடியாது" என்று காட்ஸ் ட்விட்டர் என்று முன்னர் அழைக்கப்பட்ட எக்ஸ் சமூக தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை தொடக்கம் காசாவில் இஸ்ரேல் 2,600க்கும் அதிகமான இலக்குகள் மீது தாக்குதல் நடத்தி இருப்பதோடு காசாவில் இருந்து இஸ்ரேல் மீது 5000க்கும் அதிகமான ரொக்கெட் குண்டுகள் வீசப்பட்டுள்ளன.

இதேவேளை காசாவின் எகிப்து எல்லையான ரபா மீது தாக்குதல் நடத்துவதை நிறுத்தும்படி எகிப்து வெளியுறவு அமைச்சு இஸ்ரேலை கேட்டுள்ளது. இந்த எல்லைக் கடவை திறந்திருப்பதாக அது குறிப்பிட்டுள்ளது.

காசா மீது இஸ்ரேல் முழு முற்றுகையை அமுல்படுத்தி இருக்கும் நிலையில் அங்கிருந்து வெளியேறுவதற்கான ஒரே வழியாக எகிப்துடனான ரபா எல்லை உள்ளது. எனினும் இஸ்ரேலின் வான் தாக்குதல்களால் அந்த எல்லைப் பகுதி நேற்று முன்தினம் மூடப்பட்டிருந்தது. அது திறக்கப்பட்டாலும் எல்லைக் கடவையை கடந்து செல்வதற்கான பட்டியல் நீண்டுள்ளது. சாதாரணமாக இந்த எல்லை வழியாக நாளொன்றுக்கு சுமார் 400 பேர் பயணிப்பதற்கே அனுமதி உள்ளது.



### தரைவழி தாக்குதல் பற்றி முடிவில்லை

காசா பகுதியின் தெற்கில் உள்ள பிரதான நகரான கான் யூனிஸ் மருத்துவமனையில் தனது வீடு தாக்கப்பட்ட நிலையில் அழும் சிறுமி ஒருவரை பெண் ஒருவர் சமாதானம் செய்து வருகிறார். அந்த சிறுமி "எனக்கு எனது தாய் வேண்டும்" என்று கூச்சலிட்டு அழுகிறார்.

"அவள் தனது தாயை தேடி அழுகிறாள். தாய் எங்கே என்று எமக்குத் தெரியவில்லை" அந்த சிறுமியை கைகளில் சுமந்துகொண்டிருக்கும் அந்தப் பெண் குறிப்பிட்டார்.

காசாவின் அல் ஷட்டி அகதி முகாம் தரைமட்டமாக்கப்பட்ட நிலையில் குடியிருப்பாளர்கள் இடிபாடுகளில் உயிர்தப்பியோரை தேடி வெறுங்கைகளால் கற்குவியல்களை அகற்றி வருகின்றனர். போதுமான எரிபொருள் மற்றும் இந்த கட்டட இடிபாடுகளை அகற்றும் கருவிகள் இல்லை என்று மீட்பாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த நான்கு நாட்களில் காசாவில் குறைந்தது 340,000 காசா மக்கள் வீடுகளை இழந்திருப்பதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு தெரிவித்துள்ளது. இவர்களில் கிட்டத்தட்ட 220,000 பேர் ஐ.நாவினால் நடத்தப்படும் 92 பாடசாலைகளில் அடைக்கலம் பெற்றுள்ளனர்.

மறுபுறம் தெற்கு இஸ்ரேலின் அஷ்கோல் நகரில் காசாவில் இருந்து நேற்று வீசப்பட்ட ரொக்கெட் குண்டுகளில் கட்டடங்கள் மற்றும் வாகனங்கள் சேதமடைந்துள்ளன.

இந்நிலையில் இஸ்ரேலுக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தும் வகையில் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் நேற்று இஸ்ரேலை சென்றடைந்தார். போர் பரவுவதை தடுப்பது, அமெரிக்கப் பிரஜைகள் உட்பட பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு அழுத்தம் கொடுக்கும் முயற்சியில் பிளிங்கன் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது அவர் இன்று (13) ஜோர்தான் சென்று ஜோர்தானிய மன்னர் அப்துல்லா மற்றும் பலஸ்தீன அதிகாரசபையின் தலைவர் மஹ்மூத் அப்பாஸை சந்திக்கவுள்ளார்.

பலஸ்தீனர்களின் அவலங்களை புறக்கணித்ததே வன்முறை அதிகரிக்கக் காரணம் என்று குற்றம்சாட்டியிருக்கும் அப்பாஸ், காசாவுக்கு வெளியில் இருக்கும் பலஸ்தீனர்களும் இஸ்ரேலிய இராணுவத்தை எதிர்க்கும்படி அழைப்பு விடுத்துள்ளார்.

இஸ்ரேலில் போர் காலத்திற்கான அவசர ஐக்கிய அரசு ஒன்று கடந்த புதன் அன்று அமைக்கப்பட்டது. இதன்மூலம் எதிர்க்கட்சியினரும் பிரதமர் பென்ஜமின் நெதன்யாகுவின் அமைச்சரவையில் இடம் பெற்றுள்ளனர்.

காசா மீதான தரைவழித் தாக்குதல் ஒன்றுக்கு வாய்ப்பை அதிகரிக்கும் வகையில் இஸ்ரேல் ஆயிரக்கணக்கான மேலதிக படைகளை குவித்து வைத்துள்ளது. எனினும் அவ்வாறான ஒரு படையெடுப்பு பற்றி இன்னும் இறுதி முடிவு ஒன்று எடுக்கப்படவில்லை. ஆனால் நாம் அதற்கு தயாராக இருப்பதாக இஸ்ரேலிய இராணுவ பேச்சாளர் லெப்டினன்ட் கேணல் ரிச்சார்ட் ஹெட்ச் நேற்று தெரிவித்தார்.

இந்தப் போர் பிராந்தியத்தில் இராஜதந்திர முயற்சிகளையும் சீர்குலைத்துள்ளது. சவூதி அரேபியாவுடன் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்த இஸ்ரேல் முயற்சித்து வந்த நிலையிலேயே இந்த மோதல் ஏற்பட்டது.

இதேவேளை இஸ்ரேல்–காசா சண்டை மேலும் மோசமடைவதைத் தடுக்க வேண்டுமென்று ஐக்கிய நாட்டு சபை வலியுறுத்தியுள்ளது.

சண்டையில் பலஸ்தீன வட்டாரத்தில் ஐக்கிய நாடுகள் சபை நடத்தும் பாடசாலையைச் சேர்ந்த ஊழியர்களும் மாணவர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

குறைந்தது 11 ஊழியர்களும் 30 மாணவர்களும் உயிரிழந்திருப்பதாக ஐக்கிய நாட்டு அமைப்பு உறுதிப்படுத்தியது.

காசாவில் சிக்கியுள்ள பலஸ்தீனர்களைப் பாதுகாப்பாக வெளியேற்றும் வழிகளை அமெரிக்கா, எகிப்து, இஸ்ரேல் ஆகியவை ஆராய்ந்து வருகின்றன.

காசா நெருக்கடி குறித்து விவாதிக்க ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை நாளை இன்று (13) கூடவுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைச் செயலாளர் ஆன்ட்டோனியோ குட்டெரஸ் நேற்று முன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்தார். இஸ்ரேலும் காசாவும் வன்செயல் சூழலில் சிக்கியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

காசாவில் பிணை பிடிக்கப்பட்டுள்ள இஸ்ரேலியர்கள் அனைவரையும் விடுவிக்குமாறு அவர் அழைப்பு விடுத்தார். எல்லா நேரமும் சர்வதேச சட்டம் மதிக்கப்பட வேண்டுமென குட்டெரஸ் கேட்டுக்கொண்டார்.

காசாவிலுள்ள ஐக்கிய நாடுகள் கட்டடங்களில் சுமார் 220,000 பலஸ்தீனர்கள் தங்கியுள்ளதாக அவர் சொன்னார். அந்தக் கட்டடங்கள் மீது ஒருபோதும் தாக்குதல் நடத்தப்படக் கூடாது என்று அவர் வலியுறுத்தினார்.

பலஸ்தீன வட்டாரங்களுக்கு மனிதாபிமான உதவி சென்று சேருவதைத் தடுக்கக் கூடாது என்றும் அவர் கூறினார்.

தென் லெபனானிலிருந்து தாக்குதல் நடக்கும் சாத்தியம் குறித்து அவர் அச்சம் தெரிவித்தார்.

### சிரியா மீது தாக்குதல்

மறுபுறம் சிரிய தலைநகர் டமஸ்கஸ் விமான நிலையம் மற்றும் அலப்போ நகர் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதாக சிரிய அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஏவுகணை தாக்குதல்களால் விமானநிலையம் சேதமடைந்திருப்பதாக அரச ஊடகம் தெரிவித்துள்ளது. சிரிய வான் பாதுகாப்பு அமைப்பு பதில் நடவடிக்கை எடுத்ததாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அலெப்போவில் பல வெடிப்புகள் இடம் பெற்றதாக மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. ஈரானிய வெளியுறவு அமைச்சர் சிரியா பயணிக்கவுள்ள நிலையிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

சிரியா மற்றும் ஈரான் இரு நாடுகளும் இஸ்ரேலை எதிரி நாடாக கருவதுவதோடு ஈரான், ஹமாஸ் அமைப்புக்கு ஆதரவு அளித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சிரியாவில் ஈரானுடன் தொடர்புபட்ட இலக்குகள் மீது இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருவதோடு அது பற்றி அரிதாகவே வெளிப்படையாக கூறிவருகிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஒக்டோபர் மாதம் 13ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

தினகரன்
THINAKARAN

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

## பொது அறிவிப்பு

**2G & 3G செயல்படுத்தப்பட்டமொபைல் போன்களை மட்டுமே பயன்படுத்தும் டயலொக் அக்சியாட்டா பி.எல்.சி (டயலொக்) நெட்வொர்க்கின் சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு**

3G மொபைல் நெட்வொர்க்கை **15.11.2023** திகதி நிறுத்துவதற்கு இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும். ஆணைக்குழு தனது அனுமதியை டயலொக் அக்சியாட்டா பி.எல்.சி (டயலொக்) நிறுவனத்திற்கு வழங்கியுள்ளதாக பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. 3G நெட்வொர் நிறுத்தப்பட்ட பின் 2G & 3G செயல்படுத்தப்பட்டமொபைல் போன்களை மட்டுமே பயன்படுத்தும் டயலொக் சந்தாதாரர்களின் 3G இணைப்பு மட்டும், நெட்வொர்க் நிறுத்தப்பட்ட தேதிக்குப் பிறகு தானாகவே துண்டிக்கப்படும். டயலொக் 2G நெட்வொர்க்கின் குரல் மற்றும் குறுஞ்செய்தி இணைப்பு அனைத்து 2G மற்றும் 3G வாடிக்கையாளர்களுக்கும் தடையின்றி தொடர்ந்தும் செயல்படும்.

3G நிறுத்தம் முதன்மையாக, சிறந்த வேகம் மற்றும் திறனை வழங்கும் 4G சேவைகளை வழங்குவதற்கு அதிர்வெண்களைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. டயலொக்கின் 3G நெட்வொர்க்கின் நிறுத்தம் காரணமாக இடைநிலைக் காலத்தின் முடிவில் ஏற்படும் சேவை இடையூறுகளைத் தவிர்ப்பதற்காக டயலொக்கிற்கு 15 மாத காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது. பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு மாறுதல் கட்டத்தின் போது டயலொக் அதன் 3G சந்தாதாரர்களில் குறைந்தது 90% ஐ தங்கள் 4G நெட்வொர்க்கில் உள்வாங்கக் கடமைப்பட்டுள்ளது.

1. டயலொக் சந்தாதாரர்கள் 3G நிறுத்தப்படுவதற்கு முன்னதாக 4G நெட்வொர்க்கிற்கு மாறுவதை ஊக்குவிக்க பொது விழிப்புணர்வு பிரச்சாரங்களை நடத்துங்கள்.
2. அதன் 3G சந்தாதாரர்களுக்கு 4G கைபேசிகளை தவணை அடிப்படையில் மானிய விலையில் வழங்குவதற்கான ஒவ்வொரு முயற்சியையும் எடுங்கள்
3. முதல் 06 மாதங்களுக்கு கவர்ச்சிகரமான கட்டணப் பொதிகள், பல்வேறு சலுகைகள், தொடர்ச்சியான ஊக்கத்தொகைகளை வழங்குவதன் மூலம் மாற்றத்தை இயக்கவும்
4. அதன் 3G சந்தாதாரர்களுக்கு, குறிப்பிட்ட காலக்கெடுவிற்கு முன், 4G செயல்படுத்தப்பட்ட கைபேசிகளை மாற்ற, வழக்கமான இடைவெளியில், SMS அனுப்புவதன் மூலம் அவர்களுக்குத் தெரிவிக்கவும்

நீங்கள் டயலொக் சந்தாதாரராக இருந்து, இன்னும் 2G மற்றும் 3G வசதியுள்ள / போனை மட்டுமே பயன்படுத்தினால், சலுகை விதிமுறைகளின் கீழ் புதிய மொபைல் / போனுடன் 4G இணைப்பைப் பெற, உடனடியாக 737 என்ற குறுகிய குறியீடு மூலம் டயலொக்கைத் தொடர்புகொள்ளலாம்.

குறிப்பிட்ட காலக்கெடுவில் 4G மொபைல் / போனைப் பெறுவதில் ஏதேனும் சிரமம் ஏற்பட்டால், இந்த ஆணையத்தில் புகார் அளிக்கலாம்.

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு**
**இல. 276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 08.**
**மின்னஞ்சல்:** smcomp@trc.gov.lk **தொலைநகல்: 011 2689341** **தொலைபேசி: 011 2689345**

## இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/03/PT/6505(MAR) | Fuel Injection Pump Spares for Wartsila 9L20 Main Engines of M/T Barana II and MT Vijayabahu | 90,000.00 | 1,000.00 | 09-11-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/05/PT/6512(EL) | 50 Nos. Digital Operator Units for Inverters and Converters of Cranes | 15,000.00 | 1,000.00 | 09-11-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/02/PT/6519(MAR) | Spares for Napier NA 297 Turbocharger of Wartsila 8L26 Main Engines of M/T Gotaimbara& M/T Nandimithra | 120,000.00 | 3,500.00 | 09-11-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/06/PT/6518(EL) | 180 M of 4 Pair X 2.5 SQMM Festoon Cable for Cranes at JCT | 20,000.00 | 1,000.00 | 09-11-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/05/PT/6522(EL) | Flexible Multi – Core Cable for Spreaders of STS Crane | 80,000.00 | 1,000.00 | 14-11-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/02/PT/6524(EL) | Inductive Sensors for Lock Unlock System of Spreader of ECT Cranes | 40,000.00 | 1,000.00 | 14-11-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/03/PT/6525(EL) | 50 Nos. 300W Warm White Led Light Fittings for JCT | 75,000.00 | 1,000.00 | 14-11-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/06/PT/6523(EL) | Spares for the Lock Unlock System of Stinis Spreaders of ECT Cranes | 15,000.00 | 1,000.00 | 14-11-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/05/PT/6527(EL) | 05 Nos. Magnetic Break Units for Fuji Cranes at JCT | 20,000.00 | 1,000.00 | 16-11-2023 மு.ப. 10.00 மணி |
| CMS/LP/22/PT/03/051 | Bearing Housing for Spin Turn Device of Mitsui RTGS at JCT 06 Nos. | 50,000.00 | 1,000.00 | 02-11-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/23/PT/04/062 | Sealed Type Battery 12V 200AMPH ( Semi Maintenance Free ) – 20 Nos. | 20,000.00 | 1,000.00 | 02-11-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/23/PT/04/068 | Spares for 15 Ton Mitsubishi FD 150 ANT/ ANMI Fork Lift Trucks -9 | 220,000.00 | 3,500.00 | 02-11-2023 பி.ப. 1.30 மணி |
| CES/LP/23/PT/04/054 | 10 Nos. Mild Steel Channel Irons 200MM X 75MM X 23.4KG/M ( EACH 6.0 M Long) | 25,000.00 | 1,000.00 | 03-11-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/23/PT/02/052 | 12600 Liter Caltex Meropa 150 ( P – 383 ) | 184,500.00 | 3,500.00 | 03-11-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/23/PT/08/063 | 03 Nos. Telescoping Belt – 45 FT ( 2611 – 0085 – 0510 ) for Stinis Twin Lift Spreader | 48,000.00 | 1,000.00 | 03-11-2023 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை (PCA 03 படிவம்) கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை பிரதான முகாமையாளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2023 ஒக்டோபர் 13ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள்வள முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் எண்: 2381652, 2470443**

## விவசாய பட்டபின்படிப்பு நிறுவகம் பேராதனைப் பல்கலைக்கழகம் இலங்கை

## பணிப்பாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரல்

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய பட்டபின்படிப்பு நிறுவகத்தின் பணிப்பாளர் பதவிக்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் விவசாயத்துறையுடன் தொடர்பான கலாநிதி பட்டப்பின்படிப்பு தகைமை மற்றும் நிர்வாக ரீதியாக அனுபவமுடைய 63 வயதை விட குறைந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் கடமைகளை செய்யக்கூடிய தொடர்புகளை ஏற்படுத்தி கல்விக்கு தலைமை தாங்கக்கூடிய, கல்விச் சூழலில் கடமைகளை நிறைவேற்றுவதற்காக தேவையான தனிப்பட்ட திறமைகள் மற்றும் நிறுவகம் தொடர்பான அர்ப்பணிப்பு மற்றும் புரிந்துணர்வுடன் கூடிய நபரொருவராக இருக்க வேண்டும்.

விவசாய விஞ்ஞான பட்டபின்படிப்பு நிறுவகத்தின் சட்ட விதிகளின் பிரகாரம் பணிப்பாளர் முழு நேர உத்தியோகத்தரொருவராகவும், பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராகவும் பிரதான கல்வி உத்தியோகத்தராகவும் நிறுவகத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தரும் ஆவார். பணிப்பாளர் நிறுவகத்தின் முகாமை சபையினதும் இணைப்புக் குழுவினதும் தலைவராக இருப்பதுடன் நிறுவகத்தின் ஒவ்வொரு கல்விச் சபையின் அங்கத்தவராவர். அவர்/அவள் பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி முதல் மூன்று வருட காலப்பகுதிக்காக அல்லது 65 வயது பூர்த்தியாகும் வரை இப்பதவியை வகிக்கலாம்.

இலங்கையின் விவசாயத்துறை தொடர்பான ஒரே பட்டப்பின் படிப்பு நிறுவனமான விவசாய பட்டபின்படிப்பு நிறுவகம் கடந்த 45 வருடங்களாக பல்வேறு விவசாயத் துறைகளில் வேகமாக வியாபித்துள்ளது. நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு கருத்திற்கொள்ளக்கூடிய பங்களிப்பொன்றை வழங்குவதற்காக விவசாயத் துறையில் எதிர்வுகூறக்கூடிய மாற்றங்களுக்கு இணங்க தமது கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை மேலும் விரிவாக்குவதற்கும் பல்வகைப்படுத்துவதற்கும் விரிவான பல செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு நிறுவகம் எதிர்பார்த்துள்ளது.

இச்சவால்களுக்கு முகங்கொடுப்பதற்காக தொலை நோக்குள்ள கல்வி பின்னணி மற்றும் ஆராய்ச்சி மற்றும் முகாமைத்துவத்தின் விசேட சாதனைகளை கொண்டுள்ள ஒருவரை முகாமைத்துவ சபை எதிர்பார்க்கின்றது.

எதிர்பார்ப்புள்ள விண்ணப்பதாரிகள் தமது பிறந்த திகதி, நிறுவகத்தின் அபிவிருத்தி தொடர்பான நோக்க கூற்றொன்று, பதவிக்கு நியமிக்கப்பட்டால் அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கும் நிலைமை தொடர்பான சுருக்கமான விபரமொன்று என்பவற்றை உள்ளடக்கி விரிவான விண்ணப்பமொன்றை 2023.11.12 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் பதிவு தபாலில், பிரதி பதிவாளர், விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகம், பழைய கலஹா வீதி, பேராதனை. என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும். இல்லாவிட்டால் அத்திகதி அல்லது அதற்கு முன்னர் அவருக்கு கையளிக்க வேண்டும். அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் சேவை புரியும் விண்ணப்பதாரிகள் அவர்/அவள் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க முடியுமென குறிப்பிட்டு சேவை வழங்குநரின் கடிதமொன்றை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்காக பிரதி பதிவாளர், விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகம், (தொலைபேசி இல. 081-2388203) அல்லது நிறுவகத்தின் இணையத் தளத்திற்கு பிரவேசிக்கவும். (www.pgia.ac.lk)

**பிரதி பதிவாளர்,**
**விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகம்,**
**2023.10.11**

SUNDAY OBSERVER Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383 E-mail - classified@lakehouse.lk

Trusted Marketplace of Classified Advertisers
Sunday Observer adz it's what you want Classified


For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-
077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

## வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2024

# மாத்தளை மாவட்டச் செயலகம்

மாத்தளை மாவட்டச் செயலகம் மற்றும் மாத்தளை மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு 2024ஆம் வருடத்தில் பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகளுக்காக வழங்குநர்கள் பதிவு செய்து கொள்ளப்படுவர். இதற்காக தகுதிவாய்ந்த வழங்குநர்களிடமிருந்து 2023-11-03ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொருட்கள் வழங்குதல் மற்றும் சங்கேத இல.

| சங்கேத இல. | பொருட்களின் விபரம் |
|---|---|
| G 01 | அலுவலக காகிதாதிகள், கணனி சார்ந்த காகிதாதிகள், பாடசாலை உபகரணங்கள் |
| G 02 | கணனி அச்சுப் பொருட்கள் மற்றும் பாவனைப் பொருட்கள் (டோனர் மற்றும் ரிபன்) |
| G 03 | நூலகப் புத்தகங்கள் மற்றும் கிரந்தங்கள் வழங்குதல் |
| G 04 | அலுவலக உபகரணங்கள் (மேசை, கதிரை, கெபினட், ராக்கை போன்றன) |
| G 05 | துணி வகைகள் (சீருடைகள், திரைச்சீலைகள் மற்றும் மேசை விரிப்புகள் போன்றன) |
| G 06 | பத்திக் கைத்தொழிலுக்குத் தேவையான மூலப்பொருட்கள் வழங்குதல் |
| G 07 | கணனி, புகைப்படப் பிரதி இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள் உட்பட அலுவலக உபகரணங்கள் |
| G 08 | நேரப் பதிவு இயந்திரம் மற்றும் உபகரணங்கள் வழங்குதல் |
| G 09 | கமரா, புரஜெக்டர் மற்றும் வீடியோ உபகரணங்கள் வழங்குதல் |
| G 10 | மின்சார உபகரணங்கள் (மின் விசிறிகள், காற்றுச்சீராக்கிகள், மின் விளக்குகள், மின் குமிழ்கள் போன்றன) |
| G 11 | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் |
| G 12 | மோட்டார் வாகன டயர், டியூப் மற்றும் பெட்டறிகள் |
| G 13 | நுளம்பு வலைகள் / தலையணைகள் வழங்குதல் |
| G 14 | மரப் பெயர்ப் பலகைகள், திகதி முத்திரைகள் மற்றும் பிளாஸ்டிக் பெயர்ப் பலகைகள் |
| G 15 | துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் (ஈர்க்கிள், தும்பு, தூரிகை போன்ற பாவனைப் பொருட்கள் வழங்குதல்) |
| G 16 | விளையாட்டுப் பொருட்கள், பதக்கங்கள், விருதுகள் மற்றும் விளையாட்டு உடைகள் |
| G 17 | நீர்க்குழாய் சார்ந்த உபகரணங்கள் |
| G 18 | கட்டிடப் பராமரிப்புப் பொருட்கள் |
| G 19 | நிறப்பூச்சு வகைகள் |
| G 20 | அனைத்து வகையான கண்ணாடிகள் மற்றும் Glass pad தயாரித்தல் |
| G 21 | பதாகைகள், கொடிகள், டிஜிட்டல் அச்சுவேலைகள், சுவரொட்டிகள், அழைப்பிதழ்கள், ஸ்டிக்கர்கள் அச்சிடுதல் |
| G 22 | பாதுகாப்பு வீடு - மழை உறையுள் (Rain Shelter) |
| G 23 | கண்காட்சிக் குடில்கள், கூடாரங்கள், கதிரைகள், மேசைகள், கார்பட், விளக்குகள், மின்பிறப்பாக்கிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள், பல்லூடக உபகரணங்கள், நெஸ்கபே இயந்திரங்கள், கொடிகள், மேடைகள், பெரபோலிக் கூடாரங்கள், பிளட்போம், மேசைகள், மின் விசிறிகள், பொடியம், ஸ்டூல், LED திரைகள், வர்ண கொடிகள் என்பவற்றை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் |
| G 24 | மருத்துவ உபகரணங்கள் |
| G 25 | தோரணங்களை அமைத்தல், மேடைகளை அமைத்தல், மலர் அலங்காரங்களுக்கு விளக்குகளை வடிவமைத்து வழங்குதல் |
| G 26 | முன்பள்ளி உபகரணங்கள் விளையாட்டு முற்றத்திற்குத் தேவையான உபகரணங்கள் |
| G 27 | இயந்திரம் மற்றும் இயந்திரோபகரணங்களை (அதிவேக தையல் இயந்திரம், மின் பிறப்பாக்கி இயந்திரம், சக்திவலு உபகரணங்கள்- Power Tools போன்றவை மற்றும் ஏனைய இயந்திரங்கள்) |
| G 28 | கன்று வழங்குநர்கள் |
| G 29 | விவசாய உபகரணங்கள், விவசாய கிருமிநாசினிகள், உரம் வழங்குதல் மற்றும் நீர் வழங்கல் சேவைகள் |
| G 30 | ஒலிபெருக்கி வசதிகளை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் |
| G 31 | நாட்டியக் குழுக்களுக்கான ஒப்பனைகள் / வேட ஆக்கங்கள் |
| G 32 | தாள வாத்தியக் கலைஞர்கள் மற்றும் ஹேவிசி வாத்தியக் கலைஞர்கள் / நாட்டியக் குழுக்கள் |
| G 33 | நாட்டியக் குழுக்களுக்காக உடைகளைத் தைத்தல் மற்றும் விளையாட்டு உடைகளை தயாரித்தல் மற்றும் அலுவலக சீருடைகளை தயாரித்தல் |
| G 34 | குடிநீர் போத்தல்களை வழங்குதல் |
| G 35 | விழாக்களை புகைப்படமெடுத்தல் மற்றும் வீடியோ பதிவு செய்தல், உத்தியோகபூர்வ அடையாள அட்டைகளைத் தயாரித்தல், வீடியோ பதிவு செய்து LED திரை மூலம் காட்சிப்படுத்துதல் |
| G 36 | விழாக்களுக்கு தற்காலிக கூடாரங்கள் (மாகி ஹட், VIP ஹட் போன்றன) இயற்கை மற்றும் செயற்கை மலர்களை வழங்குதல் |
| G 37 | தீயணைப்பு உபகரணங்கள் வழங்குதல் மற்றும் பராமரித்தல் |
| G 38 | வாயு ரைபல் வழங்குதல் மற்றும் பராமரித்தல் |
| G 39 | CCTV கமரா முறைமையைப் பொருத்துதல் மற்றும் பராமரித்தல் |
| G 40 | பூஜைப் பொருட்களை வழங்குதல் (காவியுடைகள் போன்றன) |
| G 41 | உயிர்காப்பு அங்கிகளைத் தைத்தல் |
| G 42 | பாதுகாப்பு இல்லங்கள் |
| G 43 | நிழல் வலைகள் |

**சேவை வழங்கள் மற்றும் சங்கேத இலக்கங்கள்**

| சங்கேத இல. | சேவை விபரங்கள் |
|---|---|
| S 01 | வாகன திருத்தவேலைகள் |
| S 02 | வாகனங்களை சேர்விஸ் செய்தல் |
| S 03 | வாகனங்களுக்கு குஷன் இடுதல், கூடாரம் தைத்தல், வாகனங்களுக்கான கெனபி ஹட் பொருத்துதல் |
| S 04 | மின்சார உபகரண திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல் |
| S 05 | கணனி இயந்திரம், அச்சு இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரம், தொலைநகல் இயந்திரம் மற்றும் அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள், சேர்விஸ் செய்தல் மற்றும் கணனி வலையமைப்பிடல் |
| S 06 | மின்சார தொழில்நுட்பச் சேவைகள் மற்றும் தொலைபேசி சேவைகள் |
| S 07 | பாதுகாப்புச் சேவைகள் |
| S 08 | சுத்திகரிப்பு, துப்புரவேற்பாட்டுச் சேவைகள் மற்றும் கலி வண்டி சேவைகள் |
| S 09 | சிற்றுண்டி வகைகள், வைபவங்கள் மற்றும் அலுவலக செயலமர்வுகளுக்கான உணவு பானங்களை வழங்குதல் |
| S 10 | போக்குவரத்து சேவைகள் வழங்குதல் (கெப் சர்விஸ், வேன், பஸ், லொறிகளை வாடகைக்கு பெற்றுக்கொள்ளல் / பவுசர் வசதிகளை பெற்றுக்கொள்ளல்) |
| S 11 | அரச தனியார் நிறுவனங்களில் தங்குமிட வசதிகள் |
| S 12 | பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான மண்டப வசதிகள் |
| S 13 | படகுகளை சேர்விஸ் செய்தல் |
| S 14 | வளிச் சீராக்கி இயந்திரங்களை சேர்விஸ் செய்தல் |
| S 15 | மின் பிறப்பாக்கி இயந்திரங்களுக்கான திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல் |
| S 16 | மின்சார ஆலோசனை சேவைகள் |
| S 17 | மின் பொறியியல் ஆலோசனைச் சேவைகள் மற்றும் இயந்திரப் பொறியியல் ஆலோசனைச் சேவைகள் |
| S 18 | ஒலிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கான ஆலோசனைச் சேவைகள் (P.A System / Sound System) |
| S 19 | கேட்போர்கூட ஒலிக் கட்டுபாடு மற்றும் சேவைகள் (Control Room / Interpriter Room) |
| S 20 | சங்கிலி வாளை சேர்விஸ் செய்தல் (Chain saw) |
| S 21 | வாகனக் காப்புறுதி (முழுமையான காப்புறுதி) |

**வேலை வழங்குதல் மற்றும் சங்கேத இலக்கம்**

| சங்கேத இல. | வேலை விபரங்கள் |
|---|---|
| W 01 | அச்சு வேலைகள் (கணனி அச்சு வேகைள், ஓப்செட் அச்சு, புத்தகம் கட்டுதல் உட்பட) |
| W 02 | கட்டிட நிர்மாண திருத்தவேலைகள் மற்றும் வயரிங் செய்தல் (இக்டாட் பதிவெல்லையைக் குறிப்பிடுங்கள். ஆகக் குறைந்தது C-9) |
| W 03 | வீதி நிர்மாண திருத்தவேலைகள் (இக்டாட் பதிவெல்லையைக் குறிப்பிடுங்கள். ஆகக் குறைந்தது C-9) |
| W 04 | கட்டிடங்கள் உட்பட திரைச்சீலை இடல் |
| W 05 | அலுமினியம் பாட்டிஷன் செய்தல் |
| W 06 | உத்தியோகபூர்வ விடுதிகள் மற்றும் அரச கட்டிடங்களின் திருத்தவேலைகளுக்கான 50,000.00 ரூபாவுக்குக் குறைந்த பராமரிப்பு வேலைகள் |
| W 07 | நிறப்பூச்சு பூசுபவர்கள் |
| W 08 | குழாய் மற்றும் வடிகாலமைப்பு வேலைகள் |
| W 09 | அபாயகரமான கற்களை தகர்த்து அப்புறப்படுத்தல் |
| W 10 | அபாயகரமான மரங்களை வெட்டி அப்புறப்படுத்தல் |
| W 11 | மண் வெட்டுதல் மற்றும் போக்குவரத்து செய்வதற்கான இயந்திரோபகரணங்களை வழங்குதல் |
| W 12 | நீர்க் குழாய் முறைமைகளின் சிறு திருத்தவேலைகள் |
| W 13 | மின் முறைமைகளின் சிறு திருத்தவேலைகள் |
| W 14 | துப்புரவேற்பாட்டு நடவடிக்கைகள் (கழிவுநீர் / கலி) சிறு திருத்தவேலைகள் |
| W 15 | மரச் சட்டங்கள் / மரத்தாலான அறிவித்தல் பலகைகள் போன்ற மர உபகரணங்களை தயாரித்தல் |
| W 16 | தோட்ட அலங்கார வேலைகள் |
| W 17 | நீர்க் குழாய் முறைமை, நீர் பம்பிகளின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு |
| W 18 | மின் பிறப்பாக்கி இயந்திரங்களின் சேர்விஸ், பராமரிப்பு மற்றும் திருத்தவேலைகள் |
| W 19 | உள்ளக தொலைபேசி முறைமையை அமைத்தல் / பராமரிப்பு மற்றும் சேர்விஸ் |
| W 20 | இணையதள பராமரிப்பு, உள்ளக வலையமைப்பு (Server Room) முறைமை அமைத்தல், பராமரிப்பு மற்றும் சேர்விஸ் வேலைகள் |

பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்கள் ஒவ்வொரு உருப்படியின் பொருட்டும் வெவ்வேறாக 300.00 ரூபா வீதம் மாத்தளை மாவட்டச் செயலகத்தில் அல்லது மாத்தளை மாவட்டத்தின் எந்தவொரு பிரதேச செயலகத்தினதும் சிறாப்பருக்கு பணம் செலுத்தி (பொது வைப்புக் கணக்கிற்கு) வரவு வைக்கப்பட்ட பற்றுச்சீட்டை அந்தந்த அலுவலகத்தின் கணக்கிடல் பிரிவிற்குச் சமர்ப்பிப்பதன் பேரில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து பற்றுச்சீட்டின் பிரதியுடன் 2023 நவம்பர் 03ஆம் திகதி அல்லது அதற்கு முன் அந்தந்த அலுவலகங்களின் கணக்காளருக்கு ஒப்படைக்கலாம் அல்லது "மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், மாத்தளை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2024" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**மாவட்டச் செயலாளர் / அரச அதிபர்,**
**மாத்தளை.**

---

**LE/RE/208**

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி

# (HDFC வங்கி)

(காலத்திற்கு காலம் திருத்தம் செய்யப்பட்ட) 1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09ஆம் பிரிவின் கீழான

**பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வது தொடர்பான அறிவித்தல்**

கடன் இலக்கம் : 604725000384 மற்றும் 604725000421
கடனாளிகளின் முழுப் பெயர் : வர்ணகுலசூரிய மேரியன் மர்சி வசந்தி பிரணாந்து மற்றும் அஹங்கம லியனகே ஜயன குமார

இங்கு இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் மற்றும் 2011 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 2019.09.12 ஆம் திகதி 2141 ஆம் இலக்க இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியிலும் 2019.09.12 ஆம் திகதி "அத", "தினக்குரல்" மற்றும் "சிலோன் டுடே" பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டதன் பிரகாரம் பின்வரும் பணத்தினை அறவீடு செய்வதற்காக (எவ்வாறாயினும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் ஏதேனும் பணம் செலுத்தியிருந்தால் குறிப்பிட்ட பணத்தினை கழித்ததன் பின்னர் மிகுதிப் பணத்தினை அறவீடு செய்வதற்காக) கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் இலக்கம் 134, பெத்தகான வீதி, கோட்டே என்ற முகவரியில் வசிக்கும் அனுமதி பெற்ற ஏல விற்பனையாளர் பீ.கே.ஈ. சேனாபத்தி என்பவரினால் 2023.11.09 ஆம் திகதி பி.ப. 2.30 மணியில் இருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் அமைந்துள்ள இடத்தில் அல்லது HDFC வங்கி நிக்கவரட்டிய கிளையில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதனை குறிப்பிட்ட 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்படும் கடன்களை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகிறது.

இலக்கம் 8873 மற்றும் 5409 ஆம் இலக்கங்களைக் கொண்ட அடகுப்பத்திரங்களின்படி, எழுபத்து ஒன்பது இலட்சத்து ஓராயிரத்து முந்நூற்று தொண்ணூற்று ஐந்து ரூபா ஐந்து சதம் (ரூபா 7,901,395.05), 2019.07.31 ஆம் திகதி இலங்கை வரை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியுள்ளதால்,

**(1) முதலாவது கடன் தொகை 604725000384**

8873 ஆம் இலக்க அடகுப் பத்திரத்தின் மூலம் குறிப்பிட்ட முதலாவது கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான நாற்பத்து ஒரு இலட்சத்து இருபத்து மூவாயிரத்து ஐநூற்று அறுபத்து ஆறு ரூபா நாற்பத்து ஐந்து சதத்தினையும் (ரூபா 4,123,566.45), 2019.07.31 ஆம் திகதி வரை நிலுவையாகவுள்ள ஐந்து இலட்சத்து நாற்பதாயிரத்து மூன்று ரூபா முப்பத்து எட்டு சதத்தினையும் (ரூபா 540,003.38) இதன்படி முழுத் தொகையான நாற்பத்து ஆறு இலட்சத்து அறுபத்து மூவாயிரத்து ஐநூற்று அறுபத்து ஒன்பது ரூபா எண்பத்து மூன்று சதத்தினையும் (ரூபா 4,663,569.83) அறவீடு செய்வதற்கும்.

**இரண்டாவது கடன் தொகை 604725000421**

5409 ஆம் இலக்க அடகுப் பத்திரத்தின் மூலம் குறிப்பிட்ட இரண்டாவது கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத் தொகையான இருபத்து எட்டு இலட்சத்து முப்பத்து ஏழாயிரத்து இருநூற்று முப்பத்து எட்டு ரூபா பத்து சதத்தினையும் (ரூபா 2,837,238.10), 2019.07.31 ஆம் திகதி வரை நிலுவையாகவுள்ள நான்கு இலட்சத்து ஐநூற்று எண்பத்து ஏழு ரூபா பன்னிரெண்டு சதத்தினையும் (ரூபா 400,587.12) இதன்படி முழுத் தொகையான முப்பத்து இரண்டு இலட்சத்து முப்பத்து ஏழாயிரத்து எண்ணூற்று இருபத்து ஐந்து ரூபா இருபத்து இரண்டு சதத்தினையும் (ரூபா 3,237,825.22) இதன்படி மொத்த கூட்டுத் தொகையாக, எழுபத்து ஒன்பது இலட்சத்து ஓராயிரத்து முந்நூற்று தொண்ணூற்று ஐந்து ரூபா ஐந்து சதத்தினையும் (ரூபா 7,901,395.05) அறவீடு செய்வதற்கும்.

(02) குறிப்பிட்ட முதலாவது கடன் தொகையில் மீளச் செலுத்தாத தொகையான நாற்பத்து ஒன்று இலட்சத்து இருபத்து மூவாயிரத்து ஐநூற்று அறுபத்து ஆறு ரூபா நாட்பத்து ஐந்து சதத்திற்காக (ரூபா 4,123,566.45) அறவிட வேண்டிய 17.50% வீத வருடாந்த வட்டியினையும் மற்றும் இரண்டாவது கடன் தொகையில் மீளச் செலுத்தாத தொகையான இருபத்து எட்டு இலட்சத்து முப்பத்து ஏழாயிரத்து இருநூற்று முப்பத்து எட்டு ரூபா பத்து சதத்திற்காக (ரூபா 2,837,238.10) அறவிட வேண்டிய 17.50% வீத வருடாந்த வட்டியினையும் 2019.08.01 ஆம் திகதியிலிருந்து ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் திகதி வரை அறவீடு செய்து கொள்வதற்கும்,

(03) 2019.08.01 ஆம் திகதி தொடக்கம் ஆதனம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் திகதி வரை (அந்த இரு தினங்களும் அடங்கலாக) மேற்கூறப்பட்ட மொத்த நிலுவைத் தொகையான ஒன்பது இலட்சத்து பத்தொன்பதாயிரத்து ஐநூற்று தொண்ணூறு ரூபா நாற்பது சதத்திற்காக (ரூபா 919,590.40) மாதாந்தம் 2.00% வீத தாமத வட்டி ஒன்றினை ஆதனம் பகிரங்க ஏளத்தில் விற்பனை செய்யப்படும் திகதி வரை அறவீடு செய்து கொள்வதற்கும்,

(04) 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை, அறவீடு செய்வதற்காகும்.

கடன் இலக்கம்: 604725000384 மற்றும் 604725000421

**மேற்கூறப்பட்ட அட்டவணை**

வடமேல் மாகாணத்தில், புத்தளம் மாவட்டத்தில், குமாரபல்லம பத்துவவில் ஆனமடுவ பிரதேச சபை எல்லையில் மற்றும் மஹக்கும்புகடவல பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 612 A - ஆண்டிகம கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஆண்டிகம கிராமத்தில் அமைந்துள்ள அரச காணிக்கு 2017.09.22 ஆம் திகதி, அனுமதி பெற்ற நில அளவையாளர் எஸ்.எம்.எஸ்.கே. ஹேரத் என்ற என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 3199/2017 ஆம் இலக்க காணிவரை படத்தின்படி, 1ஆம் இலக்க காணித்துண்டின் எல்லைகளாக வடக்கே இ.கி.வ 1837ன்படி 158ஆம் இலக்க பாதையும் கிழக்கே இ.கி.வ1837ன் படி 159ஆம் இலக்க காணித்துண்டும். தெற்கே இ.கி.வ 1837ன்படி 161 ஆம் இலக்க காணித்துண்டும் மேற்கே பங்கதெனியவில் இருந்து ஆனமடுவ வரையிலான பிரதேச சபை பாதையும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு இரண்டு ஏக்கர் ஒரு ரூட் ஏழு பேச்சஸ்களாகும் (ஏக்.02 ரூட்.01. பேச். 07) ஹெக்டயார் (ஹெக் 0.928) இக்காணித்துண்டும் இதில் உள்ள கட்டிடங்கள் தாவரங்கள் பழவகைகள் உட்பட இதில் உள்ள உபகரணங்கள், ஹோட்டல் உபகரணங்கள், நீர் விநியோகக் கட்டமைப்பு உபகரணங்கள், தொலைத்தொடர்பு உபகரணங்கள், மின் விநியோகக் கட்டமைப்பு உபகரணங்கள் மற்றும் வாயு சீராக்கல் மேல் உபகரணங்கள் உட்பட விபரிக்கப்பட்டுள்ள காணியில் தற்போது நிறுவப்பட்டுள்ளதும் அல்லது இதன் பின்னர் காலத்துக்குக் காலம் நிறுவப்படும் அசையா இயந்திரங்கள் மற்றும் இயந்திராதிகள் பொறுத்துக்கள் இணைப்புக்கள் மற்றும் அனைத்தும் புத்தளம் காணிப்பதிவு காரியாலயத்தில் M/Maha/15/153 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த காணி இலக்கம். 1367 **(புத்/மகு/பு/63020)** என்ற அளிப்புப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள (464ஆம் அத்தியாயம்) காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் மற்றும் பாதுகாப்பு ஷரத்து மற்றும் நிபந்தனைகளின் கீழ் வங்கிக்கு அடகு வைப்பதற்காக மஹகும்புக்கடவல பிரதேச செயலாளரின் முன் அனுமதியுடன் அவரது இலக்கம் **MKK/LND/2/63020/612ஜ** என்ற இலக்கத்தினையுடைய 2018.02.21 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் மீள வழங்கப்பட்டுள்ளது.

**இரண்டாவது உப அட்டவணை**

**பாதுகாப்பு ஷரத்துக்கள்**

1. காணியில் அல்லது அதனகத்தே காணப்படும் அனைத்து கனிய வளங்களின் (இந்தப் பதத்தின் மூலம் இங்குள்ள பெறுமதி மிக்க மாணிக்க கற்களும் உள்ளடக்கப்படும்.) உரிமை, மற்றும் அகழ்வு, தேடுதல், நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் மற்றும் அவ்வாறான கனிய வளங்கலை வெளியில் எடுத்துச் செல்வதற்குமான உரிமை அரசிடம் ஒதுக்கப்பட்டுள்ளது.
2. காணிக்கான உரித்து தொடர்பில் காணியின் உரிமையாளர் என்ற வகையில் காணப்படும் உரிமையானது இந்த அளிப்பு இடம்பெறும் திகதியில் காணி மீது காணப்படும் பாதைக்கான உரிமையுடன் காணி மீதுள்ள ஏனைய உரிமைகளுக்கும் உட்பட்டதாகவே இருக்கும்.

**நிபந்தனைகள்**

1. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள குறைந்த உப பிரிவுகளாக பிரிக்கப்படும் அலகுகள், அதாவது உயர் நிலங்கள்...................... ஏக்கர் அல்லது....................... ஹெக்டயர் நீர்ப்பாசன வசதியுள்ள காணிகள்
2. இங்கு குறிப்பிடப்பட்ட குறைந்த அளவினைவிட, அதாவது ஏக்கர் அளவினைவிட குறைவாக குறிப்பிட்ட காணி துண்டாடப்பட்டு உரிமையாளரினால் பிறருக்கு வழங்க முடியாது.
3. எந்த ஒருவரும் 1 ஆவது நிபந்தனையில் குறிப்பிடப்பட்ட குறைந்த அளவுக்கு குறைவான பரப்பளவு கொண்ட காணியின் பிரிக்கப்பட்ட ஒரு காணித்துன்டின் உரிமையாளராக இருக்க முடியாது.
4. எந்த ஒருவரும் 2ஆவது நிபந்தனையில் குறிப்பிடப்பட்ட குறைந்த அளவுக்கு குறைவான பரப்பளவு கொண்ட காணியின் பிரிக்கப்படாத ஒரு காணித்துண்டின் உரிமையாளராக இருக்க முடியாது.
5. காணிக்கு அல்லது அதன் ஏதேனும் ஒரு துண்டிற் குடிநீர் வழங்க முடியுமாயின், அல்லது ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டுள்ள ஏதேனும் நீர்ப்பாசன நடவடிக்கைக்கான நிர்மாணப்பணி அல்லது நிர்மாணிக்கப்படவுள்ள ஒரு விடயம் காரணமாக நீரினை வழங்க முடியுமாயின் அல்லது அந்த நீர் வழங்கலை மேற்கொள்ள சாத்தியமான பிரதேசம் சம்பந்தமாக உரிமையாளர் (453ஆவது அத்தியாயம்) நீர்ப்பாசன கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள சட்ட திட்டங்களுக்கும் ஏற்ப செயற்பட வேண்டும்.
6. அரசாங்க அதிபரிடமிருந்து எழுத்து மூலமான அனுமதியுடன் சம்பந்தப்பட்ட அதிகாரியிடமிருந்து உரிமம் பெறாது அந்த காணியின் மீது அல்லது அதன் அகத்தே காணப்படும் எந்த ஒரு கணிய வளங்களையும் அகழ்தல், தேடுதல் அல்லது உபயோகித்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவது அல்லது வேறுவகைகளில் வெளியேற்றுவது உரிமையாளரினால் தவிர்க்கப்பட வேண்டும்.
7. பிரதேச செயலாளரின் முன் அனுமதியினை எழுத்து மூலமாக பெற்றுக் கொள்ளாது காணியினையோ அல்லது அதில் உள்ள எந்த ஒரு பகுதியினையோ விற்பனை செய்யக்கூடாது.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**பொது முகாமையாளர்**
**திகதி : 04/10/2023**

**இ.வீ.அ.நி.கூ. வங்கி**
**தே.வீ.அபி.அ.சபை கட்டிடம்**
**சேர். சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை**
**த.பெ.இல. 2085**
**கொழும்பு 02.**

---

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www. observerjobs. lk

---

**எனது இலக்கம் : RUWALAN/ACQTN/A2/53**
**பிரதேச செயலகம்,**
**ருவன்வெல்லை.**
**2023.09.21**

## 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி சுவீகரித்தல் (திருத்தப்பட்ட) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறு காணி சுவீகரித்தல் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்

இங்கு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை அரசுக்கு சுவீகரித்துக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. இது தொடர்பான மேலதிக விபரங்களிற்காக தயவு செய்து 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆந் திகதி வியாழக்கிழமை 2258/42 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானிப் பத்திரத்தில் (111) ஆம் பகுதியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| 1. பிரதேச செயலகப் பிரிவு | - | ருவன்வெல்லை |
| 2. கிராமம் | - | மொரலிய |
| 3. அமைவிடம் | - | 103 ஏ, மொரலிய கிராம உத்தியோகத்தர் பிரிவு |
| 4. ஆரம்ப வரைபட இலக்கம் | - | ஆ: வ: கே: 3585 |
| 5. காணியின் பெயர் | - | மொரலிஒய தோட்டம் |
| 6. காணித் துண்டு இலக்கம் | - | 1-3 |

**எச்.டி.எஸ்.என். ஹெட்டிகே**
**பிரதேச செயலாளர்**
**சுவீகரிப்பு உத்தியோகத்தர்**
**பிரதேச செயலகம்,**
**ருவன்வெல்லை**

---

## அடிப்படை கற்கைநெறிகளுக்கான தேசிய நிறுவகம் இலங்கை

NIFS

# வழங்குனர்களை பதிவு செய்தல் - 2024

2024 ஆம் வருடத்தில் கீழே குறிப்பிட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக இந்த நிறுவகத்துடன் தம்மை பதிவு செய்ய விரும்பும் உற்பத்தியாளர்கள்/ கூட்டுத்தாபனங்கள்/ஏக முகவர்கள் மற்றும் வியாபார நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

**பொருட்களின் வழங்கல்:**

01. காகிதாதி மற்றும் கணனி காகிதாதி அடங்கலான அலுவலக தேவைப்பாடுகள்
02. கணனிகள், கணனி உபகரணம் மற்றும் துணைப்பாகங்கள்
03. டயர்கள் மற்றும் டியுப்புகள்
04. ஆய்வுகூட இரசாயனங்கள் மற்றும் ஒரு தடவை பாவித்த பின்னர் அகற்றப்படும் பொருட்கள்.
05. அலுவலக தளபாடம் (உருக்கு மற்றும் மரம்)
06. அலுவலக உபகரணம் (புகைப்படப் பிரதி இயந்திரங்கள் முதலியன)
07. வளிச்சீராக்கல் உபகரணம்
08. தொடர்பாடல் உபகரணம் (தொலைநகல் இயந்திரங்கள் முதலியன)
09. ஆய்வுகூட உபகரணம்
10. மின்சாரப் பொருட்கள் மற்றும் பொருத்தல்கள்
11. பொதுவான கனரகப் பொருட்கள்
12. கருவிகள் மற்றும் உபகரணங்கள்
13. எரிவாயு (LP, Argon, $O_2$ முதலியன)
14. கமரா உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள்
15. தடையற்ற மின்சார வழங்கல் (UPS)

**சேவைகளின் வழங்கல்**

01. நிறுவகத்திலிருந்து கழிவு இரசாயனங்களை அப்புறப்படுத்துதல்
02. வளிச்சீராக்கல் இயந்திரங்களுக்கான திருத்தவேலைகள் மற்றும் சேவைகள்.
03. கட்டிடங்களின் திருத்தவேலைகள் மற்றும் நிர்மாண வேலைகள்
04. அச்சு வேலைகள்
05. தூதஞ்சல் சேவைகள்
06. தையல் வேலைகள்
07. அலுவலக உபகரணங்களுக்கான திருத்தவேலைகள்
08. ஆய்வுகூட உபகரணங்களுக்கான திருத்த வேலைகள்
09. குஷன் வேலைகள்
10. மூவர்கள் (Movers)
11. உணவுபான சேவைகளை வழங்குபவர்கள் (Caterers)
12. மேசைகள், கதிரைகள், கூடாரங்களை (Marquee) வாடகைக்கமர்த்துதல்
13. சலவையக சேவைகள்
14. வாகனங்களை வாடகைக்கமர்த்துதல் (கார்கள், வேன்கள், கெப்கள், லொறி முதலியன)
15. அலுமினிய கட்டமைப்பு வேலைகள்
16. மின்சாரப் பொருட்களின் திருத்தவேலைகள்

ஒவ்வொரு வகுதிக்குமான கட்டணமான 500.00 ரூபாவைச் செலுத்திய பின்னர் நிர்வாக கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப் படிவங்களிலேயே மேலே பட்டியலிடப்பட்டுள்ள வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்கு தனித்தனியான விண்ணப்பப் படிவங்களில் ஒவ்வொரு வகுதிக்கும் பதிவு செய்துகொள்ளல் வேண்டும். தபாலில் விண்ணப்பப்படிவங்கள் தேவைப்படின், 110.00 ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுயமுகவரியிடப்பட்ட உறையுடன் கண்டி தபாலகத்தில் மாற்றக்கூடியதானதும் அடிப்படை கற்கைநெறிகளுக்கான தேசிய நிறுவகத்தின் பெயரில் வழங்கப்பட்ட காசுக்கட்டளையொன்றை மாத்திரம் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

பொதுவாக விலைமனுக்கூறுகள் பட்டியலிலுள்ள பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிலிருந்து மாத்திரமே அழைக்கப்படும் என்பதுடன் போட்டி ரீதியிலான விலைகளை பெறுவதற்காக ஏனைய நிறுவனங்களிலிருந்தும் அழைக்கும் உரிமையை NIFS தன்னகத்தே கொண்டுள்ளது.

தேவைப்படும்போது விலைமனுக்கூறுகளை முன்வைப்பதற்கு தவறும் அல்லது கட்டளைகளை வெளிப்படுத்தும்போது நிறைவேற்ற தாமதிக்கும் அல்லது விபரக்குறிப்புக்களுக்கு ஒத்திசையாத வழங்கல்கள் மற்றும் தரங்கள் ஆகியவற்றை மேற்கொள்ளும் வழங்குனர்கள் முன்னறிவித்தலின்றி பட்டியலிலிருந்து நீக்கப்படுவார்கள்.

பதிவிற்காக சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு விண்ணப்பத்தையும் எந்தவொரு காரணங்களையும் முன்வைக்காமல் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்குமான உரிமையை அடிப்படை கற்கைநெறிகளுக்கான தேசிய நிறுவகம் தன்னகத்தே கொண்டுள்ளது.

விண்ணப்பப்படிவங்கள் 2023-11-13ஆம் திகதி வரை அலுவலக நேரங்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரை வழங்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் முத்திரைக் குறியிடப்பட்ட உறையொன்றில் அடக்கப்பட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் "வழங்குநர்களை பதிவு செய்தல்" என குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் நிர்வாக கிளை, அடிப்படை கற்கைநெறிகளுக்கான தேசிய நிறுவகம், ஹந்தான பாதை, கண்டி என முகவரியிடப்பட்டு பதிவுத் தபாலில் 2023.12.13 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும்.

**செயலாளர்,**
**அடிப்படை கற்கைநெறிகளுக்கான தேசிய நிறுவகம்.**
**தொலைபேசி : 081 – 2232106, 081 – 2232107**

# சிலாபம் நகர சபை

## வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2024

**01. பின்வரும் நிபந்தனைகளுக்கமைவாக 2024ஆம் வருடத்தில் பொருட்கள் மற்றும் சேவைகளை சிலாபம் நகர சபைக்கு வழங்குவதற்காக அங்கீகாரம் பெற்ற உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

I. விண்ணப்பங்களை 2023-11-30ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு A4 அளவில் தயாரிக்கப்பட்ட பின்வரும் மாதிரிப் படிவத்தினைப் பூர்த்தி செய்து "கௌரவ செயலாளர், நகர சபை, சிலாபம்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரடியாகக் கொண்டு வந்து ஒப்படைக்கலாம்.
II. விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறைகளின் இடதுபக்க மேல் மூலையில், "வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2024" என்று குறிப்பிடுதல் வேண்டும்.
III. வழங்குநர்களால் சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு உருப்படிக்கும் மீளளிக்கப்படாத 1000.00 ரூபா அறவிடப்படும். இத்தொகையை "தலைவர், நகர சபை, சிலாபம்" என்ற பெயருக்கு எழுதப்பட்ட காசோலை மூலம் அல்லது ரொக்கப் பணமாக செலுத்தலாம். கொடுப்பனவுகளை அலுவலக நேரங்களில் பி.ப. 3.00 மணிக்கு முன்னர் சிறாப்பர் கருமபீடத்திற்குச் செலுத்தலாம். சிலாபம் நகர சபை எல்லையினுள் உள்ள விண்ணப்பதாரர்கள் 2023ஆம் ஆண்டிற்கான வியாபார அதிகாரப்பத்திரக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், நகர எல்லைக்கப்பால் உள்ள விண்ணப்பதாரர்கள் தம் வியாபாரப்பதிவுச் சான்றிதழின் பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
IV. சமர்ப்பிக்கப்படும் விலைகள் 06 மாதங்களுக்குச் செல்லுபடியாகுதல் வேண்டும்.
V. வழங்கல், ஒப்பந்தங்களுக்காக பொதுவாகப் பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்களிடமிருந்து மற்றும் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைகள் கோரப்படுவதுடன், தேவையான சமயங்களில் வெளியாளர்களிடமிருந்தும் விலைமனுக்களை கோரும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
VI. கேட்கப்படும்போது விலைமனுக்களைச் சமர்ப்பிக்காத மற்றும் குறித்த தரத்தில் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்காத வழங்குநர்களின் மற்றும் ஒப்பந்தக்காரர்களின் பதிவுகள் இரத்துச் செய்யப்படும்.
VII. மேலதிக விபரங்களுக்கு 033-2222275 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொள்ளவும். (வழங்கல் பிரிவு)
VIII. பொருட்கள் மற்றும் சேவை வழங்கலுக்காக பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கிய பின்னரே கொடுப்பனவுகள் செலுத்தப்படும் என்பதால் இதனை அடிப்படையாகக் கொண்டு பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும்.
IX. விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு உத்தேச விடயத்திற்காகவும் வெவ்வேறான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
X. நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கத் தவறினால் முன்னறிவித்தலின்றி பதிவு இரத்துச் செய்யப்படும்.

02. வழங்கல்கள் மற்றும் சேவைகள்

1. மின்சாரப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள்
2. காகிதாதிகள் வழங்குதல்
3. அச்சு வேலைகளைச் செய்தல்
4. அலுவலக உபகரணங்களை வழங்குதல் மற்றும் சேவைகள் (பராமரிப்பு) (புகைப்படப் பிரதிகள்/ றோணியோ/ தொலைநகல்)
5. அலுவலகத் தளபாடங்களை வழங்குதல் மற்றும் திருத்தவேலைகளைச் செய்தல்
6. கணனி, கணனி துணைப்பாகங்களை வழங்குதல் திருத்தவேலைகளைச் செய்தல்
7. இறப்பர் முத்திரை வழங்குதல்
8. அச்சடிக்கப்பட்ட தகடுகளைத் தயாரித்து வழங்குதல் (துவிச்சக்கர வண்டி அனுமதிப்பத்திரம்/ வரிக்கட்டணம்/ பெயர்கள்)
9. உணவு பான வகைகள்/ குடிநீர் வழங்குதல்
10. உற்சவங்களுக்கான பொருட்களை வழங்குதல் (கதிரைகள், கூடாரங்கள், மேடைகள் மற்றும் மின் குமிழ்கள்)
11. சுகாதார உபகரணங்கள் (கையுறைகள்/ முகக் கவசங்கள்/ குப்பை வண்டிகள்/ தும்புத்தடிகள்/ ஈர்க்கிள்கள்/ பிரம்புக் கூடைகள், ஒற்றைச் சக்கர வண்டி, கழிவறைத் தூரிகைகள்/ சாக்கடைத் தூரிகைகள் போன்றவை முக்கியமானவையாகும்)
12. வாகனத் திருத்தவேலைகள் மற்றும் வாகனங்களுக்கான உதிரிப்பாகங்களை வழங்குதல் (குஷன் பண்ணுதல், பூச்சு வேலைகள், உள்ளக திருத்தவேலைகள்)
13. வாகனங்களை சேர்விஸ் செய்தல் மற்றும் சேர்விஸுக்கான உபகரணங்களை வழங்குதல்
14. டயர், டியுப், றிம், பெற்றரிகள் மற்றும் டயர்களை மீள் நிரப்பல் சார்ந்த சேவைகள்
15. அனைத்து வகையான ஹாட்வெயார் உருப்படிகள்
16. நிர்மாணத்துறைப் பொருட்களை வழங்குதல் (கருங்கற்கள், ஆற்று மணல், கம்பி பார்கள், சீமெந்து, புளொக் கற்கள், செங்கற்கள், பலகை வகைகள், கிரவல் மண், கல்மண், கற்தூள்கள் முதலியன)
17. போக்குவரத்துச் சேவைகளை வழங்குதல் (மோட்டார் கார்கள்/ லொறிகள்/ வேன்கள்/ முச்சக்கர வண்டிகள் / மோட்டார் கிரேடர்/ வீதி அழுத்திகள்/ கொங்கிரீட் கலவைகள் என்பவற்றை வாடகை அடிப்படையில் வழங்குதல்)
18. கொங்கிரீட் பொருட்கள் (ஹியும் குழாய்கள் கம்பித் தூண்கள், எல்லைக் கற்கள், முன்னர் தயாரிக்கப்பட்ட கற்கள் என்பன)
19. ஒலிபெருக்கி இயந்திரங்கள் பிரசார உபகரணங்கள் மற்றும் சேவைகள்
20. பெயர் பலகைகள், அறிவித்தல் பலகைகள், பெனர்கள் ஞாபகப் பலகைகள் கேடயங்கள், ஞாபகச் சின்னங்கள் என்பனவற்றை வழங்குதல்
21. இரசாயனப் பொருட்கள் (கிருமி நாசினிகள்/ குடம்பிநாசினிகள், பீடை நாசினிகள் என்பன)
22. பட்டறை சேவைகள் மற்றும் வீதி வேலைகளுக்குத் தேவையான உபகரணங்கள் (மண்வெட்டிகள், கடப்பாறை, கல் உளி, அரிவாள், மனைக்கத்திகள், வீச்சுக் கத்திகள், ரேக்கைகள், சவல்கள், புல் வெட்டும் இயந்திரங்கள் முதலிய உபகரணங்கள்)
23. தகனச்சாலை திருத்தவேலைகள்
24. வளி சீராக்கி திருத்தவேலைகள் (வாகனங்கள், அலுவலகங்கள்)
25. விவசாய மற்றும் பூங்கா அலங்கரிப்பு உபகரணங்கள் மற்றும் பொருட்களை வழங்குதல்
26. நில அளவைச் சேவைகள், நொத்தாரிசு சேவைகள் மற்றும் சட்டத்தரணி சேவைகள், பயிற்றப்பட்ட பயிற்றப்படாத ஆளணியினர் சேவைகளை வழங்குதல்
27. நிர்மாண வேலைகளுக்காக ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்
28. எரிபொருட்கள் (எரிவாயு மற்றும் எண்ணெய் வகைகள்)
29. பார்மஸி உருப்படிகள்
30. தாவரங்கள் (அலங்கார மலர்கள், மூலிகைகள்)
    I. நிர்மாண ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்து கொள்வதற்கு ICTAD சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
    II. அதன்பொருட்டு பின்வரும் கட்டணங்கள் அறவிடப்படும்.
31. CCTV கமரா முறைமைகளின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு

| இல. | நிர்மாணத்துறை ஒப்பந்தக்காரர்கள் | பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 1 | ரூபா 100000.00 வரை | 1000.00 |
| 2 | ரூபா 100000.00 முதல் ரூபா 200000.00 வரை | 1500.00 |
| 3 | ரூபா 200000.00 முதல் ரூபா 500000.00 வரை | 2000.00 |
| 4 | ரூபா 500000.00 முதல் ரூபா 1000000.00 வரை | 2500.00 |
| 5 | ரூபா 1000000.00 க்கு மேல் | 3000.00 |

**செயலாளர்,**
**நகர சபை, சிலாபம்.**

### விண்ணப்பப் படிவம்

**2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செயதல்**

**சிலாபம் நகர சபை**

01. வியாபார நிறுவனத்தின் பெயர் : ......................................
02. முகவரி : ......................................
03. தொலைபேசி இலக்கம் : ......................................
04. உரிமையாளரின் பெயர் : ......................................
05. E-Mail முகவரி : ......................................
06. வியாபாரப் பதிவு இலக்கம் : ......................................
(பதிவுச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.)
07. பதிவு செய்து கொள்ளவேண்டிய பிரிவு (இலக்கம் மற்றும் பெயர்) : ......................................
08. வெட் வரிப் பதிவிலக்கம் (இருப்பின்) : ......................................
09. ICTAD சான்றிதழின் இலக்கம் : ......................................
(பிரதி இணைக்கப்படல் வேண்டும்)

நான்/ நாங்கள் சமர்ப்பித்துள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவையெனவும் சரியானவையெனவும், சிலாபம் நகர சபைச் செயலாளரினால் முன்வைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைவாக பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதாக இத்தால் சான்று பகர்கின்றேன். பதிவுக் கட்டணமாக ................................ ரூபாவிற்கான .................. ஆம் திகதிய ....................... இலக்கமுடைய காசோலை/ பற்றுச்சீட்டை இத்துடன் இணைத்துள்ளேன்.

விண்ணப்பதாரரின் ஒப்பம் : ......................................

பெயர் : ......................................

திகதி : ..............................

(உத்தியோக முத்திரை இடவும்)

**அலுவலகப் பயன்பாட்டிற்கு**

விடயப்பொறுப்பு உத்தியோகத்தரின் பரிந்துரை: ..............................................................................................................

விடயப்பொறுப்பு உத்தியோகத்தரின் கையொப்பம் ..................................
திகதி: ..........................................

நிர்வாக அலுவலரின் பரிந்துரை: செயலாளரின் ஒப்புதல்:
பரிந்துரைக்கப்படுகின்றது/இல்லை ஒப்புதல் அளிக்கப்படுகின்றது / இல்லை

................................................ ...................................................
நிர்வாக அலுவலர் செயலாளர்

பற்றுச்சீட்டு இலக்கம்:.................................... திகதி: ................................................

பதிவேட்டின் பக்க இலக்கம் : ..........................................................................

# கேள்விமனுக் கோரல்

## சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு

## இலங்கை நில அளவைத் திணைக்களம்

## வருடாந்த தேவைகளுக்கான கொள்வனவு – 2023

**கேள்விமனு இலக்கம்: SD/III/2023**

01. நிலஅளவைத்திணைக்களத்தின் 2023/24ம் வருடத்துக்கான தேவைகளுக்கு பின்வரும் சேவையை கொள்வனவு விலைமனுவுக்குரிய முத்திரையிடப்பட்ட கேள்விமனுக் கோரல்களை வழங்குநர்களிடமிருந்து முன்வைப்பதற்கான அழைப்பு.

| தொடர் இல. | விபரம் | விலைமனு காப்புத் தொகை (ரூ) |
|---|---|---|
| 01 | நிலஅளவையாளர் நாயகத்தின் அலுவலகத்தின் பாதுகாப்புச் சேவையைப் பெற்றுக் கொள்ளல் (ஒரு வருட காலத்துக்கு) | 100,000.00 |

02. கேள்விமனுக் கோரல் தேசிய போட்டியளவிலான கேள்விமனுக் கோரல் விதிமுறைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும்.
03. இதற்காக அக்கறையுள்ள கேள்விமனு முன்வைப்பாளர்கள் நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்திலுள்ள சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் (பெறுகைகள் மற்றும் வழங்கல்கள்) இடமிருந்து அலுவலக வேலை நேரத்தில் இது தொடர்பான ஆவணங்களைப் பரீட்சிக்கும் அதேவேளை 011-2368106 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.
04. கேள்விமனு தொடர்பான கலந்துரையாடல் கூட்டம் 2023.10.24ம் திகதி மு.ப 10.00 மணிக்கு திணைக்களத்தின் பழைய கேட்போர் கூடத்தில் நடைபெறும்.
05. கேள்விமனுவுக்குரிய முழுமையான ஆவணங்களையும் விண்ணப்பப் படிவத்தையும் இரண்டாயிரம் ரூபா (ரூ.2000.00) மீளளிக்கப்படாத தொகையை செலுத்தியதன் பின்னர் 2023.11.08 ம் திகதி பி.ப. 02.30 மணிவரை அலுவலக நேரங்களில் கேள்விமனுக்களை முன்வைப்போர் நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்திலுள்ள சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் (பெறுகைகள் மற்றும் வழங்கல்கள்), இடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
06. பூரணப்படுத்திய கேள்விமனுப் படிவத்தை (இரண்டு பிரதிகளில் இருத்தல் வேண்டும்) கொண்டுள்ள விலைமனுக்கள் அடங்கிய முத்திரையிடப்பட்ட கடித உறையின் வலது பக்க மேல் மூலையில் மேற்சொல்லப்பட்ட விபரத்தைக் குறிப்பிட்டு 2023.11.09 ம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன்னர் சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் (பெறுகைகள் மற்றும் வழங்கல்கள்), நிலஅளவைத் திணைக்களம், 150, கிருள வீதி, நாராஹேன்பிட்டி, கொழும்பு 05என்ற முகவரியில் கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விமனுக்கள் நிராகரிக்கப்படும். 2023.11.09ம் திகதி மு.ப. 11.05 மணியளவில் நில அளவை திணைக்களத்தின் பெறுகைகள் மற்றும் வழங்கல்கள் கிளையில் கேள்விமனுக்கள் திறக்கப்படும் அவ்வேளையில் கேள்விமனு முன்வைப்பாளர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்ள முடியும். அனைத்து கேள்வி மனுக்களும் மேற்காட்டிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுக் காப்புத்தொகையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**நிலஅளவையாளர் நாயகம்,**
**கொழும்பு - 05.**
2023.10.13

# பெறுகை அறிவித்தல்

## ஓய்வூதியத் திணைக்களம்

## பொருட்களின் பெறுகை

**தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB)**
**மேசைக் கணினிகள், ஸ்கேனர்கள், அச்சுப்பொறிகள் மற்றும் மடிக்கணினிகளின் பெறுகை**

விலைமனு இல.: **DP/Procurement-01/IT Equipments/2023**

மேசைக் கணினிகள், ஸ்கேனர்கள், அச்சுப்பொறிகள் மற்றும் மடிக்கணினிகளின் பெறுகைக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து ஓய்வூதியத் திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன. விலைமனு ஆவணங்களில் விபரங்கள் தரப்பட்டுள்ளன. எதிர்பார்க்கப்படும் விநியோகக் காலம் ஒப்பந்தம் வழங்கப்படும் திகதியில் இருந்து 06 வாரங்கள்.

| உருப்படி இல. | பொருட்களின் விபரம் | அளவு |
|---|---|---|
| 01 | மேசைக் கணினிகள் | 80 |
| 02 | ஸ்கேனர்கள் | 75 |
| 03 | அச்சுப்பொறிகள் (Simplex) | 90 |
| | அச்சுப்பொறிகள் (Duplex) | 10 |
| 04 | மடிக்கணினி | 02 |

1. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
2. ஒன்றுக்கு மேற்பட்ட தேர்வுகள் அனுமதிக்கப்படமாட்டாது. விலைமனுதாரர்கள் ஒவ்வொரு உருப்படிக்காகவும் வெவ்வேறாக விலைமனு மேற்கொள்ளல் வேண்டும்.
3. ஆர்வம் கொண்ட, தகுதியுடைய மற்றும் தகைமை பெற்ற விலைமனுதாரர்கள் வழங்கல் - கணக்காளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (தொ.பே. 0112434974, மின்னஞ்சல்: dilhani8819@gmail.com) என்பதோடு வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை இந்த திணைக்களத்தின் நிதிப் பிரிவில் (4ஆவது மாடி) விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
4. விலைமனுதாரர் கடந்த 3 ஆண்டுகளில் இதனையொத்த உபகரணங்களின் வழங்களில் அனுபவத்துடன் சேர்த்து செல்லுபடியான வர்த்தகப் பதிவை பெற்றிருத்தல் வேண்டும். இந்தத் தேவைகளை நிரூபிக்கப்பட்ட ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 ரூபாவுடன் (ஐயாயிரம் ரூபா) வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை 2023 ஒக்டோபர் 13 தொடக்கம் ஒக்டோபர் 31 ஆம் திகதி வரை கீழுள்ள முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை பெற முடியும். கட்டணமானது இந்தத் திணைக்களத்தின் நிதிப் பிரிவு சிறாப்பர் கருமபீடத்தில் (4ஆவது மாடி) ரொக்கப் பணத்தில் செலுத்தப்படுதல் வேண்டும்.
6. விலைமனுக்களை 2023 ஒக்டோபர் 31 ஆம் திகதி மு.ப. 10.00 அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு தாமதித்து சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் ஏற்பது நிறைவடைந்த பின் இந்தத் திணைக்களத்தின் (4ஆவது மாடி) நிதிப் பிரிவில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்க கோரப்படுகின்றனர். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மேசைக் கணினிகள், ஸ்கேனர்கள், அச்சுப்பொறிகள் மற்றும் மடிக்கணினிகளின் பெறுகை" என்று குறிப்பிடுதல் வேண்டும்.
7. விலைமனுக்கள் இலங்கை மத்திய வங்கி மூலம் அங்கீகரிக்கப்பட்ட எந்த ஒரு வர்த்தக வங்கியில் இருந்தும் பெறப்பட்ட விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணை பெறுமதியின் தொகையானது விலைமனு தொகையில் 1% என்பதோடு அது ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம், ஓய்வூதியத் திணைக்களம், மாளிகாவத்தை, கொழும்பு - 10 என்ற முகவரி இடப்பட்டு, விலைமனு திறக்கப்படும் திகதியில் இருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஓய்வூதியத் திணைக்களம்,**
**மாளிகாவத்தை,**
**கொழும்பு-10.**

# இலங்கை வங்கி

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் அறிவித்தல்.**

2023.04.18 அன்று நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கியின் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

1. பிரசித்த நொத்தாரிசு எம்.பி.ரி.ஆர். சிறிவர்தன அத்தாட்சிப்படுத்திய 2019.10.25ஆம் திகதிய 1226ஆம் இலக்க ஈட்டுமுறியின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் மீது 2022.12.15 வரையான வட்டியும் முதலுமாக 11,204,419.76 ரூபாயும் (பதினொரு மில்லியன் இருநூற்று நான்காயிரத்து நானூற்றுப் பத்தொன்பது ரூபாய் எழுபத்தாறு சதம்) அத்துடன் 2022.12.16ஆம் திகதியிலிருந்து ஆண்டுக்கு இருபத்தெட்டுத் தசம் இரண்டு ஐந்து (28.25%) வீதப்படி 7,777,500.00 ரூபாய் (ஏழு மில்லியன் எழுநூற்று எழுபத்தேழாயிரத்து ஐந்நூறு ரூபாய்) மீதான மேலதிக வட்டியும் இல. 147, நுவரெலியா வீதி, வெலிமடை என்ற முகவரியைச் சேர்ந்த திரு. புஞ்சி ஹேவாகே சுகததாஸ, ஹேரத் முதியன்சேலாகே சச்சினி திலஞ்சிகா ஜயசேகர, ஹேரத் முதியன்சேலாகே சந்திராவதி, புஞ்சி ஹேவாகே விராஜ் பிரசன்ன ஆகியோரிடமிருந்து வங்கிக்கு வருமதியாகவுள்ளது.
2. பிரசித்த நொத்தாரிசு எம்.பி.ரி.ஆர். சிறிவர்தன அத்தாட்சிப்படுத்திய 2019.10.25ஆம் திகதிய 1226ஆம் இலக்க ஈட்டுமுறியின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட மேற்குறித்த 11,204,419.76 ரூபாயையும் (பதினொரு மில்லியன் இருநூற்று நான்காயிரத்து நானூற்றுப் பத்தொன்பது ரூபாய் எழுபத்தாறு சதம்) அத்துடன் 2022.12.16ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரையான மேற்குறித்த வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த ஆதனத்தை இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்ற முகவரியைச் சேர்ந்த M/S T&H ஒக்ஷன்ஸ் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம். எச். துசித்த கருணாரத்ன அவர்களுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி வெலிமடை கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற் குறிப்பிடப்பட்ட அட்டவணை**

"முலத்தகும்புரேவத்த" என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் பி. விக்கிரமசிங்க தயாரித்த 1989.09.24ஆம் திகதிய 2111ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 01 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி அதன்கண் காணப்படும் மண், மரங்கள், பயிர்கள் என அனைத்துடனும் ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், உடுகிந்த கோரளை உடபலாத்த பற்று வெலிமட பிரதேச சபை மற்றும் பிரதேச செயலகர் பிரிவு எல்லைக்குட்பட்ட வெலிமடை கிராம சேவகர் பிரிவிலுள்ள வெலிமடை கிராமத்தில் அமைந்துள்ளது. **வடக்கில்** கால்வாயையும் **கிழக்கில்** கால்வாயையும் **தெற்கில்** கால்வாய், தரிசுக் காணி என்பவற்றையும் **மேற்கில்** பிரதான வீதியையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி குறித்த 2111ஆம் இலக்க வரைபடத்தின்படி **பன்னிரண்டு தசம் ஆறு இரண்டு** பேர்ச்சுகள் **(ஏ0-ரூ0- பே12.62)** பரப்பளவைக் கொண்டுள்ளதோடு பதுளை காணிப் பதிவகத்தில் தொகுதி N 11/136இல் (பக்கத்தைக் குறிக்கின்றது) பதிவு செய்யப்பட்டுள்ளது.

2111ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறித்த காணித்துண்டு 1 கீழே விபரிக்கப்படும் காணியின் மீளளவையாகும்.

"முலத்தகும்புரேவத்த" என அழைக்கப்படும் காணியின் பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான பகுதி அதன்கண் காணப்படும் மண், மரங்கள், பயிர்கள் என அனைத்துடனும் ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், உடுகிந்த கோரளை உடபலாத்த பற்று வெலிமடை பிரதேச சபை மற்றும் பிரதேச செயலகர் பிரிவு எல்லைக்குட்பட்ட வெலிமடை கிராம சேவகர் பிரிவிலுள்ள வெலிமடை கிராமத்தில் அமைந்துள்ளது. வடக்கில் கால்வாயையும் கிழக்கில் கால்வாயையும் தெற்கில் ஹீன்னரங்கஹ கொட்டுவ காணியையும் மேற்கில் வீதியையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி அரை சீர்கள் குரக்கன் எனும் பரப்பளவைக் கொண்டுள்ளதோடு பதுளை காணிப் பதிவகத்தில் தொகுதி N 11/139இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி

**டபிள்யு.எஸ். ஜீவானந்த**
**முகாமையாளர்**

**இலங்கை வங்கி வெலிமடைக் கிளை**

# இலங்கை வங்கி

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் 2000ஆம் ஆண்டின் 54ஆம் இலக்க சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 21ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.**

2023.09.12 இல் நடைபெற்ற இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கூட்டத்தில் விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது,

1. பிரசித்த நொத்தாரிசு சந்தநிமா ரணசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 2015.09.09 திகதியிட்ட ஈட்டு முறி இல.654, மற்றும் பிரசித்த நொத்தாரிசு ஷமில திலங்க பெரேரா அத்தாட்சிப்படுத்திய 2018.03.13 திகதியிட்ட ஈட்டு முறி இல.1875, ஆகியவற்றின் பேரில் சீதுவ, லியனகேமுல்ல நீர்கொழும்பு வீதி, இல.584 என்னும் முகவரியில் அமைந்த நிவ் தயாரத்ன அன்ட் கம்பனி பிறைவேற்) லிமிட்டெற்றிடமிருந்து (பணிப்பாளர்கள்: சீதுவ,லியனகேமுல்ல, நீர்கொழும்பு வீதி இல.584 ஐச் சேர்ந்த திரு விஜேசுந்தர முதியான்சேலாகே செனரத் தயா விஜேசுந்தர மற்றும் திருமதி கருணாநாயக்க லியனகே பிரியங்கனி குமாரி விஜேசுந்தர) மீள் அட்டவணைக் கடன் A மீது 2023.08.04 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ.38,526,427.07 (முப்பத்தெட்டு மில்லியன் ஐநூற்று இருபத்தாறு ஆயிரத்து நாநூற்று இருபத்தேழு ரூபாய்களும் ஏழு சதங்களும்) அத்துடன் ரூ. 23,869,309.86 (இருபத்து மூன்று மில்லியன் எண்ணூற்று அறுபத்தொன்பது ஆயிரத்து முந்நூற்று ஒன்பது ரூபாய்களும் எண்பத்தாறு சதங்கள்) மீது ஆண்டுக்கு பதினாறு (16.0%) வீதத்தில் 2023.08.05 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும், மற்றும் மீள் அட்டவணைக் கடன் B மீது 2023.08.04 வரை வருமதியாக உள்ள முதலும் வட்டியும் ரூ.1,705,004.48 (ஒரு மில்லியன் எழுநூற்று ஐந்து ஆயிரத்து நான்கு ரூபாய்களும் நாற்பத்தெட்டு சதங்களும்) அத்துடன் ரூ.1,572,232.45 (ஒரு மில்லியன் ஐநூற்று எழுபத்திரெண்டு ஆயிரத்து இருநூற்று முப்பத்திரெண்டு ரூபாய்களும் நாற்பத்தைந்து சதங்கள்) மீது ஆண்டுக்கு நான்கு (4.0%) வீதத்தில் 2023.08.05 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,
2. மேற்குறிப்பிட்ட 2015.09.09 திகதியிட்ட ஈட்டு முறி இல 654, மற்றும் 2018.03.13 திகதியிட்ட ஈட்டு முறி இல.1875, ஆகியவற்றின் பேரில் மீள் அட்டவணைக்கடன் A மீது ரூ.38,526,427.07 (முப்பத்தெட்டு மில்லியன் ஐநூற்று இருபத்தாறு ஆயிரத்து நாநூற்று இருபத்தேழு ரூபாய்களும் ஏழு சதங்களும்) மற்றும் மீள் அட்டவணைக் கடன் B மீது ரூ.1,705,004.48 (ஒரு மில்லியன் எழுநூற்று ஐந்து ஆயிரத்து நான்கு ரூபாய்களும் நாற்பத்தெட்டு சதங்களும்) அத்துடன் 2023.08.05 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் T.&.H. ஒக்ஷன் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. முதுகமுவே ஹேவாவசம் துசித் கருணாரத்னவுக்கும், மேற்கூறிய இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் பிரிவு 21ற்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி இராஜகிரிய மேற்தரக் கிளை சிரேஷ்ட முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது. மேற்குறிப்பிட்ட அட்டவணை.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை பல்லே பற்றுவில் விஜேராம கிராம சேவகர் பிரிவு மற்றும் மஹரகம பிரதேச செயலகப் பிரிவில் மஹரகம பட்டின சபை எல்லைகளுள் கங்கொடவில கிராமத்தில் அமைந்த "தாவத்கஹலந்த" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். ஏன் ஜயவர்தன தயாரித்த 2006 மே 10 திகதியிட்ட வரைபடம் இல349 இல் காணித்துண்டு 6 $A^2$ என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு,அதாவது மேற்கூறிய காணித்துண்டு 6 $A^2$ இன் எல்லைகளாவன: வடக்கில் 15 அடி அகலப் பாதையும், கிழக்கில் பாசல் மாவத்தை வரிமதிப்பு இல.160/5 ஐக் கொண்ட நிலமனையும் தெற்கில் பாதை மற்றும பாசல் மாவத்தை வரிமதிப்பு இல.152 ஐக் கொண்ட நிலமனையும் மேற்கில் காணித்துண்டு $6A^1$ உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல.349 இன் பிரகாரம் பத்து பேர்ச்சுகள் (ஏ.0,றூ.0,பே.10) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள்,மண், மரங்கள், பயிர்கள், மற்றும் சகலதும் ஆகும். இக்காணி நுகேகொட, தெல்கந்த காணிப்பதிவகத்தில் B448/06 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்கூறிய காணித்துண்டு உத்தரவுபெற்ற நில அளவையாளர் B.U.S. பெர்ணாண்டு தயாரித்த 2011 ஏப்ரல் 1 திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல.1998 இல் பின்வருமாறு விபரித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட கங்கொடவில கிராமத்தில் அமைந்த பாசல் மாவத்தை வரி மதிப்பு இல. 154/6 ஐக் கொண்ட "தாவத்கஹலந்த" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் B.U.S. பெர்ணாண்டு தயாரித்த 2011 ஏப்ரல் 1 திகதியிட்ட மேற்குறிப்பிட்ட வரைபடம் இல.1998 இல் காணித்துண்டு A என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு, அதாவது மேற்கூறிய காணித்துண்டு A இன் எல்லைகளாவன: வடக்கில் பாசல் மாவத்தை வரிமதிப்பு இல. 154/6A ஐக் கொண்ட நில மனையும், கிழக்கில் பாதையும் பாசல் மாவத்தை வரிமதிப்பு இல.155 ஐக் கொண்ட நிலமனையும் தெற்கில் பாசல் மாவத்தை வரிமதிப்பு இல.155 ஐக் கொண்ட நிலமனையும் பாதையும் மேற்கில் பாதையும் பாசல் மாவத்தை வரிமதிப்பு இல. 154/6A உம் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல.1998 இன் பிரகாரம் ஒன்பது தசம் ஒன்பது பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ.0, றூ.0,பே.9.90) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள்,மண், மரங்கள், பயிர்கள், மற்றும் சகலதும் ஆகும்.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

**திரு. எஸ்.ஆர்.ஜயசிங்ஹ**
**சிரேஷ்ட முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**மேற்தரக் கிளை**
**இராஜகிரிய.**

1975 BOC CALL CENTRE www.boc.lk A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும் தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1. இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# உடுபத்தாவ பிரதேச சபை

2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் / ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்ளல் 2024ஆம் வருடத்தில் உடுபத்தாவ பிரதேச சபைக்குத் தேவையான பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்ளல் 2023-12-15ஆம் திகதி வரை இடம்பெறும். பதிவு செய்து கொள்வதற்காக கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தை (A4 அளவில்) தயாரித்து பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

வழங்குநரினால் விண்ணப்பிக்கப்படும் ஒவ்வொரு விடயத்தின் பொருட்டும் மீளளிக்கப்படாத 1000.00 ரூபா தொகை பதிவுக் கட்டணமாக அறவிடப்படும். இத்தொகையை ரொக்கப் பணமாக அல்லது செயலாளர் உடுபத்தாவ பிரதேச சபை எனும் பெயரில் வரையப்பட்ட காசோலை மூலமாகச் செலுத்தலாம்.

விண்ணப்பப் படிவத்தைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ”வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2024” எனக் குறிப்பிட்டு 2023-12-15ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ”செயலாளர், உடுபத்தாவ பிரதேச சபை, உடுபத்தாவ” எனும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். அலுவல நேரத்தினுள் பி.ப. 2.30 மணி வரை ரொக்கப் பணமாக பதிவுக் கட்டணத்தைச் செலுத்தலாம்.

**(01)பொருட்கள் வழங்கல்**

1. அலுவலக உபகரணங்கள் (உருக்கு, மரம் மற்றும் பிளாஸ்திக்)
2. காகிதாதிகள் மற்றும் உபகரணங்கள்
3. துப்புரவேற்பாட்டுச் சேவைக்குத் தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்கள்
4. வீதி நிர்மாணப் பொருட்கள்
5. தார் மற்றும் கோலாஸ்
6. கட்டிட நிர்மாணப் பொருட்கள்
7. நீர்க் குழாய் துணைப்பாகங்கள்
8. ஹியூம் குழாய்கள் மற்றும் கொங்கிறீட் உற்பத்திகள்
9. அலுவலக வேலைகளுக்குத் தேவையான இயந்திராதிகள்
10. அச்சு வேலைகளுக்குத் தேவையான டோனர்கள் மற்றும் மைகள்
11. வாகனங்கள் மற்றும் இயந்திராதிகளுக்குத் தேவையான டயர்கள், டியூப்கள், பெட்டறிகள் மற்றும் உதிரிப்பாகங்கள்
12. நாய்களுக்கான கழுத்துப் பட்டி
13. மிதிவண்டி அனுமதிப்பத்திர தகடுகள்
14. குப்பைகளை அப்புறப்படுத்துவதற்குத் தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் (பொலித்தீன் உறைகள், குப்பைத் தொட்டிகள், சேதனப் பசளைத் தொட்டிகள்)
15. தோட்ட அலங்காரத்திற்குத் தேவையான உபகரணங்கள் (பூக் கன்றுகள், பூச்சாடிகள் போன்றவை)
16. சிறுவர் பூங்காவிற்குத் தேவையான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் விளையாட்டுப் பொருட்கள்
17. குடிநீர் போத்தல்கள்
18. மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள்
19. உராய்வுநீக்கிகள் மற்றும் எரி வாயு
20. சீருடைகள், திரைச்சீலைகள், கொடிகள்
21. ஒலிபெருக்கி உபகரணங்கள்
22. வீதி பராமரிப்பு உபகரணங்கள்
23. டிஜிட்டல் போர்ட்கள் மற்றும் பதாகைகளைத் தயாரித்தல் மற்றும் அச்சிடல் வேலைகள்
24. வீதி விளக்குகள் திருத்தவேலைகள் தொடர்பான உபகரணங்கள் (மின்குமிழ் உட்பட ஏனைய துணைப்பாகங்கள்)
25. குப்பைத் தொட்டிகள்
26. வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கைக்கான விதைகள் மற்றும் கன்றுகள்
27. சேதனப் பசளை உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்கள் (சாணி உரம், கோழி உரம், பொஸ்பேற், உமி போன்றவை)
28. கிருமி நாசினிகள், துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள்
29. கணனி மற்றும் துணைப்பாகங்கள்
30. தீயணைப்பு உபகரணங்கள்
31. அச்சிடப்பட்ட பொலித்தீன் உறைகளை வழங்குதல்
32. கணனி இயந்திரங்கள், அச்சுப்பொறிகள் மற்றும் ஸ்கேனர்
33. CCTV கமரா முறைமையை அமைத்தல் மற்றும் அது சார்ந்த உபகரணங்கள்
34. விவசாய உபகரணங்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள்
35. மின்சார உபகரணங்கள் -ஒலிபெருக்கி இயந்திரம், மின்விசிறிகள் போன்றன

**(02) சேவை வழங்கல்**

1. வாகன திருத்த வேலைகள்
2. அச்சு வேலைகள் (பெயர்ப் பலகைகள் மற்றும் பதாகைகள்)
3. கணனி இயந்திரங்கள், தட்டச்சு பொறிகள், புகைப்படப் பிரதி இயந்திரங்கள், டுப்ளோ இயந்திரங்கள் மற்றும் அது சார்ந்த உதிரிப்பாகங்கள் மற்றும் உபகரணங்களை சேர்விஸ் செய்தல்
4. நொத்தாரிஸ் மற்றும் சட்டத்தரணி சேவைகள்
5. நில அளவையாளர் சேவைகள்
6. தகனச்சாலை திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
7. வளிச்சீராக்கி திருத்தவேலைகள் (வாகனம் மற்றும் அலுவலகம்)
8. துப்புரவேற்பாட்டுச் சேவைகள்
9. கொண்டாட்டங்களுக்கான பொருட்கள் மற்றும் ஒலிபெருக்கி இயந்திரங்களை வாடக்கைக்கமர்த்துதல்
10. நீர்ப் பம்பித் திருத்தவேலைகள்
11. குழாய் கிணறுகளை நிர்மாணித்தல்
12. அபாயகரமான மரங்களை வெட்டி அகற்றுதல்
13. வாகனங்கள் மற்றும் இயந்திராதிகளை சேர்விஸ் செய்தல்
14. விசேட வேளைகளுக்கான உணவு பானங்களை வழங்குதல்
15. மேசன் மற்றும் தச்சு வேலைகள்
16. போத்தல், பத்திரிகைகள், பழைய இரும்பு மற்றும் உடைந்த பொருட்களை கொள்வனவு செய்தல்

**(03) நிர்மாண ஒப்பந்தக்காரர்கள்**

நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) பதிவுடன் இருத்தல் வேண்டும்

| ஒப்பந்தக்காரர்கள் | பதிவுக் கட்டணமாக செலுத்த வேண்டிய தொகை ரூபா |
|---|---|
| இரண்டு மில்லியன் ரூபாவுக்குக் குறைவான ஒப்பந்தங்களுக்கு (C9) | ரூபா 2,000.00 |
| 02 மில்லியன் ரூபா முதல் 05 மில்லியன் ரூபா வரை (C2) | ரூபா 2,000.00 |
| 05 மில்லியன் ரூபா முதல் 10 மில்லியன் ரூபா வரை (C7) | ரூபா 2,000.00 |
| 10 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட 25 மில்லியன் ரூபா வரை (C6) | ரூபா 2,000.00 |

**நிபந்தனைகள்**

1. பலவிதமான வழங்குநர்களைத் தெரிவு செய்கையில் நிராகரிப்பதற்கான காரணம் காட்டாமல் வழங்குநர்களைத் தெரிவு செய்யும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
2. கோரிக்கை விடுக்கப்பட்டதும் விலைகளைச் சமர்ப்பிக்காதவர்கள் மற்றும் உரிய தரத்திற்கமைவாக பொருள் மற்றும் சேவைகளை வழங்காத வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களின் பதிவு இரத்துச் செய்யப்படும்.
3. வழங்குநர்களின் வியாபாரத்தின் பொருட்டு வியாபாரப் பெயர்ப் பதிவு அல்லது அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் கட்டாயமாகும்.
4. சமர்ப்பிக்கும் விலைகள் 06 மாத காலத்திற்கு செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் போக்குவரத்தில் ஏற்படும் சேதங்களுக்கு சபை பொறுப்புக் கூறாது.
5. வழங்கல் நடவடிக்கையின் போது பிரதேச சபை சட்டம், நிதி ஒழுங்கு விதிகள் மற்றும் அரசாங்கத்தினால் அவ்வப்போது விடுக்கப்படும் சுற்றுநிருப அறிவுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கட்டுப்படல் வேண்டும்.
6. வெட் வரி சான்றிதழ் உடைய வழங்குநர்கள் வெட் வரிச் சான்றிதழை இணைத்தல் வேண்டும்.
7. முத்திரைக் கட்டண விடுவிப்புடைய வழங்குநர்கள் சான்றிதழை இணைத்தல் வேண்டும்.
8. வழங்கல் மற்றும் ஒப்பந்தங்களுக்காக பொதுவாக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்தே விலைகள் கோரப்படும் என்பதுடன் தேவையேற்படும் வேளைகளில் வெளியார்களிடமிருந்தும் விலைகளைக் கோரும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
9. இது தொடர்பில் மேலதிக விபரங்கள் தேவையாயின் 037-2286577 / 037-4947090 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக விசாரித்தறியலாம்.

**எம்.பீ.சீ, ரேணுகா,**
**செயலாளர்,**
**உடுபத்தாவ பிரதேச சபை.**
**2023-10-13ஆம் திகதி,**

## உடுபத்தாவ பிரதேச சபை

**வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பப் படிவம் - 2024**

1. வழங்குநர் / ஒப்பந்தக்காரரின் பெயர் : ..................................................................
2. முகவரி : ..................................................................
3. தொலைபேசி இலக்கம் : ..................................................................
4. வழங்கும் சேவை / பொருள் : ..................................................................
5. இக்டாட் பதிவிலக்கம்/ வியாபார பதிவிலக்கம் : ..................................................................
6. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..................................................................
7. பதிவுக் கட்டணம் ரூபா : ..................................................................
8. காசோலை இலக்கம் : ..................................................................

மேற்படி தகவல்கள் சரியானவை எனவும் உரிய பதிவுக் கட்டணம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது எனவும் இத்தால் சான்று பகர்கின்றேன். வழங்குநர் / ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்து கொள்வதற்குரித்தான அறிவித்தல் நிபந்தனைகளுக்கு இணங்குகிறேன்.

திகதி : ............................................... கையொப்பம்:.............................

# கேள்விமனு அறிவித்தல்

## கண்டி கடவத் ஸத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபை

இங்கு கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கண்டி கடவத் ஸத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபைக்குச் சொந்தமான இங்கு அட்டவணையில் தரப்பட்டுள்ள ஆதனங்களை குத்தகைக்கு வழங்குவதற்கெனத் தகுதி வாய்ந்த கேள்விமனு முன்வைப்போரிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இதற்கென விலைமனுக்களை முன்வைக்க உத்தேசித்துள்ள கேள்விமனுதாரர்கள் விண்ணப்பப் படிவக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூ. 1000.00 தொகையைக் காசாளரிடம் செலுத்தி நிபந்தனைகளுடனான விண்ணப்பப் படிவத்தை 2023.10.13ஆம் திகதியிலிருந்து 2023.11.03ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை சபையில் அலுவலக நாட்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

விலைமனுக்களை முதற்பிரதி, இணைப்பிரதி என வேறாக்கிப் பின்னர் ஒரு உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை பெறவுள்ள இடத்தைக் குறிப்பிட்டு 2023.11.06ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் செயலாளர், கண்டி கடவத் ஸத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபை, அம்பிட்டிய என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். அல்லது குறித்த ஆவணங்களைப் பிரதேச சபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் இடுதல் வேண்டும். மேலும், மீளளிக்கப்படும் வைப்புத் தொகையான ரூ. 3000.00 பணத்தை அலுவலகக காசாளரிடம் செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டையும் விலைமனுக்களுடன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

2023.11.06ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்குப் பிரதேச சபையின் அம்பிட்டிய பிரதம அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும். அதில் நீங்கள் அல்லது உங்களது அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவர் கலந்துகொள்ள முடியும். விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் கண்டி கடவத் ஸத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபையின் டென்டர் கமிட்டிக்கு உரியது.

| தொடர் இல. | ஆதனத்தின் விபரம் | மீளளிக்கப்படும் விலைமனு வைப்புத் தொகை ரூ. ச. | மீளளிக்கப்படாத விண்ணப்பப் படிவக் கட்டணம் ரூ. ச. | அதிகுறைந்த கேள்வி (வருடாந்த) ரூ. ச. |
|---|---|---|---|---|
| 01 | பேராதனை வாரச்சந்தையை அடுத்துள்ள ஹெல பொஜுன்ஹல (52 x 24 அடி அளவு கொண்ட 7 கடை அறைகள்) | 3000.00 | 1000.00 | 35000.00 |

**தொலைபேசி இலக்கம்: 0812241222**

**செயலாளர்**
**கண்டி கடவத் ஸத்தர மற்றும்**
**கங்கவட்ட கோறளே பிரதேச சபை,**
**அம்பிட்டிய.**

# அறிவித்தல்

## சப்ரகமுவ மாகாண சபை

### சப்ரகமுவ மாகாண கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாசார விவகார அமைச்சு

சப்ரகமுவ மாகாணத்தின் மாகாண சபை பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இங்கை ஆசிரியர் சேவையின் 3ஆம்ட வகுப்பு 1 (அ) தரத்திற்கு பட்டதாரிகளைச் சேர்த்துக் கொள்ளல் - 2023

சப்ரகமுவ மாகாணத்தின் மாகாண சபை பாடசாலைகளில் காணப்படும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவை யாப்பின் பிரகாரம் இலங்கை ஆசிரியர் சேவையின் 3-1 (அ) தரத்திற்கு பட்டதாரிகளை பாடசாலை மட்டத்தில் சேர்த்துக் கொள்ளும் முகமாக சப்ரகமுவ மாகாணத்தில் நிரந்தர பதிவுபெற்ற பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (தமிழ்மொழிமூல வெற்றிடங்களுக்கு மாத்திரம் நாடளாவிய ரீதியில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன)

சேர்த்துக் கொள்ளல் கீழே தரப்பட்டுள்ள விதத்தில் 02 சந்தர்ப்பங்களின் கீழ் வேறுவேறாக நடைபெறும். அதற்காக குறித்த முழுமையான 02 அறிவித்தல்கள் மற்றும் மாதிரிப் பத்திரங்களை சப்ரகமுவ மாகாண கல்வி, தகவல் தொழில்நுட்ப மற்றும் கலாசார விவகார அமைச்சில் இணையதளமான www.moe.sg.gov.lk இல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

i. க.பொ.த. (உயர்தரம்) மற்றும் 13 ம் ஆண்டு தொடரான கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான பாடங்களுக்கு.
ii. ஆரம்ப மற்றும் க.பொ.த. (சாதாரண தர) பாடங்களுக்கு.

அதனடிப்படையில் விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்க்கும் சகல விண்ணப்பதாரிகளும் சப்ரகமுவ மாகாண கல்வி தகவல் தொழில்நுட்ப மற்றும் கலாசார விவகார அமைச்சின் இணையதளத்திற்குப் பிரவேசித்து குறித்த முழுமையான அறிவித்தல்களில் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களைக் கவனத்தில் கொண்டு, தரப்பட்டுள்ள மாதிரி விண்ணபத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணபத்தை அனுப்புமாறு இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

கவனிக்கவும்:
ஏதேனும் விண்ணப்பதாரி தமது தகைமையின் அடிப்படையில் மேற்படி 02 வாய்ப்புகளுக்கும் விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்ப்பின் அவர் அதற்காக குறித்த அறிவித்தலின் பிரகாரம் வேறுவேறாக விண்ணப்பங்கள் இரண்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித்திகதி - 2023.11.13 ஆகும்.

**பீ.ஏ.சி.பி. பமுனு ஆரச்சி**
**செயலாளர்,**
**கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும்**
**கலாசார விவகார அமைச்சு,**
**சப்ரகமுவ மாகாணம்.**

**2023.10.13 ம் திகதி**
**சப்ரகமுவ மாகாண சபை,**
**கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும்**
**கலாசார விவகார அமைச்சில்.**

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம்

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

**சிறு ஏற்றுமதி பயிர்த் தோட்ட மேம்பாட்டு பிரிவு**

## வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## Harrow Discs வழங்குவதற்கான தேசிய போட்டி முறையிலான விலைமனுக்கோரல் (PR-8922)

**Harrow Discs** வழங்குவதற்கான ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்களிடமிருந்து வறையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் திணைக்கள பெறுகைக் குழு (DPC) தலைவரினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. மீளளிக்கப்படாத கட்டணமாக **LKR 8,000.00** பணமாக செலுத்தி **2023 நவம்பர் 01** ஆம் திகதி வரை வேலை நாட்களில் **09.00 மணி முதல் 15.00** மணிவரை வறையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல-27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பமொன்றினை சமர்ப்பித்து விலைமனு ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்றை விலைமனுததரினால் கொள்வனவு செய்ய முடியும்.
2. விலைமனுவுடன் மீளளிக்கப்படாத கட்டண வைப்பு பற்றுச்சீட்டு அல்லது வங்கி வரைவை சமர்ப்பித்தல் வேண்டும். இணைக்கப்படாத அத்தகைய விலைமனு நிராகரிக்கப்படும்.
3. விலைமனுக்களை **2023 நவம்பர் 02** ஆம் திகதி இலங்கை நிலையான நேரப்படி **14.00 மணி தாமதிக்காது தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல.27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்ப 04** என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையில் பதிவுத் தபால், விரைதூதர், நேரடியாக கையளிக்கப்பட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **“பெலவத்த சீனித் தொழிற்சாலைக்கு Harrow Discs வழங்குவதற்கான கேள்விமனுக்கோரல்”** எனத் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அதன் பின்னர் விலைமனுக்கள் உடனடியாக திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம். தாமதமாக கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. கேள்விமனுக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.
4. அனைத்து மனுக்களுக்கும் **“மனுப்பாதுகாப்பு” ரூ.450,000.00 (நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய்)** இணைத்திருத்தல் வேண்டும் மேலும் விலைமனுக்கள் திறக்கப்பட்ட திகதியிலிருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியாகும். மதிப்பிடப்பட்டத் தொகை **ரூ.30 மில்லியனாகும்.**
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் வறையக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன - தலைமை அதிகாரி (பெறுகை) இருந்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். **தொலைபேசி : +94 11 2584184 கைத்தொலைபேசி : +94 77 0103359,** தொலைநகல் **:+94 11 2500674, (மின்னஞ்சல்: sapumal@lscl.lk).**

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,**
**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்,**
**இல-27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04.**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஒக்டோபர் மாதம் 13ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# நவகத்தேகம பிரதேச சபை

## 2024ம் ஆண்டின் செயற்றிட்ட பாதீட்டு ஆவணம்

நவகத்தேகம பிரதேச சபையின் 2024ம் ஆண்டிற்கான பாதீட்டின் வரைவு ஆவணம் 2023 ஒக்டோபர் 13ம் திகதியிலிருந்து 2023 ஒக்டோபர் 26ம் திகதி வரை (அரச விடுமுறை தினங்கள் மற்றும் ஞாயிறு தினம் தவிர்ந்த) அலுவலக நேரங்களில் பொது மக்களின் பரிசீலனைக்காக நவகத்தேகம பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்படுவதோடு பிரதேச சபை பாதீடு விநியோகம் மற்றும் அமுலாக்கம் தொடர்பான சட்டத்தின் 10.2(ஆ)ம் விதியின் பிரகாரம் பொது மக்களுக்கு இத்தால் வெளியிடுகிறேன்.

**எம்.டபிள்யூ.எல். சோமச்சந்திர,**
**செயலாளர்,**
**நவகத்தேகம பிரதேச சபை.**

2023 ஒக்டோபர் மாதம் 11ம் திகதி
**நவகத்தேகம பிரதேச சபை அலுவலகம்,**
**நவகத்தேகம.**

# சிலாபம் பிரதேச சபை

## 2024 ஆண்டிற்கான வரவு – செலவுத் திட்ட வரைவு

சிலாபம் பிரதேச சபையின் 2024ம் ஆண்டிற்கான குறைநிரப்பு வரவு - செலவுத்திட்ட அறிக்கை 2023 ஒக்டோபர்16 முதல் 2023 ஒக்டோபர் 24 வரை (அரச விடுமுறை தினம் மற்றும் ஞாயிறு தினம் தவிர்த்து) அலுவலக நேரங்களில் சிலாபம் பிரதேச சபை அலுவலகத்தில் பொதுமக்களின் பரிசீலனைக்காக வைக்கப்பட்டுள்ளதாக சிலாபம் பிரதேச சபை வரவு - செலவுத்திட்ட தயாரிப்பு மற்றும் செயற்படுத்தும் விதிகளின் 10.2 (அ) விதியின் பிரகாரம் பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்தல் விடுக்கின்றேன்.

**ஆர்.எம்.பீ.என். ரணதுங்க**
**செயலாளர்**
**சிலாபம் பிரதேச சபை**

**2023 ஒக்டோபர் 10ம் திகதி**
**சிலாபம் பிரதேச சபை**
**மாதம்பே**

# காணி எடுத்தற் சட்டம் ( அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழான பிரகடனம்

**எனது இல : DSO/HOM/LAC/22**

**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் குறிப்பு இல : 4-3/6/2012/HW/281**

காணி எடுத்தல் சட்டத்தின் கீழ் அரசாங்கத்திற்கு எடுத்துக்கொள்ள உள்ள பின்வரும் காணியிற்காக சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான உரிமை மற்றும் நட்டஈட்டு விசாரணை ஹோமாகம பிரதேச செயலகத்தில் என்னால் நடத்தப்படும் என மக்களுக்கு அறிவிப்பதற்காக இத்தால் அறிவிக்கப்படுகிறது. இந்த காணியுடன் தொடர்புள்ளவர்கள் இவ் விசாரணைக்காக சமுகமளிக்கப்படல் வேண்டும். மேலதிக விபரங்களுக்காக 2023.08.08 ஆம் திகதிய 2344/15ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| 01. | மாகாணம் | : மேல் |
| 02. | மாவட்டம் | : கொழும்பு |
| 03. | பிரதேச செயலாளர் பிரிவு | : ஹோமாகம |
| 04. | கிராம உத்தியோகத்தர் பிரிவு | : ஹோமாகம நகரம் |
| 05. | காணி அமைந்துள்ள கிராமம்/ கிராமம் | : ஹோமாகம |
| 06. | கடத்திரள் வரைபட இல | : 520001 தொகுதி இல 34 தாள் இல 32 |
| 07. | துண்டு இல | : 01 |
| 08. | மொத்த துண்டு எண்ணிக்கை | : 1 |
| 09 | மொத்த காணியின் விஸ்தீரணம் | : 0.0028 ஹெக்டயார் |

**பி.ஏ.டி. சிந்தக**
**பிரதேச செயலாளர்**
**ஹோமாகம**

**2023.09 மாதம் 26 ஆம் திகதி**
**ஹோமாகம பிரதேச செயலகம்**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

# 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D என்னும் பிரிவின்கீழான விற்பனை அறிவித்தல்

மக்கள் வங்கி

## பெறுமதிமிக்க ஆதனமொன்றின் ஏலவிற்பனை

### ஸ்ரீ சங்கராஜ மாவத்தைக் கிளை

**01 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்:** மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹேவாகம் கோரளேயின் அதிகாரிபத்துவில் கொடிகாவத்தை முல்லேரியாவ பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்டதும், கொலன்னாவ பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள இல. 503A முல்லேரியாவ தெற்கு கிராம அலுவலர் பிரிவினுள் வருகின்ற முல்லேரியாவயில் அமைந்துள்ள ஹிம்புட்டான வீதியில் இல. 47 எனும் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ளதும், **"கொரக்ககஹவத்த மற்றும் மதடியகஹவத்த"** எனவழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான காணியின், உரிமம்பெற்ற நில அளவையாளர் டீ. அமரசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2009.02.28 ஆந்திகதிய 2768 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட **"காணித்துண்டம் 2".**

**காணியின் விஸ்தீரணம் :** கட்டடங்கள், பயிர்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து, பன்னிரெண்டு பேர்ச்சுக்கள் (A-00, R-00, P-12).

**02 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்:** மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹேவாகம் கோரளேயின் அதிகாரிபத்துவில் கொடிகாவத்தை முல்லேரியாவ பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்டதும், கொலன்னாவ பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள இல. 503A முல்லேரியாவ தெற்கு கிராம அலுவலர் பிரிவினுள் வருகின்ற முல்லேரியாவயில் அமைந்துள்ள ஹிம்புட்டான வீதியில் இல. 45 எனும் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ளதும், **"கொரக்ககஹவத்த மற்றும் மதடியகஹவத்த"** எனவழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான காணியின், உரிமம்பெற்ற நில அளவையாளர் ஆர். ரி. அபேசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2018.10.26 ஆந்திகதிய 2987 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட **"காணித்துண்டம் 1".**

**காணியின் விஸ்தீரணம் :** கட்டடங்கள், பயிர்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து, இருபத்தொன்பது பேர்ச்சுக்கள் (A-00, R-00, P-29).

**03 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்:** மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹேவாகம் கோரளேயின் அதிகாரிபத்துவில் கொடிகாவத்தை முல்லேரியாவ பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்டதும், கொலன்னாவ பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள இல. 503A முல்லேரியாவ தெற்கு கிராம அலுவலர் பிரிவினுள், 04 ஆம் வட்டாரம், ஹிம்புட்டான வீதியில் இல. 77A எனும் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டுள்ளதும், ஹிம்புட்டானயில் அமைந்துள்ளதும், **"மில்லகஹவத்த மற்றும் கொஸ்கஹவத்த"** எனவழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான காணியின், உரிமம்பெற்ற நில அளவையாளர் கே. வீ. எம். டப்ள்யூ. சமரநாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2004.08.03 ஆந்தேதிய (உண்மையான பொழிப்பின் திகதி 2007.09.20) 2060A எனுமிலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட **"காணித்துண்டம் 6A".**

**காணியின் விஸ்தீரணம் :** கட்டடங்கள், பயிர்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து, பதினான்கு பேர்ச்சுக்கள் (A-00, R-00, P-14).

மக்கள் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ், மக்கள் வங்கியின் ஸ்ரீ சங்கராஜ மாவத்தைக் கிளையில் 2023 நவம்பர் 03 ஆந்தேதி மு.ப. 11.30 மணிக்குத் தொடங்குகின்ற பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்வேன்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக :-** 2023.06.30 ஆந்திகதிய அரசாங்க வர்த்தமானியையும் அத்துடன் 2023.06.30 ஆந்திகதிய தினமின, டெய்லி நியூஸ் மற்றும் தினகரன் பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்கான அணுகுவழி :-** கொழும்பிலிருந்து அவிஸ்ஸாவெல (லோ லெவல்) வீதியில் அங்கொட சந்தி வரை சுமார் 9.7 கிலோமீற்றர் பயணித்து, அங்கொட வீதிக்கென வலப்புறமாகத் திரும்பவும். பின்னர் அங்கிருந்து சுமார் 750 மீற்றர் சென்று, ஹிம்புட்டான வீதிக்கென இடப்புறமாகத் திரும்பி, அங்கிருந்து சுமார் 300 மீற்றர் பயணித்தால், அங்கு இடப்புறமாக அமைந்திருக்கும் குறித்த காணியை அடைய முடியும்.

**கொடுப்பனவு செய்யும் முறை -** ஏலத்தின் முடிவில் வெற்றியீட்டிய கொள்வனவாளர் பின்வரும் தொகைகளைக் காசாகச் செலுத்த வேண்டும்

1. கொள்வனவு விலையின் 10%
2. உள்ளூரதிகாரசபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை விலையின் 01% வரி
3. விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை சதவீதம் மாத்திரம்) ஏலவிற்பனையாளர் தரகு.
4. எழுதுவினைஞர் மற்றும் கூவுனர் கட்டணம் 2000/-
5. விற்பனைக்கான செலவுதொகையும் ஏனைய விதிப்பனவுகள் எவையேனுமிருப்பின் அவ்விதிப்பனவுகளும்.
6. விற்பனையைச் சான்றுப்படுத்துவதற்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மீதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களினுள் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி பிராந்திய தலைமை அலுவலகம் கொழும்பு வடக்கு, இல. 11, டியுக் வீதி, கொழும்பு 01 எனும் முகவரிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

**தொலைபேசி: 011 2344985, 2344982, 2344984, 2344983** **தொலைநகல்: 011 2435977**

சொல்லப்பட்ட தொகை மேலே விதிக்கப்பட்டவாறு 30 நாட்களினுள் செலுத்தப்படாவிடின், ஏலவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் (10%) தொகையை மீளச் செலுத்தாது விடுவதற்கும், ஆதனத்தை மீள விற்பனை செய்வதற்கும் வங்கி உரித்துடையதாகும்.

உரித்துறுதிகளையும் வேறு சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் மேற்கூறிய முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

முன்னறிவித்தலின்றி விற்பனையை நிறுத்துவதற்கான அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை மக்கள் வங்கி கொண்டுள்ளது.

**ஈ.எஸ். ராமநாயக்க,**
**நீதிமன்ற ஆணையாளரும்**
**உரிமம்பெற்ற ஏலவிற்பனையாளரும்,**
**விலைமதிப்பீட்டாளர் மற்றும்**
**(அகில இலங்கை சமாதான நீதவான்)**

**11/55, போகஹவத்த,**
**குடாபுத்கமுவ, அங்கொட**
**தொலைபேசி: 011 2053286,**
**072 3207533, 076 9217329**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# கேள்வி அறிவித்தல்

## பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

### எல்கடுவ பெருந்தோட்ட கம்பனி

### ஆபத்தான மற்றும் பலகை மரங்களை வெட்டி அகற்றுவதற்கான கேள்வி கோரல்

**கேள்வி இல: EPL/PL/TB/T-06/2023_ Timber**

எல்கடுவ பெருந்தோட்ட கம்பனியின் கீழ் நிருவகிக்கப்படும் கீழ்க்காணும் தோட்டங்களில் மரங்களை வெட்டி அகற்றுவதற்காக பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| தோட்டம் | மரவகை | மரங்களின் அளவு | வேறு விடயங்கள் | லொட் இலக்கம் | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை (ரு) |
|---|---|---|---|---|---|
| மில்லவான | மஹோகனீ | 40 | வன முகாமைத்துவ திட்டத்திற்கு உரித்தான மரங்கள் | 01 | 25,000/= |
| மில்லவான | மஹோகனீ | 40 | வன முகாமைத்துவ திட்டத்திற்கு உரித்தான மரங்கள் | 02 | 25,000/= |
| மில்லவான | மஹோகனீ | 42 | வன முகாமைத்துவ திட்டத்திற்கு உரித்தான மரங்கள் | 03 | 25,000/= |
| மில்லவான | ஹல்பில்ல | 4 | வன முகாமைத்துவ திட்டத்திற்கு உரித்தான மரங்கள் | 04 | 5,000/= |
| ரத்வத்த | கிரவிலியா | 36 | வன முகாமைத்துவ திட்டத்திற்கு உரித்தான மரங்கள் | 05 | 15,000/= |
| ரத்வத்த | எல்பீசியா | 02 | ஆபத்தான மரங்கள் | 06 | 5,000/= |
| ரத்வத்த | எலஸ்டோனியா,கொட்ட, தேக்கு உற்பட கலப்பு மரங்கள் | 09 | ஆபத்தான மரங்கள் | 07 | 10,000/= |
| ஹுனுகல | சப்பு | 21 | வன முகாமைத்துவ திட்டத்திற்கு உரித்தான மரங்கள் | 08 | 15,000/= |
| ஹுனுகல | சப்பு | 34 | வன முகாமைத்துவ திட்டத்திற்கு உரித்தான மரங்கள் | 09 | 15,000/= |
| நாலந்த | தேக்கு | 50 | வன முகாமைத்துவ திட்டத்திற்கு உரித்தான மரங்கள் | 10 | 25,000/= |
| நாலந்த | தேக்கு | 50 | வன முகாமைத்துவ திட்டத்திற்கு உரித்தான மரங்கள் | 11 | 25,000/= |
| நாலந்த | தேக்கு | 50 | வன முகாமைத்துவ திட்டத்திற்கு உரித்தான மரங்கள் | 12 | 25,000/= |
| பிட்டகந்த | பலா | 03 | ஆபத்தான மரங்கள் | 13 | 5,000/= |
| பிட்டகந்த | கிரிவிலியா | 07 | விழுந்துள்ள மரங்கள் | 14 | 10,000/= |
| எல்கடுவ | மார,எல்பீசியா உற்பட கலப்பு மரங்கள் | 08 | விழுந்துள்ள மரங்கள் | 15 | 10,000/= |

கேள்விப் பத்திரங்கள் மற்றும் நிபந்தனைகள் 2023.10.13 முதல் 2023.10.26 பி.ப 12.30 வரை குறித்த தோட்ட அலுவலகங்களில் அல்லது இல 320, "ஜனவத்து பியச", டி.பீ. ஜாயா மாவத்தை, கொழும்பு - 10 இல் அமைந்துள்ள எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியின் தலைமையகத்தில் ரூ.2000/= பெறுமதியான மீளளிக்கப்படாத தொகையைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். முறையாகப் பூர்த்தி செய்து பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள், 2023.10.27 பி.ப 1.00 வரை எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியின் ரத்வத்த, உக்குவெலவில் அமைந்துள்ள தலைமையகத்தின் கேள்விச் சபையின் தலைவரால் ஏற்கப்படுவதுடன் கேள்விதாரர்கள் முன்னிலையில் 2023.10.27 பி.ப 1.00 இற்கு திறக்கப்படும். கேள்விச் சபையின் தலைவரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

திருப்திப்பட முடியாத அதிகூடிய விலைமனுக்கள் சம்பந்தமாக, கலந்து கொண்ட சகல கொள்வனவாளர்களுடனும் கலந்துரையாடும் அதிகாரம் தலைவருக்குரியது.

**தலைவர்,**
**பெறுகைச் சபை,**
**எல்கடுவ பெருந்தோட்ட கம்பனி,**
**ரத்வத்த,**
**உக்குவெல.**

**தொலைபேசி இலக்கம் :**

| | |
|---|---|
| **066- 2242522** | **- தலைமையகம்** |
| **066- 3682755** | **- நாலந்த தோட்டம்** |
| **066- 3682457** | **- பிட்டகந்த தோட்டம்** |
| **066- 3133355** | **- எல்கடுவ தோட்டம்** |
| **066- 3682458** | **- ஹுனுகல தோட்டம்** |
| **066- 3682461** | **- மில்லவான தோட்டம்** |

# 2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

## தேசிய வைத்தியசாலை - கண்டி

2024ஆம் வருடத்தில் பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக இந்த வைத்தியசாலையுடன் பதிவு செய்து கொள்ள எதிர்பார்க்கும் அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களது ஏக முகவர்கள் / வழங்குநர்கள் / பதிவு செய்து கொள்ளப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் / நியதிகள் சட்டச் சபை உட்பட அரச / தனியார் நிறுவனங்கள், வியாபார நிறுவனங்களிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதன் பிரகாரம் உங்களால் அனுப்பப்படும் விண்ணப்பப் படிவங்களுடன் வியாபாரப் பெயர்ப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை உண்மைப் பிரதியென சான்றுபடுத்தி கட்டாயம் விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

**(அ) வழங்கல்கள் :**

1. அனைத்துவித காகிதாதிகள் (கணனி காகிதாதிகள் உட்பட)
2. வீட்டுத்தளபாடம் மற்றும் வீட்டுபகரணங்கள் (மரம், உருக்கு, பைபர் கிளாஸ் மற்றும் பிளாஸ்டிக் போன்றவை)
3. கணனிகள் மற்றும் அதுசார்ந்த அலுவலக உபகரணங்கள் (புகைப்படப் பிரதி இயந்திரங்கள்/ டிஜிட்டல் டுப்ளிகேட்டிங் இயந்திரங்கள் / தொலைநகல் இயந்திரங்கள் / மல்டிமீடியா புரஜெக்டர்கள் போன்றன)
4. மின் உபகரணங்கள் (வளிச்சீராக்கிகள், குளிர்சாதனப்பெட்டி/ மின் கேத்தல், கொதிகலன் உட்பட அனைத்து மின்னுபகரணங்களும்)
5. மெத்தை வகைகள், மெத்தை உறைகள் மற்றும் மெகிண்டோஸ்
6. துணி வகைகள் (சீருடைகள், படுக்கை விரிப்புகள், திரைச்சீலைகள், துவாய்கள், நுளம்பு வலைகள், பஞ்சுத் தலையணைகள் போன்றன)
7. நானாவிதப் பொருட்கள் (Blades, சிறிய அளவிலான பெட்டறிகள், அலுமினியப் பொருட்கள், மட்பாண்டப் பொருட்கள் உட்பட சமையலறை உபகரணங்கள், பாய், தும்புத்தடி, விளக்குமாறு, மொப், பிரஷ்கள் போன்றன)
8. சுத்திகரிப்புக்கான பொருட்கள் (சவர்க்காரங்கள், சலவைத்தூள், சுத்திகரிப்புத் தூள்கள் மற்றும் திரவ வகைகள்)
9. பொலித்தின் (பொலித்தின் பைகள், குரோசரி பைகள், குப்பைகளைப் போடும் பைகள்)
10. அச்சு வேலைகள் (டிஜிட்டல் பிரிண்டிங், அறிவித்தல் பலகைகள், திகதி முத்திரைகள், இறப்பர் முத்திரைகள், பிளாஸ்டிக் உட்பட அனைத்து வகையான அச்சு வேலைகள்)
11. மின்சார பொருத்தல்கள் மற்றும் துணைப்பாகங்கள் (மின்சார மற்றும் தொலைபேசி துணைப்பாகங்கள், மின்சார கேத்தல் எலிமன்ட், மின் கொதிகலன்கள் எலிமன்ட் போன்றன)
12. காலணிகள், தோல் மற்றும் தோற் பொருட்கள்
13. வைத்தியசாலை உபகரணங்கள் (வைத்தியசாலைக் கட்டில்கள், ட்ரொலி, ஒக்சிஜன் ஸ்டான்டுகள் உட்பட வைத்தியசாலை உபகரணங்கள்)
14. கனரகப் பொருட்கள் (ட்ரோலி சக்கரங்கள், மெதிலேடட் ஸ்பிரிட், உலோகப் பொருட்கள், மின்சாரம் மற்றும் இயந்திர வேலைகளுக்கான கருவிகள் மற்றும் உபகரணங்கள், தரையோடு வகைகள், குளியலறை இணைப்புகள், மணல், கருங்கல், சீமெந்து, பூச்சு வகைகள், மர வகைகள், M.D.F/ Plywood Sheet போன்றன)
15. அனைத்துவிதமான டயர், டியூப் மற்றும் கொலர், வாகன பெட்டரிகள்
16. மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சை கருவிகள்
17. சத்திர சிகிச்சைப் பாவனைப் பொருட்கள்
18. சத்திர சிகிச்சை உபகரணங்கள்
19. இரசாயனப் பொருட்கள்
20. ஆய்வுகூட மீள்பாவனை பொருட்கள்
21. சத்திர சிகிச்சைக் கருவிகள்
22. குழந்தைகளுக்கான மற்றும் விசேட பால்மா (Nutritionformula உட்பட)
23. பல்வேறு சந்தர்ப்பங்களுக்கான உணவுபானங்களை வழங்குதல் (ஹோட்டல் / சிற்றுண்டிச்சாலை மற்றும் கேட்டரிங்)

**(ஆ) சேவைகள்**

24. வாகன திருத்தவேலைகள்
25. வாகனங்களை கழுவுதல் மற்றும் சேர்விஸ் செய்தல்
26. 25 கி.கிராமுக்கு மேற்பட்ட சலவை இயந்திரங்களைத் திருத்துதல்
27. மின் உபகரண திருத்தவேலைகள் (குளிர்சாதனம், தொலைக்காட்சிப் பெட்டி, 25 கி.கிராமுக்குக் குறைந்த சலவை இயந்திரம் / உலர்த்தும் இயந்திரம், Blander, மின்விசிறிகள் போன்றன)
28. இலத்திரனியல் இயந்திர திருத்தவேலைகள் (புகைப்படப் பிரதி, டுப்ளிகேட்டிங் இயந்திரம், பல்லூடகம், ரோணியோ, தொலைநகல் இயந்திரங்கள் போன்றன)
29. கேஸ் அடுப்பு, கேஸ் பர்னர், கேஸ் சேர்கியுட் திருத்தவேலைகள்
30. அனைத்துவித வீட்டுத் தளபாடங்களின் திருத்தவேலைகள் (கதிரை பின்னல், பொலிஷ் பண்ணுதல் உட்பட அனைத்து வீட்டுபகரணங்கள்)
31. மின், நீராவி கொதிகலன் திருத்தவேலைகள்
32. கணனி, கணனி சார்ந்த உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்களின் திருத்தவேலைகள், (ON Line, UPS உட்பட)
33. ஊழியர் அடையாள அட்டைகளைத் தயாரித்தல்
34. வாகனங்களுக்கான குஷன் மற்றும் இருக்கை உறைகள் இடுதல்
35. அபாயகரமான மரங்களை தரித்தல் மற்றும் கிளைகளை வெட்டி அகற்றுதல்
36. வளிச்சீராக்கிகள் மற்றும் மின்சாரப் பராமரிப்பு வேலைகள்
37. குப்பைக் கூழங்கள் மற்றும் கழிவுப் பொருட்களை அகற்றுதல்
38. உரிமை கோரப்படாத சடலங்கள் மற்றும் உடலுறுப்புகளை அப்புறப்படுத்தல்
39. தையல் இயந்திர திருத்தவேலைகள்
40. அவசர தேவையின்போது ஆய்வுகூட பரிசோதனைகள் செய்தல்
41. அவசர தேவையின்போது கதிரியக்க பரிசோதனைகள் செய்தல்
42. சகல விதங்களிலும் H இரும்பைப் பயன்படுத்தி செய்யப்படும் காரியங்கள் மற்றும் வேலைகள்
43. CCTV முறைமைகளின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு

**அறிவுரைகளும் நிபந்தனைகளும் :**

01. பதிவுக் கட்டணமாக ஒவ்வொரு விடயத்துக்கும் மீளளிக்கப்படாத 2000.00 ரூபா கட்டணத்தை கண்டி பொது வைத்தியசாலை சிறாப்பரிடம் செலுத்தலாம் என்பதுடன் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டின் (பொது 172) மூலப் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இதற்குப் புறப்பாக இலங்கை வங்கி, கண்டி (002) கிளையில் ''பணிப்பாளர், கண்டி தேசிய வைத்தியசாலை'' எனும் பெயரில் பேணப்படும் 7040213 எனும் கணக்கிலக்கத்திற்கு பணத்தை வைப்புச் செய்து அந்தப் பற்றுச்சீட்டின் (Bank Deposit Slip) தெளிவான பிரதியொன்றை நிறுவனத்தின் பெயர் மற்றும் விண்ணப்பிக்கும் உருப்படியின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிட்டு அன்றைய தினமே thkfa2018@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அதன் மூலப் பிரதியை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும் (காசுக் கட்டளை மற்றும் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).
02. வழங்குநர்களுக்கு தேவையாயின் ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்களுக்கு பதிவு செய்யலாம் என்பதுடன் பல விண்ணப்பங்களை அனுப்புவதாயின் அவைகளை ஒரு உறையில் இட்டு அனுப்பலாம்.
03. வியாபாரப் பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை உண்மைப் பிரதியென இயைபுடைய நிறுவனத்தினால் சான்றுபடுத்தப்பட்ட அல்லது சட்டத்தரணியொருவர், சத்தியபிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிஸ், சமாதான நீதவான், அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர சேவையிலுள்ள பதவிநிலை தர உத்தியோகத்தர் அல்லது பிரதேச கிராம சேவகரினால் சான்றுபடுத்தப்பட்டு விண்ணப்பத்துடன் கட்டாயமாக இணைத்தல் வேண்டும். சான்றுபடுத்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத அனைத்து விண்ணப்பங்களும் பதிவு செய்யப்படாது அறிவிக்கப்படாமலேயே அப்புறப்படுத்தப்படலாம் என அறிவிக்கப்படுகிறது.
04. விண்ணப்பப் படிவத்துடன் மேற்குறிப்பிடப்பட்ட 172 பொது படிவத்தின் மூலப் பிரதி மற்றும் வியாபாரப் பெயர்ப் பதிவுச் சான்றிதழின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியொன்றை மட்டும் இணைத்து அனுப்பவும். ஏனையவற்றை (பொருள் விபரங்கள், Catalogs) இணைத்து அனுப்புவதைத் தவிர்க்கவும்.
05. பதிவு செய்யப்பட்டதன் பின் கேட்கப்படும்போது விலைமனுக்களைச் சமர்ப்பிக்கத் தவறும், தருவித்தற் கட்டளை கிடைத்ததும் உரிய கால எல்லைக்குள் பொருட்களை வழங்கத் தவறும் மற்றும் உரிய தரத்துடனான பொருள் மற்றும் சேவைகளை வழங்க முடியாத, தேவையானபோது மாதிரிகள் மற்றும் விபரத் தகவல்களை வழங்காமல் விடும் வழங்குநர்களின் பெயர்கள் எவ்வித முன்னறிவித்தலின்றி பதிவுப் பட்டியலிலிருந்து நீக்கப்படும்.
06. கட்டளை கொடுக்கப்பட்ட பொருட்கள் எதிர்பார்க்கப்பட்ட தரத்திற்கு அமைவாக முழுமையாக ஒப்படைத்ததன் பின் அல்லது குறித்த சேவையை திருப்திகரமாக முறையில் நிறைவேற்றியதன் பின்னரே கொடுப்பனவுகள் செய்யப்படும்.
07. பொருட்கள் மற்றும் சேவைகளை குறைந்தபட்சம் ஒரு மாத கால கடன் அடிப்படையில் வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும் என்பதுடன் குறித்த நிறுவனமே பொருட்களை போக்குவரத்துச் செய்தல் வேண்டும்.
08. பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாதென்பதுடன் பின்வரும் மாதிரிக்கு அமைய சுயமாகத் தயரித்துக் கொண்ட விண்ணப்பங்களை இதற்காக உபயோகிக்க வேண்டும்.
09. அனைத்து விண்ணப்பங்களும் ''பணிப்பாளர், தேசிய மருத்துவமனை, கண்டி'' எனும் முகவரிக்கு 2023-11-15ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைப்பதாயின் இவ்வலுவலகத்தின் பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
10. விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2024'' எனவும் விடய இலக்கத்தையும் குறிப்பிடல் வேண்டும்.

மேலதிக விபரங்களை 081-2202477 எனும் தொலைபேசி இலக்கத்தில் தலைமைக் கணக்காளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**பணிப்பாளர்,**
**தேசிய வைத்தியசாலை,**
**கண்டி.**

## வழங்குநர்களைப் பதிவு செய்யும் விண்ணப்பப் படிவம் 2024ஆம் வருடம்

- விண்ணப்பப் படிவத்துடன் மேற்குறிப்பிடப்பட்ட 172 பொது படிவத்தின் மூலப் பிரதி மற்றும் வியாபாரப் பெயர்ப் பதிவுச் சான்றிதழின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியொன்றை மட்டும் இணைத்து அனுப்பவும். ஏனையவற்றை (பொருள் விபரங்கள், Catalogs) இணைத்து அனுப்புவதைத் தவிர்க்கவும்.
- வழங்குநர்களுக்குத் தேவையானால் ஒன்றுக்கு மேற்பட்ட உருப்படிகளுக்காக பதிவு செய்து கொள்ளலாம் என்பதுடன் சகல விடயத்திற்காகவும் ஒரு விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிக்கவும்.

01. வியாபாரத்தின் / வழங்குநரின் பெயர்: ..........................................................
02. முகவரி: ..........................................................
03. தொலைபேசி இலக்கம்:.................................. 04. தெலைநகல் இலக்கம்:..................................
05. மின்னஞ்சல் (e-mail) முகவரி: ..........................................................
06. பதிவு செய்து கொள்ள உத்தேசிக்கும் வழங்கல் / சேவையின் இலக்கம் மற்றும் பெயர்:
    1. ..........................................................
    2. ..........................................................
    3. ..........................................................
    4. ..........................................................
    5. ..........................................................
07. வியாபாரப் பதிவுச் சான்றிதழின் இலக்கம்..........................................................
    (03ஆம் இலக்க அறிவுரையின் பிரகாரம் குறித்த சான்றிதழின் பிரதியை இணைக்கவும்):
08. பெறுமதிசேர் வரியின் (VAT) பதிவு இலக்கம்: ..........................................................
09. பதிவுக் கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டின் இலக்கம் மற்றும் திகதி:..................................

மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானதும் சரியானவையும் என உறுதிப்படுத்துகின்றேன் என்பதுடன் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்காக கண்டி தேசிய வைத்தியசாலையினால் முன்வைத்துள்ள நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க நான்/நாம் இணங்குகிறேன்/இணங்குகிறோம்.

**திகதி....................** ......................................................
**விண்ணப்பதாரரின் கையொப்பம்**

## பத்தேகம பிரதேச சபை

# கேள்வி அறிவித்தல் – 2023/2024

பத்தேகம பிரதேச சபைக்குச் சொந்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் வளாகங்களில் 2024.12.31 வரையான காலத்திற்கு கட்டணங்கள் அறவிடும் உரிமையை குத்தகைக்கு விடுவதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

மேற்படி அட்டவணை

| விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை வைப்புத்தொகை | குறைந்தபட்ச கேள்வி (வருடாந்தம்) |
|---|---|---|---|
| பத்தேகம ஞாயிறு வாரச்சந்தைக் கட்டணங்களை அறவிடல் | ரூ.2000.00 | ரூ.3000.00 | ரூ1,617,700.00 |
| வந்தரம்ப சனி வாரச்சந்தைக் கட்டணங்களை அறவிடல் | ரூ.2000.00 | ரூ.3000.00 | ரூ.1,023,000.00 |
| தொடங்கொட வியாழன் வாரச்சந்தைக் கட்டணங்களை அறவிடல் | ரூ.2000.00 | ரூ.3000.00 | ரூ.220,000.00 |
| பத்தேகம ஞாயிறு வாரச்சந்தை வாகனங்கள் மற்றும் சைக்கிள் வாகன நிறுத்துமிட கட்டணம் அறவிடல் | ரூ.2000.00 | ரூ.3000.00 | ரூ.325,000.00 |
| வந்துரம்ப சனி வாரச்சந்தை வாகனங்கள் மற்றும் சைக்கிள் வாகன நிறுத்துமிட கட்டணம் அறவிடல் | ரூ.2000.00 | ரூ.3000.00 | ரூ.150,000.00 |

1. கேள்விப்பத்திரங்கள் விநியோகித்தல் : 2023.10.16 மு.ப.9.00 முதல்
2. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் : 2023.11.06 மு.ப.10.00 வரை
3. கேள்விப்பத்திரங்கள் திறத்தல் : 2023.11.06 மு.ப.10.30 இற்கு பத்தேகம பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறும்.

- கேள்விப் படிவங்கள் மற்றும் கேள்வி நிபந்தனைகளை பத்தேகம பிரதேச சபை அலுவலகத்தில் குறித்த தொகையை செலுத்தி அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
- கேள்வி நிபந்தனைக்களுக்கு அமைவாக பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை "செயலாளர், பிரதேச சபை, பத்தேகம" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டுவந்து அலுவலகத்தின் கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் பத்தேகம பிரதேச சபை தலைமையகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

**பத்தேகம பிரதேச சபை அலவலகம்**
**பத்தேகம**
**091-2292389**
**091-2292275**
**திகதி : 2023.10.06**

**வி.சி.கே.ஜாகொட**
**செயலாளர்**
**பத்தேகம பிரதேச சபை**

# கம்பளை நகர சபை

## வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2024 ஆம் வருடம்

